கல்கி

இரா. மோகன்

இந்திய
இலக்கியச்
சிற்பிகள்



கல்கி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் : கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. பட உதவி : நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

கல்கி

இரா. மோகன்

சாகித்திய அக்காதெமி

Kalki - Monograph in Tamil by R. Mohan
Sahitya Akademi, New Delhi, 2000, **Rs. 25**

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 2000
ISBN 81- 260-0996-9

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம் :
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி.ஐ.டி. வளாகம், டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட்ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, சாரதா சினிமா பில்டிங்,
தாதர், மும்பய் 400 014.

விலை : ரூ.25

Laser Typeset : **Stanbic Laser Graphics**, Chennai - 34. Ph. : 8239192

அச்சிட்டோர் : **மணி ஆஃப்செட்**
112, பெல்ஸ் ரோடு,திருவல்லிக்கேணி,
சென்னை - 5. போன் : 8555 249, 8588 196

பொருளடக்கம்

		பக்கம்
	சில சொல்	
1.	வாழ்க்கைச் சித்திரம்	9
2.	சிறுகதையாசிரியர்	30
3.	நாவலாசிரியர்	53
4.	கட்டுரையாசிரியர்	85
5.	நடைச் சித்திரம்	105
6.	நகைச்சுவையாளர்	118
7.	சில நிகழ்ச்சிகள் ... சில நினைவுகள்...	136
8.	கல்கி என்ற ஆளுமை	143
	பின்னிணைப்புகள்	148
	துணை நூற்பட்டியல்	156

சில சொல்

'கல்கி' என்ற புனைபெயர் கொண்ட ரா. கிருஷ்ணமூர்த்தி (1899–1954) ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து கடுமையான உழைப்பின் மூலம் வாழ்வில் படிப்படியாக முன்னேறியவர்; தமிழ்நடையில் ஒரு நகைச்சுவையையும், வரலாற்று நிகழ்ச்சிகளின் மீது சமையல்கட்டுக்குக் கூட ஓர் ஆவலையும் தூண்டிவிட்ட எழுத்தாளர்; தமிழ்த் தென்றல் திரு.வி.க.விடம் பாடம் பயின்று, மூதறிஞர் ராஜாஜியிடம் பண்பட்டு, 'ஆனந்த விகட'னில் அனுபவம் பெற்று, பிறகு 'கல்கி'யின் வாயிலாகப் பத்திரிகை உலகில் தனிமுத்திரை பதித்தவர்; நாட்டு விடுதலைப் போரில் முழு மூச்சுடன் ஈடுபட்டு மும்முறை சிறை சென்றவர்; தமக்குச் சரியென்று தோன்றியதை அஞ்சா நெஞ்சுடன் திறனாய்வு செய்யத் தயங்காதவர்; அதே நேரத்தில் வைதாரையும் வாழ வைக்கும் பெருந்தன்மையும் பெற்றிருந்தவர்; காந்தம் போல் படிப்பவர் எவரையும் ஈர்க்கும் எழுத்தாற்றலுக்குச் சொந்தக்காரர். தமிழ் இலக்கிய உலகில் சூரியனைப் போலவும், தனிவாழ்வில் தேய்பிறை காணாத முழுநிலவு போலவும் விளங்கிய கல்கியின் ஆளுமை சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், கட்டுரையாசிரியர், பத்திரிகையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், விமர்சகர் என்றாற் போல் பல பரிமாணங்கள் கொண்டது; அவரது ஆளுமை வளர்ச்சியில் பல பரிணாமங்களும் உண்டு. கல்கி என்ற ஆளுமையின் பல்வேறு பரிமாணங்களையும் பரிணாமங்களையும் தமிழ்கூறு நல்லுலகிற்கு எளிய முறையில் அறிமுகம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டுள்ள நூல் இது.

'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'யில் இந்நூலினை உருவாக்கும் நல்லதொரு வாய்ப்பினை எனக்கு நல்கிய சாகித்திய அக்காதெமியினருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியும் வணக்கமும் என்றும் உரியனவாகும். இந் நூலாக்கப் பணியின்போது எனக்குக் கல்கியின் கிடைத்தற்கரிய நூல்களைத் தந்து எனக்கு உற்றுழி உதவிய பெருமக்கள் பலர் ஆவர். 'கல்கியின் புதல்வர்' திரு. கி. ராஜேந்திரன் (சென்னை), திரு. பா. கிருஷ்ணமூர்த்தி (திருக்கோகர்ணம்), திரு. ல.கி. இராமானுஜம் (திருநாராயணபுரம்), திரு. எஸ்.எஸ்.ஆர். லிங்கம் (ஸ்ரீவில்லிபுத்தூர்), திரு. எஸ். சேதுரத்தினம் (சென்னை), திரு. கொ.மா. கோதண்டம் (இராஜபாளையம்), திரு. முருகேசன் (செந்தமிழ்க் கல்லூரி) ஆகியோர் இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் ஆவர். என் வாழ்க்கைத் துணைவி முனைவர் நிர்மலாவுக்கும் இத் தருணத்தில் என் மனமுவந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

மதுரை – 625019
9.10.1999

இரா. மோகன்

1. வாழ்க்கைச் சித்திரம்

"தமிழ் இலக்கியச் சோலையில் கொப்பும், கிளையுமாய் வேரூன்றித் தழைத்த ஆலாய் நின்றவர் கல்கி. அம்மரத்தில் பூத்து, கனிந்து, மணமும் சுவையும் பரப்பிய கட்டுரைகளும் கதைகளும் பலப்பல. மேலும் அதுவே தன்னைச் சுற்றிப் பல்வேறு எழுத்தாளக் கொடிகள் படர்ந்து பயன்தரப் பற்றுக்கோடாய் நின்று கொழுகொம்பாயிற்று எனலாம்"

– கலா தாக்கர் *

'பொன்னுவின் புதல்வர்'

'தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம்' எனச் சிறப்பிக்கப் பெறும் தஞ்சை மாவட்டத்தில், மாயூரத்திற்கு எட்டு மைல் தொலைவில் உள்ள புத்தமங்கலம் என்னும் சிறிய கிராமத்தில் பிறந்தவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி. தந்தையார் பெயர் ராமசுவாமி அய்யர்; 'பொன்னு' என்பது அவருடைய செல்லப்பெயர். சுந்தா குறிப்பிடுவது போல், கல்கி 'பொன்னியின் புதல்வர்' மட்டும் அல்லர்; 'பொன்னுவின் புதல்வ'ரும் ஆவார் (பொன்னியின் புதல்வர், ப.23). ராமசுவாமி அய்யர் பக்கத்து மணல்மேடு கிராமத்தின் கர்ணமாய்ப் பணியாற்றியவர். கல்கியின் தாயார் பெயர் தையல்நாயகி (இவர் ராமசுவாமி அய்யரின் இரண்டாம் தாரம்). ராமசுவாமி அய்யர் - தையல்நாயகி இணையரின் (தம்பதியரின்) இரண்டாம் மகனாகக் கல்கி 1899-ஆம் ஆண்டு செப்டம்பர் 9-ஆம் நாள் (விகாரி ஆண்டு ஆவணித் திங்கள் 25-ஆம் நாள்) சனிக்கிழமையன்று பிறந்தார். கல்கியின் உடன்பிறந்தோர் நால்வர்; அண்ணன் வேங்கடராமன்; அடுத்தடுத்து இரண்டு தங்கைகள்; ஒரு தம்பி, 'கடைக்குட்டி' ஜகதீசன்.

இளமைப் பருவம்

சிறுகுழந்தையாக இருந்தபோதே அண்ணன் வேங்கடராமனோடு சேர்ந்து கல்கி தம் தந்தையார் ராமசுவாமி அய்யரிடம் பஜனைப் பாடல்களைக் கற்றுக்கொண்டார்; அண்ணனுக்கு முன்பாகவே அவற்றை மனப்பாடம் செய்து ஒப்பித்து அனைவரையும் வியக்க வைத்தார். இளமையில் அவருக்கு அட்சராப்பியாசம் செய்து, அரிச்சுவடியும் கணக்கும்

* கல்கி அமுதம், ப.12

சொல்லித் தந்த சுவாமிநாத அய்யரும், அவர் எதையும் நொடிப் பொழுதில் கற்றுக் கொண்டதைக் கண்டு வியப்புற்றார்; தம் வியப்பைப் பலருடனும் பகிர்ந்து கொண்டார். அண்ணன் வேங்கடராமனும் தம்பி கல்கியும் முதலில் வாத்தியார் சுவாமிநாத அய்யரிடமும், பிறகு அய்யாசாமி அய்யரிடமும் மணல்மேடு கிராமத்தில் 'பாண்டுரங்கன் பள்ளிக்கூடம்' என்ற பெயரில் இயங்கிய பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்றனர். அய்யாசாமி அய்யரும் கல்கியின் கற்கும் திறனையும் நினைவாற்றலையும் வயதுக்கு மிஞ்சிய அறிவையும் பாராட்டி, அவை மேன்மேலும் பெருக உற்றுழி உதவினார். தந்தையார் ராமசுவாமி அய்யரும் மகன் கல்கி எட்டு வயதிலேயே பொறுப்புடன் சந்தியாவந்தனமும் பஜனையும் செய்வதைக் கண்டும், திண்ணையில் இருந்து புராணக் கதைகள் சொல்லும் தம்மிடம் அறிவுக் கூர்மையுடன் கேள்விகள் கேட்பதை மெச்சியும் மகிழ்ந்தார். ஆயின், அம் மகிழ்ச்சி நீண்ட நாள் நீடிக்கவில்லை; தம் புதல்வருக்குப் பூணூல் அணிவிப்பு நிகழ்ச்சி நடந்த ஆறாம் மாதமே காலமானார்.

தொடக்க காலக் குரு

தந்தையாரைத் திடீரென இழந்து தவித்த நிலையில், கல்கிக்கும் வேங்கடராமனுக்கும் ஆறுதல் சொல்லி அனைத்து வகையான உதவிகளும் செய்தவர்கள் பக்கத்து வீட்டில் வாழ்ந்து வந்த அய்யாசாமி அய்யரும் அவருடைய துணைவியார் அபயாம்பாளுமே ஆவர். அதிலும் ஒரு குருவின் நிலையில் இருந்து கல்கிக்குப் பயிற்சி அளித்தார் அய்யாசாமி அய்யர்; இப் பயிற்சியினால், பதினைந்து வயதுக்குள்ளேயே கனமான தமிழ் நூல்களையும், கடினமான ஆங்கில நூல்களையும் படித்துப் புரிந்து கொள்ளும் ஆற்றலைப் பெற்றுவிட்டார் கல்கி. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 'புத்தகப் புழு' என்று குருவே கேலி செய்யும் அளவிற்கு எப்போதும் புத்தகமும் கையுமாகவே இருந்து வரத் தொடங்கினார் அவர். பிற்காலத்தில் 'ஆரம்ப ஆசிரியர்' என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில் கல்கி மறவாமல் தமது குருவுக்கு நன்றியும் வணக்கமும் தெரிவித்திருந்தார்:

> "நான் இத்தனை சக்கர வட்டமாக எழுதுவதெல்லாம் ஓர் ஆரம்ப ஆசிரியரின் அருளினால் தான். அவர் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிக்கிறேன்... 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது

பழமொழி. ஐந்தில் வளைப்பவர் ஆரம்ப ஆசிரியர். அவர் கோணலாய் வளைத்துவிட்டால் வாழ்க்கை பூராவும் கோணல்தான். நாட்டின் வருங்காலப் பிரஜைகள் வளருமிடம் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள். தேச மக்கள் தீரம் மிக்க ஆண் சிங்கங்களாய் விளங்குவதும் கோழைத்தனம் வாய்ந்த அடிமைகளாயிருப்பதும் ஆரம்ப ஆசிரியர்களின் கைவேலையேயாகும்" (ஏட்டிக்குப் போட்டி, பக்.81,83).

அய்யாசாமி அய்யர் வாயிலாகக் கல்கி தம் இளமைப் பருவத்தில் கற்ற மொழி அறிவும், பொது அறிவும், பக்திப் பண்பாடுமே அவர் எதிர்காலத்தில் எழுத்தாளராக மலருவதற்கு அடிப்படையான காரணங்களாக அமைந்தன. அய்யாசாமி அய்யர் மீது கல்கி கொண்டிருந்த குரு பக்தியே, அவருடைய மனத்தைப் பண்படுத்தி - பக்குவப்படுத்தி - பின்னாளில் மூதறிஞர் ராஜாஜியிடமும் மகாத்மா காந்தியிடமும் அவர் பக்தி கொள்ளுவதற்கு உரிய வலுவான அடித்தளமாக அமைந்தது.

திருச்சிக்குப் புறப்படல்

இளமையில் எளிய குடும்பச் சூழலாலும் தந்தையின் மறைவாலும் கல்கியின் கல்வி வளர்ச்சிக்குத் தடை ஏற்பட்டது; பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத நிலையும் நேர்ந்தது. வயதும் பதினாறுக்கு மேல் ஆயிற்று. இந் நிலையில் திருச்சியில் இருந்த சித்தப்பா வேங்கடாசலம் அய்யர் - சித்தி தர்மி அம்மாள் ஆகியோர் கல்கிக்கு உதவி செய்ய முன்வந்தனர். சொந்த ஊரில் இருந்து புறப்பட்டுத் திருச்சிக்குச் சென்றார் கல்கி. அங்கே 'ஹிந்து செகண்டரி ஸ்கூல்' என்ற பள்ளியில் 1917 அக்டோபம் மாதம் 16 - ஆம் தேதியன்று அவர் மூன்றாம் படிவத்தில் சேர்ந்தார்; பிறகு பெயர் பெற்ற 'நேஷனல் ஹை ஸ்கூல்' என்ற தேசியப் பள்ளியில் சேர்ந்து ஆறாம் படிவம் வரை படித்தார். மாணவப் பருவத்தில் கல்கி எல்லாப் பாடங்களிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்றுச் 'சிறந்த மாணவர்' என்ற நற்பெயரைப் பெற்றார்.

இடைப்பட்ட காலகட்டத்தில் தான் 'நாவல் மோகம்' கல்கியைப் பற்றிக் கொண்டது. ஆரணி குப்புசாமி முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார், ரங்கராஜு முதலானோர் எழுதிய நாவல்களை எல்லாம் அவர் தேடிப்பிடித்தும், இரவல் வாங்கியும், நூலகங்களுக்குச் சென்றும் படித்து முடித்தார்; "இந்த மாதிரிப் புத்தகம் தினம் ஒன்று மட்டும் என்னிடம்

கொடுத்துவிட்டால், வாழ்க்கையில் எனக்கு வேறொன்றும் வேண்டாம். 'ராபின்ஸன் க்ரூஸோ'வைப் போல் தனியாக ஒரு தீவில் கொண்டு போய் விட்டால் ரொம்பச் சந்தோஷமாக இருப்பேன்" (மேற்கோள் : சுந்தா,பொன்னியின் புதல்வர், ப.62) என்று தம் நண்பன் முத்துவிடம் இந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். விரைவில் ஆங்கில மொழியில் வெளியான நாவல்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் தேர்ச்சியையும் பெற்றார் கல்கி. இந்நிலையில் விக்டர் ஹ்யூகோ, அலெக்சாந்தர் டூமாஸ், ஸர் வால்டர் ஸ்காட், சார்லஸ் டிக்கன்ஸ், வில்லியம் தாக்கரே, தாமஸ் ஹார்டி, எட்கார் வாலஸ், வில்லியம் ரெய்னால்ட்ஸ் முதலானோர் எழுதிய நாவல்கள் அவரது அறிவுப் பசியைத் தீர்த்து வைத்தன. இந்நாவல்கள் எல்லாம் கல்கியின் இளம்உள்ளத்தில் படிந்து, கால வளர்ச்சியில் பண்பட்டுப் பின்னர் அவர் படைத்த படைப்புக்களுக்கு எருவாய் அமைந்தன எனலாம்.

நாவல் கலையைத் தவிர கதாகாலட்சேபக் கலை வடிவமும் இளமைப் பருவத்தில் கல்கியின் நெஞ்சைப் பெரிதும் கொள்ளை கொண்டிருந்தது. தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர், சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர், ஹரிகேசவ நல்லூர் முத்தையா பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர் முதலானோரின் கதாகாலட்சேபங்களை அவர் ஊர்ஊராக அண்ணன் வேங்கடராமனுடன் கை கோர்த்துக் கொண்டு சென்று கேட்டு மகிழ்ந்தார். இந்த இளமை அனுபவமே பிற்காலத்தில் எழுத்தாளர் கல்கி கதை சொல்லும் திறத்திலும் நகைச்சுவையைக் கையாளுவதிலும் சிறந்து விளங்குவதற்கு அடியுரமாக அமைந்தது எனலாம்.

மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் ஊற்றெடுத்தல்

ஏற்கனவே தெய்வ பக்தியும் குரு பக்தியும் குடி கொண்டிருந்த கல்கியின் நெஞ்சில் மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் ஊற்றெடுத்துப் பெருகுவதற்கு முறையே ஆழ்வார் பாசுரங்களும், பாரதியார் பாடல்களும் காரணங்களாக அமைந்தன. இது குறித்துப் பின்னாளில் கல்கியே நினைவு கூர்ந்து சொல்லியிருக்கும் கருத்துக்களைக் காண்பது பொருத்தமாக இருக்கும்:

"முதன்முதலில் என்னுடைய பத்தாவது வயதில் பாரதியின் பாடல்களை நான் படித்தேன். அது முதல்

இன்று வரை என் வாழ்நாளில் ஒரு நாளாவது பாரதியின் சில வரிகளையாவது பாடாமலோ, பாடக் கேட்காமலோ கழிந்திருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை" (மேற்கோள்: சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 72).

"முதன்முதலில் தமிழ்க் கவிதையின் இன்பத்தை நான் உணரும்படி செய்தது ஆழ்வார் பாசுரங்களே ஆகும். நான் பத்து வயதுச் சிறுவனாய் இருந்தபோது, 'ஸ்ரீ கிருஷ்ண சைதன்ய ஸ்வாமிகள் சரித்திரம்' என்ற ஒரு தமிழ் நூல் வெளியாகியிருந்தது. அது வங்காளத்தில் நானூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்த ஒரு வைஷ்ணவப் பெரியாரின் சரித்திரம்... அந்த நூலைத் தமிழில் எழுதிய ஆசிரியர், இடையிடையே திவ்வியப் பிரபந்தத்திலிருந்து சில பாடல்களை எடுத்துப் போட்டிருந்தார். அவற்றில், 'ஆனாத செல்வத்து', 'கம்ப மதயானை', 'ஆலமாமரத்தின்', 'கொண்டல் வண்ணனை' என்று தொடங்கும் நாலு பாடல்களையும் நான் எத்தனை தடவை வாசித்திருப்பேன் என்று சொல்ல முடியாது. பள்ளிக்கூடங்களில் பரீட்சைக்காக நெட்டுருச் செய்த எத்தனையோ செய்யுள்களும் பாடல்களும் மறந்து போய்விட்டன. ஆனால் இந்த நாலு பாடல்களும் என் மனசை விட்டு அகலவேயில்லை" (பக் ii-iii).

இவற்றுள் முதல் கருத்தினை 'சுதேசமித்திரன்' வார இதழில் 7.12.1935 - இல் எழுதிய கட்டுரையில் கல்கி தெரிவித்திருந்தார்; இரண்டாவது கருத்தினை 1938 -ஆம் ஆண்டில் பி.ஸ்ரீ.யின் 'திவ்யப் பிரபந்த சாரம்' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் அவர் வெளியிட்டிருந்தார்.

பள்ளி நாளில் நேர்ந்த திருப்புமுனை

பாரத மணித்திரு நாட்டின் வரலாற்றில் 1921 - ஆம் ஆண்டு ஒரு மிக முக்கியமான ஆண்டு. அந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் காந்தியடிகளின் தலைமையில் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் தன்னலம் என்பதை அடியோடு மறந்து, தாய்நாட்டுக்காக விடுதலைப் போரில் முழுமனத்துடனும் முனைப்புடனும் ஈடுபட்டார்கள். இங்ஙனம் காந்தி அண்ணலின் அழைப்பையும் ஆணையையும் ஏற்று நாட்டு விடுதலைப் போரில் குதித்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுள் கல்கியும் ஒருவராக இருந்தார். திருச்சி தேசியப் பள்ளியில் ஆறாம் படிவத்தில் படித்துக்

கொண்டிருந்த போது - இறுதித் தேர்வுக்கு இன்னமும் மூன்றே மாதங்கள் இருந்தபோது - கல்கியின் வாழ்க்கையில் இந்தத் திருப்புமுனை ஏற்பட்டது. தற்காலக் கல்வி முறையில் உள்ள குறைகளைக் கருத்தில் கொண்டும், 'மனிதர்களுக்குள்ளே ஒரு சிம்மம்' எனப் பெயர் பெற்ற டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் போன்ற நமது நாட்டுத் தலைவர்களின் கட்டளைக்கு இணங்கியும், ஆழமாகவும் தீவிரமாகவும் சிந்தித்துப் பார்த்தும் அவர் பள்ளிக்கூடத்தில் இருந்து வெளியேறினார். டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் தமது சொற்பொழிவுகளில் கையாண்ட காந்தச் சொற்களே தாம் கல்விக்கூடத்தை விட்டு வெளியேறக் காரணமாய் இருந்தன என்பதைப் பின்னாளில் 'ஆனந்த விகடன்' இதழில் (10.4.1934) எழுதிய ஒரு கட்டுரையில் கல்கியே ஒப்புக் கொண்டிருந்தார்:

"...1921 -ஆம் வருஷ ஆரம்பத்தில் இவருடைய (டி.எஸ்.எஸ். ராஜனுடைய) ஆவேசமுள்ள பிரசங்கங்களைக் கேட்டுத்தான் பள்ளிக்கூடப் புத்தகங்களைக் கட்டிக் காவேரியில் போட்டுவிட்டு நான் வெளிக்கிளம்பியது. என்னுடைய வாழ்க்கையில் இந்த மனிதர் மட்டும் பிரவேசித்திராவிட்டால் 'சிவனே' என்று பரீட்சையில் பாஸ் செய்துவிட்டு உத்தியோக வேட்டையில் தலையிட்டிருக்கலாம்" (மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.98).

நல்ல வேளையாகத் தம்முடைய வாழ்வின் பிற்பகுதியில் கல்கி வன்மையாகச் சாடி எழுதிய ஏட்டுக் கல்வியைக் கற்றுப் பட்டம் பெறவில்லை. ஒருகால், குமாஸ்தாக்களை உருவாக்கும் அக்கல்வியையே தொடர்ந்து படித்துப் பட்டமும் பெற்றிருந்தால் 'பத்தோடு பதினொன்று; அத்தோடு இது ஒன்று' என்ற மிகச் சாதாரண நிலையிலேயே இருந்திருப்பார்; தமிழ்ப் புனைகதை உலகமும் ஒரு தலைசிறந்த படைப்-பாளரைப் பெற்றிருக்காது.

காங்கிரஸ் பணியும் காந்தி தரிசனமும்

பள்ளியை விட்டு வெளியேறிய கல்கி காங்கிரஸ் பணியில் ஈடுபட்டார்; 'சிறந்த மாணவர்' என்று பள்ளிப் பருவத்தில் பெயர் எடுத்திருந்த அவர், இப்போது 'சிறந்த காங்கிரஸ் தொண்டர்' என்ற பெயரினைப் பெற்றார்; பல்வேறு காங்கிரஸ் திட்டங்களிலே ஆர்வத்துடனும் பொறுப்புடனும் ஈடுபட்டார். அதுவரை காந்தியடிகளின் கருத்துக்களைச் செவி வழியாக மட்டுமே கேட்டுக் கொண்டிருந்த கல்கி, 1921 - ஆம் ஆண்டு

செப்டம்பர் மாதம் 18 - ஆம் நாளன்று காந்தியடிகளை நேரில் தரிசிக்கும் பேற்றினைப் பெற்றார். அதன் விளைவாக அவரது உள்ளத்தில் அதுவரை அரும்பிப் போதாக இருந்த 'காந்தி பக்தி' முழுவதும் மலர்ந்து மணம் வீசத் தொடங்கியது. கல்கி என்ற இளைஞரின் உள்ளத்தைக் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் முற்றிலுமாக அள்ளிக்கொண்டது. காந்தியடிகளை முதன்முதல் தரிசிக்கும் பேறு 1921 -ஆம் ஆண்டில் கிடைத்தாலும், அவருடன் உரையாடும் நல்வாய்ப்பு பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகே கல்கிக்குக் கிடைத்து.

முதல் சிறைவாசம்

காந்தியடிகளின் அழைப்பினை ஏற்று ஒத்துழையாமை இயக்கத்தில் நேரடியாகப் பங்கு கொண்டதற்காகக் கல்கி 1922 - ஆம் ஆண்டில் முதன்முறையாகச் சிறைக்குச் சென்றார். இந்த முதலாவது சிறை வாசத்தின் போது நேர்ந்த ஒரு சோகமான நிகழ்ச்சியைக் குறித்துப் பிற்காலத்தில் கல்கியே இங்ஙனம் நினைவுகூர்ந்து எழுதியிருக்கிறார்:

> "என்னுடைய தாயாரும் சித்தியும் என்னை 'இண்டர்வியூ' பார்க்க வந்திருந்தார்கள். நான் 'குவாரண்டை'னிலிருக்கும் போதே அவர்கள் வந்து-விட்டபடியால் சிறை வாசலிலேயே இண்டர்வியூ நடந்தது. கால்களில் காப்பும் சங்கிலியும் குலுங்க, குறுக்குக் கோடு போட்ட குட்டைக் கைச் சட்டையும், முழங்காலுக்கு மேல் அதே துணியில் நிஜாரும் தரித்து அழகான கோலத்தில் வந்தபோது, அவர்களுக்கு முதலில் என்னை அடையாளமே தெரியவில்லை. கிட்ட வந்து, 'அம்மா, சித்தி, என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக் கொண்டு வந்தீர்கள்?' என்று நான் கேட்டபோதுதான் அவர்களுக்கு என்னைத் தெரிந்தது. அம்மா ஒன்றுமே பேசத்தெரியாமல் திகைத்துப் போய் என்னைப் பார்த்தபடி நின்றாள். சித்தி, 'ஐயையோ! உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கத்தானா உன் அம்மா பெற்று வளர்த்தாள்?' என்று அழத் தொடங்கிவிட்டாள்.நான் அவர்களைக் கொஞ்சம் சமாதானப்படுத்தி, 'அம்மா! நான் நகை போட்டுக் கொள்வதில்லை யென்று நீ குறைப்பட்டாயல்லவா? இதோ பார் காப்பும் சங்கிலியும்' என்றேன். இந்த நகைச்சுவையை அவர்களால் அநுபவிக்க முடியவில்லை; அதையும் சோக ரஸமாகவே எண்ணி

வருத்தப்படத் தொடங்கிவிட்டார்கள்" (மூன்று மாதம் கடுங்காவல், பக்.27-28).

கல்கியின் முதல் சிறைவாசம் 1922 -ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கரூரில் நாமக்கல் கவிஞரின் தலைமையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதன் பலனாக அவருக்குக் கிடைத்தது. இதனைத் தமக்கு கிட்டிய ஒரு பெருமையாகவே கருதினார் கல்கி. இன்னொரு வகையில் இந்தச் சிறைவாசம் அவரது வாழ்வில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. அவருடைய புனைகதைப் படைப்பின் தலைப்பிள்ளையான 'விமலா' என்னும் குறுநாவல் அங்கேதான் பிறந்தது. மேலும் சிறைக்கூடத்தில் தான் மூதறிஞர் ராஜாஜி, திரு. சதாசிவம் போன்றவர்களின் அறிமுகமும் தொடர்பும் கல்கிக்குக் கிடைத்தன. இத் தொடர்பு அவரது வாழ்நாளின் இறுதி மூச்சு வரை அவருடன் இரண்டறக் கலந்திருந்தது.

'நவசக்தி'யில் பணியாற்றல்

1923-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கல்கி திருச்சி காங்கிரஸ் அலுவலகத்தில் முப்பது ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். அதே ஆண்டின் இடைப்பகுதியில் அவர் சிறிது காலம் ஈரோட்டில் 'கதர் போர்'டில் பணியாற்றினார். அந்தப் பணியில் இருக்கும்போது, கல்கியின் வாழ்வில் இன்னொரு முக்கியமான மாற்றம் நிகழ்ந்தது. அவர் திருச்சியில் இருந்து சென்னைக்கு இடம் பெயர்ந்தார்: காங்கிரஸ் தொண்டர் பதவியில் இருந்து விடைபெற்று, பத்திரிகை உலகிற்குள் அடியெடுத்து வைத்தார். இந்த இரண்டாவது மாற்றத்திற்கு அவருடைய மொழி பெயர்ப்புத் திறனும், பிழையில்லாத தமிழ் நடையும், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனின் பரிந்துரைக் கடிதமும் அடித்தளம் அமைத்துத் தந்தன. "எழுத்தாளர் உலகில் யாராவது என்னைத் தாக்கும்போதெல்லாம், அந்தத் தாக்குதல்களை அப்படியே நான் வாங்கி, திருச்சி தேச பக்தர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனுக்கு அனுப்பி விடுவது வழக்கம். ஏனென்றால், எழுத்தாளர் உலகுக்கு என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவர் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன்தான் (பாரதி பிறந்தார், ப.15) என்று கல்கியே இது குறித்துப் பின்னாளில் எழுதிய ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனின் பரிந்துரைக் கடிதம், 1923 -ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாளன்று கல்கியைத்

திரு.வி.கலியாணசுந்தரனாரின் 'நவசக்தி' பத்திரிகையில் உதவி ஆசிரியர் பொறுப்பினைப் பெற்றுத் தந்தது; திரு.வி.க.வுடனும் வெ. சாமிநாத சர்மாவுடனும் இணைந்து பணியாற்றும் நல்வாய்ப்பினை நல்கியது; பத்திரிகைத் துறையில் மளமளவென்று முன்னேறுவதற்கும் வழி வகுத்தது.

'நவசக்தி' இதழில் பணியாற்றிய காலத்தில் கல்கி, 'தமிழ்த் தேனீ' என்ற புனைபெயரில் உலகத்துப் பலதரப்பட்ட செய்திகளைச் சுவைபடத் திரட்டிக் கொடுத்தார். 'அகஸ்தியர்' என்ற புனைபெயரில் 'விஷமந்திரம்', 'கவர்னர் விஜயம்', 'சாரதையின் தந்திரம்', 'ஒன்பது குழி நிலம்', 'தற்கொலை', 'சுபத்திரையின் சகோதரன்' போன்ற சிறந்த சிறுகதைகளைப் படைத்துத் தந்தார்; முக்கியமான மாநாட்டு நிகழ்ச்சிகளைப் 'பேனாச் சித்திரம்' என்ற புதிய முறையில் தொகுத்து அளித்தார்; காந்தியடிகளின் தனிப்பெரும் தன்வரலாற்று நூலான 'உண்மையோடு இயைந்த வாழ்க்கை'யான - 'சத்திய சோதனை'யைத் தமிழில் மொழி பெயர்த்து வழங்கினார். தமது படைப்பிலக்கியத் திறத்தின் முழுவேகத்திற்கும் வீச்சிற்கும் 'நவசக்தி' இதழில் இடம் போதாது என்பதை உணர்ந்த நிலையில், கல்கி அதிலிருந்து விலகினார் என்றாலும், திரு.வி.க.வுடன் இணைந்து பணியாற்றியதன் பயனாகப் பெற்ற அடிப்படைக் கல்வி - அனுபவக் கல்வி - பிற்காலத்தில் பத்திரிகைத் துறையில் கல்கி முத்திரை பதிப்பதற்கு - சாதனை படைப்பதற்கு - பெருந்துணையாக அமைந்தது எனலாம்.

திரு.வி.க.வின் வாழ்த்துப் பெற்ற திருமணம்

1924-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கல்கியின் குடும்பத்தினர் அவரைக் கேட்காமலே திருமண ஏற்பாட்டை மேற்கொண்டனர்; தலையூர்ப் பெண்ணைப் பார்த்து உறுதியும் செய்தனர். அண்ணன் வேங்கடராமன் தம்பி கல்கிக்கு இது குறித்து விளக்கமாக ஒரு கடிதம் எழுதினார்; நேரிலும் சென்று பேசினார். பெரியவர்கள் உறுதிசெய்த இந்த 'மரப்பாச்சிக் கல்யாண'த்தைக் கல்கி ஏற்றுக் கொள்ளவில்லை. அண்ணன் - தம்பி இருவருக்கும் இடையே நெடுநேரம் வாக்குவாதம் நிகழ்ந்தது. முத்தாய்ப்பாக, "நான் திரு.வி.க.வை ரொம்பவும் மதிக்கிறேன். அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி நடப்போம்" என்றார் கல்கி. அதன்படி இருவரும் திரு.வி.க.விடம் சென்று விவரம் கூறினர்; பொறுமையாகக் கேட்ட திரு.வி.க.வோ கண்களை மூடிச் சிறிது நேரம் சிந்தித்த

பிறகு, "உங்களைச் சில மாதங்களாய்க் கவனித்து வந்ததில், நீங்கள் பெரும்பணிகள் செய்யக் கூடியவர் என்பதை உணர்கிறேன். இந்தப் பணிகளுக்கு இல்லறம் வலிமையூட்டும். உங்கள் அண்ணா நிச்சயம் செய்திருக்கும் பெண் நல்ல மனையாளாய் இருப்பாள் என்பதில் ஐயம் வேண்டாம். எல்லாம் ஆண்டவன் ஆணை. நடப்பது நடக்கவே செய்யும். நல்லபடியாய் நடக்க இறைவனை வேண்டுகிறேன்" (சுந்தா, பொன்னியின் புதல்வர், பக்.150-151) என்று மணவாழ்த்துக் கூறி வாக்குவாதத்திற்கு இடம் இல்லாதபடி முடித்து வைத்துவிட்டார். சுவையான இந்தச் சூழ்நிலையில்தான் கிருஷ்ணமூர்த்தி - ருக்மிணி திருமணம் (பெயர்ப் பொருத்தம் நன்றாக அமைந்திருந்தது) நடைபெற்றது; திருமணம் நிகழ்ந்த போது கல்கிக்கு வயது இருபத்தைந்து. முகூர்த்தத்தின் போது அவர் வழக்கமான பட்டுக்கரை வேட்டியை அணிந்து கொள்ளாமல், முரட்டுக் கதரிலேயே பஞ்சகச்சம் அணிந்திருந்தார். இது, 'கதர் மாப்பிள்ளை' என்ற பெயரைக் கல்கிக்குப் பெற்றத் தந்தது.

திருமணமாகி ஓர் ஆண்டுக் காலம் வரை கல்கியின் துணைவியார் ருக்மிணி அவரது பிறந்த வீட்டிலேயே தங்கியிருந்தார். அதன்பின் அவரது பெற்றோர் அவரைப் புகுந்த வீடான புத்தமங்கலத்திற்குக் கொண்டு போய்விட்டனர். இந் நிலையில் கல்கி சென்னையில் மாம்பலத்தில் ஒரு வீடு பார்த்து முடிவு செய்துவிட்டு, தம் துணைவியாரை அழைத்து வருவதற்காகப் புத்தமங்கலம் சென்றார். அப்போது, ருக்மிணியின் திருமணத்திற்காகச் செய்து போட்டிருந்த, பதினான்கு பவுன் சங்கிலியைத் திடீரென்று காணோம். ருக்மிணியின் புகுந்த வீட்டாருக்கோ, உண்மையிலேயே சங்கிலியைக் காணோமா, இல்லை, சங்கிலியே போடாமல் ருக்மிணியின் பிறந்த வீட்டார் நாடகம் ஆடுகிறார்களா என்று சந்தேகம். இதனால் இரு குடும்பங்களுக்கும் இடையே பெரும் பிரச்சினை எழுந்தது. அதன் பிறகு என்ன நடந்தது என்பதைத் திருமதி. ருக்மிணி அம்மையாரின் சொற்களிலேயே காண்போம்:

> "கல்கி மாமா என்னைக் கூப்பிட்டார். 'சங்கிலி போட்டது உண்மையா?' என்று கேட்க, நான் 'உண்மைதான்' என்று பதில் சொன்னேன். 'அது காணாமல் போய்விட்டதா?' என்று அடுத்துக் கேட்டார். 'ஆமாம்' என்றேன்.

உடனே எல்லோரையும் பார்த்து 'இவள் சொல்வதை நான் நம்புகிறேன். இனி யாரும் இந்த விஷயம் பற்றி வாய் திறக்கக் கூடாது' என்று சத்தமாய்ச் சொல்லிவிட்டார்.

நாங்கள் புறப்பட்டுச் சென்னை வந்தபிறகு, சங்கிலி கிடைத்து விட்டதாகத் தகவல் வந்தது" ('என் கணவர் கல்கி', கல்கியின் துணைவியார் திருமதி. ருக்மிணியின் பேட்டி, சாவி, 20.8.1998, பக்.4-5).

பெண்மையைப் போற்றுவதில் - பெண்ணுக்கு உரிய மதிப்பினைத் தருவதில் - கல்கி வாய்ச்சொல் வீரராக மட்டுமே விளங்காமல், வார்த்தைக்கும் வாழ்க்கைக்கும் எந்த விதமான இடைவெளி இல்லாத - உள்ளும் புறமும் ஒத்த - உயர்ந்த மனிதராகவே விளங்கினார், 'பெண்மை வாழ்க!' என்றும், 'பெண்மை வெல்க!' என்றும் பெண் முன்னேற்றத்திற்காக என்றென்றும் குரல் கொடுத்தார் என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே போதுமானதாகும்.

நூல் வெளியீடு

1927 - ஆம் ஆண்டில் கல்கி 'சத்திய சோதனை' - 'சாரதையின் தந்திரம்' என்ற தமது முதல் இரண்டு நூல்களை அடுத்தடுத்து வெளியிட்டார். இவற்றுள் 'சத்திய சோதனை' மொழிபெயர்ப்பு நூல்; 'சாரதையின் தந்திரம்' எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு. இரண்டும் 'நவசக்தி' இதழில் வெளிவந்தவை. இவ்விரு நூல்களையும் வெளியிட்ட போது கல்கிக்கு வயது இருபத்தெட்டு.

திருச்செங்கோடு ஆசிரம வாழ்க்கை

திரு.வி.க.வின் 'நவசக்தி' பத்திரிகையை விட்டு விலகிய கல்கி, மூதறிஞர் ராஜாஜியின் அழைப்பை ஏற்றுத் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கே அவர் ஓர் ஓலைக் குடிசையில் எளிய முறையில் துணைவியாரோடு ஆனந்தமாக வாழ்ந்தார்; ஐம்பது ரூபாய் சம்பளத்தில் கணக்கு எழுதும் வேலையை ஏற்றார்; சில மாதங்களுக்கப் பிறகு அவ்வேலையை மற்றொருவரிடம் ஒப்படைத்து விட்டு, ராஜாஜிக்குத் துணையாக 'விமோசனம்' பத்திரிகையோடு தம்மை இணைத்துக் கொண்டார். ராஜாஜியை ஆசிரியராகவும் கல்கியை உதவி ஆசிரியராகவும் கொண்ட மதுவிலக்குப் பிரச்சாரப் பத்திரிகையான

'விமோசனம்' 1929-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியது. அதில் குடியின் தீமையை விளக்கும் 'பாங்கர் விநாயகராவ்' என்ற நாடகம் ஒன்றையும், 'தெய்வயானை', 'அரசூர் பஞ்சாயத்து', 'சின்னத்தம்பியும் திருடர்களும்', 'கோவிந்தனும் வீரப்பனும்', 'கவர்னர் வண்டி', 'விதூஷகன் சின்னு முதலி' என்ற ஆறு சிறுகதைகளையும் கல்கி எழுதினார். கடைசியில், உயர்ந்த குறிக்கோளுடன் தொடங்கப் பெறும் எல்லாப் பத்திரிகைகளுக்கும் ஏற்படும் முடிவே 'விமோசனம்' பத்திரிகைக்கும் நேர்ந்தது; அதாவது பத்து இதழ்களுடன் 'விமோசனம்' நின்றுவிட்டது. என்றாலும், தமது வாழ்க்கையிலேயே மிகுந்த மகிழ்ச்சியையும் மனநிறை-வையும் அனுபவித்த நாட்கள் என்று திருச்செங்கோடு ஆசிரமத்தில் தாம் வாழ்ந்த மூன்று ஆண்டுக் காலத்தையே குறிப்பிட்டிருக்கிறார் கல்கி (பாங்கர் விநாயகராவ், முகவுரை, ப.16).

தந்தை ஆதல்

1933 - ஆம் ஆண்டில் கல்கிக்குத் 'தந்தை' என்ற பெருமை மிகு பேறு கிடைத்தது. 8.4.1933 -இல் ருக்மிணி அம்மையார் ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். துக்கத்தைப் போக்கி ஆனந்தம் கொடுக்கப் பிறந்த அந்தக் குழந்தைக்கு 'ஆனந்தி' எனப் பெயரிடுமாறு அவருக்கு எழுதிய வாழ்த்துக் கடிதத்தில் எழுதியிருந்தார் ராஜாஜி. சென்னையில் சொந்த வீட்டில் குடிபுகுந்ததற்குச் சில வாரங்களில் கல்கியின் வாழ்க்கையில் மீண்டும் குழந்தைப் பேறு வாய்த்தது. முதல்முறை யாழைப் போன்ற ஓர் அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்த ருக்மிணி அம்மையார், இம்முறை 20.8.1935-இல் குழலைப் போன்ற ஓர் ஆண் குழந்தையை ஈன்று புறந்தந்தார். காங்கிரஸ் தலைவர் பாபு ராஜேந்திரப் பிரசாத்தின் சென்னை வருகையை ஒட்டிப் பிறந்ததால் தம் மகனுக்கு 'ராஜேந்திரன்' எனப் பெயர் சூட்டினார் கல்கி. ராஜாஜியின் பெயரை அவனுக்கு இடாமல் போனோமே என்று பிறகு நினைத்தாரோ என்னவோ, உபநயனத்தின் போது அவரே அவனுக்கு 'ராஜகோபால சர்மா' என்று நாமகரணம் செய்தார். மூதறிஞர் ராஜாஜி கல்கியின் மகளுக்கு இட்டது போலவே, மகள் வயிற்றில் பிறந்த பேத்திக்கும் பெயர் இட்டார்; அப்போது தில்லியில் இருந்த அவர், குழந்தை பிறந்த தகவல் அறிந்ததுமே "ஆனந்திக்கும் கௌரிக்கும் ஆசீர்வாதம்" என்று

பெயர் வைத்து வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்தாராம். கல்கியும் பெருமையுடன் பெரியவர் இட்ட அப் பெயரை ஏற்றுக் கொண்டு, அதனுடன் ஓர் அடைமொழி சேர்த்துக் 'கௌரிக் கண்மணி' என்று வாயாரக் கூப்பிட்டு மகிழ்ந்தாராம். ராஜாஜிக்கும் கல்கிக்கும் இடையே நிலவிய நெருங்கிய தொடர்பைக் குறிப்பதற்கு இந்நிகழ்ச்சியே போதுமானதாகும்.

'கல்கி' என்ற புனைபெயர் பூண்டதன் காரணம்

1928 -ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு நாள் 'லோகோபகாரி' என்ற பத்திரிகையின் ஆசிரியர் பரலி சு. நெல்லையப்பர், 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ்.எஸ். வாசனின் இல்லத்திற்கு கல்கியை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். இந்த அறிமுகத்தைத் தொடர்ந்து, 'அகஸ்தியர்', 'தமிழ்த்தேனீ', என்ற புனைபெயர்களில் 'நவசக்தி' பத்திரிகையில் அதுவரை கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்த கல்கி, முதன்முதலாகக் 'கல்கி' என்ற புனைபெயரில் ஒரு கட்டுரையை எழுதி 'ஆனந்த விகட'னுக்கு அனுப்பி வைத்தார்; அந்தக் கட்டுரைக்கு 'ஏட்டிக்கு போட்டி' என்று ஒரு வித்தியாசமான தலைப்பினை அவர் வைத்திருந்தார். அந்தப் புனைபெயரும், கட்டுரையும் அவர் புகழேணியின் உச்சிக்குச் செல்வதற்குப் 'பிள்ளையார் சுழி' இட்டன. 'கல்கி' என்ற சின்னஞ்சிறிய, மூன்றெழுத்துப் புனைபெயரைச் சூட்டிக் கொள்கையில் அது பிற்காலத்தில் மிகப் பெரிய புகழ்ப் பெயராகத் திகழப் போகிறது என்பதைக் கிருஷ்ணமூர்த்தி கொஞ்சமும் உணர்ந்திருக்க மாட்டார். அதுவே பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தமது சொந்தப் பத்திரிகையின் பெயராகவும் அமையப் போகிறது என்பதையும் அவர் சிறிதும் நினைத்தே இருக்க மாட்டார்.

'கல்கி' என்ற புனைபெயரின் பொருள் என்ன, அதனைக் கிருஷ்ணமூர்த்தி ஏன் சூட்டிக் கொண்டார் என்பது குறித்துப் பலரும் மனம் போன போக்கில் பலவாறு விளக்கங்கள் சொல்லி வந்தனர். இதற்கான சரியான விளக்கத்தைக் கல்கியே 1950 -ஆம் ஆண்டில் இலங்கையில் பயணம் செய்தபோது வெளியிட்டார்:

> "நான் பழைமையான சம்பிரதாயங்களையும் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களையும் விட்டொழித்துப் புதுமை யுகத்தை மலரச் செய்ய வேண்டும் என்ற கருத்தை அந்தக் கட்டுரையில் ('ஏட்டிக்குப் போட்டி'யில்)

வெளியிட்டேன். இதுவரை கழிந்து போன யுகங்களைத் தவிர்த்துப் புதிய யுகத்தைச் சிருஷ்டிக்கப் போவதாக ஒவ்வோர் இளம்எழுத்தாளரும் எண்ணிக் கொண்டு எழுதுவது இயற்கை. அது போலவே நானும் அந்தக் காலத்தில் ஒரு புது யுகத்தைச் சிருஷ்டிக்கப் போகும் பெரு வீரனாக என்னை நினைத்துக் கொண்டு, பகவானின் பத்தாவது அவதாரமும், புதுயுகத்தைக் குறிப்பதுமான கல்கியென்ற புனைபெயரை அப்பொழுது வைத்துக் கொண்டேன்... புதிய கருத்துக்களை வெளியிட்டு வாசகர்களது மனத்தைப் புதிய திசையில் திருப்பி, புதிய யுகத்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் தான் 'கல்கி' என்ற புனைபெயர் பூண்டேனே தவிர, இதற்கு வேறு எந்த விதமான காரணமும் கிடையாது" (மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.4).

இக்கூற்றின் அடிப்படையில், கல்கி அவதாரத்தை மனத்தில் கொண்டே இந்தப் புனைபெயரைக் கிருஷ்ணமூர்த்தி சூட்டிக் கொண்டார் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

'ஏட்டிக்குப் போட்டி'யின் இமாலய வெற்றிக்கும் வரவேற்புக்கும் பிறகு, 'தமிழ்மகன்', 'கர்நாடகம்', 'ரா.கி.', 'தமிழ்த்தும்பி', 'ஒரு பிராம்மண இளைஞன்' என்ற புனை பெயர்களிலும் அவ்வப்போது 'ஆனந்த விகட'னில் கல்கி கதைகளும் கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதினார்.

இரண்டாவது சிறைவாசம்

1930 - ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கல்கிக்கு இரண்டாவது சிறைத் தண்டனை கிடைத்தது. சத்தியாக்கிரகப் பிரச்சாரம் செய்யும் வகையில் 'சுதந்திரப் போர்', 'மகாத்மாவின் சிறைவாசம்', 'மகாத்மா சரித்திரம்', 'சுயராஜ்யம் ஏன்?' என்ற காலணா வெளியீடுகளை இரகசியமாக இலட்சக்கணக்கில் அச்சடித்துப் பரப்பியதற்காக ஆறு மாத காலம் இத் தண்டனை அவருக்கு வழங்கப் பெற்றது. "(காந்தி) ஆசிரமத்தைச் சேர்ந்த தொண்டர்கள் மிகவும் அபூர்வமான சேவைகள் செய்தார்கள். அந்தத் தொண்டர்களில் ஸ்ரீ ரா.கி. முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர். அந்த இயக்கத்தில் சேலம் ஜில்லாவில் சிறை சென்றவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டதற்கு இவருடைய உழைப்பே மிகுதியும் உதவிற்று" (மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.250)

என அந்நாளில் கல்கி ஆற்றிய நாட்டுப் பணியினை நாமக்கல் கவிஞர் நெஞ்சாரப் பாராட்டியுள்ளார்.

திருச்செங்கோடு ஆசிரமத்தில் இருந்து கொண்டே கல்கி, 'ஆனந்த விகட'னுக்குக் கட்டுரைகளும் கதைகளும் தலையங்கங்களும் எழுதினார்; தமது சிறைச்சாலை அனுபவங்களைப் பற்றியும் எழுதினார். 1931 - ஆம் ஆண்டின் இறுதியில் கல்கி திருச்செங்கோடு ஆசிரமத்தை விட்டுப் புறப்பட்டார்; ஆசிரமவாசிகள் அனைவரும் ராஜாஜியின் தலைமையில் ஒன்றுகூடிக் கல்கி தம்பதியருக்கு வாழ்த்துக் கூறி வழியனுப்பி வைத்தனர். ஐந்து மாதக் கர்ப்பிணியாக இருந்த துணைவியாரை அவரது பிறந்தகத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு, சென்னைக்குச் சென்ற கல்கி 1932 -ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் துணையாசிரியர் பொறுப்பினை ஏற்றார்; துமிலனின் துணையுடன் நன்கு திட்டமிட்டு, முழுமூச்சுடன் ஈடுபட்டு 'ஆனந்த விகடன்' என்ற பெயருக்கு ஏற்ப அட்டைப் படம், தலையங்கம், கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், துக்கடாக்கள் முதலான எல்லாவற்றையும் விகட மயமாய் ஆக்கினார். 'தமிழால் பாரதி தகுதி பெற்றதும், பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும்' எனப் பாவேந்தர் பாரதிதாசன் பாடியது போல், பல வகைகளில் 'விகட'னால் கல்கி வளர்ந்தார்; கல்கியால் 'விகட'னும் வளர்ந்தது.

'விகட'னில் இருந்து விலகல்

1940-ஆம் ஆண்டின் கடைசி நாள் கல்கியின் வாழ்க்கையில் ஒரு பொல்லாத நாளாய் அமைந்தது; அதுவே 'ஆனந்த விகட'னில் கல்கி பதவியில் இருந்த கடைசி நாளாகவும் ஆயிற்று. முன்னிரண்டு விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றிருந்த கல்கி, அப்போது தொடங்கி இருந்த மூன்றாவது பெரும் போராட்டத்திலும் கலந்து கொள்ளப் பெருவிருப்பம் கொண்டார்; தனிநபர் சத்தியாக்கிரகம் செய்ய அனுமதி வேண்டி அவர் காந்தியடிகளுக்கு விண்ணப்பம் அனுப்பினார். அடிகளின் அனுமதி டிசம்பர் 31 -ஆம் நாளன்று காலையில் கல்கியின் வீட்டு முகவரிக்கு வந்தது. இந்நிலையில் அவர் வாசனின் அனுமதி வேண்டினார். இருவருக்கும் இடையே வாக்குவாதம் நிகழ்ந்தது; கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதன் விளைவாக, 1941-ஆம் ஆண்டின் புத்தாண்டு நாளன்று, வீட்டில்

இருந்தபடியே கல்கி தமது விலகல் கடிதத்தை 'விகட'னுக்கு அனுப்பி வைத்தார். பத்து ஆண்டுகள் தாம் அரும்பாடு பட்டு வளர்த்து உருவாக்கிய பத்திரிகை நிறுவனத்தில் இருந்து முந்தின நாள் ஐந்தே ஐந்து நிமிடங்கள் நடந்த உரையாடல் காரணமாக வெளியேற்றப்பட்டு 'முன்னாள் துணை ஆசிரிய'ராகி விட்டார் கல்கி! "எழுத்தாளர்கள் ஒரு பத்திரிகையிலிருந்து இன்னொரு பத்திரிக்கைக்கு மாறியதாகவோ, தாங்களே புதிய பத்திரிகை ஆரம்பித்ததாகவோ கேள்விப்படும்போது நான் சிறிதும் வியப்படைவதில்லை. எழுத்தாளர் என்போர் ஒரு விநோதமான இனத்தினர். ஓர் இடத்தில் நிலையாக இருக்க அவர்களால் முடிவதில்லை. தம் இஷ்டம் போல் சுயேச்சையாக எவ்விதக் கட்டுப்பாடுமின்றி எழுத வேண்டும் என்ற ஆவல் பெரும்பாலான எழுத்தாளர் உள்ளத்தில் எப்போதும் இருந்து கொண்டிருக்கும்" (பாங்கர் விநாயகராவ், முகவுரை, ப.10) என்னும் அவரது கூற்று அனுபவ மொழியே ஆகும்.

மூன்றாவது சிறைவாசம்

1941 - ஆம் ஆண்டு ஜனவரி 21 - ஆம் நாளன்று கல்கியின் மூன்றாவது சிறைவாசம் தொடங்கியது. மூன்று மாதங்கள் நீடித்த அந்தச் சிறைவாச அனுபவங்களைக் குறித்து 'மூன்று மாதம் கடுங்காவல்' என்ற நூலில் கல்கி விரிவாக எழுதியுள்ளார்.

சொந்தப் பத்திரிகை தொடங்கல்

சிறையில் இருந்து விடுதலை பெற்று வந்தவுடன், ஆருயிர் நண்பர் சதாசிவத்தின் துணையோடு, 'கல்கி' என்ற தம் புனைபெயரிலேயே சொந்தப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார் கல்கி. கல்கி தொடங்கிய 'கல்கி' பத்திரிகையின் முதல் இதழ் 1941 - ஆம் ஆண்டு முதல் நாளன்று வெளிவந்தது. 'வாழ்க்கையில் ஒரு கதவு நமக்கு அடைக்கப்பட்டால், மற்றொரு கதவு நமக்காகத் தானாகவே திறக்கப்படும்' என்ற வாக்கு கல்கியைப் பொறுத்தவரையில் உண்மை ஆயிற்று; கல்கி - வாசன் கருத்து வேறுபாடு ஒரு விலகலுக்குக் காரணமாக அமைந்தது என்றால், கல்கி - சதாசிவம் கூட்டுறவு ஒரு விடியலுக்குக் காரணமாக அமைந்தது எனலாம்!

'கல்கி' பத்திரிகை எழுத்தாளர் கல்கியின் பன்முக ஆற்றல்களையும் அவரது ஆளுமையின் பல்வேறு

பரிமாணங்களையும் முழுமையாக வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அமைந்தது. சுந்தாவின் சொற்களிலே சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், "அவருடைய சொந்தப் பத்திரிகை அவருடைய சொந்த ஆளுமைப் பத்திரிகையாக விளங்கிற்று" (பொன்னியின் புதல்வர், ப.804).

'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' என்னும் கல்கியின் முப்பெரும் வரலாற்று நாவல்களும் 'கல்கி' பத்திரிகையில்தான் தொடர்கதைகளாக வெளிவந்தன. தம் படைப்புக்களில் நிலைத்து நிற்கக் கூடியது என்றும், தலைசிறந்தது என்றும் கல்கியே மனம் திறந்து கூறிய 'அலைஓசை' வெளிவந்ததும் 'கல்கி'யில்தான். மேலும் அவர், தமிழிசை இயக்கத்தின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டும் விளக்கக் கட்டுரைகளையும், நம் கல்விமுறையில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டும் சிந்தனைக் கட்டுரைகளையும், திரைப்படங்களைப் பற்றிய அருமையான விமர்சனக் கட்டுரைகளையும் 'கல்கி' இதழ்களில் அவ்வப்போது எழுதினார். 'கல்கி' இதழின் தொடக்க காலத்தில் மிகுதியாகச் சிறுகதைகளை எழுதிய கல்கி, பின்னர் தொடர்கதைகள் எழுதுவதில் மிகுந்த கவனம் செலுத்தினார். இடையிடையே 'அட்டைப்பட விளக்க'மாகப் பல்வேறு துறைகளில் சாதனை படைத்த முத்திரை மனிதர்களுக்குப் புகழாரம் சூட்டினார்; மாமனிதர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தினார்.

கல்கி எழுதிய திரைப்படக் கதைகள்

திரைப்படத்திற்காகவும் கல்கி ஒரு சில கதைகளை அவ்வப்போது எழுதினார். அவற்றைத் திரைப்படமாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால், அவற்றுள் ஒன்றான 'கள்வனின் காதலி'யை அவர் 1937 - ஆம் ஆண்டில் நாவல் வடிவில் 'ஆனந்த விகடன்' இதழில் வெளியிட்டார். தொடர்ந்து, 1939 - ஆம் ஆண்டில் 'ஆனந்த விகடன்' இதழில் 'தியாக பூமி' திரைக்கதையையும் திரைப்படக் காட்சிப் படங்களுடன் புதுமையான முறையில் அவர் வெளியிட்டார். இதே போல் திரை உலகிற்காக அவர் எழுதிய மற்றொரு கதையான 'சிவகாமியின் சபதம்' பல ஆண்டுகளுக்குப் பின்னர் 'கல்கி' இதழில் (1944 - ஆம் ஆண்டில்) தொடர்கதையாக வெளிவந்தது; அதற்கு முன்னால் திருச்சி வானொலி நிலையத்தில் இருந்து ஒரு நாடகமாய் ஒலிபரப்பாயிற்று.

கல்கி படைத்த பயண இலக்கியங்கள்

கல்கியின் முதல் இலங்கைப் பயணம் 1938 - ஆம் ஆண்டில் மே மாதத்தில் அமைந்தது. 1950 - ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அவர் இரண்டாவது முறையாக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டார். அவரது இலங்கைப் பயண அனுபவங்களும் நினைவுகளும் 'இலங்கையில் ஒரு வாரம்', 'இலங்கைப் பிராயணம்' (12 கட்டுரைகளின் தொகுப்பு) என்ற நூல்களாக வெளிவந்துள்ளன. இலங்கைப் பயணக் கட்டுரைகள் சிலவற்றிற்குக் கல்கி 'விபீஷணன் எங்கே?', 'கண்டேன் கண்டியை'; 'தேயிலைத் தோட்டத்திலே', என்றாற் போல் இலக்கிய மணம் ததும்பும் பெயர்களை வைத்துள்ளார். 'யாழ்ப்பாண விசேஷங்கள்' என்ற கட்டுரையில் "முதன் முதலில் யாழ்ப்பாணத்தாரின் பேச்சைக் கேட்கும்போது நமக்கு என்னமோ மாதிரி இருக்கும். கொஞ்சம் கேட்டுப் பழகி விட்டோமானால், அப்புறம் அதன் இனிமையில் ஆழ்ந்து போய்விடுவோம். சங்கீத பாஷையில் சொன்னால், அவர்கள் பாவத்துடன் தமிழ் பேசுகிறார்கள்; நாமோ திவச மந்திரம் மாதிரி வெடுக்கு வெடுக்கு என்று தமிழ் பேசுகிறோம்" (இலங்கைப் பிரயாணம் - 11,ப.23) என யாழ்ப்பாணத் தமிழுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். இலங்கைப் பயணம் பற்றிய பன்னிரண்டாவது கட்டுரையை முடிக்கும் போது தமக்கே உரிய பாணியில் "இலங்கை மாதாவிடமும் விகடன் நேயர்களிடமும் ஒருங்கே விடைபெற்றுக் கொள்கிறோம். போய் வருகிறோம், நேயர்களே, போய் வருகிறோம்" (இலங்கைப் பிரயாணம் -12, ப.47) என முத்தாய்ப்பாக எழுதியிருந்தார் கல்கி. இலங்கையைத் தவிர, மாமல்லபுரம், தஞ்சாவூர், மைசூர் முதலான வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களையும் கல்கி நேரில் சென்று பார்த்தார்; அங்கே கிடைத்த பயண அனுபவங்களைக் கொண்டு 'ஸ்வப்ன லோகம்', 'மகேந்திர ஜாலபுரம்', 'கல் சொன்ன கதை', 'வாழ்வும் தாழ்வும்', 'நம் தந்தையர் செய்த விந்தைகள்' என்ற தலைப்புக்களில் அருமையான பயணக் கட்டுரைகளை எழுதினார்.

மொழிபெயர்ப்புப் பணி

"மொழிபெயர்ப்பு என்பது ஓர் அருங்கலை. அதைக் குறைவாக எண்ணாதே. நிறைவாக எண்ணி இப்பணியில் இறங்கு. அவையே உனக்குப் பெரும்புகழ் தேடித்தரும்.

வெவ்வேறு ஆசிரியர்களின் கருத்தைப் புரிந்து கொண்டு, நடையைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கேற்பத் தமிழ்ப்-படுத்துவதில் உள்ள சிரமத்தை நான் நன்கு உணர்வேன். இக் காரியத்தில் நீ வெற்றி கண்டுவிட்டாயானால், நீ சொந்தமாக எழுதும்போது, அவ்வாசிரியர்கள் அனைவரும் பகைப்புலனில் நின்று கொண்டு உனக்குக் கைகொடுத்து உதவுவார்கள். உனது எழுத்தும் மெருகு ஏறிச் சோபையுறும்" (மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.818) என்று 1957 - ஆம் ஆண்டில் ரா. வீழிநாதனின் 'குலப்பெருமை' என்ற மொழிபெயர்ப்பு நாவலுக்கு எழுதிய முகவுரையில் அறிவுரை கூறியதோடு கல்கி நின்றுவிடவில்லை; தாமே மொழிபெயர்ப்புப் பணியில் ஆர்வத்தோடு ஈடுபடவும் செய்தார். மகாத்மா காந்தியின் 'சத்திய சோதனை' (இரு தொகுதிகள்), லாலா லஜபதிராயின் 'யுவ பாரதம்', சுவாமி விவேகானந்தரின் 'நமது தாய்நாடு' ஆகியவை கல்கியின் மொழிபெயர்ப்புத் திறனுக்குக் கட்டியம் கூறுவனவாகும். மூலத்திற்கு நெருங்கிய - எளிய தமிழ்நடையில் - அவர் தம் மொழிபெயர்ப்பு நூல்களை உருவாக்கித் தந்துள்ளார்.

பாடலாசிரியர் கல்கி

சிறுகதையாசிரியராகவும் நாவலாசிரியராகவும் கட்டுரையாளராகவும் விளங்கிய கல்கி அவ்வப்போது தம் 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திடவும்' தவறவில்லை. 'கல்கி' தீபாவளி, குடியரசு மலர்களில் 'தியாக பூமி', 'மீரா' என்ற திரைப்படங்களில் - 'கள்வனின் காதலி', 'சோலைமலை இளவரசி', 'மயில்விழி மான்', 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்', 'அமர தாரா' ஆகிய நாவல்களில் - எம்.எஸ். சுப்புலட்சுமி, டி.கே. பட்டம்மாள், எம்.எல். வசந்தகுமாரி ஆகியோரது இசைத்தட்டுக்களில் இடம் பெற்றுள்ள 29 பாடல்கள் 'அமரர் கல்கி நூற்றாண்டு விழா மல'ரில் (பக்.201-214) 'கல்கி கவிமடல்' என்ற தலைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. கல்கியின் பாட்டுத் திறத்தைப் பறைசாற்றுவதற்கு 'மீரா' திரைப்படத்தில் எம்.எஸ். சுப்புலட்சுமியின் தேனினும் இனிய குரலில் ஒலிக்கும் 'காற்றினிலே வரும் கீதம்' என்ற ஒரு பாடலே போதும்; 'தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்' கேட்பவர் செவிகளில் என்றென்றும் இனித்துக் கொண்டிருக்கும் அற்புதமான பாடல் அது.

கல்கி போற்றிய பெருமக்கள் இருவர்

கல்கி மிகவும் மதித்துப் போற்றிய பெருமக்கள் இருவர். ஒருவர், மூதறிஞர் ராஜாஜி; 'நாட்டுக்கு ஒரு நல்லவர்' என்ற தலைப்பில் அவரது வரலாற்றைப் படைத்துத் தந்துள்ளார் கல்கி. மற்றொருவர், ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்; 'குற்றால முனிவர்' என்ற சிறப்புப் பெயரால் அவரைச் சுட்டியுள்ளார் கல்கி. தம் வாழ்நாள் முழுவதும் ராஜாஜியின் மீது கல்கி மாறாத ஒரு பக்தியுணர்வே கொண்டிருந்தார்; அவருக்கு ஒரு மெய்க்காவலரைப் போலவே இயங்கிவந்தார்; அவரை 'ஜனக மகாராஜர்' என்றும், 'மகான்' என்றும் போற்றினார்; அரசியல் துறையில் அவரிடம் இருந்து மெய்யறிவைப் பெற்றார். ராஜாஜியின் கருத்துக்களை ஆதரித்து எழுதக் 'கல்கி' இதழில் இடம் போதாத நிலையில், 'துணைக்கல்கி' என்ற பெயரில் கல்கி ஓர் இதழையே தொடங்கியது குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர, ராஜாஜிக்காக அவர் இரண்டு முறை பேனாப் போரும் (1941-42; 1944-46) நடத்தியுள்ளார். இங்ஙனம் அரசியல் துறையில் ராஜாஜியைக் கல்கி தமது வழிகாட்டியாகக் கொண்டது போல், இலக்கியத் துறையில் - குறிப்பாக, கவிதைத் துறையில் - கம்பரை ரசிப்பதில் - அவர் டி.கே.சி.யைத் தம் வழிகாட்டியாகக் கொண்டார். 'நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்' (புறநானூறு, 163) என்றபடி, கல்கியும் ராஜாஜி, டி.கே.சி. ஆகிய இருவர் மீதும் மட்டற்ற மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்; அதே போல் ராஜாஜி, டி.கே.சி. ஆகிய இருவரும் கல்கி மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தனர்.

மணிமண்டபம் நிறுவுதலும் நிதி திரட்டலும்

படைப்புப் பணியுடனும் பத்திரிகைப் பணியுடனும் நின்றுவிடாமல் பல்வேறு பொதுப்பணிகளிலும் கல்கி முனைப்புடனும் முழு மூச்சுடனும் ஈடுபட்டார். 1947 - ஆம் ஆண்டில் அவரது பெருமுயற்சியின் பயனாக எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் எழுந்தது. இதே போல் 1949 -ஆம் ஆண்டில் அவர் 'மாந்தருக்குள் ஒரு தெய்வம்' என மதித்துப் போற்றிய மகாத்மா காந்திக்குச் சென்னையில் நினைவுச் சின்னம் நிறுவத் திட்டமிட்டுப் பெருநிதி திரட்டினார்; பிறகு, 1952 - ஆம் ஆண்டில் முதலமைச்சர் ராஜாஜியின் யோசனையை ஏற்று,

மகாத்மா காந்திக்கு மணி மண்டபம் கட்டும் முயற்சியில் புது ஊக்கத்துடன் ஈடுபட்டார்.

நாமக்கல் கவிஞருக்காகவும், வாழ்நாள் முழுதும் தம்மைத் தாக்கியே எழுதியும் பேசியும் வந்த புதுமைப்பித்தனின் குடும்பத்தினருக்காகவும் கல்கி நிதி திரட்டித் தந்தார். மேலும் தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி, திருச்சி தேசியக் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும் அவர் நிதி திரட்டிக் கொடுத்தார். சோமலெ குறிப்பிடுவதுபோல், "ஒவ்வொரு தடவையும் அவர் (கல்கி) நிதி திரட்டத் தொடங்கும் போது 'அள்ளிக் கொடுங்கள்!' என்று எழுதி மக்களின் உள்ளத்தைத் தூண்டுவார். பின்னர், கல்கி காரியாலயத்தில் பணம் வந்து குவிந்த வண்ணமாக இருக்கும். 'போதும் நிறுத்துங்கள்!' என்று சொல்லி அந்த நிதியை முடித்துக் கொண்டு அடுத்த நிதியைத் தொடங்குவார். இந்த நிகழ்ச்சிகளிலிருந்தே அவருடைய செயல்திறனில் மக்களுக்கிருந்த எல்லையற்ற நம்பிக்கை புலனாகும்" (பல்சுவைக் கட்டுரைகள், ப.72).

இப்பணிகளுடன் அமைதியடையாமல், தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைமைப் பொறுப்பில் வீற்றிருந்து கல்கி சிறப்பான முறையில் தொண்டாற்றியுள்ளார். மேலும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் செயலாளர்களுள் ஒருவராக வலக்கரம் போல் இருந்து, அதன் வளர்ச்சிக்கும் கலைக் களஞ்சியப் பணிக்கும் அரும்பாடு பட்டுள்ளார்.

'யமன்' உயிரைப் பறித்துச் சென்ற யமன்

எழுதிச் சென்ற கல்கியின் கை பலப்பல படைப்புகளை எழுதி எழுதி மேற்சென்றது. ஆயின், விதியின் கையோ கல்கியின் வாழ்க்கையை வேறுவிதமாக எழுத நினைத்தது. 'கல்கி' பத்திரிகையில் 'அமர தாரா' என்ற நாவல் வெளிவரத் தொடங்கிய சிறிது காலத்திலேயே கல்கி அமரர் ஆனார்; அதனால் அந்த நாவல் இருபத்தாறாம் அத்தியாயத்துடன் நின்று போயிற்று. 1954 - ஆம் ஆண்டு டிசம்பர் ஐந்தாம் நாள் 'யமன்' என்ற புனைபெயர் கொண்டு எழுதியவரின் உயிரை உண்மையான யமன் பறித்துச் சென்றுவிட்டான். அந்த நாள் தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒரு துயர நாள் ஆயிற்று!

2. சிறுகதையாசிரியர்

"சிறுகதைகளின் ஆழத்திற்கு 'மணிக்கொடி' காரணமென்றால், அகலத்திற்குக் கல்கி காரணம் எனலாம். சிறுகதைகளைத் தமிழ் வாசகரிடம் இவ்வளவு பரவலாக்கியவர்களில் கல்கி சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்".

– இரா. தண்டாயுதம்*

"ஒரு நாள், காஞ்சிபுரம் உபயவேதாந்த தாத்தையங்கார் ஸ்வாமிகள், அவருடைய வேலைக்காரன் குப்பனைக் கூப்பிட்டு, 'அடே, குப்பா, நீ உடனே ஸ்ரீபெரும்புதூர் திருவேங்கடாச்சாரி ஸ்வாமி வீட்டுக்கு ஓடிப்போய், திருக்குடந்தை திருநாராயண அய்யங்கார் ஸ்வாமி திருக்கோயில் ஆராதனைக்குப் போனபோது திருப்பாசி வழுக்கவே திருவடி தவறி விழுந்தார் என்று சொல்லு' என்பதாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

'ஆகட்டும் சாமி' என்றான் குப்பன்.

தாத்தையங்கார், தமது வைஷ்ணவ பரிபாஷை அவனுக்குப் புரிந்ததோ என்னமோ என்று சந்தேகப்பட்டு, 'என்னடா சொல்வாய்?' என்று கேட்டார். அதற்குக் குப்பன் 'தெரியாதா சாமி? கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தான்னு சொல்வேன்' என்றான்.

நேயர்களே! ஒரு சம்பவத்தை அய்யங்கார் ஸ்வாமிகளுந்தான் சொன்னார். குப்பனுந்தான் சொன்னான். ஆனால் குப்பன் சொன்ன முறை சிறுகதை லட்சணத்துக்குப் பொருத்தமானது; நீட்டாமல், வளர்த்தாமல், 'கும்பகோணத்துப் பாப்பான் குட்டையிலே விழுந்தான்' என்று நாலே வார்த்தைகளில் பளிச்சென்று விஷயத்தைச் சொன்னான் பாருங்கள்!"

(சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.465)

- மேலே உள்ளது, ஒரு சிறுகதையானது எப்படிக் குறுகத் தறித்ததாய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகக் கல்கி தம் உரையில் எடுத்துக்காட்டிய குட்டிக்கதை. சென்னை வானொலி நிலையம் இயங்கத் தொடங்கியதற்கு (ஜூன் 16, 1938) ஏழாம் நாள், 'சிறுகதை' என்ற தலைப்பில் வானொலியில்

* தற்காலத் தமிழ் இலக்கியம், ப.51.

ஆற்றிய உரையில் அவர் இக் குட்டிக் கதையைப் பயன்படுத்தி இருந்தார். கதை என்னவோ பழையதுதான்; எனினும், அதைக் கொண்டே புதிய சிறுகதையின் உருவத்தையும் உத்தியையும் கல்கி எடுத்துச் சொன்ன முறை வித்தியாசமாக அமைந்திருந்தது. ஒரே வரியில் இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், 'இதுதான் கல்கி!'.

சிறுகதை உலகில் கல்கியின் வருகை

வ.வே.சு. ஐயர், பாரதியார், மாதவையா என்னும் தொடக்க கால எழுத்தாளர்களைத் தொடர்ந்தும், புதுமைப்பித்தன், கு.ப ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, பி.எஸ். ராமையா முதலான 'மணிக்கொடி' எழுத்தாளர்களுக்குச் சம காலத்திலும் தமிழ்ச் சிறுகதை உலகில் வலம் வந்தவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி (1899 - 1954). எழுதத் தொடங்கிய சிறிது காலத்திற்குள்ளாகவே அவர் நாவலாசிரியராக மலர்ந்துவிட்டாலும், அவருடைய படைப்பு வாழ்க்கை சிறுகதை எழுதுவதில்தான் தொடங்குகிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அவருடைய முதல் நூலே ஒரு சிறுகதைத் தொகுதிதான். 'பொன்னியின் புதல்வர்' என்னும் கல்கியின் வாழ்க்கை வரலாற்றில் சுந்தா குறிப்பிட்டிருப்பது போல், "ஒரு நூலாசிரியர் என்ற பதவியை, 1927-இல், தமது இருபத்து எட்டாவது வயதில் கல்கி அடைந்தார். 'சத்திய சோதனை' முதல் தொகுப்பும், 'சாரதையின் தந்திரம்' முதற்பதிப்பும் அடுத்தடுத்து அந்த ஆண்டில் வெளியாயின. இரண்டிலும் அடங்கியவை 'நவசக்தி'யில் வெளியானவை. 'சத்திய சோதனை' மொழிபெயர்ப்பு நூலாதலால், 'சாரதையின் தந்திரம்' புத்தகமே கல்கியின் முதலாவது படைப்பிலக்கிய வெளியீடு" (ப.189).

1927 - ஆம் ஆண்டில் வெளிவந்த 'சாரதையின் தந்திரம்' தொகுதியில் 8 சிறுகதைகள் இடம்பெற்றிருந்தன. தமிழ்த் தென்றல் திரு.வி.க.வின் 'நவசக்தி' பத்திரிகையில் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கல்கி எழுதிய கதைகள் இவை. அப்போது அவர் 'கல்கி' என்ற புனைபெயரில் எழுதவில்லை; 'ரா.கிருஷ்ணமூர்த்தி' என்ற இயற்பெயரிலேயே எழுதினார். 1928 -ஆம் ஆண்டில் 'ஆனந்த விகடன்' பத்திரிகைக்கு 'ஏட்டிக்குப் போட்டி' என்ற தலைப்பில் முதன் முதலாக ஒரு கட்டுரை எழுதியபோதுதான் அவர் கல்கி என்ற புனைபெயரைச் சூ(ட்)டிக் கொண்டார். 1931 - ஆம் ஆண்டில்

கல்கி 'ஆனந்த விகடன்' துணையாசிரியர் பொறுப்பினை ஏற்றார்; ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் (1941 வரை) 'ஆனந்த விகட'னில் அவர் திறம்படப் பணியாற்றினார். 'நவசக்தி'யில் இருந்து விலகி 'ஆனந்த விகடன்' பணியில் சேருவதற்கு முன்பு வரையிலான இடைப்பட்ட காலத்தில் கல்கி சிறிது காலம் ராஜாஜிக்குத் துணையாக 'விமோசனம்' பத்திரிகையில் பணியாற்றினார். அப்போதுதான் அவர் மதுவிலக்குக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பிரச்சாரக் கதைகளை எழுதினார். 1941 - ஆம் ஆண்டில் 'ஆனந்த விகட'னை விட்டு விலக நேர்ந்த சூழலில் அவர் 'கல்கி' என்ற பெயரிலேயே சொந்தப் பத்திரிகையைத் தொடங்கினார். இந்தக் காலகட்டத்தில் அவ்வப்போது பொங்கல், தீபாவளி மலர்களில் ஒரு கதை எழுதுவது என்ற அளவில் சிறுகதைப் படைப்பை வரையறை செய்து கொண்டு, முழுமூச்சாக நீண்ட நாவல்களைத் தொடர்கதைகளாக எழுதுவதிலேயே அவர் தமது கவனத்தைச் செலுத்தினார். இங்ஙனம் 'நவசக்தி' 'விமோசனம்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' என்னும் நான்கு பத்திரிகைகளின் வழியாகச் சிறுகதை உலகில் தம் எழுத்துப் பயணத்தை மேற்கொண்டார் கல்கி. இந்தச் சுருக்கமான பின்னணியின் துணையோடு அணுகினால்தான் கல்கியின் சிறுகதைகளைச் சரியாகவும் முழுமையாகவும் நம்மால் புரிந்து கொள்ள முடியும்; மதிப்பிடவும் இயலும்.

பெ.கோ. சுந்தரராஜன் (சிட்டி), சோ. சிவபாத சுந்தரம் ஆகிய இருவரது கூட்டுமுயற்சியில் உருவான 'தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூல் குறிப்பிடும் ஒரு முக்கியமான கருத்து இவ்வகையில் மனங்கொள்ளத்-தக்கதாகும். அக் கருத்து வருமாறு:

> "கல்கியின் சிறுகதைப் படைப்புகளை மூன்று படிகளில் வைத்துப் பார்க்க வேண்டும். 1923க்கும் 1931க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் 'நவசக்தி'யிலும் 'விமோசன'த்திலும் உதவி ஆசிரியராக இருந்த காலத்தில் எழுதிய கதைகள் முதல் படியைச் சேர்ந்தவை. பின்னர், 1931 முதல் 1941 வரை 'ஆனந்த விகட'னில் நடைமுறை ஆசிரியப் பொறுப்பில் இருந்து படைத்த கதைகள் இரண்டாவது படியைச் சேர்ந்தவை. 1941 முதல் அவர் மறையும் வரை தாம் சொந்தமாக நடத்திய 'கல்கி' பத்திரிகையில் எழுதியவை மூன்றாம் படியைச் சேர்ந்தவை. இந்த மூன்று படிநிலைகளிலும் எழுதப்பட்ட

சிறுகதைகளைப் பார்க்கும்போது தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட மாறுதல்களும், அரசியல் சூழ்நிலையும் மற்றும் வாசகர்கள் பெருக்கமும் அவரது படைப்புகளில் ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணமாகின்றன" (ப.64).

'கவர்னர் விஜயம்' (நவசக்தி : 4.12.1925.), 'விதூஷகன் சின்னு முதலி' (விமோசனம் : வைகாசி, 1930), 'கடிதமும் கண்ணீரும்' (ஆனந்த விகடன் : 13.6.1937), 'புலி ராஜா' (கல்கி : 1.8.1941), 'வீடு தேடும் படலம்' (கல்கி : தீபாவளி மலர், 1950) என்னும் கல்கியின் ஐந்து கதைகளையும் - ஏறத்தாழ 26 ஆண்டுக்கால இடைவெளியில், வேறு வேறு இதழ்களில் வெளிவந்த இந்த ஐந்து கதைகளையும் - ஒருங்கே வைத்து ஆராய்வோர் இக் கருத்தின் உண்மையை உள்ளவாறு உணர்ந்து கொள்ள முடியும்.

கல்கி கதைகளைப் பற்றிய மாறுபட்ட மதிப்பீடுகள்

கல்கியின் சிறுகதைகள் அவை வெளிவந்த காலகட்டத்தில் பல்லாயிரக்கணக்கான வாசகர்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப் பெற்றன; ஆர்வத்துடன் வரவேற்கப்பட்டன. அவரது கதைகளுக்குத் தமிழ்நாட்டின் வாசகர்கள் மத்தியில் எத்தகைய உணர்ச்சிமயமான வரவேற்பு இருந்தது என்பதை அறிவதற்கு ரசிகமணி டிகே. சிதம்பரநாத முதலியாரின் பின்வரும் வரிகளே போதுமானவை ஆகும்:

"'ஆனந்த விகட'னில் கல்கியின் கதைகள் எத்தனையோ வந்து கொண்டிருந்தன; வந்து கொண்டும் இருக்கின்றன. அவை தமிழ் மக்கள் மனசை எப்படிக் கவருகின்றன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டாம். ஒரு கை தோசைக்கு ஆட்டிக் கொண்டிருக்க, மற்றொரு கை விகடனை விரித்துப் படித்துக் கொண்டிருக்கிறதையும், பிள்ளைத் தொட்டிலுக்கு ஒரு கையும் கதைக்கு ஒரு கையுமாய்ப் பெண்கள் பிரித்துக் கொடுக்கிறதையும் பார்க்கிறோம். பள்ளிப் பையன்களும், பெண்களுமே பாட புஸ்தகத்துக்குக் கீழ் 'விகட'னை ஒளித்து வைத்துக் கொண்டு கருத்தாய்ப் படித்து முடிக்கிறதானது உபாத்தியாயர்கள் சொல்லுகிற பெரும் புகார். பலசரக்குக் கடை, மிட்டாய்க் கடை, மாங்காய்க் கூறுகள் விற்க வைத்திருக்கும் மாமரத்தடி இதெல்லாம் போக, சுருட்டு, சிகரெட்டு புகைந்து கொண்டிருக்கும் ரயில் இரண்டாவது, முதலாவது வகுப்புகளிலும் விகடனில் வரும் 'கல்கி' கதைகளை வாசித்துக் கொண்டிருக்கக் காணலாம் தமிழ்நாட்டில்

முக்குமுடைகளில் எல்லாம் புகுந்து சிரிப்பூட்டவும், திகைப்பூட்டவும், துயரூட்டவும் செய்து வருகின்றன அக்கதைகள். தமிழ் வாசிப்பவர்கள் நாற்பதினாயிரம், ஐம்பதனாயிரம் என்றெல்லாம் ஏற்படலாயிற்று" (டி.கே. சிதம்பரநாத முதலியார், முகவுரை, கல்கியின் 'கணையாழியின் கனவு' pp. viii- ix).

'கணையாழியின் கனவு' என்னும் சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய நீண்ட முகவுரையில் கல்கியின் கதைகளுக்கு இங்ஙனம் புகழாரம் சூட்டியிருந்தார் ரசிகமணி.

பல்லாயிரக்கணக்கான வாசகர்களால் உணர்ச்சிமயமான எதிர்பார்ப்போடும் உள்ளார்ந்த ஈடுபாட்டோடும் படிக்கப் பெற்ற கல்கியின் கதைகளைக் குறித்துத் திறனாய்வாளர்களிடையே 'இருவேறு உலகத்து இயற்கை' என்பதற்கு ஏற்ப இருவிதமான கருத்துக்கள் நிலவின. திறனாய்வாளர்களுக்குள் ஒரு சாரார் கல்கியின் கதைகளைக் குறித்துக் கடுமையான நடையில் எதிர்மறையான அணுகுமுறையைக் கையாண்டு மதிப்பீடு செய்தனர்; பிறிதொரு சாராரோ கல்கியின் கதைகளைப் பற்றி வானளாவப் போற்றிப் புகழ்ந்தனர். இங்கே ஒருபாற் கோடாமல் நடுநிலை உணர்வோடு இரு சாராரின் கருத்துக்களையும் சுருங்கக் காண்போம்.

பேராசிரியர் எம். வேதசகாய குமார் தம் 'தமிழ்ச் சிறுகதை வரலாறு' (முதற்பகுதி) என்ற நூலில் "அவர் (கல்கி) கதைகளில் சிறுகதைக்குரிய எவ்வித இயல்பையும் காணமுடியாது. சிறுகதையில் அமைந்திருக்க வேண்டிய ஒருங்கிணைப்பு பற்றி அவர் என்றுமே கவலைப்பட்டதில்லை. அவர் கவனமெல்லாம் வாசகர்களைச் சுவைப்படுத்துவதற்கான தந்திரங்கள் மீதுதான்" (ப.59) என்று கல்கியின் கதைகளைக் குறித்து மதிப்பீடு செய்துள்ளார். அவரது பார்வையில் கல்கி, 'பிரச்சாரம் என்ற போர்வையில் ஜனரஞ்சகமான - மலிவான - போலித்தனமான-வியாபார ரீதியிலான தந்திரங்களை வெற்றிகரமாகக் கையாண்ட ஒரு சிறுதை எழுத்தாளர்' ஆவார். இக் கருத்தினை வழிமொழிவது போல், முனைவர் கோ. கேசவனும் தம் 'தமிழ்ச் சிறுகதைகளில் உருவம்' என்ற நூலில், "கல்கியின் கதைகள் வாசகர்களை ஆட்கொண்டன என்றே வரலாறு குறிப்பிடுகின்றது. ஆனால், உண்மை இதற்கு மாறுபட்டுள்ளது. கல்கியின் கதை வடிவங்களை வாசகர்களே ஆட்கொண்டு, நிர்ணயித்துள்ளனர் என்பதே உண்மையான வரலாறு ஆகும்"

(ப.42) எனக் குறிப்பிட்டுள்ளார். 'கல்கியின் கதைகள் வடிவக் குறைபாடு உடையன' என்பதே அவரது முடிந்த முடிபாகும்.

"கல்கிக்குப் புதினம் எழுதுவதில் இருந்த பொறுப்பு, கவனம் சிறுகதையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்... கல்கி ஒரு முதல்தரச் சிறுகதை எழுத்தாளரல்ல; இரண்டாம் தர எழுத்தாளர்களில் நடுவில் இருப்பவர்" (பக்.67-68) - இது 'தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு' என்ற நூலில் ச. செந்தில்நாதன், கல்கி குறித்து வெளியிட்டிருக்கும் விமர்சனக் குறிப்பு ஆகும். இன்னும் சி.சு. செல்லப்பா, சிதம்பர ரகுநாதன், க. கைலாசபதி, என்.ஆர். தாசன் போன்றோரும் கல்கியின் கதைகளைக் குறித்து இத்தகைய மாறுபாடான கருத்துக்களையே தத்தம் நூல்களில் முன்வைத்துள்ளனர்.

இவற்றிற்கு மாறாக, பேராசிரியர் கா. சிவத்தம்பி, முனைவர் இரா தண்டாயுதம், முனைவர் மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்) போன்றோர் தத்தம் நூல்களில் கல்கியின் கதைகளைக் குறித்து மிகவும் உயர்வான மதிப்பீடுகளைப் பதிவு செய்துள்ளனர்

பேராசிரியர் கா. சிவத்தம்பி தம் 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலில் "தமிழைத் தமிழர் யாவரும் விளங்கத்தக்க வகையில் எழுதி, அது அவர்கள் சொத்து என்பதனை அறிவுறுத்தியவர் கல்கி" (ப.29) எனக் கல்கிக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். மேலும் அவர், "கல்கியினால் சிறுகதை தமிழ் மண்ணில் இரண்டறக் கலந்தது. அந்த அத்திவாரத்தின் மீதே, சிறுகதை கட்டியெழுப்பப்பட்டுச் சிகரமும் அமைக்கப்பட்டது. அவ்வளர்ச்சியை ஏற்படுத்தியவர்கள் மணிக்கொடிக் குழுவினர்" (ப.37) என மதிப்பீடும் செய்துள்ளார்.

மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்) 'விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்' என்ற தம் முனைவர் பட்டத்திற்கான ஆய்வு நூலில், "கல்கியின் கதைகளில் நம் நெஞ்சைக் கவரும் கூறுகள் : 1. கதைப் பின்னல், 2. உயிர்ப்புள்ள பாத்திரப் படைப்பு, 3. ஆர்வமூட்டும் உரையாடல், 4 வியப்பான கதை முடிவுகள், 5. இன்பானுபவத்தை நல்கும் கற்பனை, 6 ஆற்றலுள்ள மொழிநடை ஆகியவையே. கல்கியின் கதைகள் பலராலும் விரும்பப்பட்டதற்குக் காரணம் இவையே" (ப 221) எனக் கல்கியின் கதைகளில் காணப்படும் நிறைகளைப் பட்டியல் இட்டுள்ளார். முத்தாய்ப்பாக, ஒருசார்

திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டும் குறைகளுக்கு இடையேயும் "சிறுகதை வரலாற்றில் கல்கி தம் சுவடுகளை அழுத்தமாகவே பதித்திருக்கிறார். அதுவே அவர் பெருமை" (ப.222) எனக் கல்கி பற்றிய தம் கணிப்பினை வெளியிட்டுள்ளார்.

முனைவர் இரா. தண்டாயுதம் 'தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்' என்ற நூலில், "நிகழ்ச்சிகளைப் பின்னும் முறை, இயற்கையான உரையாடல்கள், உயிருள்ள கதை மாந்தர்கள், சுவையான கதைப் போக்கு, அளவான நகைச்சுவை ஆகிய இவை கல்கியின் கதைகளுக்கு மட்டும் வெற்றியைத் தேடித்தரவில்லை; தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கும் பரவலுக்குமே இவை காரணங்களாக அமைந்துவிட்டன" (ப.269) என்று கல்கியின் கதைகளைப் பற்றிய தம் கருத்துரையினை வழங்கியுள்ளார். அவரே 'பாரதி முதல் சுஜாதா வரையில்' என்ற தம் பிறிதொரு நூலில் "கல்கிக்குக் கருவிலேயே அமைந்துவிட்ட இரு செல்வங்கள் கதை சொல்லும் திறனும் நகைச்சுவையும்" (ப.49) எனச் சிறுகதை ஆசிரியர் என்ற நிலையில் கல்கியிடம் காணப்படும் இரு சிறப்பியல்புகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

கல்கியின் கதைகளைக் குறித்து மாறுபடான கருத்துக் கொண்டிருப்போரும் 'சிறுகதை இலக்கியத்தை ஆவலோடு படிக்கும் பெரிய வாசகர் கூட்டத்தைத் தமிழ்நாட்டில் உருவாக்கியவர் கல்கி' என்பதிலோ, 'கல்கியின் கதைகள் காந்த முள்ளாக நின்று தமிழ்நாட்டு மக்களை ஈர்த்தன' என்பதிலோ ஒரு சிறிதும் முரண்பாடு கொள்வதில்லை; முழுவதும் உடன்படவே செய்வர். இந்நிலையில் கல்கியின் சிறுகதைகளையே ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ள மீனாட்சி முருகரத்தனம் கல்கியைப் பற்றியும் அவரது கதைகளைப் பற்றியும் என்ன கூறுகின்றார் எனக் காண்பது பலவகையிலும் பொருத்தமாக இருக்கும். 'கல்கியில் சிறுகதைக் கலை' என்ற நூலின் முடிவுரையில் தம் ஆய்வின் சாரமாக அவர் நிறுவியுள்ள கருத்து இதோ:

> "கல்கி, சிறுகதைத் தொடக்க காலத்தில் வெற்றி நடை போட்ட எழுத்தாளர்களில் ஒருவராகத் திகழ்ந்ததற்குக் காரணம், அவருடைய படைப்புகளில் குறைகளைக் காட்டிலும் நிறைகள் மிகுந்திருந்தமைதான். அந்தக் குறைகளும் ஒதுக்கப்படக் கூடியனவாகவே இருந்தன...

டி.எஸ். எலியட், ஷேக்ஸ்பியர் நாடகம் ஒன்றைப் பற்றிச் சொல்வது கல்கியின் படைப்புக்களுக்கும் பொருந்தும். பொழுதுபோக்கப் படிப்பவர்களுக்கு அவர் படைப்பில் சுவையான கதைப்பின்னல் இருக்கிறது; சற்றுச் சிந்திப்பவர்களுக்கு நுணுக்கமாக பாத்திரப் படைப்பும் கதைச் சிக்கலும் இருக்கின்றன; நுண்பொருள் உணர வல்லோர்க்கு உள்ளார்ந்த உண்மைகள் புதைந்து கிடக்கின்றன" (ப.252).

காய்தல், உவத்தல் அகற்றி, நடுநிலையான நோக்கில் நின்று 'குணம் நாடி, குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்னும் வள்ளுவ அளவுகோலை அருகில் வைத்துக் கல்கியின் கதைகளைப் படிக்கும் எவரும் - வள்ளலாரின் சொற்களிலே சொல்ல வேண்டும் என்றால் 'நான் கலந்து' பயிலும் எவரும் - மேலே குறித்துள்ள கருத்தினையே வழிமொழிவர்.

கல்கியின் கதைகள்

கல்கியின் கதைகள் 'சாரதையின் தந்திரம்', 'கணையாழியின் கனவு', 'வீணை பவானி', 'பாங்கர் விநாயகராவ்' (இத் தொகுப்பில் ஒரே ஒரு நாடகம் இடம்பெற்றுள்ளது), 'அமர வாழ்வு', 'ஒற்றை ரோஜா', 'மயிலைக் காளை', 'மயில் விழி மான்', 'மாடத்தேவன் சுனை', 'திருவழுந்தூர் சிவக்கொழுந்து', 'அபலையின் கண்ணீர்', 'ஜமீன்தார் மகன்' என்னும் 12 தொகுதிகளாக நூல் வடிவில் வெளிவந்துள்ளன. இவற்றுள் சிறுகதைகளும் நெடுங்கதைகளுமாக மொத்தம் 67 கதைகள் இடம்பெற்றுள்ளன. இனி, இக் கதைகள் புலப்படுத்தும் கல்கியின் கை வண்ணம் குறித்துச் சுருங்கக் காண்போம்.

கதை சொல்லும் திறன்

எழுத்தாளர் சோமர் செட் மாம் (Somerset Maugham) தம் முன்னுரை ஒன்றில் குறிப்பிடுவது போல், காணுகின்ற நிகழ்ச்சிகளின் ஊடே கதையைக் கண்டுபிடிப்பது என்பது ஓர் அரிய ஆற்றல். அது எல்லோருக்கும் வாய்ப்பதன்று; முடிவதும் அன்று. மிகச் சிலரால் மட்டுமே அது முடியும். அதனை 'இயற்கையின் கொடை' (Gift) என்றும் சிறப்பித்துச் சொல்லலாம். இங்ஙனம் மனித வாழ்வைக் கூர்ந்து நோக்கிக் கதையைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் - கண்டுபிடித்த கதையைச் சுவையாகச் சொல்லும் திறன் - கல்கிக்கு அவரது

இயற்கையிலேயே வாய்த்திருந்தது; இயற்கையாகவே வாய்த்திருந்தது. சுருங்கக் கூறின், கல்கிக்குக் கருவிலேயே வாய்த்திருந்த இந்தக் கதை சொல்லும் திறனே அவரது வெற்றிக்கும், தமிழ்நாட்டு வாசகர்களின் நெஞ்சங்களில் அவரது படைப்புகள் நீங்கா இடம் பெறுவதற்கும் தனிப்பெருங் காரணமாக அமைந்தது.

கல்கியின் கதை சொல்லும் திறனுக்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், அவர் படைத்து உலவவிட்டுள்ள பாத்திரங்களுள் ஒன்றான தவுல் வித்துவான் ஐயம்பேட்டை கந்தப்பப் பிள்ளையைச் சொல்லலாம். 'அப்பொழுது தான் ஒவ்வொரு சம்பவமும் நடப்பது போல் அவ்வளவு தெளிவாகவும் உணர்ச்சியுடனும் கதை சொல்லிக் கொண்டு செல்வதில்' கை தேர்ந்தவர் அவர். கந்தப்பப் பிள்ளை, கல்கிக்கு கூறுவது போல் அமைந்த கதைகள் மூன்று: 1. 'திருவழுந்தூர் சிவக்கொழுந்து', 2. 'நாடகக்காரி', 3. 'வீணை பவானி'. இம்மூன்றிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தது - வாசகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதில் முதல் இடத்தைப் பெறுவது - 'வீணை பவானி'. அக்கதையில் வரும் பவானி, 'பூந்தோட்டம் பவானி' என்றும், 'வீணை பவானி' என்றும் பெரும்புகழ் பெற்றவள்; களையான முகமும் களங்கமற்ற மனமும் கொண்டவள்; தேவதாசிக் குலத்தில் பிறந்தும் இறுதிவரை ஒருவருடனேயே வாழ்ந்து, அவருக்காகவே உயிர் நீத்த உத்தமி; அவளுடைய சங்கீதம் 'தெய்வீக சங்கீதம்'. அந்தக் காலத்தில் பெரிய கூட்டத்துக்கு உதாரணம் சொல்ல வேண்டுமானால் 'பூந்தோட்டம் பவானியின் கச்சேரிக்குக் கூடுகிறாப் போல் கூடியிருக்கிறதே' என்பார்கள். அவள் வீணையை வைத்துக் கொண்டு பாடினாளான்னால், ஸரஸ்வதி தேவியே அவதாரம் எடுத்து வந்திருப்பது போல்தான் தோன்றும். இசைக்காகவே பிறந்த இந்தப் பவானியின் பண்பினைக் கதையில் வரும் கோபாலசாமி மூலம் கல்கி புலப்படுத்தி இருக்கும் அழகே அழகு:

> "பவானியை மற்ற மனிதர்களைப் படைத்தது போல் பிரம்மா படைக்கவில்லை. கல்யாணியையும், மோகனத்தையும், செஞ்சுருட்டியையும் சேர்த்துப் படைத்திருக்கிறார்; நீர் வேண்டுமானால், பாரும்; பவானி செத்துப் போகும்போது, அவளுடைய உடம்பு அப்படியே கரைந்து உருகி ராகங்களாகிப் போய்விடும்!" (வீணை பவானி, ப.14).

கதை முடிந்தாலும் - கதையின் முடிவில் பவானியின் உயிர் பிரிந்தாலும் - வாசகர்களின் மனங்களில் இருந்து வீணை பவானியைப் பற்றிய நினைவு என்றென்றும் நீங்காது. அந்த அளவிற்கு உயிரோட்டமாகவும் உணர்ச்சிமயமாகவும் ஐயம்பேட்டை கந்தப்பப் பிள்ளையின் மூலம் கதையைச் சொல்லிச் சென்றுள்ளார் கல்கி.

'நீட்டாமல், வளர்த்தாமல், ஒருசில வார்த்தைகளில் பளிச்சென்று விஷயத்தைச் சொல்வதுதான்' என்று சிறுகதையின் இலக்கணத்தைத் தம் வானொலி உரையில் வகுத்துத் தந்த கல்கியால் நடைமுறையில் அதனைப் பின்பற்ற முடியவில்லை. அடுக்கடுக்காக நிகழ்ச்சிகளை நீட்டியும் வளர்த்தும் கதைகளை எழுதிச் செல்வதே அவரது வழக்கமாக இருந்தது; முன்னுரை (அல்லது முகவுரை), முடிவுரை மற்றும் துணைத் தலைப்புக்களுடன் பல பக்கங்களுக்குக் கதையைச் சொல்லிச் செல்வதே அவருக்கு வாடிக்கையாக அமைந்தது. காட்டாக, அவரது 'அமர வாழ்வு' என்ற கதையில் முன்னுரை, முடிவுரை இரண்டைத் தவிர, 'ரட்லம் ஜங்ஷன்', 'ஜே ஹிந்த்', 'கர்னல் குமரப்பா', 'காதல் யாத்திரை', 'நேதாஜி விஜயம்', 'கிராதகன் உள்ளம்', 'விமானம் மறைந்தது', 'வேஷம் கலைந்தது' என்னும் எட்டுத் துணைத் தலைப்புக்கள் இடம் பெற்றுள்ளன. இதே போல் 'சுபத்திரையின் சகோதரன்' என்னும் கதை ஆறு உட் தலைப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பல பாகங்களாக அல்லது அத்தியாயங்களாகப் பகுத்துக் கொண்டு கதையைக் கூறிச் செல்லும் போக்கும் கல்கியிடம் காணப்படுகின்றது. 'ரங்க துர்க்கம் ராஜா' (4 பாகங்கள்), 'அபலையின் கண்ணீர்' (6 பாகங்கள்), 'ஒற்றை ரோஜா' (6 அத்தியாயங்கள்) என்னும் கதைகள் இவ்வகையில் அமைந்தவை ஆகும். இவற்றைச் சிறுகதைகள் என்பதை விட 'நெடுங்கதைகள்' எனச் சுட்டுவதே பொருத்தமாக இருக்கும். என்றாலும், இங்ஙனம் பற்பல துணைத் தலைப்புக்களை இட்டு, உட்கதைகளை அமைத்து, மிக நீளமாக எழுதிச் செல்லும் போது, அது நாம் படிப்பது சிறுகதைதான் என்ற உணர்வை மறக்கச் செய்து, சிறுகதையின் உருவத்தையும் சிதைத்து விடுகின்றது என்பது மறுக்க முடியாத உண்மையே ஆகும்.

நகைச்சுவை

கல்கியின் எழுத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட பிறிதொரு பண்பு நகைச்சுவை. கொடைக் குணத்திற்குப் பெயர் பெற்ற மகாபாரதக் கர்ணன் கவச குண்டலத்தோடு பிறந்தான் என்பார்கள். அதுபோல் கல்கி இவ்வுலகில் பிறந்தபோதே நகைச்சுவை உணர்வும் அவருடன் கூடப் பிறந்திருக்கும் போலும்; நகைச்சுவை உணர்வின்றி அவரால் எழுதவே முடியாதோ என்று எண்ணும் அளவிற்கு அவர் அந்த உணர்வுடன் ஒன்றிப் போயிருக்கிறார். கதைப் பின்னலாயினும் சரி, பாத்திர அல்லது பின்னணி வருணனையாயினும் சரி, மெல்லிய நகைச்சுவை இழையோடாமல் அவரால் எழுதவே முடியாது. மேலும் இன்றைய சமூகத்தின் போக்கையும் மனித இயற்கையையும் அங்கதச் சுவையுடன் எள்ளி நகையாடவும், சொல்ல வந்த செய்தியை எளிமையாகவும் அழுத்தமாகவும் படிப்பவர் நெஞ்சில் பதியும் வண்ணம் சொல்லுவதற்கும் நகைச்சுவை உணர்வே கல்கிக்கு மிகவும் கை கொடுத்திருக்கிறது. 'வீடு தேடும் படலம்', 'சிரஞ்சீவிக் கதை', 'போலீஸ் விருந்து', 'ஸினிமாக் கதை', 'எங்கள் ஊர் சங்கீதப் போட்டி', 'புலி ராஜா', 'கவர்னர் விஜயம்', 'சுண்டுவின் சந்நியாசம்', 'வஸ்தாது வேணு', 'இது என்ன சொர்க்கம்', 'கைலாசமய்யர் காபரா' - ஆகிய கதைகள் இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. பதச் சோறாக, 'வீடு தேடும் படலம்' கதையில் கல்கியின் நகைச்சுவை வண்ணம் பளிச்சிடும் பாங்கினைக் காணலாம்.

> "துவாபர யுகத்து பெர்னார்ட் ஷா என்று பெயர் பெற்ற புரொபஸர் வேத வியாசர் மொத்தம் மூன்றரைக் கோடி வார்த்தைகளைக் கொண்ட பதினெட்டுப் புராணங்களை இயற்றினார் அல்லவா? அந்தப் பதினெட்டுப் புராணங்களையும் நைமிசாரண்ய வனத்தின் சூத புராணிகர் சௌனகாதி முனிவர்களுக்கு எடுத்துச் சொன்னார். அவ்வளவையும் கேட்டுவிட்டு அம்முனிவர்கள் 'அடடா!, பதினெட்டுப் புராணத்திற்குப் பிறகு பத்தொன்பதாவது புராணம் இல்லாமற் போய்விட்டதே; இனிமேல் நாங்கள் எதைக் கேட்டுக் கொண்டு தூங்குவோம்?' என்று புலம்பினார்கள். அதற்குச் சூதர் 'முனிவர்களே! கவலை வேண்டாம். பத்தொன்-பதாவது புராணமாகிய கலிபுராணம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்டுக் கொண்டே நிம்மதியாகத் தூங்குங்கள்;' என்று சொல்லிக் கமண்டலத்திலிருந்து ஒரு அவுன்ஸ் தண்ணீர் ஆசமனம் செய்துவிட்டு, பத்தொன்பது கலிபுராணத்தைக் கூறத் தொடங்கினார்.

அவ்வளவு பெருமை வாய்ந்த கலிபுராணத்தில் நாட்டுப் படலத்துக்கும் நகரப் படலத்துக்கும் அடுத்த படியான வீட்டுப்படலம் வருகிறது. வீட்டுப் படலம் என்றும் சொல்லலாம்; வீடு தேடும் படலம் என்றும் சொல்லலாம். அல்லது ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக் கொண்டும் இருக்கலாம். எனினும் 'கடமையைச் செய்யுங்கள்', 'கடமையைத் தானே செய்யுங்கள்', 'கடமையைக் கட்டாயம் செய்யுங்கள்' என்று பகவத் கீதையில் பேராசிரியர் கிருஷ்ண பகவான் முக்காலே மூன்று வாட்டியும் கதறியிருப்பதை முன்னிட்டு, இங்கே நாம் எம் கடமையைச் செய்யத் தொடங்குகிறோம்" (கல்கி, மாடத்தேவன் சுனை, பக். 78-79).

இப்படி நகைச்சுவை உணர்வின் அமர்க்களமான அணிவகுப்போடு தொடங்குகிறது கல்கியின் 'வீடு தேடும் படலம்' சிறுகதை. 'துவாபர யுகத்து பெர்னார்ட் ஷா என்று பெயர் பெற்ற புரொபஸர் வேத வியாஸர்' கேட்டுக் கொண்டே தூங்குவதற்குப் பத்தொன்பதாவது புராணம் இல்லையே என்ற சௌனகாதி முனிவர்களின் புலம்பல், தம் கமண்டலத்திலிருந்து ஒரு அவுன்ஸ் தண்ணீர் எடுத்து ஆசமனம் செய்யும் சூதர், கலிபுராணத்தில் நாட்டுப் படலத்துக்கும் நகரப் படலத்துக்கும் அடுத்தபடியாக இடம் பெறும் 'வீட்டுப் படலம்' அல்லது 'வீடு தேடும் படலம்', கடமையைச் செய்யுமாறு பகவத் கீதையில் முக்காலே மூன்று வாட்டிக் கதறும் பேராசிரியர் கிருஷ்ண பகவான் - இப்படித் தொடக்கத்தில் இருந்தே வரிக்கு வரி சிரித்து மகிழும் வண்ணம் இக்கதையை எழுதியிருக்கிறார் கல்கி.

தொடர்ந்து சென்னை மாநகரில் கதையின் நாயகர் ஸ்ரீ கடோத்கஜ ராயர் குடியிருக்க ஒரு வீடு தேடுவதில் சந்திக்கும் சிரமங்களைக் கல்கி நகைச்சுவையோடு சொல்லிச் சென்றிருக்கும் பாங்கே தனி; கடோத்கஜ ராயர் பன்னெடுங்காலமாகக் குடியிருந்து வந்த வீதிக்குப் பெயர் 'திருவல்லிக்கேணியில் திக்கற்ற விக்ன விநாயகர் கோவில் வீதி'; அவர் தேடிச் செல்லும் வீடு அமைந்திருக்கும் பகுதிக்குப் பெயர் 'தேனாம்பேட்டையில் செல்லாக் காசுச் செட்டியார் சந்து;' 'நான் பெரிய குடும்பி; ஒன்பது குழந்தைகளுக்குத் தகப்பன். ஒன்பதுதான். இதற்குமேலே இல்லை என்று சொல்லவும்

முடியாது' - இது கடோத்கஜ ராயரின் சுய அறிமுகம். 'ஒன்பது குழந்தைகளுக்குத் தகப்பனாராகி ஹிந்து சமூகத்தின் வளர்ச்சிக்குத் தொண்டு புரிந்து வந்தார்' - இது ராயரைப் பற்றிய ஆசிரியரின் அறிமுகம். 'பேய் வாழும் வீடு' என்று கதை கட்டிவிடப்பட்ட வீட்டிற்குக் குடிபுகும் வீட்டுக் கட்டுப்பாட்டு அதிகாரியின் பெயர் 'மிஸ்டர் பேயாழ்வார் நாயுடுகாரு!' அவருக்கு ராயரைக் காட்டிலும் மூன்று குழந்தைகள் அதிகம்; மொத்தம் ஒரு டஜன்! - இப்படிக் கதை முழுக்க நகைச்சுவை மணம் கமழக் கமழ எழுதிச் செல்கிறார் கல்கி. இடையிடையே கொத்தமல்லிக் கொசுறாகச் சிறுசிறு வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகள் (Anecdotes) வேறு. மாதிரிக்கு ஒன்று இதோ:

> "மலையாளத்து நம்பூதிரி ஒரு தடவை சென்னைப் பட்டணத்தை வந்து பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பிச் சென்றதும் என்ன சொன்னான் என்று ஞாபகமிருக்-கிறதல்லவா? 'மதராஸிலே உள்ள பணக்காரர்களிலே டு லெட் துரைதான் பெரிய பணக்காரன். எந்தத் தெருவிலே பார்த்தாலும் பத்து எட்டு வீட்டுக்குக் குறையாமல் டு லெட் துரையின் போர்டு தொங்குகிறது..." (பக். 79-80).

கல்கியைப் பொறுத்தவரையில் நகைச்சுவை என்பது வெறும் சிரிப்பை மட்டும் தன்னகத்தே கொண்டதன்று; பொருள் பொதிந்த சிந்தனையையும் உள்ளடக்கியது அது. சிரிப்பும் சிந்தனையும் கை குலுக்கிக் கொள்ளும் இடங்களும் 'வீடு தேடும் படலம்' கதையில் உண்டு. புராணம், சகுனம், சோதிடம், பேய் பற்றிய பயம் - இவற்றை 'வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல்' தமக்கே உரிய பாணியில் கல்கி சாடி இருக்கும் இடங்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

எவ்வளவோ அல்லல்பட்டு, அலைந்து திரிந்து, ஒரு வழியாகக் கிடைக்கும் போல் இருந்த அந்த வீடு கடைசியில் கடோத்கஜ ராயருக்குக் கிடைக்காமல் போகிறது; மிக மிகக் குறைந்த வாடகைக்கு வீட்டுக் கட்டுப்பாடு அதிகாரியே அந்த வீட்டிற்குக் குடிவந்து விடுகிறார். இந்நிலையில் கடோத்கஜ ராயர் என்ன செய்கிறார் தெரியுமா? இதோ, கல்கியின் சொற்களிலேயே அதனைக் காண்போம்:

> "'புதுவீட்டில் அம்மனிதர் குடியும் குடித்தனமுமாக நன்றாயிருக்கட்டும், குடும்பத்தை மேலும் பெருக்கிக் கொள்ளட்டும்!' என்று ராயர் மனத்திற்குள் ஆசீர்வதித்தார். ததாஸ்து!" (ப.101).

இங்ஙனம் தொடக்கத்தில் இருந்து முடிவு வரை - கதைப் பின்னல், பாத்திரப் படைப்பு, இடப் பின்னணி, மொழிநடை எனக் கதையின் அனைத்துக் கூறுகளிலும் - நகைச்சுவை உணர்வே மேலோங்கி நிற்க 'வீடு தேடும் படல'த்தைச் சிறப்பாகப் படைத்துள்ளார் கல்கி.

காலத்தின் பதிவு

கல்கி எழுத்துத் துறைக்கு வந்த காலம் இந்திய வரலாற்றில் ஓர் இன்றியமையாத காலப் பகுதியாகும். சமூகம், பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், கல்வி முதலான பல்வேறு துறைகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் சிறப்பான திருப்பங்களும் நிகழ்ந்து கொண்டிருந்த காலம். காந்தியடிகளின் ஆளுமையால் விடுதலைப் போராட்டம், நாட்டுப் பற்று, தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு, பெண் விடுதலை, விதவை மறுமணம், தாய்மொழி ஆர்வம் முதலான கருத்தியல்கள் - எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால் கருப்பொருள்கள் - மக்களிடையே பரவிச் செல்வாக்குப் பெறத் தொடங்கிய இக் கால கட்டத்தில் எழுத்துப்பணியை மேற்கொண்ட கல்கியின் கதைகளிலே இவற்றின் பதிவு காணப்படுவது என்பது இயல்பாக அமைந்தது. இனி, இவ்வகையில் குறிப்பிடத்தக்க கல்கியின் கதைகள் ஒரு சிலவற்றைக் காண்போம்.

'ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்தல்' என்பது கல்கிக்குக் கைவந்த காரியம். குழந்தை மனத்திற்கு (பால்ய விவாகத்திற்கு) எதிராகவும், விதவை மறுமணத்திற்கு ஆதரவாகவும் அவர் எழுதியுள்ள சிறுகதை 'சுபத்திரையின் சகோதரன்'. அக் கதையில் ஓர் இடத்தில் சுபத்திரையின் சகோதரன் இராஜகோபாலன் வாயிலாகக் கல்கி பேசுவதைக் கேளுங்கள்:

> "நமது சமூகத்தில் இரண்டு கொலை பாதகங்கள் இருக்கின்றன. கன்னி வயதில் கட்டாயமாகக் கல்யாணம் செய்துவிட வேண்டுமென்பது ஒன்று; இளம் வயதில், குழந்தைப் பருவம் நீங்கா முன்னர் கணவனையிழந்த பெண்களுங் கூடத் தங்கள் வாழ்நாள் முழுதும் கைம்பெண்ணாயிருந்து, வாழ்க்கையில் எவ்வித இன்பமுமின்றி இடிபட்டுக் காலத்தைத் தள்ள வேண்டுமென்பது மற்றொன்று. பேச்சில் பயனில்லை பருவமடைந்த மங்கையையோ, இளம்கைம்

பெண்ணையோ கல்யாணம் செய்து கொள்வதாக நீ பிரதிக்ஞை செய்வாயா?"

(சாரதையின் தந்திரம், பக்.127-128)

இன்றைய இளைய தலைமுறையினர் வெறும் வாய்ச்சொல் வீரர்களாக மட்டும் இல்லாமல், சொன்னதைச் செய்யும் செயல் வீரர்களாகவும் விளங்க வேண்டும் என்றே கல்கி விரும்பினார் என்பதற்கு இப்பகுதி போதிய சான்று ஆகும்.

மேலும், அதே கதையில் பிறிதோர் இடத்தில் இராஜகோபாலனின் தந்தையார் அவனது திருமணத்தின் போது வரதட்சணை வாங்க நினைப்பதைச் சித்திரிக்கும் போது கல்கி பயன்படுத்தியுள்ள சொற்கள் அரம் போலும் கூர்மையானவை; அவரது முற்போக்கு மனத்தைத் திறந்து காட்ட வல்லவை:

> "... இராஜகோபாலன் தந்தை 3000, 4000 என்று அவனை ஏலங்கூறி வந்தார். இன்னும் ஏலத் தொகை உயருமென்று அவர் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்" (ப.100).

வரதட்சணைக் கொடுமையைச் சாடும் வகையில் கல்கி எழுதியுள்ள இவ்வரிகள் கலை நயம் மிக்கவை; காரமும் சாரமும் வாய்ந்தவை.

'சுபத்திரையின் சகோதரன்' இராஜகோபாலனைப் போல், 'கேதாரியின் தாயார்' கதையில் வரும் கேதாரியும் தன் விதவைத் தாய்க்குச் செய்யப்பட்ட கொடுமைகளைக் கண்டு உள்ளம் குமுறுகிறான்.

> "சங்கரா! அது என்ன சாஸ்திரமடா அது? அநாதையாய் விட்டுப் போய்ப் பதினெட்டு வருஷம் திரும்பிப் பாராமலிருந்த புருஷன் செத்ததற்காகத் தலையை மொட்டையடிக்கச் சொல்லும் சாஸ்திரம்! அதைக் கொண்டு வாடா, தீயில் போட்டுக் கொளுத்துவோம்!"

(கணையாழியின் கனவு, ப38).

என்று அவன் கோபத்தின் உச்சத்தில் நின்று முழங்குகிறான்; பிராமண சமுதாயத்தில் கணவனை இழந்தால் பெண்களின் தலையை மொட்டை அடிக்கும் வழக்கத்தை ஒழிப்பதற்காக

ஒரு பெரிய கிளர்ச்சியே நடத்தப் போவதாக அறைகூவல் விடுக்கிறான்.

பெண் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கல்கி எழுதியுள்ள ஒரு நல்ல கதை 'கடிதமும் கண்ணீரும்'. எழுதப் படிக்கத் தெரியாமல் சாதாரணமான பெண்ணாக இருந்த அன்னபூரணி, படித்துப் பட்டம் பெற்றுப் பெண் குலத்திற்கே தொண்டு செய்யும் சகோதரி அன்னபூரணி தேவியாக உயர்வதைக் காட்டும் அருமையான கதை அது.

'விஷ மந்திரம்' என்ற சிறுகதை தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகக் கல்கி அடித்திருக்கும் சாவு மணி ஆகும் உயர்சாதியில் பிறந்து சாதி வேற்றுமை பாராட்டிக் கொண்டிருந்த போஸ்டு மாஸ்டர் நாராயண ஐயரும், தாழ்ந்த சாதியில் பிறந்துவிட்டோமே என்று தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்த தபால் இன்ஸ்பெக்டர் பெத்த பெருமாள் பிள்ளையும் சந்தர்ப்ப வசத்தால் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமை யான்' என்ற உண்மையை உணரத் தலைப்படுவதை உருக்கமான முறையில் சித்திரிக்கும் கதை அது. கதையின் முடிவில் இருவரும் "இன்றுதான் என் கண்கள் திறந்தன" என்று கூறுவதும், "இறைவன் எல்லா மனிதர்களையும் ஒரு தரமாகவே படைத்துள்ளார் என்பதை இப்போது அறிந்து கொண்டேன்" (சாரதையின் தந்திரம், ப.175) என்று உரைப்பதும் படிப்பவர் மனத்தை நெகிழச் செய்யும் இடங்கள், முத்தாய்ப்பாக, 'பறையருக்கும், தீயருக்கும், புலையருக்கும் விடுதலை' என்ற பாரதியாரின் பாடல் வரியைப் பயன்படுத்திக் கொண்டிருப்பது கல்கியின் முத்திரை.

மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவாக 'விமோசனம்' இதழில் கல்கி எழுதிய 'தெய்வயானை', 'சின்னத்தம்பியும் திருடர்களும்', 'விதூஷகன் சின்னுமுதலி', 'கோவிந்தப்பனும் வீரப்பனும்', 'தண்டனை யாருக்கு?', 'கவர்னர் வண்டி' ஆகிய கதைகளும் இங்கே மனங்கொளத்தக்கவையாகும். இவற்றுள் 'தண்டனை யாருக்கு?' என்பது மூன்றே பக்கங்களில் அமைந்த ஒரு நல்ல கதை. இதில் வரும் ஏழைக் குடியானவன் ஒருவன் குடிவெறியால் கொலை செய்கிறான்; நீதிமன்றத்தில் அவனுக்குத் தூக்குத் தண்டனை அளிக்கப்படுகின்றது இது நீதியாகுமா என்று கேட்கிறார் கல்கி. "தூக்குத் தண்டனை கள்ளுக்கு விதிப்பதன்றோ நியாயமாகும்? உண்மைக் குற்றவாளி

அந்தப் பாழும் கள்ளே யல்லவா?" என்னும் அவரது கேள்விக் கணை ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுவதாகும்.

தேசியமும் காந்தியமும்

'பாரதநாடு பழம்பெரும் நாடு, நீரதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்!' என்னும் கவியரசர் பாரதியாரின் அமர வாக்கிற்கு - அமுத வாக்கிற்கு - ஏற்ப, பெற்ற தாய்நாட்டினையும் தாய்நாட்டின் விடுதலைக்காக அரும்பாடு பட்ட தலைவர்களையும் தம் உயிரினும் மேலாகப் போற்றி வாழ்ந்தவர் கல்கி. அவருக்குக் காந்தியடிகளிடத்தில் இருந்த ஆழமான ஈடுபாடும், விடுதலைப் போராட்டத்தில் இருந்த ஆர்வமும், ஆங்கில ஆட்சியில் இருந்த வெறுப்பும் அனைவரும் நன்கு அறிந்தவை. 'அமர வாழ்வு', 'பொங்குமாங்கடல்', 'மாடத்தேவன் சுனை' ஆகிய கதைகளில் அவரது நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் சிறப்பாக வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம். குறிப்பாக, 'அமர வாழ்வு' கதை வடிவில் கல்கி, நேதாஜிக்குச் சூட்டியுள்ள புகழாரம் ஆகும். அதில் இடம் பெறும் ஓர் உட்தலைப்பு 'நேதாஜி விஜயம்' என்பது. நேதாஜி ஒரு பாத்திரமாகவே அக்கதையில் உலா வருவது - வீர உரை ஆற்றுவது - ஒரு சிறப்பு. அக்கதையின் முடிவில் ராகவனுக்கும் மேஜர் ஜெனரல் குமரப்பாவுக்கும் இடையே நிகழும் ஓர் உருக்கமான - உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்த- உரையாடல் இதோ :

> "'ஜெனரல், ஒரு விஷயம் தயவுசெய்து சொல்ல வேண்டும். நம் அருமைத் தலைவர் நேதாஜி மரணமடைந்தது உண்மையா?'
>
> 'ராகவன்! நீரா இப்படிப்பட்ட கேள்வி கேட்பது? இந்திய சுதந்திரப் படையைச் சேர்ந்த வீரர்களுக்கு மரணம் என்பது உண்டா? அமர வாழ்வு பெற்றவர்கள் அல்லவா நாம்? அதிலும் நம் நேதாஜிக்கு மரணம் ஏது?'"
>
> *(அமர வாழ்வு, ப.39)*

கல்கி நேதாஜி மீது கொண்டிருக்கும் பெருமதிப்பினையும் பேரன்பினையும் இவ்வுரையாடற் பகுதியால் தெள்ளிதின் உணரலாம்.

இதே போல், 'பொங்குமாங்கடல்' கதையின் முடிவில் 'பலாத்கார பயங்கரங்கள் எல்லாம் இல்லாமல் அஹிம்சா

முறையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மா' (அமர வாழ்வு, ப.128) எனக் கல்கியால் காந்தியடிகள் நெஞ்சார வாழ்த்தப் பெறுகின்றார். அதே கதையில் பிறிதோர் இடத்தில், "வெள்ளைக்காரனுக்குப் போட்டியாகக் கப்பல் ஓட்டிய வீரர் வ.உ. சிதம்பரம் பிள்ளையைத் தான் சொல்கிறேன்... இவரைப் போல் ஒரு வீரரை, ஒரு தீரரை, ஒரு தியாகியை, ஒரு குணவானை, ஒரு உத்தமனைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. ஐயா! மாடு இழுக்க வேண்டிய செக்கை அந்த மகாபுருஷர் தம் திருக்கரங்களினால் இழுத்தார்" (பக்.102-103) எனக் 'கப்பல் ஓட்டிய தமிழர்' வ.உ.சியைக் குறித்துக் கல்கி எழுதியிருக்கும் இத் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

கல்கியின் கதைமாந்தர்களுக்கு இராட்டையில் நூல் நூற்பதும், கதராடை அணிவதும், நாட்டு விடுதலையில் நாட்டம் கொள்வதும் அவர்களது இரத்தத்திலேயே ஊறிவிட்ட பண்புகள் எனலாம். அவரது 'சாரதையின் தந்திரம்' சிறுகதை, 'ஸ்ரீநிவாசன் அன்று நன்றாக (இராட்டினத்தில்) நூல் நூற்கப் பழகிக் கொண்டார்' (ப.32) என்ற வரியுடன் முடிவடைகின்றது. கல்கியின் கதையுலகில் அடிக்கடி உலாவரும் தவுல் வித்துவான் ஐயம்பேட்டைக் கந்தப்பப்பிள்ளை கதர்தான் கட்டுவார்; காங்கிரஸ் மாநாடுகளில் அவரை அடிக்கடி பார்க்கலாம் (திருவழுந்தூர் சிவக்கொழுந்து, ப.6). அவரது கதைமாந்தர்கள் 'தேசத்துக்காக உயிரைக் கொடுப்பதையே புண்ணியமாகக் கருதுகின்றனர்' (மயிலைக் காளை, ப.96). இவை தவிர, தம் கதைகளில் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் ஆங்கில ஆட்சியைக் கேலி செய்யவும் கல்கி தவறியதே இல்லை. காட்டாக, அன்றிருந்த சுதேச சமஸ்தான இளவரசர்களின் போக்கினைப் 'புலிராஜா' கதையில் அவர் எப்படிக் கேலி செய்கிறார் பாருங்கள் :

> "யுவராஜா ஐங் ஐங் பகதூர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். மேற்கூறிய சம்பவத்தைத் தவிர, அவருடைய குழந்தைப் பருவத்தில் வேறு அதிசயம் ஒன்றும் நடக்கவில்லை. மற்றச் சுதேச சமஸ்தானங்களின் யுவராஜாக்களைப் போல்தான் அவரும் இங்கிலீஷ் பசுவின் பாலைக் குடித்து, இங்கிலீஷ் நர்ஸினால் போஷிக்கப்பட்டு, இங்கிலீஷ் உபாத்தி-

யாயரால் இங்கிலீஷ் கற்பிக்கப்பட்டு. இங்கிலீஷ் சினிமாக்கள் பார்த்து - இப்படியாக வளர்ந்து வந்தார்."

(சாரதையின் தந்திரம், ப.140)

இதே போல், 'கவர்னர் விஜயம்' கதையில் ஆங்கிலக் கவர்னரின் கடைக்கண் பார்வை தம் மீது படாதா என்ற எதிர்பார்ப்பிலும் ஏக்கத்திலும் நம் ஊரில் பெரிய மனிதர்கள் செய்யும் செயல்களை - அடிக்கும் கூத்துக்களை - அழுத்தமாகவும் அங்கதச் சுவையுடனும் கேலி செய்துள்ளார் கல்கி. இங்ஙனம் அவரது கதைகளில் எங்கே தொட்டாலும் தேசியமும் காந்தியமும் களிநடனம் புரிவதைக் காணலாம்.

பாத்திரப் படைப்பு

கல்கியின் கதைகள், படித்தவுடன் நெஞ்சில் பதிவதற்கு ஒரு முக்கியமான காரணம், கதை மாந்தர்களை அவர் படைக்கும் முறையே என்று கூறலாம். 'இழைக்கின்ற விதி முன் செல்ல, தருமம் இரங்கிப் பின் ஏக' என்றாற் போல், மெல்லிய நகைச்சுவை முன்செல்ல, அருமையும் எளிமையும் அழகும் வாய்ந்த சொற்சுவை அணிவகுத்துப் பின் வர, கல்கியின் எழுதுகோல் படைக்கும்போது, கதைமாந்தர்கள் உயிர்பெற்றுப் படிப்பவர் மனக்கண் முன் வந்து நின்றுவிடுகின்றனர். கதையின் தலைமை மாந்தராயினும் சரி, அல்லது துணைமாந்தராயினும் சரி, இந்த வகையிலேயே அவரால் படைக்கப்பட்டிருக்கின்றனர். 'சாரதையின் தந்திரம்' கதையில் பொன்னொத்த வண்ணமுடையாளான சாரதையைக் கல்கி படைத்துக் காட்டியிருக்கும் பாங்கு இதற்குச் சரியானதோர் எடுத்துக்காட்டு ஆகும். சாரதையைப் பற்றிய கல்கியின் எழில் கொஞ்சும் சொல்லோவியம் இதோ :

> "சாரதை பத்தரை மாற்றுப் பொன்னொத்த மேனியினாள். விசாலமான நெற்றியும், அறிவு ஊறித் ததும்பும் கண்களும் படைத்தவள். அவள் கண்களினுள்ளே இருந்த கருவிழிகளோ, அங்குமிங்கும் குறுகுறுவென்று அலைந்து கொண்டிருந்தன. தன் கடைக்கண் வீச்சாகிய ஒரே ஆயுதத்தின் துணைக் கொண்டு ஆடவரையும் பெண்டிரையும் அடக்கியாளும் திறனுடையவள் அவள் என்பது, அவ்விழிகளை ஒருமுறை பார்த்த அளவினாலே விளங்கும். அப்போதலர்ந்த ரோஜா மலரின் இதழையொத்த தன் அதரங்களில் புன்னகையிருக்க, வேறு பொன், கல் நகைகள் எதற்கு என்று கருதியே

போலும், அவள் அதிக ஆபரணங்கள் அணிந்து கொள்ளவில்லை. தலைப்பில் சரிகைக் கரை போட்ட நீல நிறக் கதர் புடவை அவள் மேனி அழகைப் பதின்மடங்கு மிகுதிப்படுத்திக் காட்டிற்று."

(சாரதையின் தந்திரம், பக்.5-6)

-'கம்ப சித்திர'த்தை நினைவூட்டும் 'கல்கி சித்திரம்' இது!

இனி, 'கணையாழியின் கனவு' கதையில் வரும் ஒரு துணைமாந்தரைக் கல்கி எப்படிப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார் எனக் காண்போம்:

"'ஸார்! ஸார்! யாரோ வரா, ஸார்!' என்று ஒரு பெண் கூவினாள். உடனே எல்லாப் பெண்களும் ஜன்னலண்டை குவிந்து வேடிக்கை பார்க்கலானார்கள். வாத்தியாரும் அந்தப் பக்கம் நோக்கினார். உடனே பள்ளிக்கூடம், பெஞ்சு, நாற்காலி, மேஜை, மைக்கூடு எல்லாம் அவரைச் சுற்றிச் சுழலத் தொடங்கின சட்டென்று 'பிளாக் போர்டு' துடைக்கும் குட்டையை எடுத்துத் தலைப் பாகையாகச் சுற்றிக் கொண்டார். மேஜை மீதிருந்த தலைப்பாகையை உதறி அங்கவஸ்திரமாகப் போட்டுக் கொண்டார். பிறகு, நாற்காலி முதுகின் மேல் கிடந்த மேல் வேஷ்டியை எடுத்து, அதை என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தார் இதற்குள், சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்கவே அதை மேஜை அருகில் செருகிவிட்டுப் பெண்களைப் பார்த்து, 'சனியன்களே!' உட்காருங்கள். அவரவர்கள் இடங்களில் உட்காருங்கள்! என்று பாம்பு சீறுவது போன்ற குரலில் அதட்டினார்."

(கணையாழியின் கனவு, பக்.11-12)

இப்பகுதியைப் படிக்கும் வாசகரின் மனத்திரையில், பள்ளிக்கூட இன்ஸ்பெக்ட்ரெஸ் அம்மாள் திடீர் என்று சோதனைக்கு வந்துவிட்டதாக எண்ணிய நிலையில், ஒரு பள்ளிக்கூட வாத்தியார் - கொஞ்சம் பழைய காலத்து மனிதர் - எப்படியெல்லாம் பதற்றத்துடனும் குழப்பத்துடனும் செயல்படுவார் என்பது படக்காட்சியைப் போல் விரிவடைவது திண்ணம்.

ஆசிரியர் குறுக்கீடு

'எல்லாப் புகழும் இறைவனுக்கே' என்பது போல், கல்கியைப் பொறுத்த வரையில் 'எல்லாமே வாசகர்-களுக்காகத்தான்!' சுந்தரர் சிவபெருமானிடம் கொண்டிருந்தது போல் ஒரு தோழமை உணர்வுடன் கதை சொல்லுவதில்தான் கல்கிக்கு விருப்பம் மிகுதி. வாசகரை விளித்துப் பேசுவதற்கு அவருக்குக் கதையின் தொடக்கம், நடுப்பகுதி, முடிவு என்று இங்கேதான் என்ற வரையறை - கட்டுப்பாடு - இல்லை; எங்கு வேண்டுமானாலும் - எப்படி வேண்டுமானாலும் - எப்போது வேண்டுமானாலும் அவர் கதையில் வாசகர்களுடன் பேசுவார். ஒரு வகையில் பார்த்தால், இது குறைதான்; ஆசிரியர் குறுக்கீடுதான்; என்றாலும், கல்கியால் இங்ஙனம் இடையிடையே குறுக்கிடாமல் - வாசகர்களை வம்புக்கு இழுக்காமல் - கதையைச் சொல்லிச் செல்ல முடியாது.

> "நம்ம 'சுண்டு'வை உங்களுக்குத் தெரியுமோ, இல்லையோ? தெரியும் என்று ஒப்புக் கொண்டு விடுங்கள்! தெரியாது என்று நீங்கள் சொன்னால் அவன் உங்களை விட்டுவிடப் போகிறானா என்ன? முதுகு வலிக்கு ஆளாவது தான் பலனாக முடியும்"
>
> (அமர வாழ்வு, ப.62).

- இது 'சுண்டுவின் சந்நியாசம்' என்னும் கதையின் தொடக்கம். இங்ஙனம் வாசகருடன் நேரடியாகப் பேசுவது போன்று கதையைத் தொடங்குவதில் கல்கிக்கு விருப்பம் மிகுதியாக உண்டு.

> "பெருமாள் கோனாரை நேயர்களுக்கு நான் அறிமுகப்படுத்தி வைக்க முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். ஏனெனில், கதையில் அந்தக் கட்டத்திற்கு நான் வருவதற்கு முன்னால் அவர் காலமாகிவிட்டார்".
>
> (மயிலைக் காளை, ப.9)

- 'மயிலைக் காளை' கதையின் நடுப்பகுதியில் இங்ஙனம் நேயர்களுடன் தம் உணர்வைப் பகிர்ந்து கொள்கிறார் கல்கி.

> "பழைய உறவினரும் இடையில் பகைவர்-களாயிருந்து பின்னர் சேர்ந்தவர்களுமான அவ்விரு குடும்பத்தாருக்குள்ளும் விரைவிலேயே புதிய, நெருங்கிய

"இறுதி என்ன ஏற்பட்டதென்று வாசகர்களுக்கு நாம் சொல்லவும் வேண்டுமோ?"

(சாரதையின் தந்திரம், ப.165)

- இது 'ஒன்பது குழி நிலம்' கதையின் முடிவு. இங்கே கதையின் முடிவில் என்ன நிகழ்ந்தது என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல், வாசகர்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகின்றார் கல்கி.

கல்கியின் கதைகளில் காணப்படும் இத்தகைய குறுக்கீடுகள் வாசகர்களை மிக விரைவில் கதையுலகிற்கு அழைத்துச் செல்வதற்கும், கதை மாந்தருடன் வாசகருக்குத் தனிப்பட்ட ஒரு நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பயன்பட்டுள்ளன.

'நல்ல சிறுகதைக்கு அடையாளம்'

"சிறுகதையானது வாமனாவதாரத்தைப் போன்ற கலையுருவம்... நல்ல சிறுகதைக்கு அடையாளம் ஒன்றே; அதைப் படித்து முடிக்கும்போது நல்லவர்களுடைய மனதில் மகிழ்ச்சி தோன்றி உள்ளம் பூரிக்கும்" என நல்ல சிறுகதை என்பதற்கான அடையாளத்தைச் சுட்டிக் காட்டுவார் மூதறிஞர் ராஜாஜி (ராஜாஜி கட்டுரைகள், பக்.201 & 208).

'தற்கொலை' என்று ஒரு கதை. இதில் பி.ஏ. தேர்வில் இரண்டாம் முறை தோற்றதால் தற்கொலை செய்து கொள்ள முயலும் ஜகந்நாதனும், அதே பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறி மூன்று ஆண்டுகள் முயன்றும் வேலை கிடைக்காததால் தற்கொலை செய்து கொள்ள முயலும் மகாதேவ ஐயரும் எதிர்பாராத வகையில் சந்தித்துக் கொள்கின்றனர்; மனம் விட்டுத் தத்தம் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். அதன் விளைவாக இருவரும் தற்கொலை முயற்சியினின்றும் மீண்டு, ஒன்று சேர்ந்து 'மகாநாதன் கம்பெனி' என்ற பெயரில் ஒரு தொழில் தொடங்கி முன்னேறுவது என்ற முடிவுக்கு வருகின்றனர்; "இனி, இருவரும் சேர்ந்து புதிய பலத்துடனும் உற்சாகத்துடனும் வாழ்க்கைப் போராட்டத்தில் இறங்குவோம்" *(சாரதையின் தந்திரம், ப.186)* என ஒருமித்த உணர்வில் உரைக்கின்றனர். படிப்பவர் மனங்களிலே இந்தக் கதையைப் படித்ததும் கிடைக்கும் தெம்பு - நம்பிக்கை - பல பெரியவர்கள் சேர்ந்து பல மணிநேரம் தரும் ஊக்க மொழிகளை விடவும் வலிமை

வாய்ந்ததாகும். இங்ஙனம் படித்து முடிக்கும்போது மனத்தில் நம்பிக்கையும் நிறைவும் தோன்றும் கதைகள் பலவற்றைப் படைத்துள்ள கல்கிக்குத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் இன்றியமையாத ஓர் இடம் உண்டு. தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக் காலத்தில் தோன்றி, மக்களைக் கவரும் வகையில் எழுதி, தம் எழுத்தாலும் இதழாலும் சிறுகதைக் கலையை வளர்த்ததிலே - பரவலாக்கியதிலே - அவருக்கு ஒரு முக்கியமயான பங்கு உண்டு எனலாம்.

3. நாவலாசிரியர்

"தமிழ் நாவல் உலகத்தில் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியின் வருகை இளஞாயிற்றின் உதயம் போன்றது... நாவலைப் பொதுமக்கள் இலக்கியமாக எல்லார்க்கும் உரியதாக ஆக்கிய பெருமை இவர் ஒருவர்க்கே உண்டு."

-- மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்)*

ஆங்கிலேயரின் வருகையால் நம் நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளுள் நாவல் என்னும் இலக்கிய வடிவமும் ஒன்று தமிழ் மொழியைப் பொறுத்த வரையில், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில்தான் நாவல் இலக்கியம் மெல்ல அரும்பத் தொடங்கியது. மாயூரம் வேதநாயகரே தமிழில் முதல் நாவலை எழுதிய சான்றோர். அவர் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' 1876 -ஆம் ஆண்டு வெளிவந்தது. இதுதான் 'தமிழ் நாவலின் தலைப்பிள்ளை'. வேதநாயகருக்குப் பின் 1896 - ஆம் ஆண்டு ராஜம் ஐயர் 'கமலாம்பாள் சரித்திர'த்தை வெளியிட்டார். தமிழில் வெளிவந்த முதல் தொடர்கதை இதுவே மூன்றாவதாக, மாதவையா எழுதிய 'பத்மாவதி சரித்திரம்' 1898-ஆம் ஆண்டு வெளிவந்தது. இதுவும் முதலில் 'விவேக சிந்தாமணி' என்ற பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தது. வேதநாயகர், ராஜம் ஐயர், மாதவையா ஆகிய மூவரைத் தவிர, பண்டித நடேச சாஸ்திரியார், தி.ம. பொன்னுசாமிப் பிள்ளை, பரிதிமாற் கலைஞர் முதலியோரும் இக்காலகட்டத்தில் நாவல்களைப் படைத்துத் தந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

தொடக்ககால நாவல்களின் வருகைக்குப் பின்னர், ஏறத்தாழ முப்பது ஆண்டுக்காலம் தமிழ்நாவல் வரலாற்றில் ஓர் இருண்ட காலம் - வீழ்ச்சிக் காலம் - நிலவியது. மொழி பெயர்ப்பு நாவல்களும், தழுவல் நாவல்களும், துப்பறியும் நாவல்களுமே இந்தக் கால கட்டத்தில் தமிழ்நாவல் உலகில் ஆதிக்கம் செலுத்தின. வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், ஜே.ஆர் ரங்கராஜு, வை.மு. கோதைநாயகி அம்மையார் போன்றோர் இக் காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான நாவல்களை எழுதிக் குவித்தனர். அவற்றுள் பெரும்பாலானவை கால வெள்ளத்தைக் கடந்து நிற்கும்

---

* இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், ப.26

தகுதியைப் பெற்றிருக்கவில்லை. என்றாலும், இந்தக் கால கட்டத்தில் எழுதிய நாவலாசிரியர்களுள் வ.ரா.வும் கா.சீ. வேங்கடரமணியும் மட்டும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கினர்.

இந்நிலையில், தமிழ் நாவல் வரலாற்றில் மூன்றாவது மறுமலர்ச்சிக் காலப் பகுதியைக் கல்கி தொடங்கி வைத்தார். ஏறத்தாழ இருபது ஆண்டுகள் 'கல்கி காலம்' என்றே வருணிக்கப்படும் அளவிற்குத் தமிழ் நாவல் உலகில் கல்கி ஆதிக்கம் செலுத்தினார். துப்பறியும் நாவல்கள் ஏற்கனவே பெருக்கியிருந்த வாசகர் கூட்டத்தைத் தரமான நாவல்கள் படிக்கும் வாசகர்களாக அவர் மாற்றினார். 'கள்வனின் காதலி', 'தியாக பூமி', 'மகுடபதி', 'சோலைமலை இளவரசி', 'அலை ஓசை', 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' முதலான நாவல்கள் மூலம் நாட்டின் படித்த கூட்டத்தை அவர் தம் பக்கம் ஈர்த்தார்.

இங்ஙனம் தமிழ் நாவல் வரலாற்றில் மூன்று தெளிவான கால கீட்டங்கள் காணப்படுதையும், மூன்றாவது கால கட்டம் கல்கியை முதலாகக் கொண்டு தொடங்குவதையும் நாவல் ஆய்வாளர்கள் நன்கு எடுத்துக்காட்டியுள்ளனர். இனி, தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சிக்குக் கல்கி நல்கியுள்ள பங்களிப்புக் குறித்துக் காண்போம்.

முதல் நாவல்

புனைகதை இலக்கியத்தில் ஆர்வம் தோன்றி, அதன் விளைவாகப் படைப்புப் பணியை மேற்கொண்ட நிலையில், கல்கி உருவாக்கிய முதல் எழுத்தோவியம் 'விமலா' என்னும் நாவல் ஆகும். 1922 - ஆம் ஆண்டு கூடலூர்ச் சிறையில் இருந்தபோது தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் அவர் இந்நாவலை எழுதினார். இந்நாவலைப் பின்னர் 'சுதந்திரன்' என்ற தமது பத்திரிகையில் தொடர்கதையாக வெளியிட்டார் வ.ரா. இங்ஙனம் கல்கியை முதன்முதலில் ஒரு நாவலாசிரியராக அடையாளம் கண்டு, சிறப்பான முறையில் அவரை அறிமுகப்படுத்திய பெருமைக்கு உரியவர் வ.ரா.வே. ஆவார். இது குறித்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு 'வ.ரா.மணி மல'ரில் "ஸ்ரீவ.ரா. அவர்கள் அப்போது எனக்கு அளித்த உற்சாகம் என்னை எழுத்துத் துறையில் ஊக்கியதற்கு ஒரு முக்கிய காரணமாகும்" என்று கல்கியே நன்றியுணர்வோடு குறிப்பிட்டுள்ளார்.

எவ்வளவோ முயன்று தேடியும் கல்கியின் முதல் நாவலான 'விமலா'வின் ஒரு பகுதி கூட இன்றுவரை கிடைக்கவில்லை. எனினும், கல்கியின் கூற்றாலேயே அது ஒரு 'தன்வரலாற்று நாவல்' என்றும், 'ஒத்துழையாமை செய்து, கலாசாலையை விட்ட இளைஞன் ஒருவனைக் கதாநாயகனாகக் கொண்ட கதை' என்றும் தெரியவருகின்றன (சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.118).

முதல் வரலாற்று நாவல்

'விமலா'வைத் தொடர்ந்து, நாவல் துறையில் கல்கி தம் அடுத்த முயற்சியை 1937 - ஆம் ஆண்டில் மேற்கொண்டார்; 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் 'கள்வனின் காதலி' என்ற தம் முதல் சமூக நாவலைத் தொடர்கதையாக எழுதினார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு - 1939 -ஆம் ஆண்டில் - 'தியாக பூமி' என்னும் சமூக நாவலையும் அவர் 'ஆனந்த விகட'னிலேயே எழுதினார். 1941 - ஆம் ஆண்டில் தான் - அதாவது தமது சொந்தப் பத்திரிகையான 'கல்கி'யில் தான் - கல்கி 'பார்த்திபன் கனவு' என்னும் தமது முதல் வரலாற்று நாவலை எழுதினார். அதாவது, புனைகதை எழுதத் தொடங்கி ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்குப் பின்னரே கல்கி வரலாற்று நாவல் எழுதும் முயற்சியில் ஈடுபட்டார் என்பது ஓர் 'அதிசயம்; ஆனால் உண்மை!'

சமூக நாவல்கள் பலவற்றை எழுதியிருந்தாலும் கல்கி என்றதுமே நம் நினைவுக்கு முதலில் வருபவை அவரது வரலாற்று நாவல்களே ஆகும். அறிஞர் மு. வரதராசன் தம் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலில், "தமிழ் இலக்கியத்தில் வரலாற்று நாவல்களுக்கு ஒரு சிறப்பைத் தேடித் தந்தவர் 'கல்கி' என்ற புனைபெயர் கொண்ட ரா கிருஷ்ணமூர்த்தி. அவர்... 'தியாக பூமி', 'மகுடபதி', 'அலையோசை' முதலான சமுதாய வாழ்வு பற்றிய நாவல்களும் எழுதினார். ஆயினும் வரலாற்று நாவல் ஆசிரியர் என்ற வகையிலேயே அவர் பெரும்புகழ் பெற்றார்" (ப.273) என்று கல்கியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

முப்பெரும் வரலாற்று நாவல்கள்

கல்கி முதன்முதலில் எழுதிய வரலாற்று நாவல் 'பார்த்திபன் கனவு'. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த மகேந்திர பல்லவனின் வரலாற்றை அடிப்படையாகக்

கொண்டு உருவாக்கப்பட்ட நாவல் அது. அந்நாவல் 'கல்கி' பத்திரிகையில் பதினைந்து வாரங்களுக்குத் தொடர்கதையாக வெளிவந்தது; 1943 - இல் நூல்வடிவம் பெற்றது. அதற்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை 'அற்புதச் சரித்திர நவீனகம்' (Historical Romance) என்று அந்நாவலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (p.vii).

அடுத்த வரலாற்று நாவல் 'சிவகாமியின் சபதம்'. 'பார்த்திபன் கன'வை விட இரு மடங்கான நாவல் அது. அதுவும் பல்லவர் வரலாற்றை ஒட்டியே உருவானதாகும். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் 'இரட்டைக் காப்பியங்கள்' எனச் சுட்டுவது போல், 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' ஆகிய இரு நாவல்களையும் 'இரட்டை நாவல்கள்' என வழங்குவதும் உண்டு. 'சிவகாமியின் சபத'மே கல்கியின் படைப்புக்களில் மிகச் சிறந்தது என்பது அறிஞர் பலருடைய ஒருமித்த கருத்து. அது ஒரு காப்பியத்தின் அளவுக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. வரலாற்று நாவல்களின் முடிமணியாக இன்றளவும் திகழ்ந்து கொண்டிருக்கும் 'சிவகாமியின் சபதம்' நாவலைக் கல்கி 1944 - ஆம் ஆண்டில் எழுதத் தொடங்கினார். அது இரண்டரை ஆண்டுக் காலம் 'கல்கி' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்தது; 1948-ஆம் ஆண்டில் நூல் வடிவம் பெற்றது. சென்னை மாகாணத்தின் உள்நாட்டு மந்திரி பதவியை வகித்த டாக்டர் ப. சுப்பராயன் அதற்கு முகவுரை வழங்கியுள்ளார். மகாகவி பாரதியார் கவிதை வடிவில் படைத்தது 'பாஞ்சாலி சபதம்' என்றால், கல்கி கதை வடிவில் படைத்திருப்பது 'சிவகாமியின் சபதம்' எனலாம்.

வரலாற்று நாவல் வரிசையில் கல்கி படைத்த மூன்றாவது பெரும்படைப்பு 'பொன்னியின் செல்வன்'. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பிற்காலச் சோழர்களில் இராசராசனின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நாவல் அது. 'சிவகாமியின் சபத'த்தை விட இரு மடங்கு வளர்ந்து காணப்படும் நாவல் 'பொன்னியின் செல்வன்'. இந்நாவலைக் கல்கி 1950 - இல் தொடங்கி, ஏறத்தாழ மூன்றரை ஆண்டுக் காலம் தொடர்கதையாக எழுதினார். இந்நாவலின் ஐந்து பாகங்களும் ஐந்து தொகுதிகளாக 1954-இல் வெளிவந்தன. முதறிஞர் ராஜாஜி இந்நாவலின் முதற் பாகத்திற்கு எழுதிய முன்னுரையில், "'கல்கி' எழுதிய

எழுத்திற்கு என்னுடைய முகவுரை என்னத்திற்காக? வேண்டியதே இல்லை. சூரியனுடைய வெய்யிலுக்கு விளக்கும் வேண்டியதில்லை; எண்ணெயும் திரியும் வேண்டியதில்லை" (பக்.v-vi) என்று குறிப்பிட்டுள்ளார். 'பொன்னியின் செல்வன்' தற்போது நான்காவது முறையாகக் 'கல்கி' இதழில் தொடர்கதையாக வெளிவந்து கொண்டிருக்கிறது என்பது இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தி ஆகும்.

'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' ஆகிய மூன்றும் தமிழ் வரலாற்று நாவல் உலகின் 'முன்னோடிகளாய் மட்டும் அல்லாமல் முன்மாதிரிகளாகவும், முதல் முயற்சிகளாய் மட்டும் அல்லாமல் முதிர்ந்த சாதனைகளாகவும்' (சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.561) விளங்குகின்றன.

வரலாற்று நாவல்களைப் படைத்ததன் நோக்கம்

கல்கி தம் இளமைப் பருவம் முதற்கொண்டே நிறைய ஆங்கில நாவல்களை - குறிப்பாக, வால்டர் ஸ்காட், விக்டர் ஹ்யூகோ போன்றோர் எழுதிய வரலாற்று நாவல்களை - ஆர்வத்தோடு படித்து வந்துள்ளார். இந்த நாவல்களைப் படித்ததன் விளைவாக, தமிழ்நாட்டின் வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாவல் எழுத வேண்டும் என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் எழுந்திருக்கலாம். இது தவிர, கல்கி துணையாசிரியராகப் பணியாற்றிய 'ஆனந்த விகடன்' பத்திரிகை 1934 - ஆம் ஆண்டில் ஒரு நாவல் போட்டியை நடத்தியது; அதில் வெங்கடாசலம் என்பவர் எழுதிய 'மஞ்சுளா' என்னும் வரலாற்று நாவல் பரிசு பெற்றது அந்த நாவலைப் படித்துப் பார்க்கும் வாய்ப்பு துணையாசிரியர் என்ற முறையில் கல்கிக்குக் கிடைத்திருக்கலாம். மேலும், தமிழில் வெளிவந்த 'மோகனாங்கி' (1895), 'மங்கம்மாள்' (1903), 'சத்தியவல்லி (1910), 'விஜயசீலம்' (1916) முதலான தொடக்க கால வரலாற்று நாவல்களில் ஒரு சிலவற்றையாவது அவர் படித்திருக்கலாம். எனவே, இவற்றை அடியொற்றித் தாமும் வரலாற்று நாவலைப் படைக்க வேண்டும் என்ற உந்துதல் அவர் உள்ளத்தில் வலுப்பெற்றிருக்கலாம். இந்நிலையில், அவர் ஒருநாள் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாருடனும், வேறு இரு நண்பர்களுடனும் மாமல்லபுரத்தைப் பார்க்கச் சென்றார் அங்கே கடற்கரை மணலில், வெண்ணிலவில் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தபோது அவருடைய மனக்கண்

முன்னே ஆயனரும் சிவகாமியும் மகேந்திர பல்லவரும் மாமல்லரும் பார்த்திபனும் விக்கிரமனும் அருள்மொழியும் குந்தவியும் பொன்னனும் வள்ளியும் கண்ணனும் கமலியும் புலிகேசியும் நாகநந்தியும் பவனி வந்தார்கள்; அப்படிப் பவனி வந்தவர்கள் அவர் உள்ளத்திலேயே குடிபுகுந்துவிட்டார்கள். 'சிவகாமியின் சபதம்' நாவலுக்கு எழுதிய முன்னுரையில் 'பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம்' என்று கல்கியே இந்நிகழ்ச்சியைப் பற்றி நினைவுகூர்ந்துள்ளார். 'சிவகாமியின் சபதம்' தொடர்கதையாகக் 'கல்கி' பத்திரிகையில் வெளிவந்த ஆண்டு 1944. எனவே, 1934-ஆம் ஆண்டு வாக்கிலேயே வரலாற்று நாவல் எழுதும் எண்ணம் கல்கியின் உள்ளத்தில் தோன்றி, காலப் போக்கில் மெல்ல மெல்ல வளர்ந்து வந்துள்ளது என்பது தெரியவருகின்றது. என்றாலும், அவர்தம் எண்ணத்திற்குச் செயல் வடிவம் தந்தது 1941 -ஆம் ஆண்டில் தான்; அதாவது, ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான். இன்னொரு செய்தி: கல்கியின் உள்ளத்தில் முதலில் உருவான கதை 'சிவகாமியின் சபத'மே. என்றாலும் அவர் முதலில் எழுத்து வடிவம் தந்து, தொடர்கதையாக எழுதியது 'பார்த்திபன் கன'வே ஆகும்.

'பார்த்திபன் கனவு' நாவலின் அடிநாதம்

வால்டர் ஸ்காட், விக்டர் ஹ்யூகோ முதலான பிறநாட்டு நல்லறிஞர்களின் படைப்புக்கள் தந்த தூண்டுதலுக்கும் மேலாக, தம் தாய்த்திரு நாட்டு மக்களுக்குப் பழந்தமிழகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் உணர்த்த வேண்டும், அவர்களின் நெஞ்சில் நாட்டுப் பற்றையும் விடுதலை-யுணர்வையும் விதைக்க வேண்டும் என்ற பெரு நோக்கத்திற்காகவே கல்கி வரலாற்று நாவல்களை எழுத முற்பட்டார்; முனைப்புடன் செயல்பட்டார்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இதை

வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ? – இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?"

(பாரதியார் கவிதைகள், ப.135)

என்று பாடி, மகாகவி பாரதியார் தம் கவிதைகள் வாயிலாகச் செய்த பணியினை - நாட்டு மக்களுக்கு ஊட்டிய நல்லுணர்வினை - கல்கி தம் வரலாற்று நாவல்கள் வாயிலாகச் செய்தார்; நாட்டு மக்களுக்கு நல்லுணர்வு ஊட்டினார். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அவர் 1.8.1941 - இல் 'கல்கி' என்ற பெயரில் சொந்தப் பத்திரிகை தொடங்குவதற்கும், அதன் ஆறாவது இதழிலேயே (16.10.1941) முதல் வரலாற்று நாவலான 'பார்த்திபன் கன'வைத் தொடங்குவதற்கும் அவரது நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையுமே தனிப்பெருங் காரணங்களாக அமைந்தன எனலாம். 'கல்கி' பத்திரிகை தொடங்கியதன் நோக்கங்கள் பற்றி, அதன் முதல் இதழில் (ஆகஸ்டு 1, 1941) கல்கி பின்வருமாறு எழுதியிருந்தார்:

"'இந்தத் தமிழர் பத்திரிகையின் நோக்கங்கள் என்ன? புதிதாய்ப் பத்திரிகை ஆரம்பிக்கிறவர்கள் எல்லாம் இதைச் சொல்வது சம்பிரதாயமாயிற்றே?'

'நானும் சொல்கிறேன், ஸ்வாமி! இந்தப் பத்திரிகைக்கு மூன்று நோக்கங்கள் உண்டு. முதலாவது நோக்கம், தேச நன்மை...'

'இரண்டாவது?'

'இரண்டாவது, தேச நன்மை.'

'மூன்றாவது?'

'மூன்றாவதும் தேச நன்மைதான்!'"

இங்ஙனம் 'தேச நன்மை'யைக் கருத்தில் கொண்டு பத்திரிகையைத் தொடங்கியதோடு நின்று விடாமல், அதில் 'பாமரராய் விலங்குகளாய் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு, நாமமது இந்தியர் எனக் கொண்டு' அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நாட்டுப்பற்று ஊட்ட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமது முதல் வரலாற்று நாவலான 'பார்த்திபன் கன'வை எழுதினார் கல்கி. இக் கருத்திற்கு அரண் செய்யும் வகையில் அந்நாவலுக்கு எழுதிய முன்னுரையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டிருப்பதை இங்கே எடுத்துக்காட்டலாம்:

"சோழநாடு சுதந்திரம் இழந்து, அடிமை வாழ்வு வாழ்கிறது. அதன் சுதந்திர வாழ்வையும், பாரத கண்ட முழுவதிலும் பரந்து நிற்க வேண்டிய அதன் புகழையும்

குறித்துப் பார்த்திபன் கனவு கண்டு அக்கனவைச் சித்திரமாயெழுதி ஏங்கி ஏங்கி நைகின்றான். தனது ராணியாகிய அருள்மொழியையும் தன் புதல்வனாகிய விக்கிரமனையும் தன் கனவுலகைக் காணச் செய்கிறான். சுதந்திரத்தை மீட்கும் பொருட்டு நரசிம்மப் பல்லவ சக்கரவர்த்தியோடு வீரப்போர் விளைத்து மடிகிறான்... நவீனத்தின் முதலிலிருந்து கடைசி வரை தேசப்பற்று என்றும் அடிநாதமே ஒலித்துக் கொண்டிருக்கிறது" (pp.v-vi).

இதே கருத்தினை முனைவர் தா.வே. வீராசாமியும் தம் 'தமிழ் நாவல் வகைகள்' என்னும் நூலில் வேறு சொற்களில் தந்துள்ளார் :

> "விடுதலை இழந்த இந்தியாவின் நினைவைப் படிப்போர் நெஞ்சில் ஆழமாகப் பதியச் செய்யவும், விடுதலை உணர்வு தொடக்க காலத்தில் பல்வேறு துன்பங்களை அடைந்தாலும் அதனை விடாது கைக்கொள்ளவும் ஆள்வோர் நாடு கடத்தித் தன்னந்தனித் தீவுகளில் அடைபட்டாலும் தாயக விடுதலை உணர்வே கொழுந்து விட்டு எரிந்திடவும் 'பார்த்திபன் கனவு' என்ற புனைகதையைக் கல்கி படைத்தார். அதில் வீழ்த்தப்பட்ட சோழ அரசினையும் அதனைக் தன்னகத்து அடக்கிக் கொள்ள விரும்பும் பல்லவப் பேரரசையும் கொண்டு படிப்போர் நெஞ்சில் மறைந்து கிடக்கும் நாட்டுணர்வை விடுதலை பெற வேண்டும் என்ற துடிப்போடு கலக்கச் செய்தார்" (ப.163).

இங்ஙனம் நாட்டுப் பின்னணியை நயமாகக் கலந்ததால் கல்கியின் வரலாற்றுப் படைப்புக்களில் ஒருவகைத் தனிக்கவர்ச்சி அமைந்தது. பழைய வரலாற்றுப் பின்னணியை அப்படியே படம்பிடித்துக் காட்டுவது கல்கியின் நோக்கம் அன்று. மாறாகத் தாம் வாழ்ந்த அடிமைச்சூழலை மாற்றப் பழைய வரலாற்றுக் கதைகள் துணைபுரியுமா என எண்ணிப் பார்த்தார் அவர். இதன் விளைவாக, ஒல்லும் வகையெல்லாம் தம் வரலாற்று நாவல்களில் அவர் விடுதலை வேட்கையையும் நாட்டுப் பற்றையும் விரவி எழுதினார்.

பதச்சோறாக, 'பார்த்திபன் கனவு' நாவலில் சிவனடியார் வேடத்தில் இருக்கும் நரசிம்மவர்மரிடம், பார்த்திபன் தன் நீண்ட நாள் மனோரதத்தை - கனவை - வெளியிடும் இடத்தை இங்கே சுட்டிக் காட்டலாம் :

"சோழநாடு முன்னைப் போல் சுதந்திர நாடாக வேண்டும் - மகோன்னத மடைய வேண்டும்... விக்கிரமன் வீர மகனாய் வளர வேண்டும். சோழநாட்டின் மேன்மையே அவன் வாழ்க்கையின் இலட்சியமாயிருக்க வேண்டும். உயிர் பெரிதல்ல - சுகம் பெரிதல்ல - மானமும் வீரமுமே பெரியவை என்று அவனுக்குப் போதிக்க வேண்டும். அன்னியருக்குப் பணிந்து வாழும் வாழ்க்கையை அவன் வெறுக்க வேண்டும்" (பக்.61-62).

பார்த்திபன் இங்கே கேட்டிருக்கும் வரம் பழைய சோழ நாட்டுக்கு மட்டுமன்றி, கல்கி காலத்தில் 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற' பாரத நாட்டுக்கும் - ஏன், உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாட்டுக்கும் - பொருந்துவதே ஆகும்.

கல்கியின் பெருமுயற்சி

கல்கியின் வரலாற்று நாவல்களை நுண்ணிதின் ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றுள்ள பேராசிரியர் பூவண்ணன் குறிப்பிடுவது போல், "சமூக நாவலாசிரியன் ஒரு குதிரையில் சவாரி செய்பவன்; வரலாற்று நாவலாசிரியனோ, வரலாறு, கற்பனை என்னும் இரு குதிரைகளின் மீது தன் இரு கால்களை ஊன்றி நின்று, சவாரி செய்யும் வீரனைப் போன்றவன். சற்றுக் கவனக் குறைவாக இருந்தால், ஏதேனும் ஒரு குதிரை முன்னேறி, அல்லது பின்வாங்கி வீரனை வீழ்த்திவிடும்" (கல்கியின் வரலாற்று நாவல்கள், ப.10). இதனை நன்கு உணர்ந்த கல்கி, வரலாறு, கற்பனை என்னும் இரு குதிரைகளின் மீது தம் இரு கால்களை ஊன்றி நின்று, அருமையாகவும் அற்புதமாகவும் சவாரி செய்துள்ளார்; சரிவிகித உணவைப் போல் வரலாறு, கற்பனை இரண்டையும் அளவாகவும் அழகாகவும் கலந்து வரலாற்று நாவல்களாகப் படைத்துத் தந்துள்ளார்.

கல்கி தம் வரலாற்று நாவல்களைப் படைப்பதற்கு எடுத்துக் கொண்ட பெருமுயற்சி - பேருழைப்பு - இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். 'ஒரு தமிழ் மாணவன்' என்று தம்மைப் பணிவோடு கருதிக் கொண்டு பணியாற்றிய ஜி.யூ. போப்பைப் போல், கல்கியும் 'ஒரு வரலாற்று மாணவ'னைப் போல் தம்மை எண்ணிக் கொண்டு, தாம் எழுத முற்பட்ட வரலாற்று நாவல்களுக்கான குறிப்புக்களை அரிதின் முயன்று திரட்டினார்; பல்லவர், பாண்டியர், சோழர் வரலாறுகள் பற்றிப் பேராசிரியர் டி.வி. சதாசிவப்

பண்டாரத்தார், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, ஆர். கோபாலன், சி. மீனாட்சி ஆகியோர் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிய நூல்களைத் தேடிப் பிடித்து எழுத்தெண்ணிக் கற்றார்; நூல்களோடு நின்றுவிடாமல், கல்வெட்டுச் செய்திகளையும் செப்புப் பட்டயங்களையும் படித்தறிந்தார். இத்துடன் அமைதி அடையாமல், வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களுக்கு எல்லாம் அவர் நேரில் சென்று தகவல்களைத் திரட்டினார். 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்' நாவல்களுக்காக அவர் மாமல்லபுரம், அஜந்தா ஆகிய இடங்களுக்குச் சென்றார்; 'பொன்னியின் செல்வன்' நாவலுக்காக அவர் தஞ்சைக்கும் இலங்கைக்கும் பயணம் செய்தார். இவ்வளவு பாடுபட்டுப் பொறுப்புணர்வோடு எழுதியதால் அவருடைய வரலாற்று நாவல்கள் பெரும் வெற்றியைப் பெற்றன; பொதுமக்களால் மட்டுமன்றி, வரலாற்றுப் பேரறிஞர்களாலும் ஒருமனதாகப் பாராட்டப் பெற்றன. குறிப்பாக, பேராசிரியர் கே.வி. ரங்கசாமி அய்யங்கார், "எனது நீண்ட வாழ்க்கையில் நூற்றுக்கணக்கான வரலாற்று நாவல்களைப் படித்திருக்கிறேன். அதன் மூலம் தரமான சிறந்த நூல்களின் பண்புகள் பற்றி அறிவேன். என்னைப் பொறுத்தவரையில் பார்த்திபன் கனவு, அவற்றுள் பெரும்பாலானவற்றைப் பெற்றுள்ளது" என்றும், "நுணுகி ஆராய்ந்தபோது இந்த நாவலில் (சிவகாமியின் சபதம்) வரலாற்றுப் பிழை, நிலநூற் பிழை ஒன்றேனும் காணமுடியவில்லை" (முன்னுரை, சிவகாமியின் சபதம், ப. i & vii) என்றும் கல்கியின் முதல் இரு வரலாற்று நாவல்களைக் குறித்து வழங்கியுள்ள பாராட்டுரைகளை இங்கே சுட்டிக் காட்டலாம். இப் பாராட்டு மொழிகளைப் பெற்ற போது, "பார்த்திபனுடைய புதல்வன் விக்கிரமன் சுதந்திரச் சோழ நாட்டுச் சிம்மாசனம் ஏறியபோது அடைந்த மகிழ்ச்சியை நானும் அடைந்தேன்" என்று மனம் மகிழ்ந்தும், நெகிழ்ந்தும் கூறினார் கல்கி (சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.559).

கல்கியின் மொழிநடை

சுவையான கதைப் பின்னலாலும் உயிர்க்களையான பாத்திரப் படைப்பாலும் மட்டுமன்றி, திறமான தமிழ்-நடையாலும் கல்கியின் வரலாற்று நாவல்கள் பல்லாயிரக்-கணக்கான வாசகர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டன என்றால் அக்கூற்று மிகை ஆகாது. சுருங்கக் கூறின், அவரது தமிழ்நடை 'கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும்

களிப்'பாக விளங்கியது. "ஆசிரியரது தமிழ்நடை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. உயிர்த் தத்துவத்தோடு வழங்கி வருஞ் சொற்களே இவரால் கையாளப்படுகின்றன. தூய தமிழ்ச் சொற்களைத் துருவித் தேடுவதுமில்லை; வடமொழிச் சொற்களென்று தூர விலகியோடுவதுமில்லை. மிகத் தெளிவான நடை; உணர்ச்சி ததும்பும் நடை; வாசகர்களை உடன்கொண்டு செல்லும் நடை; சந்தர்ப்பத்திற்கும் பாத்திரங்களுக்கும் தக்க நடை; இக்காலத்துள்ள வசனகர்த்தாக்களுள் முன்னணியில் நிற்பவர் இவ்வாசிரியர் "(p.viii) எனப் 'பார்த்திபன் கனவு' நாவலுக்கு எழுதிய முன்னுரையில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கல்கியின் தமிழ்நடைக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். மலாயாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் தனிநாயக அடிகளாரும் கல்கியின் வரலாற்று நாவல்களைப் பற்றிய தம் கட்டுரை ஒன்றில், "கல்கியின் நடை ஐம்பொறிகளுக்கும் இயல்பூக்கங்களுக்கும் அடி உள்ளத்துக்கும் விருந்தாகும் நடை; ஏட்டு நடையைக் கைவிட்டுச் சொல்லாடல் மொழியை மிருதுவாக்கும் நல்ல மெல்லிய நடை; உணர்ச்சியைத் தெளிவாக்கும் நடை; உள்ளத்தை வெளியாக்கும் நடை; உலகில் உழப்போர்க்குச் செல்வம் பயக்கும் நடை... அவர் கையாளும் சொற்கள் அனுபவங்களையும் தெளிவுறச் செய்யும் சொற்கள்" (கா.பொ. இரத்தினம் [பதிப்பாசிரியர்], எழுத்தாளர் கல்கி, பக்.86-87) என்று அவரது நடையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார். இவ்விரு தமிழறிஞர்களின் கருத்துக்களை மெய்ப்பிக்கும் வண்ணம் கல்கியின் வரலாற்று நாவல்களில் இருந்து ஓரிரு சான்றுகளை இங்கே காண்போம்.

'பார்த்திபன் கனவு' நாவலின் இரண்டாம் பாகத் தொடக்கத்தில் ஒரு மனோகரமான அதிகாலை நேரம் கல்கியின் கை வண்ணத்தில் எப்படிக் கலை நயத்தோடு காட்சியளிக்கிறது பாருங்கள் :

> "பொழுது புலர இன்னும் அரை ஜாமப் பொழுது இருக்கும். கீழ் வானத்தில் காலைப் பிறையும் விடிவெள்ளியும் அருகருகே ஒளிர்ந்து கொண்டிருந்தன. உச்சி வானத்தில் வைரங்களை வாரி இறைத்தது போல் நட்சத்திரங்கள் பிரகாசித்தன. வடக்கே ஸப்த ரிஷி மண்டலம் அலங்காரக் கோலம் போட்டது போல் காட்சியளித்தது. தெற்கு மூலையில் சுவாதி நட்சத்திரம் விசேஷ சோபையுடன் தனி அரசு புரிந்தது" (ப.64)

தூய தமிழ்ச் சொற்களைத் துருவித் தேடித் திரியாமல், வடமொழிச் சொற்கள் என்று தூர விலகி ஓடவும் செய்யாமல் இங்கே தாம் தீட்டும் இயற்கைக் காட்சிக்கு ஏற்ற கவின்மிகு சொற்களைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார் கல்கி.

இனி, உணர்ச்சி ததும்பும் நடைக்கு - சூழலுக்கும் பாத்திரத்திற்கும் ஏற்ற தெளிவான நடைக்கு - 'சிவகாமியின் சபதம்' நாவலில் இருந்து ஓர் இடத்தை இங்கே எடுத்துக்காட்டலாம் :

> "சிவகாமி அவ்விதம் சுழன்றாடிய போது பார்த்துக் கொண்டிருந்தவர்களின் கண்கள் சுழன்றன; அரங்க மேடையும் அகல் விளக்குகளும் சுழன்றன. கோயில் சுழன்றது; கோபுரங்கள் சுழன்றன; தூங்கானை மடத்துத் தங்க ஸ்தூபி சுழன்றது; வானமும் பூமியும் கீழ் மேலாகச் சுழன்றன; சந்திரனும் நட்சத்திர மண்டலங்களும் சுழன்று சுழன்று வந்தன" (ப.407).

- மண்டபப்பட்டுக் கிராமத்துச் சிவன் கோயில் வளாகத்தில் பம்பரம் போலச் சுழன்று நடனம் ஆடும் சிவகாமியை நம் மனக்கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தவல்ல அற்புதமான படப்பிடிப்பு இது!

முத்தாய்ப்பாக, 'வாசகர்களை உடன்கொண்டு செல்லும்' கல்கியின் நடைத்திறனுக்குப் 'பொன்னியின் செல்வன்' நாவலில் இருந்து ஓர் உதாரணம் இதோ :

> "அது என்ன சலசலப்புச் சத்தம்? அந்த மரத்தின் மேல் தெரியும் அந்தக் கரிய உருவம் என்ன? அந்தப் புதரின் இருளில் இரண்டு சிறிய ஒளிப் பொட்டுக்கள் மின்னுகின்றனவே, அவை என்னவாயிருக்கும்?
>
> வந்தியத் தேவனுடைய கால்கள் அவனை அறியாமல் நடுங்கின. சரி! சரி! இங்கே என்ன நமக்கு வேலை? எதற்காக இங்கே வந்தோம்? என்ன அறிவீனம்? உடனே இறங்கிப் போய்விட வேண்டியதுதான்.
>
> இறங்கலாம் என்று எண்ணித் திரும்ப யத்தனித்த தருணத்தில் ஒரு குரல் கேட்டது. நெஞ்சைப் பிளக்கும் குரல்; பெண்ணின் குரல். ஒரு விம்மல் சத்தம். பிறகு இந்தப் பாடல் :
>
> "அலைகடலும் ஓய்ந்திருக்க
> அகக்கடல்தான் பொங்குவதேன்?

நிலமகளும் துயிலுகையில்
நெஞ்சகந்தான் விம்முவதேன்?...''

(இரண்டாம் பாகம், ப.43)

- கேட்பவரின் உடலையும் உள்ளத்தையும் சிலிர்க்க வைக்கும் இந்தச் சோக கீதத்தைப் பாடுபவள் 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் சமுத்திர குமாரி பூங்குழலி.

'வரலாற்று நாவல் உலகில் ஒரு குறிஞ்சி மலர்'

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் சிறப்பியல்பினைப் பெற்றது குறிஞ்சி மலர்; அது போல், பன்னிரண்டு ஆண்டுக் காலம் படைப்பாளரின் உள்ளத்தில் குடியிருந்து, தக்க தருணம் வந்ததும் உருவும் உணர்வும் பெற்று வெளிவந்த நல்லதோர் கலைப் படைப்பு - மாபெரும் உரைநடைக் காப்பியம் - 'சிவகாமியின் சபதம்'. அதன் முன்னுரையில் இடம்பெறும் பின்வரும் வரிகளில் ஆசிரியர் தம் உள்ளத்தை அழகுறத் திறந்து காட்டியுள்ளார்:

> ''... இவ்வளவு பாரத்தையும் ஏறக்குறையப் பன்னிரண்டு வருஷ காலம் என் உள்ளத்தில் தாங்கிக் கொண்டிருந்தேன். 'சிவகாமியின் சபத'த்தில் கடைசிப் பக்கம், கடைசி அத்தியாயம், கடைசி வரியை எழுதி 'முற்றும்' என்று கொட்டை எழுத்தில் போட்ட பிறகு தான் பன்னிரண்டு ஆண்டுகளாக நான் சுமந்து கொண்டிருந்த பாரம் என் அகத்திலிருந்து நீங்கியது.
>
> மகேந்திரரும் மாமல்லரும் ஆயனரும் சிவகாமியும் பரஞ்சோதியும் பார்த்திபனும் விக்கிரமனும் குந்தவியும் மற்றும் பல கதாபாத்திரங்களும் என் நெஞ்சிலிருந்து கீழிறங்கி, 'போய் வருகிறோம்' என்று அருமையோடு சொல்லி விடை பெற்றுக் கொண்டு சென்றார்கள்.''
>
> ('ஆசிரியன் முன்னுரை',
> சிவகாமியின் சபதம், பக்.7-8)

'மண்ணுக்கு மரம் பாரமா? மரத்துக்கு இலை பாரமா? கொடிக்குக் காய் பாரமா? பெற்றெடுத்த குழந்தை தாய்க்குப் பாரமா?' ஆம், ஒரு படைப்பாளி தன் நெஞ்சில் பாத்திரங்களைச் சுமப்பது என்பது 'பாசமான பாரம்'தான்; 'சுகமான சுமை'தான்!

'சிவகாமியின் சபதம்' நாவலின் பாவிகம்

'தமிழர்கள் காலமெலாம் படித்து அனுபவிக்க வேண்டிய கலைச்செல்வம்' என்று 'சிவகாமியின் சபதம்' நாவலைப் போற்றிக் கூறும் முனைவர் எழில் முதல்வன், அதன் தனிப் பெருஞ் சிறப்புகளாக நெஞ்சை அள்ளும் சிலம்பின் பாவிகம் போல் மூன்று முத்தான கருத்துக்களைப் பட்டியலிடுகின்றார். அவை வருமாறு :

> "என் பார்வையில்இது ('சிவகாமியின் சபதம்') ஒரு புதிய ராமாயணமாய்த் தெரிகிறது; ஒரு யாத்திரிகனின் முன்னேற்றமாகத் (Pilgrim's Progress) தெரிகிறது; இரு நகரங்களின் கதை (Tale of Two Cities) யாகத் தெரிகிறது" (புனைகதை வளம், ப.26).

1. இராமாயணத்தைப் பழைய வியாக்யானக்காரர்கள் 'சிறையிருந்த செல்வியின் ஏற்றம் கூறுவது' என்று சொல்லுவர். இக் கூற்று 'சிவகாமியின் சபதம்' நாவலுக்கும் பொருந்தி வருவதாகும். ஏனெனில், புலிகேசியால் சிறை வைக்கப்பட்ட சிவகாமியின் பெருமையைத்தான் கல்கி இந்நாவலில் பேசியிருக்கிறார். 'சிதா பிராட்டி' என்பது போல் 'சிவகாமி தேவி' என அவர் சிவகாமியைச் சுட்டுவதும் மனங்கொள்ளத்-தக்கதாகும். சுந்தர காண்டத்தில் சீதாபிராட்டியும், 'சிவகாமியின் சபதம்' நாவலின் இறுதி இரண்டு பாகங்களில் சிவகாமியும் ஒன்று போலவே - 'கண்ணீர் வரைந்த ஓவியங்க'ளாகவே - காட்சியளிக்கின்றனர். "இராவணன் கவர்ந்து சென்று அசோக வனத்தில் சிறை வைத்த சீதாதேவியின் நினைவு சிவகாமிக்கு அடிக்கடி வந்தது. சீதையின் நிலைமைதான் தன்னுடைய நிலைமையும். இராமபிரான் இராவணனை வென்று சீதையைச் சிறை மீட்டுக் கொண்டு போனது போல் மாமல்லர் ஒரு நாள் வந்து இந்தப் பாதகப் புலிகேசியை வென்று தன்னை சிறை மீட்டுக் கொண்டு போகப் போகிறார்!" (சிவகாமியின் சபதம், ப.700) என்றே வாதாபியில் புலிகேசியால் சிறை வைக்கப்பட்டிருக்கும் சிவகாமி நம்புகிறாள். மேலும் அவள் ஆவேசம் ததும்பும் குரலில் புத்த பிக்ஷுவை நோக்கிச் செய்யும் சபதம் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது :

> "அடிகளே! கேளுங்கள். இந்த வாதாபி நகரத்தை விட்டு நான் எப்போது கிளம்புவேன், தெரியுமா?

பயங்கொள்ளி என்று நீங்கள் அவதூறு சொல்லிய வீர மாமல்லர் ஒருநாள் இந்நகர் மீது படையெடுத்து வருவார். நரிக்கூட்டத்தின் மீது பாயும் சிங்கத்தைப் போலச் சளுக்கிய சைனியத்தைச் சின்னாபின்னம் செய்வார். நாற்சந்தி மூலைகளில் என்னை நடனம் ஆடச் செய்த பாதகப் புலிகேசியை யமன் உலகத்துக்கு அனுப்புவார். தமிழகத்து ஸ்திரீ புருஷர்களைக் கையைக் கட்டி ஊர்வலம் விட்ட வீதிகளில் இரத்த ஆறு ஓடும். அவர்களை நிறுத்திச் சாட்டையால் அடித்த நாற்சந்திகளிலே வாதாபி மக்களின் பிரேதங்கள் நாதியற்றுக் கிடக்கும். இந்தச் சளுக்கர் தலைநகரின் மாடமாளிகை, கூட கோபுரங்கள் எரிந்து சாம்பலாகும். இந்த நகரம் சுடுகாடாகும். அந்தக் காட்சியை என் கண்ணால் பார்த்துவிட்டுப் பிறகுதான் இந்த ஊரை விட்டுக் கிளம்புவேன். சளுக்கப் பதர்களை வென்று வெற்றி மாலை சூடிய மாமல்லர் என் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவதற்கு வருவார். அப்போதுதான் புறப்படுவேன் நீர் அனுப்பிப் போக மாட்டேன். பல்லக்கில் ஏற்றி அனுப்பினாலும் போகமாட்டேன். யானை மீது அனுப்பினாலும் போக மாட்டேன்!" (பக்.723-724).

சிவகாமியின் இந்த வஞ்சினத்தைப் படிக்கும் போது நமக்கு இராமாயணத்தில் சீதை கூறும் வஞ்சினம் நினைவிற்கு வருகின்றது.

"எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினாற் சுடுவேன்; அது, தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்"

(சுந்தர காண்டம், சூடாமணிப் படலம், 18)

என்னும் சீதையின் கூற்று சிவகாமியின் மேற்குறித்த கூற்றுடன் ஒப்புநோக்கத்தக்கதாகும். இங்ஙனம் கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாவலில் கம்பராமாயணத்தின் தாக்கம் ஆழமாகப் பதிந்துள்ளது. நிகழ்ச்சிப் பின்னலிலும் சரி, பாத்திரப் படைப்பிலும் சரி பற்பல இடங்களில் கல்கிக்குக் கம்பரின் இராமாயணம் தூண்டுகோலாக விளங்குகின்றது.

2. நாவலின் தொடக்கத்தில் பரஞ்சோதியைக் காஞ்சி மாநகரை நோக்கிச் செல்லும் ஓர் எளிய இளைஞனாக-கட்டான உடலும் களையான முகமும் கொண்ட பதினெட்டு

வயது ஆன ஓர் இளம்பிள்ளையாக - காண்கிறோம். நாவலின் இறுதிப் பகுதியில் - நான்காம் பாகத்தில் - அந்த இளைஞனே 'சிறுத்தொண்டர்' என்னும் மெய்த் தொண்டராக வாழ்வில் ஓங்கி உயர்வதை - விசுவரூபம் எடுப்பதை - தரிசிக்கிறோம். இவ்வகையில் பார்க்கும்போது, 'சிவகாமியின் சபதம்', 'ஒரு யாத்திரிகனின் முன்னேற்றம்' போலக் காட்சியளிக்கின்றது. நாவலின் முதல் பாகத்திற்குப் 'பரஞ்சோதி யாத்திரை' என்று கல்கி பெயர் வைத்திருப்பதும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

3. 'சிவகாமியின் சபதம்' நாவலின் முக்கிய நிகழ்ச்சிகள் அனைத்தும் காஞ்சி, வாதாபி என்ற இரு பெரு நகரங்களையே சுற்றிச் சுழல்கின்றன. எனவே, இந் நாவலை 'இருநகரங்களின் கதை' என்று சுட்டுவதில் தவறில்லை அல்லவா?

ஒருமைப்பாடும் கட்டுக்கோப்பும்

'சிவகாமியின் சபதம்' நாவலில் கல்கியின் அளப்பரிய படைப்புத் திறன் தொட்ட இடமெல்லாம் துலங்கக் காண்கிறோம். ஒரு பரந்து பட்ட களத்தை உருவாக்கி, பல்வேறுபட்ட பாத்திரங்களை அதன் இடையே உலவவிட்டு, ஊடும் பாவுமாக நிகழ்ச்சிகளைப் பின்னி, நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்க்க வைக்கும் வண்ணம் காட்சிகளைத் தீட்டிக் காட்டுவதுடன் நில்லாமல், தம்முடைய படைப்பில் எந்த இடத்திலும் ஒரு சிறு பிசிறும் தட்டாமல், ஒருமைப்பாடும் கட்டுக்கோப்பும் விளங்கக் கதையை முடித்திருக்கிறாரே, அது எண்ணும்போதெல்லாம் நம்மை வியப்பில் விளிம்பிற்கே கொண்டு செல்கின்றது. நாவலின் கதை ஓட்டத்தைப் பொறுத்தவரையில், பின்னப்படாமல் தனித்துத் தொங்கும் நிகழ்ச்சிச் சரடு ஒன்றினைக் கூட எவ்வளவு தேடினாலும் காணமுடியாது. 'சிவகாமியின் சபத'த்தின் ஒருமைப்பாடும் கட்டுக்கோப்பும் பற்றி இதுபோல் எப்படிப் புகழ்ந்தாலும் - எவ்வளவு புகழ்ந்தாலும் - தகும்.

நெஞ்சில் வாழும் கற்பனை மாந்தர்கள்

'சிவகாமியின் சபதம்' நாவலில் எத்தனையோ கதைமாந்தர்கள் வருகின்றனர்; அவர்களுள் ஒரு சிலர் உண்மையான வரலாற்று மாந்தர்களாகவும் உள்ளனர்; இன்னும் சிலர் கற்பனை மாந்தர்களாகவும் உள்ளனர். வரலாற்று மாந்தராயினும் சரி, கற்பனை மாந்தராயினும் சரி, கல்கி படைத்துத் தந்துள்ள கதைமாந்தர்கள், இன்று நாவல்கள்

கற்ற மக்களின் மனத்தில் நிலையாக வாழ்ந்து கொண்டி-ருக்கிறார்கள். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், கல்கி தம் நாவல்களில் படைத்துள்ள உண்மையான வரலாற்று நாயகர்களான பல்லவ மன்னர்களையும் சோழ மன்னர்களையும் விடவும் நிலைபேறு உடையவர்களாகவும் சிறப்புக்கு உரியவர்களாகவும் அவர் படைத்துள்ள கற்பனை மாந்தர்கள் இன்று படிப்பவர்களின் நெஞ்சில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்குக் கல்கியின் கற்பனை, ஆற்றல் உடையதாக அமைந்தது எனலாம். எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டின் புகழ்பெற்ற சிற்பக் கலைக்கூடமாக விளங்கும் மாமல்லபுரத்தை - இன்றைய மகாபலிபுரத்தை - சென்று பார்ப்பவர்கள், கல்கியின் 'சிவகாமியின் சபதம்' நாவல் படித்தவர்களாக இருந்தால், அவர்கள் தவறாமல் ஆயனச் சிற்பியையும் அவருடைய அருமை மகள் சிவகாமியையும் நினைக்கிறார்கள்; அவர்களை உண்மையாக வாழ்ந்த வரலாற்று மாந்தர்கள் என்று எண்ணி, மாமல்லபுரத்தில் அவர்கள் வாழ்ந்த இடங்களை நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து நிற்கிறார்கள்; பல்லவ மன்னர்களையும் மறந்து அந்தக் கற்பனை மாந்தர்களை மனமாரப் பாராட்டிப் போற்றுகிறார்கள்.

சிவகாமியின் வாழ்க்கை முடிவு

'சிவகாமியின் சபத'த்தில் விளங்கும் கல்கியின் பாத்திரப் படைப்புத் திறனைக் காட்டுவதற்கு, சிவகாமி பாத்திரப் படைப்பு ஒன்று போதும். கதையோட்டத்தைப் பொறுத்த வரையில், 'பொன்னியின் செல்வ'னில் இருப்பது போல், 'சிவகாமியின் சபத'த்தில் அவ்வளவு சிக்கல்கள் இல்லை; ஆயினும், சிவகாமி என்ற கலையரசி - சிற்பியின் மகள் - ஒருத்தியின் வாழ்வும் வளர்ச்சியும் அவலமும் போராட்டமும் குறிக்கோளும் சபதமும் நாவலின் தரத்தைப் பன்மடங்கு உயர்த்தப் போதுமானவையாக உள்ளன. நாட்டியக் கலையில் நிகரற்று விளங்கிய அவளுடைய கலைத்திறமை அவ்வப்போது அரசியல் போராட்டங்களில் சிக்குண்டு அல்லல் உறுவதைக் காணும் போது, நாவலைப் படிப்பவர்களின் நெஞ்சம் துன்புற்றுத் துடிக்கிறது. ஆயினும், "உயர்ந்தனவே எண்ணி, உயர்ந்தனவே செய்து முடிக்கும் அவளுடைய வாழ்வு, படிப்பவர்களின் உள்ளத்தையும் உயர்த்திவிடுகிறது" (மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 274). தான் செய்த சபதத்தில் வென்று, கொண்ட காதலில் தோற்ற சிவகாமி,

ஏகாம்பரநாதரையே தன் பதியாக ஏற்றுக்கொண்டு, தோல்வியையே வெற்றியாக மாற்றிக் கொண்ட முடிவு, கல்கி தம் பாத்திரங்களுக்கு அளித்துள்ள முடிவுகளில் எல்லாம் மிகமிகச் சிறந்த ஒன்றாகும். 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்னும் நாவுக்கரசர் பாடலின் கடைசி வரியையே வாழ்க்கையாக வரித்துக் கொண்ட இந்த முடிவால் சிவகாமி படிப்போரின் இதய சிம்மாசனத்தில் என்றென்றும் கொலு வீற்றிருக்கும் நிலையான இடத்தைப் பெற்றுவிடுகிறாள்.

அரும்பு-போது-மலர்

வரலாற்று நாவல் எழுதியதில் 'பார்த்திபன் கனவு' கல்கியின் முதல் முயற்சி. ஆதலின் அவர் படைப்புத் திறமை அதில் மொட்டாக இருந்தது. அதைத் தொடர்ந்து 'சிவகாமியின் சபதம்' எழுதப்பட்டதால், அது 'பார்த்திபன் கன'வை விட இரண்டு பங்கு வளர்ந்தது. இதில் அவரது திறமை மெல்ல விரிந்து போது ஆயிற்று. இதற்குப் பிறகு வெளியான 'பொன்னியின் செல்வன்', 'சிவகாமியின் சபத'த்தை விட இரு மடங்காகப் பெருகியது. இதில் கல்கியின் முழுத்திறமையும் நன்றாக மலர்ந்து மணம் வீசியது; கூடவே, மிகப் பரந்துபட்ட கதையமைப்பைப் பெற்றிருந்தால், இதில் ஓரிரு குறைபாடுகளும் சேர்ந்துவிட்டன. மலாயா பல்கலைக்கழகப் பேராசிரியர் ஈ.ச. விசுவநாதன் சுட்டிக் காட்டுவதைப் போல், "'பொன்னியின் செல்வ'னின் கதையமைப்பு சோழப் பேரரசு போலவே பரந்து விரிந்துள்ளது. கதைப் போக்கில் அமைந்துள்ள சிக்கலோ சோழனுக்கும், இராசராசனுக்கும் இடையில் உள்ள சோழர் வரலாறு போலவே சிக்கலாக அமைந்துள்ளது. கதையும் இந்தச் சிக்கலான காலத்தைத் தழுவியே அமைந்துள்ளது" (கட்டுரை மலர், ப.110).

இன்னொன்று : இந்நாவலில் வரும் வந்தியத்தேவன் ஒரு துணைமாந்தனே. அருள்மொழிவர்மரே தலைமைமாந்தர்; 'பொன்னியின் செல்வன்' என்ற நாவல் தலைப்பும் அவரைச் சுட்டுவதே. என்றாலும், வந்தியத்தேவன், தன் வீர தீரச் செயல்களால் மெல்ல மெல்ல வளர்ந்து, முதல் பக்கத்தில் இருந்து முடிவுப் பக்கம் வரை ஆதிக்கம் செலுத்துகிறான். அவனை உருவாக்கிய கல்கியே, அவன் திறமையிலே மயங்கி, நாவலின் இரண்டாம் பாகத்திலேயே அவனைத் தலைமை மாந்தனாக ஒப்புக்கொண்டு, 'நம் கதாநாயகனான வந்தியத்தேவன்' என்று அறிவிப்பும் செய்கிறார். பாத்திரப்

படைப்பைப் பொறுத்த வரையில் இது கல்கிக்கு நேர்ந்த ஒரு தோல்வி; அவரது கதைமாந்தருக்குக் கிடைத்த பெருவெற்றி.

மூன்றாவதாக, நந்தினியின் தந்தை யார், ஆதித்த கரிகாலனின் மரணம் யாரால் நேர்ந்தது என்று இரண்டு புதிர்களும் விடுபடாத நிலையிலேயே 'பொன்னியின் செல்வன்' நாவல் முடிவடைந்துள்ளது. இவ்விரண்டு புதிர்களும் விடுபடாத நிலையில், பேராசிரியர் பூவண்ணன் சுட்டிக்காட்டுவது போல், "கலசம் இல்லாத கோபுரம் போலக் குறையுடையதாகத் திகழ்கிறது" 'பொன்னியின் செல்வன்' (கல்கியின் வரலாற்று நாவல்கள், ப. 139).

இவை கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலில் காணப்படும் ஒருசில குறைகள். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடும் போது' இக்குறைகள் எல்லாம் வெயிலிடை வைத்த விளக்கைப் போல் மங்கிப் போய்விடு-கின்றன.

ஆறு பெண் பாத்திரங்களின் அணிவகுப்பு

'பொன்னியின் செல்வன்' நாவலில் அணிவகுத்து நிற்கும் பெண் பாத்திரங்கள் ஆறு. இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையில் உயிர்க்களையுடனும் தனித்தன்மை விளங்குமாறும் திறம்படப் படைத்துக் காட்டியுள்ளார் கல்கி. சோழப் பேரரசினைக் கட்டிக் காக்கத் துணைநிற்கும் குந்தவை தேவி, அப்பேரரசை அழித்தொழிப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் அழகு மோகினி நந்தினி, 'பொன்னியின் செல்வ'னைக் காக்கும் தெய்வமாக மிளிரும் ஊமைராணி மாந்தாகினி ஆகிய மூவரும் நாவலைப் படிப்பவர் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவர்கள். இனிய குரலும் எழில் உருவமும் பெற்ற சமுத்திரகுமாரி பூங்குழலியும், வந்தியத் தேவனைக் கண்டதும் காதல் கொண்ட பேதைப் பெண் மணிமேகலையும், குந்தவையின் உயிர்த்தோழியான வானதியும் மேற்கூறிய பெண் பாத்திரங்களுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணத்-தக்கவர்கள். இந்த ஆறு பெண் பாத்திரங்களில் குந்தவை, நந்தினி, மணிமேகலை ஆகிய மூவரும் வந்தியத் தேவனைக் காதலிக்கின்றனர். இதில் குந்தவையே வெற்றி பெறுகின்றாள்; நந்தினி தன் ஆசைக்கு அணைபோட்டு விடுகின்றாள்; மணிமேகலையோ அந்த ஆசையில் தன்னைக் கரைத்துக் கொள்கின்றாள். குந்தவை சோழப் பேரரசை உருவாக்கும் சூத்திரதாரியாக அமைகின்றாள். நந்தினி 'சிவகாமியின்

சபத'த்தில் வரும் நாகநந்தியைப் போல் வஞ்ச மகளாய் நடமாடுகின்றாள். அரசியல் சூதாட்டத்தில் வெற்றி பெறும் மங்கையாகக் குந்தவையும், தோற்றோடும் காரிகையாக நந்தினியும் விளங்குகின்றனர். இங்ஙனம் நாவலில் இருவருமே தனித்தனியான ஓர் அபூர்வ சக்தி - ஆளும் சக்தி - படைத்தவர்களாக விளங்குகின்றனர்; என்றாலும், இருவருக்கும் இடையே நுட்பமான வேறுபாடும் காணப்படுகின்றது. இதோ, கல்கியின் சொற்களிலேயே அதனைக் காண்போம்:

> "ஒருவன் நரகத்தில் விழப்போகிறவனாயிருந்தால், அவனைத் தடுத்து நிறுத்திக் குந்தவை தேவி சொர்க்கத்துக்கு அவனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார். அது ஒருவித சக்தி. நந்தினி என்ன செய்வாள் தெரியுமா? அவளுடைய சக்தி இன்னும் ஒரு படி மேலானது என்றே சொல்ல வேண்டும். நரகத்தையே சொர்க்கம் என்று சொல்லிச் சாதித்து அதை நம்பும் படியும் செய்து, நரகத்தில் சந்தோஷமாகக் குதிக்கும்படி செய்துவிடுவாள்!"
>
> (பொன்னியின் செல்வன், இரண்டாம் பாகம், ப. 204)

பிறிதோர் இடத்தில், "காசிப்பட்டின் மென்மையும், கள்ளின் போதையும், காட்டுத் தேனின் இனிப்பும், கார்காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண்ணின் குரலில் கலந்திருக்க முடியுமா? ... அவ்விதம் இதோ கலந்திருக்கிறனவே!" (பொன்னியின் செல்வன், முதல் பாகம். ப.160) என்று பழுவூர் இளையராணி நந்தினியின் குரல் இனிமையச் சுந்தரச் சொற்களால் பதிவு செய்திருக்கிறார் கல்கி. காசிப்பட்டின் மென்மை, கள்ளின் போதை, காட்டுத் தேனின் இனிப்பு, கார் காலத்து மின்னலின் ஜொலிப்பு - இவை நான்கும் நந்தியினின் குரலில் மட்டும் அல்ல, கல்கியின் தமிழிலும் கலந்திருக்கக் காண்கின்றோம்.

அருள்மொழிவர்மரின் ஒப்பற்ற தியாகம்

அருள்மொழிவர்மர் பெயருக்கு ஏற்ற அருள் உள்ளம் வாய்ந்தவர்; எல்லோர்க்கும் நல்லவர்; எதையும் செய்ய வல்லவர்; பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர், பகைவர், பொதுமக்கள் ஆகிய அனைவரின் அன்புக்கும் பாசத்துக்கும் பாத்திரமானவர். குறிப்பாக, அவர் தமது தமக்கை

குந்தவையிடம் தனித்த பாசம் கொண்டவர்; வந்தியத்தேவனை உயிர் நண்பராகப் பெற்றவர். அவரது அனைத்து நற்செயல்களுக்கும் பண்புகளுக்கும் சிகரமாக அமைவது, அவர் தமக்கு அளிக்கப்பட்ட அரசை, தமது சிறிய தந்தையாரான மதுராந்தகருக்குத் (சேந்தன் அமுதன்) தியாகம் செய்வது ஆகும். ஆயின், மதுராந்தகர் அரசராவதை யாரும் விரும்பவில்லை. இந்நிலையில் அருள்மொழிவர்மர் தாமே அரசராவதற்கு இசைகிறார். முடி சூட்டும் நேரத்தில் அவர் ஆற்றும் உரை - அவரது மிக உயர்ந்த உள்ளத்தை - இலட்சியத்தை - புலப்படுத்துகின்றது :

> "... இந்தக் கிரீடம் இப்போது என் உடைமை ஆகிவிட்டது. என் உடைமையை நான் என் இஷ்டம் போல் உபயோகிக்கும் உரிமையும் உண்டு அல்லவா?"

(பொன்னியின் செல்வன், ஐந்தாம் பாகம், ப.684)

என்று கேட்டு மதுராந்தகரின் தலையில் சோழநாட்டு மணிமகுடத்தைச் சூட்டிவிடுகிறார் அருள்மொழிவர்மர்

அரசியல் அதிகாரிகளும் மக்களும் அருள்மொழிவர்மரின் ஒப்பற்ற தியாகத்தை உயர்வாகப் பாராட்டுகிறார்கள். இந்தத் தியாகச் செயலின் சிறப்பைப் பற்றிக் கல்கியே 'பொன்னியின் செல்வன்' நாவலுக்கு எழுதிய முடிவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> "உலகச் சரித்திரத்திலும், காவிய இதிகாசங்களிலும் இதற்கு ஒப்பான இன்னொரு அரும்பெரும் செயலைக் காணுதல் அரிது.
>
> அசோக சக்கரவர்த்தி கலிங்க நாட்டுப் போரில் மகத்தான வெற்றி அடைந்த பிறகு, 'இனி யுத்தமே வேண்டாம்' என்று முடிவு செய்வதைத் தான் அருள்மொழிவர்மனின் தியாகத்துக்கு இணையாகக் கூறலாம்.
>
> 'பொன்னியின் செல்வன்' கதையில் சிகரமான சம்பவம் அருள்மொழிவர்மனின் ஒப்பற்ற தியாக-மேயாகும். கதையில் வரும் சகல நிகழ்ச்சிகளும் இந்த மகத்தான சம்பவத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கின்றன"

(ஐந்தாம் பாகம், 'முடிவுரை', ப.731)

அரிதினும் அரிய இந்த நிகழ்ச்சி இடம்பெறும் ஐந்தாம் பாகத்திற்குக் கல்கி சூட்டியிருக்கும் பெயர் 'தியாக சிகரம்' என்பதாகும்.

'படிக்கும் போதெல்லாம் பாடாய்ப் படுத்துகின்றார்'

'பொன்னியின் செல்வன்' தொடர்கதையாய்க் 'கல்கி' இதழில் வெளிவந்து கொண்டிருந்த போது, விழுப்புரத்தில் உள்ள மகாத்மா காந்தி பாடசாலையில் கல்கிக்கு அளித்த வரவேற்பு மடலில் இடம்பெற்ற பாடல் இது:

"பொன்னியின் செல்வனும்
பூங்குழலி அம்மையும்
வந்தியத் தேவனும்
வானதியும் குந்தவையும்
பழுவூர் நந்தினியும்
பழுவேட் டரையர்களும்
பாடாய்ப் படுத்துகின்றார்
படிக்கும் போதெல்லாம்"

(மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப. 731)

- 'பொன்னியின் செல்வன்' நாவல் மக்கள் மத்தியிலே பெற்றிருந்த தனிப்பெருஞ்செல்வாக்கை உணர்வதற்கு இந்த ஒரு சான்றே போதுமானதாகும்.

இதுவரை, கல்கியின் கைவண்ணம் அவரது மூன்று வரலாற்று நாவல்களில் வெளிப்பட்டிருக்கும் பாங்கினை விரிவாகக் கண்டோம். இனி, ஒரு பறவைப் பார்வையில் அவரது சமூக நாவல்களின் சிறப்பும் சீர்மையும் குறித்துக் காண்போம்.

சமூக நாவல்களின் வரிசையில், கல்கியின் முத்திரை அழுத்தமாகவும் ஆழமாகவும் பதிந்திருக்கும் நாவல் 'அலை ஓசை'யே. அவருக்கு இந்தியாவின் மிக உயரிய விருதான சாகித்திய அகாதெமி பரிசினைத் தேடித் தந்த படைப்பும் அதுவே ஆகும். இது தவிர இன்னொரு சிறப்பும் 'அலை ஓசை'க்கு உண்டு. 1964-ஆம் ஆண்டில் அந்நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியான போது, நான்கே நாட்களில் ஐம்பதாயிரம் படிகள் விற்பனை ஆயினவாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கல்கியின் உள்ளத்திலேயே 'அலை ஓசை' நாவல் ஒரு தனியிடத்தினைப் பெற்றிருந்தது.

'நிலைத்து நிற்கத் தகுதியுடைய நூல்'

கல்கி தமது பல்வேறு நூல்களுக்குள்ளே பல்லாண்டுக் காலம் நிலைத்து நிற்குத் தகுதி படைத்ததாகவும், தலைசிறந்த படைப்பாகவும் கருதியது 'அலை ஓசை'யைத் தான். இக் கருத்தினை, "நான் எழுதிய நூல்களுக்குள்ளே ஏதாவது ஒன்று ஐம்பது அல்லது நூறு வருஷம் நிலைத்து நிற்கத் தகுதியுடையதென்றால், அது 'அலைஓசை' தான் என்ற எண்ணம் படிக்கும்போதே உள்ளத்தில் தானாக உதயமாயிற்று" (பக்.vii-viii) என்றும், "இந்த 'அலை ஓசை' என்னும் நூலை மிக்க பணிவுடனும் பெருமிதத்துடனும் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பணம் செய்கிறேன். ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாகத் தமிழ்த் தாய்க்குப் பயபக்தியுடன் இயற்றி வந்திருக்கும் பணிகளுக்குள்ளே இதுவே தலைசிறந்தது என்று நம்பித் தமிழ்நாட்டு ரசிகப் பெருமக்களுக்கு இந்த் நூலை அர்ப்பணம் செய்கிறேன்" (பக். x-xi) என்றும் அந்த நாவலுக்கு எழுதிய முன்னுரையில் அவரே ஒப்புதல் வாக்குமூலமாக வெளியிட்டிருக்கிறார். கல்கி என்ற படைப்பாளரின் உள்ளத்தில் 'அலை ஓசை' பெற்றிருந்த தனிப்பெருஞ் செல்வாக்கினை இதனால் அறியலாம்.

கதைமாந்தர்களே எழுதிய கதை

'அலை ஓசை' நாவலைத் தாம் எழுதியதாகவே கல்கி கருதவில்லை; இந்தக் கதையைத் தம் கதைமாந்தர்களே தங்களுக்குள்ளே பேசிக்கொண்டே எழுதியிருப்பதாக ஆழமாக நம்பினார் அவர். "'அலை ஓசை'யை நான் எழுதியதாகவே எண்ணக்கூடவில்லை. லலிதாவும் சீதாவும் தாரிணியும் சூரியாவும் சௌந்தரராகவனும் பட்டாபிராமனும் சேர்ந்து பேசிக்கொண்டு அவரவர்களுடைய அந்தரங்க ஆசாபாசங்களையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் வெளியிட்டு 'அலை ஓசை'யை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கற்பனை செய்யப்பட்ட பாத்திரங்கள் என்றே என்னால் எண்ண முடியவில்லை. நம்மைப் போலப் பிறந்து வளர்ந்து வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அனுபவித்தவர்களாகவே தோன்றினார்கள். பாவம்! சீதா மட்டும் அன்னை கஸ்தூரி பாவைத் தேடிக் கொண்டு போய்விட்டாள். மற்றவர்கள் இன்னமும் ஜீவியவந்தர்களாகவே இருக்கிறார்கள் அவர்களை மறுபடியும் எப்போது எங்கே காணப்போகிறேனோ. தெரியவில்லை" (ப.viii) என 'அலை ஓசை' நாவலுக்கு எழுதிய

முன்னுரையில் கல்கி எழுதியிருப்பது கொண்டு, அவர் தம் கதைமாந்தர்கள் மீது எந்த அளவிற்குப் பற்றும் பாசமும் வைத்திருந்தார் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

வரலாற்றுப் பின்னணியும் காந்தியப் பின்னணியும்

'அலை ஓசை'யின் கதைப் பின்னணியில் சமகால வரலாறும் காந்தியமும் அழகாகவும் அற்புதமாகவும் கைகுலுக்கிக் கொள்ளுவதைக் காணமுடிகின்றது. முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் குறிப்பிடுவதைப் போன்று, 'அலை ஓசை' கல்கியின் எழுத்தாற்றலுக்கும், சரித்திர உணர்வுக்கும், அசைக்க முடியாத காந்தியப் பற்றுக்கும் எழுப்பப்பட்ட நினைவுச் சின்னம்" ('கல்கி என்ற சரித்திரம்', அலை ஓசை, ப.13).

இந்திய தேசிய இயக்கத்தின் பதினெட்டு ஆண்டுக் கால வரலாற்றைக் கல்கி தம் 'அலை ஓசை' நாவலின் கதைக்குப் பின்னணியாக அமைத்துக் கொண்டுள்ளார். 1930-ஆம் ஆண்டில் இருந்து 1947-ஆம் ஆண்டு வரையில் நமது தாய்த் திருநாட்டின் வரலாற்றில் நிகழ்ந்த பற்பல அற்புத நிகழ்ச்சிகளை அவர் அந்நாவலில் பதிவு செய்துள்ளார். குறிப்பாக, காந்தியடிகளின் ஆன்ம சக்தி கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் ஆட்சி புரிந்ததையும், அதன் விளைவாக மக்களின் புற வாழ்க்கையிலும் உள்ளப் போக்கிலும் எத்தனை எத்தனையோ புரட்சிகள் நடந்ததையும் கல்கி 'அலை ஓசை'க்குப் பின்னணி இசையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். மேலும், கோடானு கோடி மக்களின் கனவு நிறைவேறிப் பாரத நாடு சுதந்திரம் அடையும் காலம் நெருங்கிய போது, காந்தி மகானின் ஆன்ம சக்திக்கு எதிராக நாசகார சக்திகள் கிளம்பிக் கர்ண கொடூரமான கூச்சலுடன் கோர பயங்கரத் தாண்டவம் ஆடியதையும், முடிவில் இந்த நாசகார சக்திகளையெல்லாம் மகாத்மாவின் ஆன்ம சக்தி முறியடித்து வெற்றிச் சங்கம் முழங்கியதையும், இன்னும் இவை போன்ற அற்புத நிகழ்ச்சிகளையும் அவர் தம் கதைக்குப் பின்னணியாகப் படைத்துக் காட்டியுள்ளார். இதற்காகவே அக்காலத்தில் அவர் புதுதில்லி, பானிபத், கர்னால், குருக்ஷேத்ரம் முதலான இடங்களுக்குச் சென்று, அங்கே தங்கியிருந்த பஞ்சாப் அகதிகளின் நிலைமையை நேரில் கண்டறிந்தார். அதன் பயனாகப் 'படிப்பவர் உள்ளத்தை ஊடுருவித் தைக்கும்-படியான இதயம் ஒன்றிய ஈடுபாட்'டோடு அவர்களின் அவலத்தைப் பதிவு செய்தார் அவர்.

கல்கியின் படைப்புக் கலை குறித்து ஆராய்ந்த முனைவர் தா.வே. வீராசாமி, 'அலை ஓசை' நாவலின் தலைப்பும், பாகத் தலைப்பும், அத்தியாயத் தலைப்பும், கதைமாந்தர் செல்லும் இடங்களும் வரலாற்று மணம் கமழ்வனவாகவே விளங்குவதை விரிவாக எடுத்துக்காட்டியுள்ளார். அவரது கருத்தின் மையப் பகுதி வருமாறு:

> "வரலாற்றின் பெருமாற்றங்களைக் குறிப்பிடுவது போன்றே, நாவலின் பாகங்களுக்கும் 'பூகம்பம்', 'புயல்', 'எரிமலை','பிரளயம்' என்ற தலைப்புகள் அமைந்துள்ளன. அவற்றில் பீகார் பூகம்பமும், பழைய வரலாற்றின் மீது புதிய கருத்துப் புயலும், மதவெறி என்ற அக்கினிக் குழம்பு வங்காளம், பீகார் போன்ற பகுதிகளில் வெடித்துக் கிளம்பும் எரிமலையும், அன்னிய ஆட்சியும் காந்தி அண்ணலும் மறைகின்ற வரலாற்றுப் பிரளயமும் தென்படுகின்றன" (கல்கி - அகிலன் படைப்புக் கலை, ப25).

'அலை ஓசை'யின் முதல்பாகம் 'பீகார் பூகம்பம்' பற்றிய செய்தியுடன் தொடங்குகின்றது; மகாத்மா காந்தியின் மரணம் பற்றிய கையறுநிலைக் குறிப்புடன் நாவல் நிறைவடைகின்றது கல்கி தம் நாவலில் சமகால வரலாற்றுப் பின்னணிக்குத் தந்திருக்கும் முதன்மையை இதனால் உணர்ந்து கொள்ளலாம். 'அலை ஓசை'யை 'வரலாற்றுப் பின்னணி கொண்ட வரலாற்று நாவல்' என அறிஞர்கள் சுட்டுவதற்கும் இதுவே காரணம் ஆகும்.

பண்டித ஜவஹர்லால் நேரு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பாபு ராஜேந்திர பிரசாத் போன்ற எத்தனையோ தேசியத் தலைவர்கள் கதைப் போக்கின் இடையிடையே வந்தாலும், 'அலை ஓசை' காந்தியடிகளுக்கே ஓர் உயர்ந்த இடத்தை - தலைமை இடத்தை - தந்துள்ளது. 'அலை ஓசை' நாவலின் தொடக்கத்தில் வரும் தபால்கார பாலகிருஷ்ணன் நாவலின் முடிவிலும் தவறாது வந்து, "காந்தி மகாத்மாவையே சுட்டுக்கொன்று விட்டார்கள். இனிமேல் யார் சௌக்கியமாயிருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன?"(ப.863) என்று விரக்தியின் விளிம்பில் நின்று பேசுகின்றான். கதைத் தலைவி சீதாவுக்கோ அடியோடு செவிடாகி ஒன்றுமே கேட்காமல் அதுவரை இருந்த காது, காந்தியடிகளின் புனித உடல் தகனமான அன்று கேட்கத் தொடங்குகின்றது; 'ஹரீ! மக்களின் துன்பத்தைப்

போக்குவாயாக!' என்ற மகாத்மாவின் மனத்திற்கு உகந்த கீதம்தான் முதலில் அவள் காதில் கேட்கின்றது (ப.868). சோஷலிச மனப்பான்மை கொண்டிருந்த சூரியா காலப் போக்கில் மனம் மாறி, 'காந்தி வழிதான் இந்தியாவுக்குக் கதிமோட்சம்' என்ற முடிவுக்கு வருகிறான்; 'மகாத்மாவின் மகாதியாகத்துக்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்துக்குப் பெரும் விபத்து ஒன்றும் கிடையாது. இனிமேல் சுபிட்சமும் முன்னேற்றமும் தான்!' என்று நம்பிக்கையோடு கூறுகின்றான். 'அந்த தேசபக்தத் தியாகியின் விருப்பம் நிறைவேறுமாக!' (ப.868) என்ற முத்தாய்ப்பான வரியோடு நாவலை முடிக்கிறார் கல்கி. இங்ஙனம் காந்தியடிகளையும் அவரது கொள்கைகளையும் வானளாவப் போற்றும் கதைமாந்தர்களை மட்டுமே படைக்காமல், காந்திய எதிர்ப்பு உணர்வு கொண்ட பாத்திரமாக ராகவனையும் 'அலை ஓசை'யில் படைத்துக் காட்டியிருக்கிறார் கல்கி. "காந்தியின் போக்கிலேயே விட்டால் இந்தியா தேசத்தில் ஆண்டிப் பரதேசிகள்தான் மிஞ்சுவார்கள். எல்லாரும் கையில் கப்பறையை எடுக்க வேண்டியதுதான்... காந்தியின் செல்வாக்கு இருக்கிற வரையில் இந்தியா ஒருநாளும் உருப்படப் போவதில்லை" (ப.220) என்றாற்போல் காந்தியத்தை முதலில் இருந்து அடியோடு வெறுத்தும் மறுத்தும் பேசும் கதைமாந்தரமாக 'அலை ஓசை'யில் ராகவன் வருகிறான். அவனைத் தவிர அந்நாவலில் வரும் அனைத்துக் கதைமாந்தர்களும் காந்தியடிகளை 'மகான்' என்றும், 'அவதார புருஷர்' என்றும், 'தெய்வம்' என்றும் கருதிப் போற்றுகின்றனர்; வழிபடுகின்றனர்.

இங்ஙனம் 'அலை ஓசை' நாவலில் இந்திய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளும், இந்தியத் தந்தையாம் காந்தியடிகளும் அவரது கொள்கைகளும் முதலில் இருந்து முடிவு வரை பின்னணி இசையாகத் தொடர்ந்து ஒலித்து வந்திருக்கக் காண்கிறோம்; வரலாற்றுப் பின்னணியும் காந்தியப் பின்னணியும் வலிவுடனும் பொலிவுடனும் இடம்-பெற்றிருக்கக் காண்கிறோம்.

உணர்ச்சிகளின் அலைமோதல்

முனைவர் மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்) தம் 'புனைகதை வளம்' என்னும் நூலில், "காந்தியமென்னும் தத்துவத்தை வண்ணமாகவும் ஓர் இந்துக் குடும்பத்தைத் திரைச் சீலையாகவும் கொண்டு கல்கி தீட்டிய பல்வண்ணப்-

பகட்டோவியமே 'அலை ஓசை' என்பது பொருந்தும்" (ப.25) எனக் குறிப்பிடுகிறார். கதைத் தலைவி சீதாவின் பண்பையும் வாழ்வையும் கல்கி படைத்துக் காட்டியிருக்கும் பாங்கினைக் கொண்டு இக் கருத்தின் பொருத்தத்தினை நாம் உணரலாம். 'தாயைப் போலப் பிள்ளை' என்ற பழமொழிக்கு ஏற்பத் தாய் ராஜம்மாளின் வழியில் சீதாவும் மகாத்மாவைத் தெய்வமாக மதிக்கிறாள். தனக்கு முன்னால் கட்டிய கணவன் உட்பட யாரும் காந்திடியகளைப் பற்றித் தாழ்வாகப் பேசினால் அவள் ஏற்கமாட்டாள். அவள் வாழ்வில் இன்பம், துன்பம், சந்தேகம், பாசம், பரிவு எனப் பல்வேறு வகையான அலைகளின் ஓசை அவ்வப்போது எழுந்துகொண்டே இருக்கின்றது. சென்னை, டில்லி, பம்பாய், கல்கத்தா, லாகூர் என்று இந்திய நாட்டின் தென்கோடிக்கும் வடகோடிக்கும் ஓடிஓடி இளைத்த அவளது வாழ்க்கைக்குத் துணையாகக் காந்தியம் கிடைக்கின்றது. அதற்கு ஏற்ப அவளுடைய இறுதிக் குறிக்கோளும் கஸ்தூரிபாய் போலத் தானும் தாலி கட்டிய கணவனின் மடியில் படுத்துச் சாக வேண்டும் எனத் தவம் செய்வதாக அமைகின்றது. அதுவும் பலித்த நிலையைச் சுட்டுவதோடு கல்கி நிறைவு கொள்ளவில்லை. அதற்கும் மேலே ஒரு படி சென்று, வான்வெளியில் காந்தியடிகளின் ஆத்ம ஜோதி மின்னலைப் போல் தோன்றிக் கோடி சூரியர்களைப் போல் ஒளிவிடுவதை அவள் உயிர் காணும் பேறு பெற்றதாகக் கூறி, மண்ணுலகில் பருவுடலில் பெறாத பேற்றைச் சீதா விண்ணுலகில் பெற்றதாகக் கூறி - மகாத்மாவின் ஆவி வானுலகம் செல்லும் அதே நாளில் சீதாவுக்கும் அங்கே செல்லும்படியான பேறு கிடைத்தாகக் காட்டி - நிறைவு கொள்கிறார் கல்கி. முத்தாய்ப்பாக, சீதாவின் காதில் இடைவிடாமல் கேட்டுக் கெண்டிருந்த அலைஓசையின் முடிவுக்கும், காந்தியடிகளின் இறுதி ஊர்வலக் காட்சியையே காரணமாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

இங்ஙனம் கல்கியின் 'அலை ஓசை' ஒரு பதினெட்டு ஆண்டுக் கால இந்திய வரலற்றின் அலைமோதலாக மட்டும் இல்லாமல், மணமான இந்துப் பெண் ஒருத்தியின் இல்லற வாழ்வில் எழுந்த பல்வேறு உணர்ச்சிகளின் அலை-மோதலாகவும் விளங்குகின்றது.

இரு திருப்பு முனைகள்

'அலை ஓசை'க்கு அடுத்த நிலையில், கல்கியின் சமூக நாவல்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை 'கள்வனின்

காதலி'யும் (1937-38), 'தியாக பூமி'யும் (1939) ஆகும். இவை தமிழ்ச் சமூக நாவல் வரலாற்றில் இரு திருப்பு முனைகளாக அமைந்தவை எனலாம்.

'கள்வனின் காதலி' நாவலில், கல்கி பிறந்த புத்தமங்கலம் என்னும் கிராமம், பூங்குளமாகக் காட்சியளிக்கின்றது. அவரது சொந்த ஊரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிரடிக் கொள்ளைகளில் ஈடுபட்டிருந்த கதிர்வேலு என்பவன் தான், 'கள்வனின் காதலி' நாவலின் நாயகன் முத்தையனுக்கு மூலமாக விளங்கியவன். இங்ஙனம் தம் முதல் சமூக நாவலுக்கு உரிய களமாகத் தாம் பிறந்த பகுதியையும், நாவலின் தலைமை-மாந்தனாகத் தாம் நன்கறிந்த ஒருவனது வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டு படைத்ததால், அவரது படைப்பு வெற்றிப் படைப்பாக அமைந்தது எனலாம்.

சமூக விரோதியாக விளங்கிய ஒருவனைத் தம் கதைத் தலைவனாகக் கொண்ட கல்கி, அவன் அங்ஙனம் மாறுவதற்குக் காரணம் அவன் வாழ்ந்த சமூகமே என்பதைப் படிப்படியாகத் தம் நாவலில் படைத்துக் காட்டுகிறார். குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடிப்பதையும், அவர்களைத் திருத்துவதையுமே தன் தலையாய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட வேண்டிய காவல் துறை, சில நேரங்களில் குற்றமே செய்யாத ஒருவனையும் தண்டித்து விடுகின்றது; சிறைப்பறவையாக்கி விடுகின்றது. இதன் விளைவாக, முத்தையன் 'கள்வன்' ஆகிறான். அவன் காதலி கல்யாணி கைம்பெண் ஆகிறாள். ஆயினும், அவர்கள் இருவரது காதலும் மறையவில்லை. அத்துடன், முத்தையன் தன் தங்கை மீது கொண்ட அன்பு, அறத்திற்கு மட்டுமே துணையாகாமல், மறத்திற்கும் துணை ஆகின்றது. அதன் பயனாகப் பிழைப்புத் தேடிவந்த முத்தையனின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. 'உண்மையான குற்றவாளிகள் பலர் சிறைக்குச் செல்லாமல் தப்பி வெளியில் உல்லாசமாக நடமாடிக் கொண்டிருக்க, நில நேரங்களில் ஒன்றும் அறியா அப்பாவிகள் ஒரு சிலர் சட்டத்தின் கொடும்பிடியில் சிக்கிச் சீரழிகின்றார்கள்' என்பதைக் 'கள்வனின் காதலி' நாவல் வாயிலாக நன்கு உணர்த்தியுள்ளார் கல்கி.

'கள்வனின் காதலி'யை அடுத்து, கல்கி 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் தொடர்கதையாக எழுதிய நாவல் 'தியாக பூமி'. "கதையின் சுவையிலும், நடையின் அழகிலும், இலட்சியத்தின் மேன்மையிலும் 'தியாக பூமி' இதற்கு முன் அவர்

எழுதியிருக்கும் கதைகளையெல்லாம் மிஞ்சிவிட்டது என்பது என் அபிப்பிராயம்" (p. vii) என்று இந்நாவலுக்கு எழுதிய முகவுரையில் குறிப்பிட்டிருக்கிறார் டாக்டர் ப. சுப்பராயன்.

'தியாக பூமி' ஓர் உயர்ந்த நோக்கம் கொண்ட கதையாகும். 'நம் நாட்டில் பெண்களின் சுதந்திரம் இப்போது எப்படிக் குறுகிப் போயிருக்கிறது, அதை எவ்விதத்தில் விரிவடையும் படி செய்யலாம்' என்பதே இந்தக் கதையின் முக்கிய இலட்சியமாக அமைந்திருக்கிறது. இக்கதையின் நாயகியான சாவித்திரி இளமையில் சித்தியின் தொல்லைக்கு ஆளாகிறாள்; திருமணமான நிலையில் மாமியாரின் கொடுமையை அனுபவிக்கிறாள். கணவன் ஸ்ரீதரனோ அவளது உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல், அன்னையின் கைப்பொம்மையாக இயங்குகிறான். இதனால், குழந்தை பெற இருந்த சாவித்திரி தெருவிலே அலைந்து திண்டாட நேருகிறது. வேறு வழி எதுவும் தெரியாத நிலையில் அவள், தன் தந்தை காணாத வகையில் தன் குழந்தையை அவரிடம் ஒப்படைத்து விட்டு, பம்பாய் புறப்படுகிறாள்; அங்கே 'உமாராணி' என்ற பெயரில் செல்வச் சீமாட்டியாகிறாள்; பிறகு சென்னை திரும்புகிறாள். இப்போது சாவித்திரியின் வாழ்வில் மகள் சாருவுடன் சேர்ந்து வாழ முடியாமல் தவிக்கும் சோதனை ஏற்படுகிறது. அப்போது அவள் துணிச்சலோடு தன் கணவனுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்காடுகிறாள்; மனைவிக்குக் கணவன் ஜீவனாம்சம் கொடுப்பது போல், தான், தன் கணவனுக்கு ஜீவனாம்சம் கொடுத்து மணவிலக்குப் பெற்றுக் கொள்வதாகக் கூறுகிறாள். "மனைவியைப் புருஷன் தள்ளி வைத்தால், மனைவி கோரக்கூடிய பாத்தியதை என்ன ஜீவனாம்சந்தானே? அந்த மாதிரி நானும் இவருக்கு ஜீவனாம்சம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். ஆனால் இவருடன் சேர்ந்து வாழ்வதற்கு மட்டும் சம்மதிக்க மாட்டேன்; ஒருநாளும் மாட்டேன்" (p.354) என்று அவள் உரத்த குரலில் ஆவேசம் வந்தவள் போல் கூறுகிறாள். இது இந்தியப் பெண்ணுலகில் மிகப் பெரிய உரிமை உணர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காட்டுகிறது. நாற்பதுகளிலேயே தம் பெண் பாத்திரம் ஒன்றை இங்ஙனம் நெஞ்சில் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் பேச வைத்திருக்கிறார் என்றால், கல்கி எத்துணைச் சீர்திருத்த உள்ளம் கொண்டவராக இருந்திருத்தல் வேண்டும்?

நாவலின் முடிவில் நீதிமன்றம் சாதிக்காததை, நாட்டுத் தொண்டு சாதித்துக் காட்டுகின்றது; மணவிலக்குப் பெறாமல்,

மனம் மாறிய ஸ்ரீதரனும் சாவித்திரியும் ஒன்றுசேர்ந்து நாட்டுக்காகச் சிறை செல்கின்றனர். இதுவரை வட துருவம், தென் துருவமாக இருந்த அவர்கள் இருவரது இதயங்களும் ஒன்றுபடுகின்றன. இந்தப் புனிதமான இதயங்களின் சங்கமத்தைக் குறித்துக் கல்கி எழுதியிருக்கும் அற்புதமான வரிகள் இதோ:

> "அந்த நிமிஷத்தில் ஸ்ரீதரனுக்கும் சாவித்திரிக்கும் புனர்விவாகம் நடந்தது என்று சொல்லலாம். ஏற்கனவே, பெரியோர்களிடைய வற்புறுத்தலினால் தேக சம்பந்தமான விவாகம் அவர்களுக்கு நடந்திருந்தது. இன்றைய சுப தினத்தில், அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்றையொன்று மணந்து கொண்டன. இந்த ஆத்மிக விவாகத்துக்கு பாரத மாதாவும் காந்தி மகாத்மாவுமே சாட்சிகளாயினர்" (ப.401).

இந் நாவலில் சாவித்திரியின் தந்தையாக வரும் சம்பு சாஸ்திரி வாயிலாகத் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார் கல்கி.

'வீர சுதந்திர வாலிபர்களின் கதைகள்'

கல்கியின் 'சோலை மலை இளவரசி' இருவேறு கதைகளின் இணைப்பு ஆகும். இதில் ஒரு நிகழ்காலக் கதையும், கடந்த காலக் கதையும் அடுத்தடுத்து நிரல்படச் சொல்லப்படுகின்றன. 1942-ஆம் ஆண்டுப் புரட்சிவீரன் குமாரலிங்கம் காவல்துறையினரிடம் அகப்படாமல் இருக்கும் பொருட்டுச் சோலைமலைக்குச் செல்கிறான். அங்கே இடிந்து பாழடைந்து கிடந்த பழைய காலத்து மாளிகை ஒன்றில் படுத்து இரவைக் கழிக்கிறான். அந்தச் சூழ்நிலை அவனுக்குச் சில வியக்கத்தக்க அனுபவங்களின் நினைவுகளைத் தோற்றுவிக்கிறது. அந்த நினைவுகள் கனவில் ஏற்பட்ட தோற்றமா, அல்லது கற்பனை ஆற்றலின் விளைவா, அல்லது உண்மையிலேயே முற்பிறப்பு நினைவுகள் தானா என்று குமாரலிங்கத்துக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அந்த அனுபவங்கள் புற உலகத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைக் காட்டிலும் அவனுக்கு உண்மை வாய்ந்தனவாகத் தோன்றுகின்றன. இவ்வாறு பழம் பிறப்பு நினைவுகளையும் சமகாலத்து விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளையும் பின்னிப் பிணைத்து இக் கதையைச் சுவையாகச் சொல்லிச் சென்றுள்ளார் கல்கி. அவரது புனைவியல் பாங்கிற்குக்

கட்டியம் கூறுவதாகச் 'சோலை மலை இளவரசி' விளங்குகின்றது.

'வீர சுதந்திர வாலிபன்' - 'தேசத் தொண்டன்' - குமாரலிங்கத்தின் நெஞ்சத்தைத் திறந்து காட்டும் வகையில் இந்நாவலில் இடம் பெற்றுள்ள ஒரு சிறு உரையாடற் பகுதி வருமாறு :

" 'உனக்கு வீடு வாசல், வேலை வெட்டி ஒன்றும் கிடையாதா?'

'நான்தான் அப்போதே சொன்னேனே, தேசத் தொண்டுதான் எனக்கு வேலை என்று' " (ப.53)

'சோலை மலை இளவரசி'யைப் போல் சமகாலத்து விடுதலைப் போராட்ட வாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் பிறிதொரு நாவல் 'மகுடபதி'. இதிலும் கல்கி பாரதத் தாயின் விடுதலைக்காகப் பாடுபடும் - காந்தி மகாத்மாவின் ஆன்ம சக்தியைப் போற்றி வாழும் - வாலிபன் ஒருவனையே கதைத் தலைவனாகப் படைத்துள்ளார். இந்நாவல் ராஜாஜியின் கொள்கைக்களுக்கு ஆதரவு காட்டும் நோக்கில் வாரம் இருமுறை வெளியீடாகக் கல்கி நடத்திய 'துணைக் கல்கி' இதழில் தொடர்கதையாக வெளிவந்தது என்பதும், இந்நாவலில் மதுவிலக்குக் கொள்கையைக் கல்கி முக்கியமாகக் கையாண்டுள்ளார் என்பதும் இங்கே மனங்கொளத்தக்க செய்திகள் ஆகும்.

இதுவரை நாம் பார்த்த நாவல்களைத் தவிர, நேருஜியின் சமாதானக் கொள்கையை ஆதார சுருதியாகக் கொண்ட 'மோகினித் தீவு', தேவகி என்ற பெண்ணின் சுவையான வாழ்க்கைச் சித்திரமான 'தேவகியின் கணவன்', திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் தங்கியிருந்த காலத்தில் பார்த்துப் பழகிய பாத்திரங்களின் படப்பிடிப்பான 'பொய்மான் கரடு', சிவராஜன் என்னும் காந்திய உணர்வுள்ள இளைஞனின் கதையான 'அபலையின் கண்ணீர்' என்ற நாவல்களையும் கல்கி படைத்துள்ளார்; இவை 'கல்கி' பத்திரிகையில் 1949, 1950 ஆகிய ஆண்டுகளில் தொடர்-கதைகளாக வெளிவந்துள்ளன. 'அமர தாரா' (1954) என்ற நாவல் வெளிவரத் தொடங்கிய சிறிது காலத்திலேயே கல்கி மறைந்ததால் அது முற்றுப் பெறாத நாவலாக அமைந்தது; எனினும் அதை அவர் மகள் ஆனந்தி நிறைவு செய்தார்.

'அரும்பு அம்புகள்' என்ற நாவல் கல்கியின் மறைவுக்குப் பிறகு அவர் எழுத்தில் கிடைத்த புதையல் ஆகும். 1976-இல் 'கல்கி' பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்த அந்த நாவல் அண்மையில் (1998) நூல் வடிவம் பெற்றுள்ளது.

சிறுகதை, கட்டுரை, நடைச் சித்திரம், மொழிபெயர்ப்பு, பயண இலக்கியம், வாழ்க்கை வரலாறு முதலான பல துறைகளில் படைப்புப் பல படைத்திருப்பினும்,கல்கி என்றவுடன் நினைவுக்கு வருவன அவருடைய நாவல்கள் தாம். அவற்றுள்ளும் 'சிவகாமியின் சபத'மும், 'அலை ஓசை'யும், 'பொன்னியின் செல்வ'னும் கல்கியின் நினைவாலயங்-களாகவே ஆகிவிட்டன எனலாம்.

4. கட்டுரையாசிரியர்

"எளிமை, தெளிவு, இனிமை, நகைச்சுவை, கற்பனை நயம் ஆகியவற்றைச் சேர்த்து அழகான ஒரு உரைநடையை வளர்த்துக் கொண்டார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி."

– வல்லிக்கண்ணன்*

"இலக்கியக் கலையின் உயிர் கவிதைக் கலை என்றால், இலக்கியக் கலையின் உள்ளம் கட்டுரைக் கலை எனலாம். கட்டுரைக் கலையாகிய உள்ளம் உயிரொளி பெறும்போது கவிதைக் கலை தோன்றும். கட்டுரைக் கலையாகிய மயில் தனது கற்பனைச் சிறகுகளை விரித்தாடும் காட்சியே கவிதைக் கலை என்றும் அழகுணர்ச்சி துளும்பக் கூறலாம். நீல வானத்தை அணிசெய்யும் ஞாயிறும் திங்களும் போல இலக்கிய வானத்தை எழில் செய்யும் இருபெருஞ் சுடர்கள் கட்டுரையும் கவிதையும் என்றும் கருதிக் களிக்கலாம்" (ஆராய்ச்சிக் கட்டுரைகள், முதல் தொகுதி, ப.138) எனக் கட்டுரையும் கவிதையும் பற்றிக் குறிப்பிடுவார் முனைவர் ந. சஞ்சீவி. மேலும் அவர், "வருங்காலத்தில் மொழிச் செம்மையே தகளியாக, இலக்கியச் சுவையே நெய்யாக, எளிமைப் பண்பே இடுதிரியாக, சிந்தனையே சுடராகக் கொண்டு தமிழ்க் கட்டுரை விளக்கு ஏற்றப்படுதல் திண்ணம்" என்று கட்டுரைக் கலையின் மீது தமக்கு இருக்கும் பற்றையும் பிடிப்பையும் புலப்படுத்துவார். அவரது கருத்தில் மொழிச் செம்மை, இலக்கியச் சுவை, எளிமைப் பண்பு, சிந்தனை வளம் ஆகிய நான்கும் ஒரு சிறந்த கட்டுரையின் தலையாய கூறுகள் ஆகும்; வேறு சொற்களில் சொல்லுவதென்றால், இக் கூறுகள் நான்கும் ஒரு தேர்ந்த கட்டுரையாசிரியருக்கு இருக்க வேண்டிய அடிப்படையான தகுதிகள் ஆகும். இவை கல்கியின் கட்டுரைகளில் பொருந்தி இருக்கும் பாங்கினைக் குறித்து இவ்வியலில் காண்போம்.

கட்டுரையாசிரியர் கல்கி

கல்கியின் கட்டுரைக் கூறுகளைக் குறித்து ஆராய்வதற்கு முன்பு, ஒரு கட்டுரையாசிரியராகக் கல்கி எந்த அளவுக்குத் தமிழக மக்களால் அறியப்பட்டிருக்கிறார், அலசி ஆராயப்பட்டிருக்கிறார் எனக் காண்பது பொருத்தமாக இருக்கும் பாரதியாரையே எடுத்துக் கொண்டாலும், ஒரு

* பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை, ப70

கவிஞராகத் தெரிந்த அளவிற்கு அவரை ஒரு கதையாசிரியராக நமக்குத் தெரியாது; இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பாரதியார் ஒரு கதையாசிரியராக அறிமுகம் ஆன அளவிற்குக் கூட, ஒரு கட்டுரையாசிரியராக அவர் தமிழ் கூறு நல்லுலகிற்கு அறிமுகம் ஆகவில்லை. இதே நிலைதான் கல்கிக்கும் தமிழ்நாட்டில் வாய்த்தது. சிறுகதை எழுத்தாளர், புதினப் படைப்பாளர், பத்திரிகையாளர், பாடலாசிரியர், நகைச்சுவையாளர், விடுதலைப் போராட்ட வீரர், விமர்சகர் எனக் கல்கி பன்முக ஆற்றல்கள் படைத்தவராக விளங்கினார். எனினும், ஒரு வரலாற்று நாவலாசிரியர் என்ற நிலையிலேயே அவர் பெரும்புகழ் பெற்றார்; பரவலாக அறியப் பெற்றார்; அறிஞர் பலரால் ஆராயவும் பெற்றார். அவரது ஆளுமையின் பிற பரிமாணங்கள் அவ்வளவாக வெளிச்சத்திற்கு வராமலே போயின; கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாமலே போயின; அலசி ஆராயப்படாமலும் போயின. இவ்வுண்மையினைக் கருத்தில் கொண்டு எதிர்கால ஆய்வுலகம் கல்கியின் கட்டுரை நூல்களின் மீதும் தன் கடைக்கண் பார்வையைக் காட்டல் நன்று.

தமிழ் உரைநடை வரலாற்றில் கல்கி பெறும் இடம்

இருபதால் நூற்றாண்டில் மறுமலர்ச்சி நடையினைக் கையாண்டு உரைநடை இலக்கியங்களை இயற்றித் தமிழ்மொழியை வளப்படுத்திய எழுத்தாளர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர் கல்கி. இலங்கைத் தமிழறிஞர் வி. செல்வநாயகம் தம் 'தமிழ் உரைநடை வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுவது போல், "இக்காலத் தமிழில் எதையும் எழுத முடியும் என்பதைச் சாதித்த பெரியார் அவர். அவர் எழுதிய கட்டுரைகளும், விமர்சனங்களும், அரசியல் சம்பந்தமான எழுத்துக்களும் அதற்குச் சான்றாக விளங்குகின்றன. எதை எழுதினாலும், அதைத் தெளிவாகவும் சுவையுள்ளதாகவும் எழுதும் வன்மை அவருக்கு இயல்பாக உண்டு. தம்முடைய கொள்கைகளை எடுத்துக் கூறும்போது, பிறர் மறுக்க முடியாதபடி கூறுதலும், பிறர் கொள்கைகளை மறுத்துக் கூறும் போது அவர்களும் வியந்து பாராட்டக்கூடிய வகையிற் கூறுதலும் அவரிடத்திற் காணப்படும் சிறந்த பண்புகள்" (பக்.154-155) ஆகும். 'பாமரரும் பண்டிதரும் விரும்பிப் படித்தற்குரிய நடை' என்று கல்கியின் நடையை மதிப்பிடும் பேராசிரியர் வி. செல்வநாயகம், "தமிழ் வசனத்தைச்

சுவையுடையதாகவும் ஆற்றலுடையதாகவும் ஆக்கித் தந்த எழுத்தாளர்களுட் கல்கி முதலிடம் வகிப்பவர் எனக் கூறுதல் மிகையாகாது" (ப.155) என்றும் கல்கியின் வசன நடைக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். சுருங்கக் கூறின், கவிதைத் துறையில் பாரதியார் தோற்றுவித்த திருப்பத்தை, உரைநடைத் துறையில் கல்கி உருவாக்கியுள்ளார் எனலாம்.

கல்கியின் கட்டுரைகள்

கல்கி 'நவசக்தி', 'விமோசனம்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' ஆகிய பத்திரிகைகளிலும், பல்வேறு பொங்கல், தீபாவளி, ஆண்டுவிழா, நூற்றாண்டு விழா மலர்களிலும் நூற்றுக்-கணக்கான கட்டுரைகளை எழுதியுள்ளார். முனைவர் கலா கே. தாக்கர் தம் 'கல்கி - முன்ஷி வரலாற்று நாவல்கள் - ஓர் ஒப்பீடு' என்ற நூலின் பின்னிணைப்பில் பல்வேறு பொருள்களில் கல்கி எழுதிய 520 கட்டுரைகளைப் பட்டியல் இட்டுள்ளார் (பக்.459-486). "'கல்கி' என்ற பெயரில் அவர் எழுதிய கட்டுரைகள் களிப்பும் ஊட்டின; கல்வியும் புகட்டின. 'ரா.கி.' என்ற பெயரில் அவர் எழுதியவற்றில், ரசனை கொட்டியது. 'கர்நாடகம்' என்ற பெயரில் அவர் எழுதியவற்றில், கலையுணர்வு மிளிர்ந்தது. வேடிக்கையும் வேதாந்தமும் பரவி நின்றன அவர் கட்டுரைகளில். நாட்டுப் பற்றும் நகைச்சுவையும் போட்டி-யிட்டன அவர் எழுத்தில். பழமையின் பக்தியும் புதுமையின் சக்தியும் பரிமளித்தன அவர் படைப்புகளில். எளிமையும் ஏற்றமும் எழில் ஊட்டின அவர் நடைக்கு" (ப. 135) என அறிஞர் கா. திரவியம் தம் 'தேசியம் வளர்த்த தமிழ்' என்ற நூலில் கல்கியின் கட்டுரைத் தரமும் திறமும் குறித்துக் கூறுகின்றார்.

கல்கி படைத்துள்ள கட்டுரை நூல்கள்

'ஏட்டிக்குப் போட்டி'

கல்கியை ஒரு கட்டுரையாளராகக் காண முற்படும்போது முதலில் நம் நினைவுக்கு வருவது அவரது 'ஏட்டிக்குப் போட்டி' என்ற கட்டுரையே ஆகும். ஏனெனில் 1928 -ஆம் ஆண்டில் ஆகஸ்டு மாதத்து 'ஆனந்த விகடன்' இதழில் 'கல்கி' என்ற புனைபெயரில் அவர் எழுதிய முதல் கட்டுரை அதுதான். மேலும், 'ஏட்டிக்குப் போட்டி' என்ற தலைப்பினைத் தாங்கியே 1930-ஆம் ஆண்டில் கல்கியின் முதல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாயிற்று. பிறகு பதினேழு ஆண்டுகள் கழித்து 1947-இல்

தான் சின்ன அண்ணாமலையின் பெருமுயற்சியால் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. கல்கியின் கட்டுரை நூல்களுள் பத்து பதிப்புகளைக் கண்ட நூல் இதுவே ஆகும். இந்நூலின் முதற்பதிப்பு வெளிவந்த போதே, இதனை வெளியிட்ட 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ்.எஸ்.வாசன் "தமிழில் நகைச்சுவையின் இன்பத்தை அனுபவிக்க விரும்புவோர் கல்கியின் இனிய கட்டுரைகளைப் படித்தேயாக வேண்டும் என்று நாம் கூற வேண்டியதில்லை" (மேற்கோள் : சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.194) என்று நூலைப் பற்றிச் சுவையான முறையில் விளம்பரம் செய்தார். கல்கியை ஒரு கைதேர்ந்த கட்டுரையாளராக அடையாளம் காட்டும் 17 கட்டுரைகள் 'ஏட்டிக்குப் போட்டி' நூலின் பத்தாம் பதிப்பில் (1997) இடம் பெற்றுள்ளன. இந்நூலில் ஆசிரியரின் நகைச்சுவை உணர்வு ததும்பி நிற்கும் ஓர் இடம் இதோ:

> "தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஒரு புதிய அகராதி தயாரித்தார். அதில் நவீன வார்த்தைகளையெல்லாம் புகுத்த எண்ணிய அவர், 'கங்காரு' என்பதற்கு 'ஆப்பிரிக்க தேசத்து ஆறுகளில் பின்புறமாய் நீந்திச் செல்லும் ஒருவிதப் பறவை' என்று பொருள் எழுதினார். பின்னர் ஆங்கிலந் தெரிந்த நண்பர் ஒருவருக்கு அதைக் காட்டி, 'சரிதானா?' என்று கேட்டார். நண்பரோ, 'கொஞ்சம் தவறிருக்கிறது. கங்காரு ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ளதன்று; அது நீரில் வசிப்பதன்று; அது பறவையன்று; மற்றபடி நீர் எழுதியிருப்பது முற்றிலும் சரி' என்றார் நண்பர்" (ப.183).

- நகைச்சுவையை நயமாகவும் நாகரிகமாகவும் கையாள முடியும் என்பதைப் பறைசாற்றும் அருமையான பகுதி இது.

'ஓ! மாம்பழமே!'

கல்கியின் கட்டுரை வண்ணத்தையும் வனப்பையும் காட்டும் பிறிதொரு நூல் 'ஓ! மாம்பழமே!' இந்நூலில் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் அவர் எழுதிய 9 கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. வேறு எல்லாக் கட்டுரைகளும் இல்லாமற் போனாலும் 'ஓ! மாம்பழமே!' (பக்.1-11) என்ற ஒரு கட்டுரை போதும், கல்கியின் கட்டுரைத் திறத்தினை என்றென்றும் உலகிற்குக் காட்டிக் கொண்டிருக்க; அங்கதம், எள்ளல், கிண்டல், குத்தல், கேலி, நக்கல், நையாண்டி என்றாற் போல் உள்ள நகைச்சுவையின் அனைத்துப்

பரிமாணங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் அந்தக் கட்டுரையின் இலக்கியச் சுவையை ஒருவர் அனுபவித்தே உணர முடியும் : சொல்லில் வடிக்க முடியாது.

'சங்கீத யோகம்'

'சங்கீத யோகம்' (1947) என்பது 'கர்நாடகம்' என்ற பெயரில் கல்கி அவ்வப்போது எழுதிய தமிழிசை இயக்கக் கட்டுரைகளின் தொகுப்பு இதில் 27 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 'கர்நாடக சங்கீதக் கலையின் தரம் அணுவளவும் குறையாமல் தமிழிசை இயக்கத்தை நல்ல முறையில் வளர்க்க வேண்டும்' என்ற நல்ல நோக்கத்துடன் கல்கி இக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இக்கட்டுரைகளில் தமிழிசை தொடர்பான காரசாரமான விவாதங்களையும் விளக்கங்களையும் அவர் அழுத்தமாகவும் ஆணித்தரமாகவும் வெளியிட்டுள்ளார். சான்றாக, 'நிரவல் விஷயம்' என்ற கட்டுரையில் இடம் பெற்றிருக்கும் ஒரு கருத்தை இங்கே சுட்டிக் காட்டலாம் :

> "'கோர்கே லொஸகே பிருதுகதா' என்பதை உச்சரிக்கக் கூடிய நாக்கு,
>
> 'இன்னல் கூட்டி இன்பம் ஊட்டி
> இந்த்ர ஜால வித்தை காட்டி'
>
> என்பதை உச்சரிக்க முடியவில்லை யென்றால், அந்த நாக்கிலே ஏதோ பிசகே தவிரத் தமிழ் பாஷையில் இல்லை..." (ப.67)

- 'காமம் செப்பாது கண்டது மொழியும்' திறம் படைத்தவர் கல்கி என்பதைக் காட்டும் பகுதி இது. "அந்தக் காலத்தில் சிவபெருமான் தமிழிசை கேட்டதற்காகக் கொடுத்த காசு, **பொற்காசு**; இந்த நாளில் நாம் கொடுக்கும் காசு, **கடிதாசு**; அவ்வளவுதான் வித்தியாசம்" (ப.187) என்றாற் போல் நகைச்சுவை உணர்வு பளிச்சிடும் இடங்கள் இந்நூலில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

'இசை விருந்து'

விமர்சனம் என்பது ஒரு கலை. அதிலும் சங்கீத விமர்சனம் என்பது அரிதினும் அரிதான கலை. அதனைத் திறம்படக் கையாண்டவர் கல்கி. அதற்கு 'இசை விருந்து' (1957) என்ற நூலில் இடம் பெற்றுள்ள 14 கட்டுரைகளே சான்று.

சாஸ்திரீயமான உயர்தர சங்கீதத்திற்கு எதிரான மட்டமான சங்கீதத்திற்குக் கல்கி சூட்டியிருக்கும் பெயர் என்ன தெரியுமா? 'டப்பா சங்கீதம்;' (ப.72) 'சங்கீதம் பணம் பண்ணுகிறது;', 'டப்பா சங்கீதத்துக்குச் சப்பைக் கட்டு!' என்ற இரு கட்டுரைகளில் கல்கி 'டப்பா சங்கீதம்' பற்றிய தம் கருத்துக்களை அழுத்தமாகத் தெரிவித்துள்ளார். செம்பை வைத்தியநாத பாகவதர், மதுரை மணி ஐயர், எம்.எஸ். சுப்புலட்சுமி, அரியக்குடி இராமாநுஜய்யங்கார், மாயவரம் கிருஷ்ணையர், எம்.எல். வசந்தகுமாரி முதலான இசைக் கலைஞர்களின் கச்சேரிகளைக் குறித்துக் கல்கி இந்நூலில் எழுதியிருக்கும் விமர்சனக் கட்டுரைகள் சிறப்பானவை.

'குமரியும் குன்றமும்'

'குமரியும் குன்றமும்' (1956) என்ற நூலில் 20 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக் கட்டுரைகள் யாவும் 'கல்கி' இதழில் (1945-1954) வெளிவந்தவை; அவ்வப்போது நாட்டில் நிலவிய நிலைமையைக் கருத்தில் கொண்டு எழுதப்பெற்றவை. இவற்றைப் படிப்பதன் வாயிலாக இந்திய விடுதலை இயக்க வரலாறு முழுவதையும் எளிதாகத் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக, 'ஆகஸ்டு தியாகிகள்', 'பிறந்த பயன் பெற்றோம்!', 'வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!', 'கண்ணிலும் இனியது', 'சாதி வேற்றுமை ஒழிய அன்பு வழியே வழி', 'புதிய தமிழ்நாட்டினாய்! வா! வா! வா!' என்ற தலைப்புக்களில் இந்நூலில் இடம்பெற்றிருக்கும் கட்டுரைகள் கல்கியின் சிந்தனைத் திறத்திற்குக் கட்டியம் கூறுவனவாகும். சான்றாக, 'கண்ணிலும் இனியது' என்ற கட்டுரையில் இருந்து ஒரு கருத்தை இங்கே சுட்டிக் காட்டலாம் :

> "'சுதந்திரம்' என்று சொல்லும்போது ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.
>
> அரசியல் சுதந்திரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்திரம், வியாபார சுதந்திரம், தொழில் சுதந்திரம், படிக்கும் சுதந்திரம், படியாமலிருக்கும் சுதந்திரம், அம்மை குத்திக் கொள்ளுகிற சுதந்திரம், குத்திக் கொள்ளாமலிருக்கும் சுதந்திரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்திரம் - இவையெல்லாம் இரண்டாம் பட்சமானவைதான்.இந்தச் சுதந்திரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்திரத்தைப் பற்றி

அலட்சியமாகப் பேசுவது மடமையிலும் மடமை. அரசியல் சுதந்திரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்திரங்களெல்லாம் நாளடைவில் கட்டாயம் பின் தொடர்ந்து வரும். அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்திரமும் ஒருநாளும் கிட்டாது. ஆகையால் ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்குக் கேடு சூழும் காரியத்தை அந்த நாட்டுப் பிரஜை எவனும் செய்யக் கூடாது. செய்கிறவன் தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்" (ப.110).

இங்ஙனம் மற்ற எல்லாச் சுதந்திரங்களையும் விட, ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்திற்குக் கல்கி தந்திருக்கும் முதன்மை ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

'கண் கொள்ளாக் காட்சிகள்'

'கண் கொள்ளாக் காட்கிகள்' (1957) என்ற நூலில் 24 கட்டுரைகள் தொகுக்கப் பெற்றுள்ளன. இவற்றில் தமிழ்நாட்டில் அவ்வப்போது நடைபெற்ற சில வரலாற்று நிகழ்வுகளைக் கல்கி தமக்கே உரிய பாணியில் பதிவு செய்துள்ளார்.

சிறைவாச அனுபவங்களைச் சொல்லும் இரு கட்டுரை நூல்கள்

இந்திய விடுதலைப் போரில் முனைப்புடன் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றவர் கல்கி. அவருடைய சிறைவாச அனுபவங்கள் 'கண்ணீரால் காத்த பயிர்', 'மூன்று மாதம் கடுங்காவல்' என்னும் இரு நூல்களாக வெளிவந்துள்ளன. அவருடைய முதலாவது சிறைவாசம் 1922-ஆம் ஆண்டில் ஓர் ஆண்டுக் காலமும், இரண்டாவது சிறைவாசம் 1930-ஆம் ஆண்டில் ஆறு மாத காலமும், மூன்றாவது சிறைவாசம் 1941-ஆம் ஆண்டில் மூன்று மாத காலமும்' நீடித்தன. இச்சிறை அனுபவங்களைக் குறித்த கட்டுரைகளை அவர் முறையே 'ஆனந்த விகட'னிலும் 'கல்கி'யிலும் எழுதினார். இக் கட்டுரைகளைப் படித்ததன் விளைவாகத் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் காங்கிரஸ் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, அஞ்சாமல் சிறை சென்றனர். 'மூன்று மாதம் கடுங்காவல்' கட்டுரைகள் 'கல்கியில்' தொடராக வெளிவந்தபோது அவற்றைப் படித்த ஒரு நண்பர் கல்கியிடம், "ஏன் ஸார், சிறை வாசத்தைப் பற்றி எழுதி வருகிறீர்களே? அதையெல்லாம் படித்தால் சிறையில் நீங்கள் கஷ்டப்பட்டதாகத் தெரியவில்லையே? சுகமாக இருந்ததாக

அல்லவா தெரிகிறது?" என்று கேட்டாராம். அதற்குக் கல்கி சிரித்துக் கொண்டே, "ஆமாம்; அடுத்த தடவை ஒரு வேளை சத்தியாக்கிரஹ இயக்கம் நடந்தால் நீங்களும் சிறைக்கு வர வேண்டுமல்லவா? அதற்காகவே தான் சிறைவாச சுகங்களைப் பற்றியே அதிகமாக எழுதி வருகிறேன்" (மூன்று மாதம் கடுங்காவல், 'பதிப்புரை', ப. iv) என்று பதில் சொன்னாராம். இப்படி ஒரு சிறை வாழ்வு அமையுமானால் எல்லோரும் போய் அனுபவித்து மகிழலாமே என்று எண்ணச் செய்யும் வகையில் நகைச்சுவை உணர்வு மேலிடப் பற்பல அனுபவங்களையும் நிகழ்ச்சிகளையும் இக் கட்டுரைகளின் வாயிலாக வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார் கல்கி. உள்ளத்தைத் தொடும் ஓர் உதாரணம் இதோ :

> "ஐ.சி.எஸ். துரை பால்ய வயதினர்; அவரை விட எனக்கு வயது குறைவு. விசாரணையின் போது அவர் பிராஸிகியூடிவ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து, 'எதிரிக்கு ஸெடிஷன் என்றால் என்னவென்று தெரியுமா எனக் கேளுங்கள்' என்றார். அவர் கேட்பதற்கு முன்னால் நான் பதில் சொன்னேன்; 'ஓ, நன்றாய்த் தெரியும், ஐயா! சென்ற ஒரு வருஷ காலமாக அந்தக் காரியந்தானே செய்து கொண்டிருந்தேன்' என்றேன். நிஜத்தைச் சொன்னதின் பலன் : ஒரு வருஷம் கடுங்காவல்."
>
> (மூன்று மாதம் கடுங்காவல், பக்,14-15)

'இதந்தரு மனையின் நீங்கி, இடர்மிகு சிறைப்பட்டாலும்' - 'ஒத்துழையாமை இயக்க'த்தில் கலந்து கொண்டு சிறை-சென்றாலும் - நகைச்சுவை உணர்வு கல்கியுடன் என்றும் 'ஒத்துழையாமல்' இருந்ததில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சியே போதிய சான்றாகும்.

'திருமகளும் கலைமகளும்'

'திருமகளும் கலைமகளும்' (1956) என்பது கல்வித் துறையைக் குறித்துக் 'கல்கி' இதழில் கல்கி எழுதிய 16 கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். கல்வித் துறையில் இன்று நாம் செய்ய வேண்டிய அடிப்படையான மாற்றங்களையும் மறுபரிசீலனைகளையும் சீர்திருத்தங்களையும் குறித்து இக் கட்டுரைகளில் கல்கி ஆழமாகச் சிந்தித்துள்ளார். இவ்வகையில் "நம்முடைய கல்வி முறை, பாடத் திட்டம், பரீட்சை முறை ஆகிய மூன்றும் அடியோடு மாறுதல் அடைந்தால்தான்

இந்தியாவில் வருங்கால சந்ததிகள் பிழைத்துக் கடைத்-தேறுவார்கள்" (ப.64) என்பது அவரது முடிந்த முடிவு ஆகும். தொடக்கக் கல்வி நிலையில் "ஒரு வேளைப் பள்ளிக்கூடம் - இரண்டரை மணிப் படிப்பு" (ப.92) என்பது நம் நாட்டின் கல்விப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு அவர் பரிந்துரைக்கும் வழி ஆகும். 'பரீட்சையில் குரங்குத்தனம்' என்ற கட்டுரையில் அவர் நமது கல்விமுறையில் காணப்படும் முக்கியமான குறைபாட்டை - அது 'வாழ்க்கையோடு ஒட்டி அமையவில்லை, கையினால் தொழில் செய்யும் பயிற்சி அளிக்கவில்லை' (ப.141) என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

'கலைச் செல்வம்'

'கலைச் செல்வம்' (1957) என்பது திரைப்படங்களையும் நாடகங்களையும் குறித்து கல்கி அவ்வப்போது எழுதிய விமர்சனக் கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். இத் தொகுப்பில் 26 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நிறை கண்ட இடத்து அதை நெஞ்சாரப் போற்றுவதும், குறை கண்ட இடத்து அஞ்சாமல் நயத்தக்க நாகரிகத்தோடு அதைச் சுட்டிக் காட்டுவதும் கல்கியின் இயல்புகள் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் இக் கட்டுரைகள் அமைந்துள்ளன. ஓர் உதாரணம்: 'மனோகரா' படத்தில் தீப்பொறி பறக்கும் காரசாரமான சொற்களில் அமைந்த மனோகரனின் இராஜசபைப் பேச்சினைச் 'சொற்பிரவாகம்', 'சொல் வெள்ளம்', 'சொற் பிரளயம்', 'சொல் சண்ட மாருதம்', 'சொல் அம்புமழை', 'சொல் குண்டு மழை', 'அணுக்குண்டு சொல் மாரி', 'எரிமலைச் சொற்பொழிவு' என்றெல்லாம் வானளாவப் போற்றி எழுதியுள்ள கல்கி, முத்தாய்ப்பாக, "தமிழ்மொழியை எவ்வளவு வன்மையாகக் கையாள முடியும் என்பதற்கு மனோகரனின் இராஜசபைப் பேச்சு நல்ல எடுத்துக்காட்டு" (ப.150) எனக் 'கலைஞர் தமி'ழுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார். 'ஔவையார்' நாடகத்திற்கு எழுதிய விமர்சனத்தில், "நடிப்புத் திறமையைப் பொறுத்த வரையில் இந்த நாடகத்தில் ('ஔவையார்') ஔவைப் பாட்டியாக நடிக்கும் ஸ்ரீடி.கே. ஷண்முகம் அவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டுமென்று சிபாரிசு செய்கிறேன்" (ப.14) என்று பரந்த மனத்துடன் கூறியிருப்பதும் இங்கே நினைவுகூரத்தக்கதாகும்

"நல்ல 'டெக்னிக்'கை விரும்புகிறவர்கள் வேறு படங்களைப் பார்க்கப் போங்கள். நல்ல இலட்சியம், நல்ல

நடிப்பு, நல்ல சிரிப்பு - இவற்றை விரும்புகிறவர்கள் 'நல்ல தம்பி' படத்தைப் பாருங்கள்" (ப.50) என்று கலைவாணரின் 'நல்ல தம்பி' படத்திற்கு எழுதிய விமர்சனத்தின் முடிவில் குறிப்பிட்டிருந்தார் கல்கி. அவரது கருத்தில் 'நல்ல படம்' என்பது தொழில் நுட்பத்தால் மட்டும் சிறப்பாக இருப்பதன்று; இலட்சியத்தால் - நடிப்பால் - சிரிப்பால் - சிறந்து விளங்கும் படமே ஆகும். திரைத்துறையைப் பொறுத்த வரையில், "பத்துப் படங்களுக்கு ஒரு படம் வீதமாவது திரைப்பட முதலாளிகள் இதுபோல் நம் நாட்டையும் நாட்டு மக்களையும் உயர்த்தக் கூடிய முறையில் தரமான படங்களை எடுக்க வேண்டும், அப் படங்களை வெளிநாட்டாரிடம் காட்டிப் பெருமை கொள்ள வேண்டும்" (ப.103) என்பதே கல்கியின் திட்டமான கருத்து ஆகும்.

'மகாத்மாவும் மகாகவியும்'

கல்கியின் ஆளுமையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியவர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் இருவர். ஒருவர், மகாத்மா காந்தி; மற்றொருவர், மகாகவி பாரதி, இருவரது வாழ்விலும் வாக்கிலும் கல்கி வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் ஆழ்ந்த ஈடுபாட்டையும் நன்கு புலப்படுத்தும் நூல் 'மகாத்மாவும் மகாகவியும்'. இந்நூலில் 17 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் 'கல்கி' பத்திரிகையில் வெளிவந்த தலையங்கங்களும் கட்டுரைகளும் ஆகும்.

"இமயத்தைக் காட்டிலும் உயர்ந்து நின்றவர்; கங்கை நதியைக் காட்டிலும் புனிதமானவர்; சூரியனை விடத் தேஜஸ் படைத்தவர்; தாயைக் காட்டிலும் கருணை உள்ளவர்; கடவுளைப் போல் நம்மைக் காக்க வந்தவர்; சத்தியத்தைப் போலச் சலியாது நின்றவர்" (ப.35) - என்பது உலகம் போற்றும் உத்தமர் காந்தி மகாத்மாவைப் பற்றிய கல்கியின் சொல்லோவியம் இது; "மகாத்மாவின் ஆத்ம சக்திதான் இனியும் இந்த உலகத்தையும் மனித வர்க்கத்தையும் காத்தருளப் போகிறது" (ப.58) - கல்கியின் உள்ளத்தில் அசைக்க முடியாத வகையில் என்றென்றும் குடிகொண்டிருந்த நம்பிக்கை இது!

கல்கியின் பார்வையில் பாரதியார் ஒரு 'மகாகவி'; 'வரகவி'; 'தெய்வத் தமிழ் மொழியில் அமுத கீதங்கள்' பாடியவர்; அவரது பாடல்கள் என்றென்றும் நமக்கு வழி காட்டியாகவும் உறுதுணையாகவும் இருக்கும் (பக்.89; 97;103).

'பாரதி பிறந்தார்'

'பாரதி பிறந்தார்' என்ற நூலில் கல்கியின் 9 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் முகப்புக் கட்டுரையாக அமைந்திருக்கும் 'பாரதி பிறந்தார்' தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு கட்டுரை ஆகும். 8.10.1944 'கல்கி' இதழில் வெளியான இந்த ஒரு கட்டுரையின் மூலமே அமரகவி பாரதியாரின் பிறப்பிடமாகிய எட்டயபுரத்தில் அவருடைய நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்காக நாற்பதாயிரம் ரூபாய் வசூல் ஆயிற்று என்பது தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு பெரிய அதிசயம் ஆகும். தமிழ்ப் பேரறிஞர் திரு.வி.க., தீரர் சத்தியமூர்த்தி, அன்னை கஸ்தூரிபாய், நாமக்கல் கவிஞர் ஆகியோரைக் குறித்து இந்நூலில் இடம் பெற்றிருக்கும் கட்டுரைகளும் சிறப்பானவை ஆகும்.

இது வரை கல்கியின் கட்டுரை நூல்கள் குறித்து அறிமுக நிலையில் சுருக்கமாகக் கண்டோம். இனி, கல்கியின் கட்டுரைக் கலை குறித்து ஆய்வு நோக்கில் காண்போம்.

1. 'தெளிவு தர மொழிந்திடுதல்'

'தெளிவுற வேயறிந் திடுதல்,
தெளிவுதர மொழிந்திடுதல்; சிந்திப்பார்க்கே
களி வளர உள்ளத்தில் ஆனந்தக் கனவுபல
காட்டல், கண்ணீர்த்
துளிவர உள்ளுருக்குதல்'

(பாரதியார் கவிதைகள், ப.405)

- இவை அனைத்தும் அருளி உதவுமாறு ஒளி வளரும் தமிழ் வாணியிடம் வேண்டிப் பாடினார் பாரதியார். தமிழ் வாணியோ கவிதையைப் பொறுத்த வரையில் பாரதியாரிடமும், உரைநடையைப் பொறுத்த வரையில் கல்கியிடமும் இந்த நான்கு பண்புகளும் பொருந்தி இருக்குமாறு அருள் பாலித்தாள் போலும்; கல்வியறிவு இல்லாப் பாமர மக்கள் முதலாக ஆங்கில மொழியை நன்கு கற்றறிந்த அறிஞர்கள் ஈறாக உள்ள தமிழ் மக்கள் அனைவரும் கல்கியின் உரைநடையை விரும்பிப் படித்ததற்கு மூல காரணமாக அமைந்தது தெளிவு என்னும் பண்பே ஆகும். அவர் கலை, கல்வி, மொழி, இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம், செய்தித்தாள், மதிப்புரை, பயணம், சமுதாயம், அரசியல், செம்பொருட் செல்வர் (பொது), பாரதியார், அண்ணல் காந்தி,

ராஜாஜி, கல்கி (தன்வரலாறு), அஞ்சலி, பிறர் நூல்களுக்கு முன்னுரை என எதை எழுதினும் - எப்பொருள் பற்றி எழுதினும், அதை - அப்பொருளை - 'தெளிவுறவே அறிந்து' (இதில் 'ஏ' என்பது தேற்ற ஏகாரம்) எழுதினார்; 'தெளிவுதர மொழிந்திட்டார்' (இது ஒரு பொருளை ஆற்றலோடு வெளியிடும் திறத்தை உணர்த்தும்). தெளிவுறவே அறிந்த ஒரு பொருளை, தெளிவு தர மொழிந்திடுவதற்கு, அவர் இக்காலத்து வழக்கில் உள்ள பேச்சுத் தமிழைப் பயன்படுத்திக் கொண்டார். எனவே எத்தகைய பொருளையும் எவ்விதத் துன்பமும் இன்றி தெளிவாகக் கூறுவதற்கு அவரால் முடிந்தது. ஓர் உதாரணம் வருமாறு :

"அற்பாயுளுக்குப் பெயர் போன நமது தேசத்தில் ஒரு மனிதர் 60 வயதிருந்தாலே எல்லாருக்கும் திருப்தி உண்டாகிவிடுகிறது. எழுபது வயதுக்குப் பிறகு ஒருவர் காலஞ்சென்றால் அநேகமாக யாரும் அதிருப்திப் படுவதில்லை. சரியான காலத்தில் அவர் சரியான காரியத்தைச் செய்ததாகவே எண்ணுகிறார்கள்!

இன்னும் ஒரு மனுஷர் எழுபத்தைந்து வயதுக்கு மேல் இருந்துவிட்டால் அவர் அநுசிதமான காரியத்தைச் செய்வதாகவே எண்ணிவிடுகிறோம். 'மனுஷருக்கு உயிர் ரொம்பக் கெட்டி!' என்று வியப்புடன் கூறுகிறோம். அப்படிப்பட்டவர் கடைசியாக மரணமடையும்போது 'முதிர்ந்த வயது, ஒரு மாதிரி அவர் காலம் ஆகிவிட்டது; இனிமேல் இருந்தால் அவருக்கும் கஷ்டம் - இருக்கிறவர்களுக்கும் கஷ்டந்தான்' என்று கூடப் பட்டவர்த்தனமாய்ப் பேசுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் எண்பத்தாறு வயது பூர்த்தியாகி, எண்பத்தேழாம் வயதில் காலஞ்சென்றார். ஆனாலும், நமக்கு இன்னமும் குறையாகத்தான் இருக்கிறது. ஏதோ நடக்கக் கூடாத காரியம் நடந்து விட்டதாகவே தோன்றுகிறது. பாழும் யமன் இன்னும் சில காலம் பொறுத்திருக்கக் கூடாதா என்று ஆத்திரப்படுகிறோம்.

தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் அப்படிப்பட்ட தொண்டைச் செய்து வந்தார். அத்தகைய தொண்டை இதற்கு முன் யாரும் செய்ததுமில்லை; இனிமேல் செய்யப்

போவதுமில்லை. அவருடைய மரணத்தினால் தமிழுலகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டம், பூர்த்தி செய்ய முடியாத நஷ்டமேயாகும்" (பாரதி பிறந்தார், ப.97).

-இது உ.வே. சாமிநாதய்யர் தமது எண்பத்தேழாம் வயதில் காலமான போது கல்கி எழுதிய இரங்கல் கட்டுரையில் இடம்பெற்றுள்ள ஒரு பகுதி ஆகும். 'அகரம் முதல் னகர இறுவாய்' என்பது போல், கல்கி இக் கட்டுரைக்கு 'வீழ்ந்த ஆலமரம்' எனச் சூட்டியிருக்கும் பொருள் பொதிந்த, அருமையான தலைப்பு, தம் ஊர்ப் பள்ளிக்கூடத்தின் அருகில் சாலை ஓரத்தில் வானோங்கி வளர்ந்திருக்கும் ஆலமரத்தைக் குறியீட்டு நோக்கில் நினைவுபடுத்தி அவர் கட்டுரையைத் தொடங்கி இருக்கும் பாங்கு, உ.வே.சா. தமிழ்த் தாய்க்குச் செய்திருக்கும் தொண்டுகளை எடுத்துக்காட்டி அவர் கட்டுரையை வளர்த்துச் சென்றிருக்கும் விதம், ஓலைச் சுவடியைத் தேடும் முயற்சியின் போது கறையான் படைகளுடன் உ.வே.சா. நடத்திய போரை அவர் வருணித்திருக்கும் கலை நயம், உ.வே.சா.வுக்கும் தமக்கும் இடையில் அவ்வப்போது ஏற்பட்ட சுவையான நிகழ்ச்சிகளை அவர் சொல்லியிருக்கும் முறை, கட்டுரையின் முடிவில் இப்போர்ப்பட்ட உ.வே.சா.வின் மீதும் பழி சுமத்திப் பேசிய உலகத்தின் இயல்பை விட்டுவிடாமல் அவர் சுட்டிக் காட்டி இருக்கும் திறம் என முதலில் இருந்து முடிவு வரை ஒரு சிறந்த கட்டுரை - மறைந்த மாமனிதர் ஒருவரைப் பற்றிய இரங்கல் கட்டுரை - எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான நல்லதோர் எடுத்துக்காட்டாக இக் கட்டுரை விளங்குகிறது. இன்னொன்று: உ.வே.சாமிநாதய்யருக்கு 'மகாமகோபாத்தியாய', 'தாக்ஷிணாத்ய கலாநிதி', 'திராவிட வித்யா பூஷணம்', 'டாக்டர்' என எத்தனையோ பெரிய பெரிய பட்டங்களும் சிறப்புப் பெயர்களும் இருந்தாலும், தமிழக மக்கள் அனைவரது நாவிலும் இயல்பாகவும் எளிதாகவும் நடமாடும் 'தமிழ்த்தாத்தா' என்ற பட்டத்தை உ.வே.சா.வின் எண்பதாண்டு நிறைவின் போது அவருக்குச் சூட்டியவர் கல்கியே ஆவார். கல்கியின் தமிழ் உயிரோட்டமான தமிழ் - உணர்ச்சித் தமிழ் - தெள்ளத் தெளிந்த தமிழ் - பேச்சுவழக்குத் தமிழ் - என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமா என்ன? 'தமிழ்த் தாத்தா' என்று தாம் அளித்திருக்கும் பட்டம் உ.வே.சா.வுக்கு எப்படிப் பொருந்திவரும் என்பதற்குக் கல்கி காட்டியிருக்கும் மூன்று காரணங்கள், முத்தமிழைப் போல் - முக்கனியைப் போல் -

மிகவும் சுவையானவை. அவற்றைக் கல்கியின் சொற்களிலேயே இங்கே காண்போம் :

"முதலாவது, ஔவையாருக்கு எப்படித் 'தமிழ்ப் பாட்டி' என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே, தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் 'தமிழ்த் தாத்தா' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு 'த்'களையும் நீக்கிவிட்டால், தாங்கள் 'தமிழ் தாதா' ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து, அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக் கணக்கானவர்களுக்குப் பயன்படும்படி செய்த தங்களைத் 'தமிழ் தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

மூன்றாவதாக, 'உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பது போல், தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கித் 'தமிழ் தா! தா!', 'தமிழ் நூல்களைத் தா! தா!' என்று கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரித்தே தீர வேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னமோ அந்தப் பட்டத்தால் தான் தங்களை அழைப்பேன். ஏனென்றால், 'மகாமகோபாத்தியாய', 'தாக்ஷிணாத்ய கலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்களுடைய வசன நடையைப் போல் எளிதாயிருக்கிறது."

(மேற்கோள் : சுந்தா,
பொன்னியின் புதல்வர், பக்.306-307)

உ.வே.சா. வுக்குக் கல்கி இட்ட 'தமிழ்த் தாத்தா' என்ற பட்டப் பெயரே நிலைத்தது என்பதும், உ.வே.சா. வும் இதனை 'நுண்ணிதின் மகிழ்ந்து' ஏற்றார் என்பதும் வரலாறு காட்டும் உண்மைகள் ஆகும்.

2. சுவைபடக் கூறுதல்

தெளிவு தர மொழிந்திடுதலுக்கு அடுத்து, கல்கி தம் கட்டுரை உருவாக்கத்தின் போது மிகுந்த கருத்துச் செலுத்தியது சுவையாகக் கூறுவதில்தான். இங்ஙனம் சுவையுள்ளதாக ஒரு பொருளைக் கூறுவதற்கு அவருக்குப் பெரிதும் கை கொடுத்தவை நகைச்சுவையும் குட்டிக் கதைகளும் வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகளுமே (Anecdotes) ஆகும். கல்கியை ஒரு கட்டுரையாளராகத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்த 'ஏட்டிக்குப் போட்டி' என்ற கட்டுரை இதற்கு மிகப் பொருத்தமான ஓர் உதாரணம் ஆகும். எதற்கெடுத்தாலும் நாளும் நல்ல நேரமும் சகுனமும் சோதிடமும் பஞ்சாங்கமும் பார்ப்பதிலேயே தம் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழிக்கும் மனிதர்களின் போக்கை அக் கட்டுரையில் அவர் தமக்கே உரிய நகைச்சுவையோடும் அங்கதச் சுவையோடும் மென்மையான நடையில் சாடியிருக்கிறார். மேலும் தம் கருத்திற்கு வலிமையும் சுவையும் சேர்க்கும் விதத்தில் அக் கட்டுரையில் அவர் சொந்த அனுபவத்தில் நிகழ்ந்த ஓர் உண்மைச் சம்பவத்தையும், ஒரு நாட்டுப்புறப் பழங்கதையையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். சுவையான அப் பழங்கதை இதோ:

> "வைகறைப் போதில் இரட்டைக் காக்கையைக் கண்டால் நல்ல சகுனமென்று ஓர் இராஜாவுக்கு யாரோ சொன்னார்களாம். அவ்வரசன் தன் சேவகன் ஒருவனைக் காலையில் இரட்டைக் காக்கை உட்கார்ந்திருக்குமிடம் பார்த்து வந்து சொல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அச்சேவகன் ஒருநாள் காலையில் ஜோடிக் காக்கைகளை ஓரிடத்தில் கண்டு ஓட்டமாக ஓடிவந்து அரசனிடம் தெரிவித்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இராஜா போவதற்குள் காக்கை பறந்து போய்விட்டது. அரசன் கோபங்கொண்டு சேவகனை நையப் புடைத்தான். அடிப்பட்ட சேவகன் இராஜனைப் பார்த்து, 'அரசே; வைகறையில் இரட்டைக் காக்கை பார்த்ததற்கு எனக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது' என்றான். இந்தக் காலத்தில் என்றால், அந்தச் சேவகனை அதிகப் பிரசங்கித்தனத்திற்கென்று வேலையை விட்டுத் தள்ளியிருப்பார்கள். ஆனால் அந்தக் காலம் வேறு; அரசன் வெட்கிப்போய்ச் சேவகனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்" (ஏட்டிக்குப் போட்டி, ப.26)

இதில் இந்தக் காலத்திற்கும் அந்தக் காலத்திற்கும் இடையிலான வேறுபாட்டைச் சுட்டிக் காட்டும் வகையில் 'அரசன் வெட்கிப் போய்ச் சேவகனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்' என எழுதியிருப்பது கல்கியின் தனிமுத்திரை-யாகும்.

இதுபோல் நாட்டுப்புறக் கதைகளையும், பிறநாட்டுக் குட்டிக் கதைகளையும், தெனாலிராமன் கதைகளையும், வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புகளையும் கையாண்டு சுவைபட எழுதியுள்ள இடங்களைக் கல்கியின் கட்டுரைகளில் பரவலாகக் காணலாம்.

3. எளிமையாகச் சொல்லுதல்

தெளிவாகவும் சுவையாகவும் மட்டுமன்றி, எதையும் எளிமையாகச் சொல்ல வேண்டும், அப்போதுதான் ஒரு கட்டுரை வாயிலாக ஆசிரியர் சொல்ல விரும்பும் செய்தி எல்லோரையும் சென்று சேரும் என்று ஆழமாக நம்பினார் கல்கி. இவ்வகையில் 'பாஞ்சாலி சபத'த்திற்கு எழுதிய முகவுரையில், "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்" (ப.357) என்று பாரதியார் வகுத்துத் தந்த நெறியையே கல்கி தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார்; இக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அவர் தம் படைப்புக்கள் பலவற்றையும் படைத்துத் தந்தார். குறிப்பாக, சொல்லாட்சியிலும் நடைப் போக்கிலும் ஓர் எளிமைப் பண்பினைக் கையாண்டு, 'ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி' எழுதியதுடன், ஒரு கலைப் படைப்புக்கு வேண்டிய நயங்கள் குறைவுபடாமலும் தம் கட்டுரை இலக்கியத்தை உருவாக்கினார் கல்கி. பதச் சோறாக, 'தமிழ் உயர்க!' என்ற அவரது கட்டுரையின் தொடக்கப் பகுதியை இங்கே காண்போம் :

> "தமிழ்நாட்டில் தமிழ்மொழி தழைத்து வளர்வது மட்டும் போதாது; உயர்ந்து ஓங்கவும் வேண்டும். தமிழ்

தழைப்பதற்குரிய முயற்சிகளோடு தமிழை உயர்த்துவதற்குரிய முறைகளையும் தமிழ்மக்கள் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டும்" (திருமகளும் கலைமகளும், ப.163).

கல்கிக்கு விருப்பமான நடையிலேயே சொல்ல வேண்டும் என்றால், 'அக்ஷர லக்ஷம் பெறுமான வார்த்தைகள் இவை!' ஒரு முறை படித்தாலே ஒரு நல்ல பொன்மொழி போல் நம் இதய சிம்மாசனத்தில் ஏறி அமர்ந்து கொள்ளும் அபூர்வமான எளிமைப் பண்பினைக் கொண்ட - அதே நேரத்தில் ஆழமான சிந்தனையையும் தூண்டும் வகையில் அமைந்த - அருமையான கருத்து இது. 'தமிழ் வாழ்க!' என்றோ, 'தமிழ் வளர்க!' என்றோ உணர்ச்சி மிக்க குரலில் ஆயிரம் மேடைகளில் ஏறி முழங்குவதாலோ, ஆயிரம் கோயில்களிலே சத்தியம் செய்து சொல்லுவதாலோ தமிழ் வாழ்ந்து விடாது; வளர்ந்தும் விடாது. தமிழ் துறைதொறும் துறைதொறும் தழைப்பதற்கு உரிய முயற்சிகளோடு, தமிழை உயர்த்துவதற்கு உரிய முறைகளையும் தமிழ் மக்கள் தெரிந்து கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் தழைத்து வளரும்; உயர்ந்து ஓங்கும். பாவேந்தர் பாரதிதாசன் 'தமிழியக்க'த்தில் குறிப்பிட்டிருப்பது போல், 'செந்தமிழ்', 'செழுந்தமிழ்' ஆகும். எனவே, கல்கியின் கருத்தில் 'தமிழ் உயர்க!' என்பதுவே இன்றைய சூழலில் ஒவ்வொரு தமிழனின் நாவும் பொருளுணர்ந்து உச்சரிக்க வேண்டிய தாரக மந்திரம் ஆகும்.

இதே கட்டுரையில் பிறிதோர் இடத்தில் தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் இன்னமும் தமிழ்மகள் தாழ்வுற்றிருக்கும் அவல நிலையை - தமிழாசிரியர்களுடைய சம்பளம் மட்டும் மற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தைக் காட்டிலும் குறைவாக இருக்கும் கொடுமையை - எடுத்துக்காட்டும்போது, கல்கி தொடுத்திருக்கும் இரு கூர்மையான கேள்விக் கணைகள் வருமாறு :

"தங்கச் சிங்காதனத்தில் தமிழ்த்தாயை அமரச் செய்துவிட்டு, அவள் பழைய கந்தல் துணிகளையே உடுத்தியிருக்கும்படி விடலாமா?

தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யும் தமிழ் ஆசிரியர்களை ஏழைமைக்கும் ஏளனத்துக்கும் ஆளாக விட்டிருக்கலாமா?" (ப.165).

இதுபோல் கலைநயம் களிநடம் புரியும் அழகான இடங்களைக் கல்கியின் கட்டுரைத் தமிழில் ஆங்காங்கே கண்டு மகிழலாம்.

4. சிந்தனைத் திறம் விளங்க எழுதுதல்

"கதை எழுத நிகழ்ச்சிகள் உதவுதல் போலக் கட்டுரை எழுதச் சிந்தனை உதவுகின்றது. ஒரு பொருளைப் பற்றிப் பரந்த அறிவும் ஆழ்ந்த சிந்தனையும் இருந்தாலன்றி அது பற்றிப் பல பக்கங்கள் கொண்ட ஒரு நூலை எழுதுதல் முடியாது. மற்றொன்று விரித்தல் என்னும் குற்றமின்றி, எடுத்துக்கொண்ட பொருளைப் பலவாறாகச் சிந்தித்து விரிந்த நூலாக அமைத்தல் எல்லோருக்கும் எளிதன்று" என்பர் அறிஞர் (வி. செல்வநாயகம், தமிழ் உரைநடை வரலாறு, பக்.134-135). இக்கருத்தினை உறுதிப்படுத்தும் வகையில் கல்கி கட்டுரை நூல்கள் பலவற்றை எழுதியிருக்கிறார். தமிழிசை இயக்கம் தொடர்பாக அவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் இங்கே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை ஆகும். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் 'தமிழிசை இயக்கம்' தொடங்குவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழிசை பற்றிய தனிப்பட்ட, ஆழ்ந்த சிந்தனைகளைக் கல்கி தம் கட்டுரைகளில் அழுத்தம் திருத்தமான நடையில் ஆணித்தரமாக வெளியிட்டு வந்திருக்கிறார். ஓர் உதாரணம் இதோ:

> "தமிழ்நாட்டுக்குப் பலர் பலவித பெருமைகளைக் கூறுவார்கள். 'தமிழிலே உள்ளது போன்ற சிறந்த இலக்கியங்கள் உலகில் வேறு எந்த பாஷையிலும் இல்லை' என்று சொன்னால், அதைப் பற்றி விவாதிப்பதற்கு இடமுண்டு. 'தமிழ் இலக்கியங்களைக் காட்டிலும் சிறந்த இலக்கியங்கள் வேறு மொழிகளில் இருக்கத்தான் இருக்கின்றன' என்று சிலர் வாதிக்கலாம்; சாதிக்கவும் செய்யலாம். ஆனால் இரண்டு கலைத் துறைகளில் தமிழகம் இணையற்ற பெருமை வாய்ந்தது என்பதைப் பற்றி யாருமே ஆட்சேபிக்க மாட்டார்கள்.
>
> தமிழ்நாட்டில் உள்ளவை போன்ற சிற்பக் கலையின் சிகரமான ஆலயங்கள் உலகில் வேறு எங்கும் இல்லை.
>
> தமிழ்நாட்டில் வழங்கும் கர்நாடக சங்கீதத்தைப் போன்ற சங்கீதம் உலகில் வேறு எங்கேயும் கிடையாது.

ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும் ஐரோப்பிய சங்கீதத்தையும் தமிழர்கள் பயின்று தேர்ச்சி பெற்றுவிடலாம்.

ஆனால் கர்நாடக சங்கீதத்துக்குரிய ஒரு கன ராகத்தை வேறு எந்த நாட்டு மகா சங்கீத வித்வானாலும் எவ்வளவு முயன்றாலும் ஆலாபனம் செய்ய முடியாது".

(சங்கீத யோகம், 'ஆசிரியர் முகவுரை', பக்xv -xvi).

தமிழிசை இயக்கக் கட்டுரைகளின் தொகுப்பான 'சங்கீத யோக'த்திற்கு எழுதிய நீண்ட முகவுரையில் கல்கி இக் கருத்தினைத் தெளிவாகவும் திண்ணமாகவும் தெரிவித்-திருக்கிறார். இங்ஙனம் கர்நாடக சங்கீதத்தின் தனிப்பெருஞ் சிறப்பினை நன்கு அடையாளம் காட்டிய கல்கி, 'கர்நாடக சங்கீதம் தமிழ்நாட்டுக்கு உரியது' என்ற உண்மையையும் தக்க சான்றுகளைக் காட்டித் தமக்கே உரிய பாணியில் நிறுவியும் உள்ளார்.[1] இவ் வகையில் மனங்கொளத்தக்க அவரது கருத்து வருமாறு:

"ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அப்பர் சம்பந்தர் சுந்தரர் முதலிய நாயன்மார்கள் கையாண்ட அற்புத இசைக்கலை தான் காவேரி தீரத்திலும் பொருனை நதிக்கரையிலும் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து, தற்போதைய உன்னத நிலையை அடைந்திருக்கிறது.

எனவே தமிழ்நாட்டுக்குரிய சங்கீதக் கலையைத் தமிழ்மொழியின் மூலமாக வளர்க்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் நடக்கும் கச்சேரிகளில் தமிழ்ப்பாட்டு-களை அதிகமாகக் கையாள வேண்டும் என்றும் சொல்வோரின் கட்சி மிகவும் நியாயமானதாகும். அத்தகைய நியாயமான இயக்கத்தை எதிர்ப்பதும், அப்படி எதிர்க்கும் போது, தமிழ் மொழியையே குறைவுபடுத்திப் பேசுவதும் மிகப் பெருந்தவறு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை" (சங்கீத யோகம், 'ஆசிரியர் முகவுரை', பக்xvi-xvii).

இங்கே தமிழிசை பற்றிய தம் ஆழ்ந்த சிந்தனையை நடுநிலையோடு வெளியிட்டிருக்கிறார் கல்கி.

உயர்ந்த நாடகங்களைப் பற்றியும், சிறந்த திரைப்படங்-களைப் பற்றியும் பத்திரிகைகளில் அவ்வப்போது எழுதிய விமர்சனங்களிலும் கல்கி தம் தனிப்பட்ட சிந்தனைகளைப்

பதிவு செய்திருக்கிறார். அவரது கருத்தில் யார் உண்மையான ஆத்திகன் தெரியுமா? இதோ கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் 'நல்ல தம்பி' படத்திற்கு எழுதிய விமர்சனத்தில் கல்கியே இவ் வினாவிற்கான விடையினையும் விளக்கிக் கூறுகின்றார் பாருங்கள் :

> "ஒரு மனிதன் கோயிலுக்குப் போக வேண்டாம்; மற்ற வெளிப்படையான மதாசாரங்களை அனுஷ்டிக்க வேண்டாம்.
>
> புத்தர், ஏசு, மகாத்மா இவர்களைப் போற்றி, இவர்கள் காட்டிய வழியில் தன் வாழ்க்கையை ஒருவன் நடத்தினான் என்றால் அவனே உண்மையான ஆஸ்திகன்" (கலைச் செல்வம், ப.49).

இதே போல் 'தமிழ்நாட்டுப் பெர்னாட்ஷா' என்று நெஞ்சாரப் போற்றிய அண்ணாவின் 'வேலைக்காரி' படத்திற்கு எழுதிய விமர்சனத்திலும் எது உண்மையான ஆத்திகம் என்பதைத் தமக்கே உரிய பாணியில் கல்கி விளக்கிக் காட்டுகிறார். அவரது விளக்கம் வருமாறு :

> "உண்மையான கடவுள் நம்பிக்கையானது நாஸ்திகப் பிரசாரங்களினால் அசைக்க முடியாததாயிருக்க வேண்டும்.
>
> கடவுளுக்கு நாம் சப்பைக் கட்டுக் கட்ட வேண்டியதில்லை. 'கடவுள் இல்லை' என்பதற்குரிய வாதங்கள் எல்லாவற்றையும் கேட்ட பிறகும் நிலைத்திருக்கும் கடவுள் நம்பிக்கை தான் உண்மையான ஆஸ்திகம். அறிவுக்குத் திரை போட்டு மறைத்துக் கடவுளை நம்பச் செய்வது உண்மையான ஆஸ்திகம் அல்ல" (கலைச் செல்வம், ப.52).

இத்தகைய சீரிய சிந்தனையின் பதிவுகளையும் வெளிப்பாடுகளையும் கல்கியின் கட்டுரைகளில் பற்பல இடங்களில் காண முடிகின்றது.

சுருங்கக் கூறின், 'மொழித் தெளிவே தகளியாக, இலக்கியச் சுவையே நெய்யாக, எளிமைப் பண்பே இடுதிரியாக, சிந்தனையே சுட'ராகக் கொண்ட கட்டுரை விளக்கினைத் தமிழ் இலக்கிய உலகில் ஏற்றி வைத்துத் தனிப்பெருஞ் சாதனையைப் படைத்துள்ளார் கல்கி எனலாம்.

5. நடைச் சித்திரம்

"நடைச் சித்திரம் என்பது வேற்று நாட்டு இலக்கியத்தின் சிறந்த ஆபரணமாயிருந்தும், நமது தமிழ்நாட்டிலும் நிலைத்துவிட்டது...

– க.நா.சு.*

ஆங்கிலத்தில் ஏ.ஜி. கார்ட்னர் என்பார் எழுதிய 'சமூக நிலைதாங்கிகள்' (Pillars of Society), 'தீர்க்கதரிசிகளும் மறையோரும் மன்னர்களும்' (Prophets, Priests and Kings) என்னும் வாழ்க்கைச் சித்திரங்கள் - வாழ்க்கையில் வெற்றி பெற்ற பெரியோர்களைப் பற்றிய சொல்லோவியங்கள் - விரும்பிப் படிக்கப் பெற்றன. இவை 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்ற எழுத்தாளர் வ.ரா.வின் (1889-1951) நெஞ்சைக் கொள்ளை கொண்டன. இத்தகைய வாழ்க்கைச் சித்திரங்களை - பேனா முனைச் சித்திரங்களை - தமிழிலும் தீட்ட வேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு அவரது சித்தத்தில் எழுந்தது. அதன் விளைவாக 'நடைச் சித்திரம்' என்னும் புதிய இலக்கிய வகை தமிழுக்கு வரவாயிற்று. இவ்வகையில் 'நடைச் சித்திரம்' (1940), 'தமிழ்ப் பெரியோர்கள்' (1943), 'வாழ்க்கை விநோதங்கள்' (1947) என்னும் மூன்று நூல்களை அவரது படைப்புள்ளம் ஈன்று புறந்தந்தது. வாழ்க்கையில் தம் உழைப்பால் முன்னேறிய பெரியவர்களைப் பற்றி மட்டுமன்றி, சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏழை எளிய மக்களைப் பற்றியும் நடைச் சித்திரங்களை உருவாக்கினார் வ.ரா. இது இத்துறையில் அவர் செய்துகாட்டிய ஒரு பெரும் புரட்சியாகும். வ.ரா.வின் நடைச் சித்திரங்களுக்குத் தமிழ் வாசகர்கள் இடையே கிடைத்த பெரும் வரவேற்பைக் கண்ட கல்கி, தாமும் அதுபோல் தமிழில் நடைச் சித்திரங்களை உருவாக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டார். அந்த விருப்பத்தின் வெளிப்பாடே அவரது 'யார் இந்த மனிதர்கள்?' என்ற நூல் ஆகும்.

கல்கியின் நடைச் சித்திரங்கள்

மனிதர்களிலே நான்கு வகையினர் உண்டு. 'தேடிச் சோறு நிதம் தின்று, பல சின்னஞ்சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்பம் மிக உழன்று, பிறர் வாடப் பல செயல்கள் செய்து, நரை

* க.நா. சுப்ரமணியம், படித்திருக்கிறீர்களா (முதல் தொகுதி), ப.72.

கூடிக் கிழப்பருவம் எய்திப் பின் மாய்வோர்' ஒரு சாரார். இவர்களை 'வேடிக்கை மனிதர்கள்' எனச் சுட்டுவார் பாரதியார். எவ்விதக் குறிக்கோளும் கொள்கையும் இன்றி 'வந்தான், வாழ்ந்தான், போனான்' என்றாற் போல் தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வோர் பிறிதொரு சாரார். இவர்களை நாம் 'வாடிக்கை மனிதர்கள்' எனக் குறிக்கலாம். மூன்றாவதாக, உண்பதிலும் உடுப்பதிலும் உறங்குவதிலுமே தம் வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழிப்போர் உண்டு. இவர்கள் 'கேளிக்கை மனிதர்கள்' ஆவர். 'பிள்ளைச் சிறுவிண்ணப்பம்', 'பிள்ளைப் பெருவிண்ணப்பம்' என்றாற் போல் கடவுளே ஆனாலும் கடுகு உள்ளத்தோடு சிறியதும் பெரியதுமான விண்ணப்பங்களைப் போடுவதிலேயே தம் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருப்போர் நான்காம் வகையினர் ஆவர். இவர்களைக் 'கோரிக்கை மனிதர்கள்' என அழைப்பது பொருத்தமாக இருக்கும். 'வேடிக்கை மனிதர்கள்', 'வாடிக்கை மனிதர்கள்', 'கேளிக்கை மனிதர்கள்', 'கோரிக்கை மனிதர்கள்' என்னும் இந்த நால்வகை மனிதர்களிலிருந்து வேறுபட்டுத் தம் வாழ்வில் எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்கொண்டு, வெற்றி பெற்றுச் சாதனை படைக்கும் மனிதர்கள் உண்டு; வாழ்வின் தடைக் கற்களைப் படிக்கற்கள் ஆக்கி, சிங்க நடை போட்டுச் சிகரத்தில் ஏறிப் பெரும்புகழ் பெற்றுச் சிறக்கும் மனிதர்கள் உண்டு. இவர்களை 'முத்திரை மனிதர்கள்' எனச் சிறப்பித்துக் கூறலாம். இத்தகு பீடும் பெருமையும் வாய்ந்த முத்திரை மனிதர்கள் 41 பேரைப் பற்றி 'யார் இந்த மனிதர்கள்?' என்ற தலைப்பில் நயத்தகு நடைச் சித்திரங்களைப் படைத்துத் தந்துள்ளார் கல்கி. இவ்வகையில், கலைத் துறை, இலக்கியத் துறை, திரைப்படத் துறை, பத்திரிகைத் துறை, அரசியல் துறை முதலான பல்வேறு துறைகளைச் சார்ந்த சாதனையாளர்களைப் பற்றி அவர் 'நடைச் சித்திரம்' அல்லது 'வாழ்க்கைச் சித்திரம்' என்னும் புதிய இலக்கிய வடிவில் தம் கருத்துக்களையும் கணிப்புகளையும் பதிவு செய்துள்ளார்.

'யார் இந்த மனிதர்கள்?' நூலின் முதற்பதிப்பு சென்னை, பாரதி பதிப்பகத்தின் சார்பில் 1957-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்நூலுக்குக் கல்கி சூட்டிய பெயர் அத்துணைச் சிறப்பாக அமையவில்லை; நூலின் உள்ளடக்கத்தைப் புலப்படுத்துவதாகவும் இல்லை. அதனால்தான், கல்கியின் நூல்களிலே பலருக்கும் போய்ச் சேர வேண்டிய தனிப்பெருஞ் சிறப்பும் சீர்மையும் வாய்ந்த இந்த நூல். தமிழ் வாசகர்கள் மத்தியிலே அவ்வளவாகச் சென்று சேரவில்லை. இனி, கல்கி

படைத்துள்ள நடைச் சித்திரங்களின் அமைப்பும் அழகும் குறித்துக் காண்போம்.

திரு.வி.க. பற்றிய இரு நடைச் சித்திரங்கள்

வ.ரா. தமிழில் நடைச்சித்திரம் என்ற இலக்கிய வகையின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தார்; கல்கியோ நடைச் சித்திரத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தார். இருவரும் அவரவர் நோக்கிலும் போக்கிலும் நடைச் சித்திரங்களைப் படைத்துள்ளனர். இக் கருத்தினை மெய்ப்பிக்கும் வகையில் ஓர் உதாரணத்தினை இங்கே காண்போம். தமிழ்த் தென்றல் திரு.வி.க., கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், 'ஆனந்த விகடன்' பத்திரிகை ஆசிரியர் எஸ்.எஸ். வாசன் ஆகிய மூவரையும் பற்றி வ.ரா.வும் கல்கியும் வரைந்துள்ள நடைச் சித்திரங்களை மட்டும் நிரலே காண்போம்

> "பாலுக்கு நிகரான கதர் உடையைத் தரித்துக் கொண்டு, இடது கை ஆட்காட்டி விரலால் எச்சரிக்கைப் பாணப் பிரயோகம் செய்வது போல, உச்சிக் குடுமி சகிதமாய், நெற்றியில் அழகான சந்தனப் பொட்டுத் துலங்க, அதோ தேன்மொழிப் பிரசங்கம் செய்கிறாரே, அவரை உங்களுக்குத் தெரியுமா? அவர்தான், குழைந்து குழைந்து கொஞ்சுவதைப் போல் பேசும் கலியாண சுந்தர முதலியார்" (தமிழ்ப் பெரியார்கள், பக்.49-50).

-இது 'திரு.வி.கலியாணசுந்தர முதலியார்' என்ற தலைப்பில் திரு.வி.க.வைக் குறித்து வரா. எழுதியிருக்கும் நடைச் சித்திரத்தின் தொடக்கம். 'பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே' என்று தமிழ் ஞானசம்பந்தர் சிவபெருமானை அடையாளம் காட்டியது போல் இங்கே திரு.வி.க.வை அவரது புறத்தோற்றம் கொண்டு அடையாளப்படுத்தியுள்ளார் வ.ரா.

> "தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாக விளங்கினார்; எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார்; 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார்; தமக்கென்று வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்; 'அன்பே சிவம்' என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத்திருந்தார். இன்று அன்பிலும் சிவத்திலும் இரண்டறக் கலந்துவிட்டார் திரு.வி. கலியாணசுந்தர முனிவர்" (யார் இந்த மனிதர்கள்?, ப.174).

- இது 'தமிழ்த் தந்தை திரு.வி.க.' என்ற தலைப்பில் திரு.வி.க.வைக் குறித்துக் கல்கி தீட்டியிருக்கும் நடைச் சித்திரத்தின் தொடக்கம். மறந்தும் எங்கும் சாதிப் பெயரால் சுட்டாமல் 'திரு.வி.கலியாணசுந்தரர்', 'திரு.வி.கலியாண-சுந்தரனார்', 'திரு.வி. கலியாணசுந்தர முனிவர்', 'திரு.வி. கலியாண சுந்தர வள்ளல்', 'ஞானி', 'சாது', என்றே கல்கி, தம் நடைச் சித்திரத்தில் உள்ளும் புறமும் புனிதராய் வாழ்ந்து காட்டிய திரு.வி.க.வைச் சுட்டியிருப்பது ஒரு சிறப்பு; நயம். ஒரு சிறந்த நடைச் சித்திரம் தன் நாயகரின் புறத்தோற்றத்தை வருணிப்பதோடு மட்டும் நின்றுவிடாது; அதற்கு மேலும் ஒருபடி சென்று, அவரது ஒட்டுமொத்த வாழ்நாள் பணியையும் ஆளுமையையும் நயமாகவும் நுட்பமாகவும் உணர்த்தி நிற்கும். இதோ திரு.வி.க. பற்றிய கல்கியின் நடைச் சித்திரத்தில் இருந்து பிறிதொரு பகுதி :

> "அறுபத்து மூன்று நாயன்மார்கள் வானுலகில் வந்திருந்து 'எங்களுடன் சேர்ந்து அறுபத்து நால்வராக ஆகிவிடுங்கள்!' என்று அழைத்திருப்பார்கள்.
>
> பன்னிரண்டு ஆழ்வார்களும் விஜயம் செய்து 'எங்களுடன் பதின்மூன்றாவது ஆழ்வாராக அமருக!' என்று கூறியிருப்பார்கள்.
>
> புத்த பிக்ஷுக்களும் சமண முனிவர்களும் கிறிஸ்துவ தபோதனர்களும் வந்து நல்வரவு கூறியிருப்பார்கள்.
>
> எனினும், திரு.வி.க. அவர்கள், 'யான் அத்துணைச் சிறப்புக்கு உரியவனல்லேன்! தமிழகத்திலேயே இன்னமும் பணிசெய்து கிடப்பேன்!' என்றுதான் மறுமொழி சொல்லியிருப்பார்" (ப.175).

திரு.வி.க.வின் சமரச உணர்வையும் தொண்டு மனப்பான்மையையும் இதனினும் வேறு சொற்களில் படம்பிடித்துக் காட்ட முடியுமா என்ன?

நடைச் சித்திரம் புலப்படுத்தும் ஆளுமைக் கூறுகள்

'ஒருநாள் செல்லலம், இருநாள் செல்லலம்
பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்,
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'

(புறநானூறு, 101)

- என அதியமான் நெடுமான் அஞ்சியின் கொடைப் பண்பினைப் போற்றிப் புகழ்வார் ஔவையார். இதுபோல் கல்கியும் ஒருநாள் அல்ல, இருநாள் அல்ல, பலநாள் பயின்று, பலமுறை கலந்து பழகிய பின்னரே தம் உள்ளங்கவர் மனிதர்களைப் பற்றிய நடைச் சித்திரங்களைத் தீட்டியுள்ளார். அவர்களின் சிறந்த பண்புநலன்களும் உயர்ந்த பண்பாடுகளும் அபூர்வமான ஆற்றல்களும் நன்கு புலனாகும் வண்ணம் அவர் அவற்றை உருவாக்கியுள்ளார். ஓர் உதாரணம் இதோ :

> "மகாகவி பாரதியார் தான் ஆசிரியர் வ.ரா. அவர்களின் மாதா பிதா குரு தெய்வம். பாரதியாருடைய பெருமையை இந்தியாவும் உலகும் அறியும்படி செய்வதே வ.ரா.வின் புருஷார்த்தம். தமிழ்மொழியிடம் அன்பு அவருடைய மூச்சுக் காற்று. சீர்திருத்த ஆவேசம் அவருடைய மனம், புத்தி, சித்தம். சுதந்திரப் பற்று அவருடைய உயிர். தன்மதிப்பு அவருடைய ஆத்மா. எழுத்தாளரின் மேன்மை, முக்கியமாக, தமிழ் எழுத்தாளரின் முன்னேற்றம், அவருடைய மதம்."
>
> *(யார் இந்த மனிதர்கள்?, ப.33)*

- தமிழில் 'நடைச்சித்திரம்' என்னும் புதியதோர் இலக்கிய வகையைத் தோற்றுவித்த எழுத்தாளர் வ.ரா.வுக்குக் கல்கி தம் நடைச்சித்திரத்தில் சூட்டியிருக்கும் புகழாரம் இது. இதில் வ.ரா.வின் ஆளுமையை - அதன் அனைத்துக் கூறுகளையும் - ஒரு முப்பரிமாண ஓவியம் போல் துல்லியமாகவும் தெள்ளத் தெளிவாகவும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் கல்கி. மேலும் அவர், 'தமிழ்நாட்டின் முதல் எழுத்தாளர்' என்றும், 'தமிழ் எழுத்தாளர்களின் முதல்வர்' என்றும், 'தமிழ் எழுத்தாளரின் நிரந்தரத் தலைவர்' என்றும், 'பேராசிரியர் வ.ரா.' என்றும் வரா.வின் அறிவையும் ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் தன் மதிப்பையும் திறமையையும் வரிக்கு வரி - வார்த்தைக்கு வார்த்தை - வானளாவப் போற்றியிருப்பதைப் படிப்பவர் மனத்தில் வ.ரா. என்றைக்கும் மறக்க முடியாதபடி பதிந்து விடுவார். மற்றொரு வகையிலும் இந் நடைச் சித்திரம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். பிறப்பு - வளர்ப்பு - மறைவு என்றாற் போல் வாழ்க்கை வரலாற்றை நிரல்பட எழுதிக் கொண்டு செல்லாமல் - ஆண்டுவாரியாக நிகழ்ச்சிகளை அடுக்கிக் கூறிக் கொண்டு செல்லாமல் - வ.ரா. என்ற மாபெரும் எழுத்தாளரின் ஆளுமையை ஒன்பதே பக்கங்களின் அளவில்

அமைந்த இந் நடைச் சித்திரத்தின் மூலம் கச்சிதமாக அறிமுகம் செய்துள்ளார் கல்கி.

நடைச் சித்திரத்தின் பண்பும் பயனும்

வாழ்க்கையில் வெற்றி பெற்ற - சாதனை புரிந்த - மனிதர்களைப் பற்றிய நடைச் சித்திரங்களையே கல்கி தம் நூலில் முழுக்க முழுக்கப் படைத்துத் தந்துள்ளார். எனவே, இவற்றை மனம் கலந்து படிப்பதன் விளைவாக, வாசகர்களுக்கு அளவற்ற நன்மைகள் ஏற்படுகின்றன. அவர்களது மனத்தில் நம்பிக்கை ஊற்றெடுக்கின்றது; ஆளுமையில் அழகும் மேன்மையும் ஒளியும் கூடுகின்றன; சுருங்கக் கூறின், அவர்களின் வாழ்க்கையே படிப்படியாகப் பண்பாடும் முதிர்ச்சியும் அடையத் தொடங்குகின்றது. கல்கியே தம் நடைச் சித்திரம் ஒன்றில் குறிப்பிடுவது போல், "சாஸ்திரியார் (மகாகனம் சீனிவாசன்) போன்றவர்கள் ஒரு நாட்டில் வாழ்ந்திருந்தால் அதுவே அந்நாடு அடையும் பெரும் பிரயோஜனமாகும். அவர்கள் பொது ஊழியம் என்று ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தாலும் அவர்களுடைய பண்பாட்டில் சிறந்த வாழ்க்கையே நாட்டுக்கு அளவற்ற நன்மையைத் தரக்கூடியது. அவர்களுடைய பண்பட்ட வாழ்க்கையினால் அவர்கள் வசிக்கும் நாட்டு மக்கள் எல்லாருடைய வாழ்க்கையும் அழகு பெறுகிறது; மேன்மை பெறுகிறது; ஒளி பெறுகிறது" (யார் இந்த மனிதர்கள்?, பக்.7-8). இத்தகைய மகாபுத்திமானும் மகத்தான கல்விமானும் மிகச் சிறந்த கனவானும் நிகரற்ற வாசாலகப் பிரசங்கியுமான மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரின் ஒப்பற்ற ஆங்கிலப் புலமையைப் புலப்படுத்தும் வகையில் கல்கி தம் நடைச் சித்திரத்தில் சுட்டிக் காட்டியுள்ள ஒரு சுவையான நிகழ்ச்சி வருமாறு:

> "மகாகனம் சாஸ்திரியார் ஆங்கில பாஷையில் அடைந்திருந்த ஒப்பற்ற நிபுணத்வம் அனைவரும் அறிந்ததே. மகாத்மா காந்தி ஆங்கில ஹரிஜன் பத்திரிகையை ஆரம்பித்து முதல் இதழைச் சாஸ்திரியாருக்கு அனுப்பியபோது, அந்த இதழில் 27 தவறுகளைக் கண்டுபிடித்துச் சாஸ்திரியார் மகாத்மாவுக்குத் தெரிவித்திருந்தார்;
>
> சாஸ்திரியாரின் மேஜை மீது சதா சர்வ காலமும் பெரிய வெப்ஸ்டர் அகராதி அலங்காரமாய் விளங்கி வந்தது ..." (பக்.8-9)

இந்நிகழ்ச்சியைப் பொருளுணர்ந்து படிக்கும் எவரும், மகாத்மா காந்தியே தம் பத்திரிகையில் செய்திருப்பினும் பிழையைப் பிழையெனச் சுட்டிக்காட்டும் மனத்துணிவினையும் மகாகனம் சாஸ்திரியாரைப் போன்றே மொழிப் புலமை கைவரப் பெற வேண்டும் என்ற மனத் தூண்டுதலையும் பெறுவர் என்பது உறுதி.

படிப்பவர் உள்ளத்தில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சும் பிறிதொரு நடைச் சித்திரமும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும். அதிசய மனிதர் ஜி.டி. நாயுடுவைப் பற்றி ஐந்தே பக்க அளவில் கல்கி எழுதியுள்ள அருமையான நடைச் சித்திரம் 'அதிசயம்! ஆனால் உண்மை!'

> "'காலேஜில் ஸீட் இல்லை' என்று கஷ்டப்படுகின்ற வாலிபர்கள் எல்லாரும் தயவுசெய்து கோயமுத்தூருக்கு யாத்திரை சென்று ஸ்ரீ ஜி.டி. நாயுடுவைப் பார்த்துவிட்டு வரும்படி சிபார்சு செய்கிறோம். அப்படிப் பிரயாணச் செலவு செய்து கொண்டு போய்ப் பார்க்க முடியாத வாலிபர்கள் அவர் எழுதியுள்ள 'நான் கண்ட உலகம்' என்ற நூலையாவது வாங்கிப் பார்க்கும்படி யோசனை சொல்கிறோம்...
>
> திருவாளர் ஜி.டி. நாயுடு என்ஜினியரிங் காலேஜுக்கு மனுப் போட்டதில்லை. காலேஜ் நிழலில் ஒதுங்கியதில்லை; உயர்தரப் பள்ளியில் கூட அவர் படித்ததில்லை.
>
> ஆனால் நாலு தடவை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார்; அமெரிக்காவில் அமெரிக்கர்கள் அடங்கிய சபைகளில் ஆங்கிலத்தில் பிரசங்க மாரி பொழிந்திருக்கிறார்; பெரிய பெரிய வாழ்க்கைத் தத்துவங்களைப் பற்றியும் ஆத்மீக விஷயங்களைப் பற்றியும் பேசியிருக்கிறார்; ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசித்த விஞ்ஞானிகள் - தொழில் நிபுணர்களுடன் சம்பாஷித்திருக்கிறார்" (யார் இந்த மனிதர்கள்?, பக்.113-114).

- என்றாற் போல் கல்கி, ஜி.டி. நாயுடுவைப் பற்றிய நடைச் சித்திரத்தில் எழுதியிருக்கும் வைர வரிகள், இன்றைய இளைய தலைமுறையினர் ஒவ்வொவரும் தம் நெஞ்சில் கல்வெட்டுப் போல் பொறித்து வைத்துக் கொள்ள வேண்டியவை ஆகும். பள்ளிக் கூடத்தில் கூடக் காலடி எடுத்து வைத்திராத ஒருவர், அனுபவக் கல்வி மூலம் அனைத்தும் கற்றுக்கொண்டு,

உலகத்தில் தலைசிறந்த இயந்திர நிபுணர்களுக்கு யோசனை சொல்லக் கூடிய அளவிற்கு வாழ்க்கையில் உயரமுடியும் என்றால், இந்தியத் திருநாட்டின் ஒவ்வோர் இளைஞனும் மனம் வைத்து, விடாமல் முயன்றால் எதுதான் முடியாது? இதுவே இன்றைய இளைஞர் உலகிற்கு இந்த நடைச் சித்திரத்தின் வாயிலாகக் கல்கி முன்வைத்திருக்கும் பொருள் பொதிந்த வினாவாகும்.

நடைச் சித்திரக் கூறுகள்

தலைப்பு, தொடக்கம், நடுப்பகுதி, முடிவு என நடைச் சித்திரத்தின் அனைத்துக் கூறுகளையும் கல்கி திறம்படக் கையாண்டுள்ளார். இதற்கு எத்தனையோ உயிரோட்டமான உதாரணங்களை நாம் அவரது நடைச் சித்திரங்களில் இருந்து எடுத்துக்காட்டலாம். சான்றாக, தலைப்பு நயம்பட அமைந்த ஒரு நடைச் சித்திரத்தினை முதலில் காண்போம். தமிழ்நாட்டில் காலட்சேபக் கலையில் தனிமுத்திரை பதித்தவர் சரஸ்வதிபாய். வாக்குவன்மை, இசைக்கலைத் தேர்ச்சி, பன்மொழிப் பயிற்சி, ஒழுக்க உயர்வு, பக்தி மேம்பாடு, குரு பக்தி என்னும் நற்பண்புகள் களிநடம் புரியும் பெண்மணி அவர். பண்டித கிருஷ்ணாச்சாரின் பயிற்சியில், எத்தனையோ எதிர்ப்புக்களுக்கு எல்லாம் ஈடுகொடுத்து, மனம் சிறிதும் தளராமல் துணிவுடன் நின்று, வாழ்வில் படிப்படியாக முன்னேறிச் சாதனை படைத்த அவரைப் பற்றிய நடைச்சித்திரத்திற்குக் கல்கி சூட்டியிருக்கும் தலைப்பு என்ன தெரியுமா? 'பெண் குலத்தின் வெற்றி!' மகாகவி பாரதியின் வாக்கு; இதற்கு மேலும் ஒரு படி சென்று, "பெண்மணிகளில் தீரச் செயல்கள் புரிவோரை வீராங்கனைகள் என்று சொல்வதுண்டு. இதிகாசங்களில் சீதை, திரௌபதி, சுபத்திரை, சத்தியபாமா முதலிய வீராங்கனைகள் இணையற்று விளங்குகிறார்கள். இராஜபுத்திர நாட்டுப் பெண்கள் தங்கள் கணவன்மார்களையும் புதல்வர்களையும் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டுத் தாங்கள் தீயில் குதித்து இறந்து 'வீராங்கனைகள்' எனச் சரித்திரப் புகழ் பெற்றார்கள். ஜான்ஸிராணி போன்று போர்க்களத்திற்கே சென்று போரிட்டு மடிந்த வீராங்களைகளும் உண்டு. சமூகத் துறையில் அர்த்தமற்ற சம்பிரதாயங்களையும் மூடத்தனமான கட்டுப்பாடுகளையும் உடைத்து எறிந்து விட்டு வந்து முன்னேற்றப் பாதையில் வழி காட்டுகிறவர்களையும் வீராங்கனைகள் என்று கூறலாம் அல்லலவா? நம் காலத்தில் தென்னாட்டில் பிறந்த வீராங்கனைகளில் ஸ்ரீமதி சரஸ்வதிபாய்

தலைசிறந்து விளங்குகிறார்'' (யார் இந்த மனிதர்கள்?, பக்.163-164) என சரஸ்வதிபாயை வீராங்கனைகளின் வரிசையில் சேர்த்துக் கூறுகிறார் கல்கி; 'என்றும் இருப்பார்! இதயத்தில் ஒலிப்பார்!' (ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்), 'மறைந்த மாமலை!' (மறைமலையடிகள்), 'தேவி தேவரானார்!' (கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை), 'கப்பல் ஓட்டுவோம்; கடலைத் தாண்டுவோம்!' (வ.உ. சிதம்பரனார்) ஆகிய நடைச் சித்திரங்களும் இங்ஙனம் சிறப்பான தலைப்புக்களைப் பெற்றிருப்பவை ஆகும்.

நடைச் சித்திரம் தீட்டும் நாயகருக்கு ஏற்ற முறையில் அதனைத் தொடங்குவதில் கல்கிக்கு நிகர் கல்கியே எனலாம். உள்ளங்கவர் உதாரணம் ஒன்றால் இக் கருத்தினை மெய்ப்பிக்கலாம். கர்நாடக சங்கீதத்தில் தோடி ஓர் அபூர்வமான ராகம். அதை நாதஸ்வரத்தில் வாசிப்பதில் கை தேர்ந்தவர் திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை, அருமையான கலை மேதைமையும் அற்புதமான கலைத் திறனும் குடிகொண்டிருக்கும் அவரைப் பற்றிய நடைச் சித்திரத்தினைக் கல்கி எப்படித் தொடங்குகிறார் பாருங்கள் :

> ''தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நெடுங்காலம் நடந்து வந்த போர்களைக் குறித்துக் கேள்விப்-பட்டிருப்பீர்கள்.
>
> அதே மாதிரியாக ஸ்வரங்களுக்கும் அபஸ்வரங்-களுக்கும் நீடித்த பெரிய யுத்தம் ஒரு காலத்தில் நடந்தது. இந்த யுத்தத்தில் அபஸ்வரங்களின் கட்சி ஜெயித்து-விடுமோ என்று ஒரு சமயம் பீதியுண்டாயிற்று. ஏனெனில் ஸ்வரங்கள் சைன்யம் கணக்குக்கும் வரையறைக்கும் உட்பட்டது. இத்தனை வீரர்கள் என்று எண்ணிவிடலாம். அந்த வீரர்கள் இன்னின்ன ஸ்தானத்திலே நிற்க வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. ஆனால் அபஸ்வரங்களின் சைன்யமோ இராவணனுடைய மூல பலத்தைப் போல அளவிட முடியாத எண்ணிக்கை கொண்டதாயிருந்தது. புற்றிலிருந்து கிளம்பும் ஈசலைப் போல அபஸ்வர சேனா வீரர்கள் முடிவில்லாமல் வந்து கொண்டிருந்தார்கள். வரையறை, ஒழுங்கு, கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் நினைத்த நினைத்த வேளை-களிலெல்லாம் கிளம்பிக் கண்ட கண்ட இடங்களி-லெல்லாம் புகுந்து தாக்கினார்கள். ஸ்வரங்களின் பாடு மிக

ஆபத்தாய்ப் போய்விட்டது. இந்தப் பூவுலகிலிருந்து அடியோடு அழிந்து போக வேண்டியதாக நேருமோ என்று ஸ்வரங்கள் பீதியுற்றுத் தங்களுடைய தாயாகிய சங்கீத தேவதையிடம் சென்று முறையிட்டன. சங்கீத தேவதையும் அபஸ்வரங்கள் படுத்திய பாட்டினால் மிகவும் நொந்து போயிருந்தாள். 'வாருங்கள் குழந்தைகளே! நாதப் பிரம்மமாகிய நம் இறைவனிடம் போய் முறையிடுவோம்!' என்று ஆறுதல் சொல்லி அழைத்துப் போனாள். நாதஸ்வரத்தின் சந்நிதிக்குச் சென்று சங்கீத தேவதையும் அவளுடைய குழந்தைகளாகிய ஸுஸ்வரங்களும் முகாரி ராகத்தில் தங்களுடைய சோகத்தைச் சொல்லிப் புலம்பினார்கள். அதனால் மனமிரங்கிய நாதப் பிரம்மம் தமது சந்நிதானத்தில் நின்ற வீரர்களில் சிலரைப் பார்த்து, 'நீங்கள் பூவுலகில் போய்ப் பிறந்து அபஸ்வரங்களைச் சதம் செய்து ஸுஸ்வரங்களின் ஆட்சியை நிலைநாட்டி வாருங்கள்!' என்று அருள்புரிந்தார்.

அவ்வாறு நாதப் பிரம்மத்தின் கட்டளைக்கு உட்பட்டுப் பூலோகத்தில் பிறந்த கான வீரர்களில் ஒருவர் 'கல்கி'யின் இந்த இதழ் அட்டையை அலங்கரிக்கிறார். அந்த கான வீரரின் பெயர் திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளை" *(யார் இந்த மனிதர்கள்?, பக்.97-98).*

- இங்ஙனம் 'நாதஸ்வர சக்கரவர்த்தி' பற்றிய நடைச் சித்திரத்தை நெஞ்சையள்ளும் வண்ணம் தொடங்கியதற்காகவே நாம் கல்கியை 'நடைச் சித்திரச் சக்கரவர்த்தி' எனச் சிறப்பித்துக் கூறலாம். இதே போல், சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்த பிறிதொரு நடைச் சித்திரம் 'வான வெளியிலே'. திருவண்ணாமலையில் பிறந்த நகைச்சுவை எழுத்தாளர் எஸ்.வி.வி.யைப் பற்றிய அந்த நடைச் சித்திரத்தினைப் பொதிகை மலை, விந்திய மலை, நீலகிரி மலை, திருவண்ணாமலை ஆகிய மலைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பேசிக் கொள்ளும் பாங்கில் தொடங்கி, அற்புதமாக எழுதிச் சென்றுள்ளார் கல்கி.

இங்ஙனம் தலைப்பு, தொடக்கம் ஆகியவற்றில் மட்டுமன்றி, நடைச் சித்திரங்களின் இடையிடையேயும் படிப்பவர் நெஞ்சைத் தொடும் வண்ணம் தெளிவாகவும் சுவையாகவும் எழுதிச் செல்வதில் வல்லவராக விளங்குகிறார் கல்கி. பதச் சோறாக, 'வீணை சண்முகவடிவு அம்மாள்'

என்னும் நடைச் சித்திரத்தில் இருந்து ஓர் இடத்தை இங்கே சுட்டிக் காட்டலாம் :

"அன்னை சண்முக வடிவு அம்மாள் வீணை வாத்தியத்தின் கம்பிகளை மீட்டி உண்டாக்கிய இசை இனிமையானதா, குழந்தை சுப்புலட்சுமியின் குரலிலிருந்து பெருகிய இசை வெள்ளம் அதிக மதுரம் பொருந்தியதா என்று சங்கீத ரசிகர்கள் சர்ச்சை செய்தார்கள்.

'தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'

- என்றார் வள்ளுவர் பெருமான். தம்மை விடத் தம் குழந்தைகள் கலைத்துறையில் சிறப்படைந்து புகழ் பெறுவதைப் பார்க்கும் பாக்கியம் உலகில் சிலருக்குத் தான் கிடைக்கக்கூடும். அந்தப் பாக்கியம் தமக்குக் கிடைக்கப் போகிறதென்பதை ஸ்ரீமதி சண்முகவடிவு உணர்ந்து கொண்டார். வாய்ப்பாட்டுக் கச்சேரியில் தாம் அடைய முடியாமற் போன புகழைத் தம் புதல்வி அடைவாள் என்று நிச்சயம் கொண்டார்" (யார் இந்த மனிதர்கள்?, பக்.197-198).

- இப்பகுதியில் சுட்டப் பெற்றிருக்கும் பாக்கியசாலியான அன்னை, மதுரை மாநகரைச் சேர்ந்த திருமதி வீணை சண்முகவடிவு அம்மாள்; மதுரமான குரலுக்குச் சொந்தமான குழந்தை, பிற்காலத்தில் 'இசையரசி' எனப் பெரும்புகழ் பெற்று விளங்கிய திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி. சங்கீத உலகில் திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமியின் புகழ் நன்கு நிலைபெற்றுவிட்டது என்பதைக் கண்டபிறகு திருமதி சண்முகவடிவு அம்மாள் தாம் வீணைக் கச்சேரி செய்வதை நிறுத்திக் கொண்டார்; தமது புதல்வியின் புகழே தமது புகழாகக் கருதி மகிழ்ந்து வந்தார். ஒருமுறை மதுரையில் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றபோது, "ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலட்சுமியைச் சங்கீத உலகத்துக்கு அளித்த அன்னை" என்று அறிமுகப்படுத்தித் திருமதி சண்முகவடிவு அம்மாளுக்கு மாலை சூட்டப்பட்ட போது, சபையோர் புளகாங்கிதம் அடைந்தார்கள். அறுபத்தைந்து வயதை அடைந்து உடல்நலம் குன்றிய நிலையில் இருந்த திருமதி சண்முக வடிவு அம்மாள் தமக்குப் போடப்பட்ட மாலையைத் தமது புதல்விக்குத் திரும்பப் போட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார் (ப.201). படிப்பவர் கண்களைக்

குளமாக்கும் இந்நிகழ்ச்சியை 'வீணை சண்முகவடிவு அம்மாள்' பற்றிய நடைச்சித்திரத்தில் உரிய இடத்தில் பதிவு செய்துள்ளார் கல்கி.

இனி, முத்தாய்ப்பான முடிவினைக் கொண்டு விளங்கும் கல்கியின் நடைச் சித்திரம் ஒன்றினைக் காண்போம்

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசை இயக்கத்தைத் தொடங்கி, தமிழிசை வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவர்; சிறந்த பண்புநலன்களும் உயர்ந்த பண்பாடுகளும் அபூர்வமான ஆற்றல்களும் பெற்றிருந்த பெருந்தகையாளர்; அவரது விருந்தோம்பும் திறமும், அவர் பணியாளர்களை நடத்திய விதமும் நனி சிறந்தவை. 'மலை மறைந்தது' என்னும் தலைப்பில் அமைந்தது அவரைப் பற்றிய நடைச்சித்திரம்.

> "திடீரென்று ஒருநாள் நீலகிரி மலை மறைந்து போய் விட்டதென்றால் நமக்கெல்லாம் எப்படியிருக்கும்? அந்த மாமலை இருந்த இடத்தை வேறு எந்தப் பொருளையாவது இட்டு நிரப்ப முடியுமா? ஒரு நாளும் முடியாது. மலை இருந்த இடம் வெகு காலத்துக்கு வெறிச்சென்று இருக்கும்.
>
> ராஜா ஸர் அவர்கள் இல்லாத தமிழ்நாடும் தமிழர் சமூகமும் இன்னும் வெகுகாலத்துக்கு அவர்கள் இல்லாமற் போன குறையை உணர வேண்டியிருக்கும்" (யார் இந்த மனிதர்கள்?, ப.25).

- ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரைப் பற்றிய இந் நடைச்சித்திரம் முடிவடைந்தாலும், இதைப் பற்றிய சிந்தனை அலைகள் வாசகர் நெஞ்சங்களில் என்றென்றும் எழுந்த வண்ணமே இருக்கும். காரணம், இதன் முத்தாய்ப்பான முடிவுப் பகுதியே ஆகும்.

நடைச் சித்திர வளர்ச்சிக்கு அடியுரம்

வ.ரா.வின் எழுத்துக்களிலே சிறந்தது என்று அவரது நடைச்சித்திரத் தொகுப்பைக் கருதும் க.நா.சு., "நடைச் சித்திரம் என்பது வேற்று நாட்டு இலக்கியத்தின் சிறந்த ஆபரணமாயிருந்தும், நமது தமிழ்நாட்டிலும் நிலைத்துவிட்டது வ.ரா. வினால்" (படித்திருக்கிறீர்களா?, முதல் தொகுதி, ப.72) என மதிப்பிடுகின்றார். வ.ராவுடன் கல்கியின் பெயரையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம். தமிழில் 'நடைச் சித்திரம்' என்ற புதிய

இலக்கிய வகையின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவர் வ.ரா. என்றால், அவ்வகையின் வளர்ச்சிக்கு அடியுரமாக அமைந்தவர் கல்கி எனலாம். "நமது வாலிபர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட நம் சென்னை மாகாண சர்க்கார் இந்தப் புத்தகத்தில் பதினாயிரம் பிரதிகள் வாங்கி, பதினாயிரம் புத்தக சாலைகளைத் தமிழ்நாடெங்கும் ஏற்படுத்தி, புத்தக சாலைக்கு ஒரு புத்தகம் வீதம் விநியோகித்தால் அளவற்ற பயனை அடையலாம்" (யார் இந்த மனிதர்கள்?, ப.117) என 'அதிசய மனிதர்' ஜி.டி. நாயுடுவின் 'நான் கண்ட உலகம்' என்ற நூலைக் குறித்துக் கல்கி எழுதியிருக்கும் வரிகளை, நாம் அப்படியே அவரது நடைச் சித்திரத்தின் தொகுப்பான 'யார் இந்த மனிதர்கள்?' நூலுக்கும் பொருத்திக் கூறலாம்.

6. நகைச்சுவையாளர்

"கூற எடுத்துக் கொண்ட விஷயத்தை வாசகர்களுடைய மனத்திலே நன்றாகப் பதிய வைத்தற்கே அவர் (கல்கி) பெரும்பாலும் நகைச்சுவையை ஒரு கருவியாகக் கொண்டனர் எனத் தெரிகின்றது. அம்முறை தமிழிற்குப் புதியது என்றே கூறலாம்."

– வி. செல்வநாயகம் *

"தமிழ் நடையில் ஒரு நகைச்சுவையையும், சரித நிகழ்ச்சிகளின் மீது 'சமையல் கட்டு'க்குக் கூட ஒரு ஆவலையும் தூண்டிவிட்ட எழுத்தாளர் அவர்" என்பது அறிஞர் அண்ணா, கல்கிக்குச் சூட்டியுள்ள புகழாரம் (சுப்ர. பாலன் (தொகுப்பாசிரியர்), எழுத்துலகில் அமரதாரா, ப.94). அண்ணாவின் கருத்தில் கல்கி தமிழுக்கு - தமிழர்க்கு - ஆற்றியுள்ள அரும்பணிகள் இரண்டு. ஒன்று, தமிழ் நடையில் ஒரு தரமான நகைச்சுவையைத் தோற்றுவித்தமை. மற்றொன்று, தமிழக வரலாற்றை ஆர்வத்துடன் படிக்கும்படியாகத் தமிழ்நாட்டின் 'அடுப்படி'யையும் தூண்டியமை. வேறு சொற்களில் சொல்வதானால், நகைச்சுவை, வரலாறு என்னும் இவ்விரு உணர்வுகளும் எப்போதும் கல்கியின் ஆளுமையில் கை குலுக்கி நின்றன; எந்நிலையிலும் கல்கியின் எழுத்தில் மோனையைப் போல் முன்னின்று அணி செய்தன. சுருங்கக் கூறின், "தமிழர் கல்கியின் மூலம் நகைச்சுவை இன்னதென்று அறிந்து அனுபவித்து வந்தார்கள்" (ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தற்காலத் தமிழ் இலக்கியம், ப.157); பழந்தமிழகத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் உணர்ந்து கொண்டார்கள். இனி, கல்கியை ஒரு நகைச்சுவையாளர் என்ற கோணத்தில் இவ்வியலில் காண்போம்.

கல்கியும் நகைச்சுவையும்

"நேயர்கள் சற்றே சிரித்து மகிழ வேண்டும். கொஞ்சம் புன்னகையேனும் கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனேயேதான் நான் எழுதி வருகிறேன்" (கல்கி, ஏட்டிக்குப் போட்டி, ப.68) என 'வாக்கு வேட்டை' என்ற கட்டுரைக்கு எழுதிய முன்னுரையில் குறிப்பிட்டார் கல்கி. அவரது இக்கூற்று - ஒப்புதல் வாக்குமூலம் - நகைச்சுவையின்

* தமிழ் உரைநடை வரலாறு, ப.156.

மேல் அவருக்கு இருந்த நல்லெண்ணத்தையும் நெஞ்சார்ந்த ஈடுபாட்டையும் உணர்த்துவதாகும்.

கல்கியின் நகைச்சுவைப் பற்றைப் புலப்படுத்துவதற்குப் பிறிதொரு சான்றையும் இங்கே சுட்டிக் காட்டலாம். 'பாரதியின் நகைச்சுவை' (ஏட்டிக்குப் போட்டி, பக்.119-128) என்ற தலைப்பிலேயே கல்கி ஒரு சுவையான கட்டுரையினை எழுதியுள்ளார். "எனக்கு நகைச்சுவை மட்டும் இல்லாவிட்டால் எப்போதோ தற்கொலை செய்து கொண்டு இறந்திருப்பேன்" (ப.119) என்ற காந்தியடிகளின் புகழ்பெற்ற மேற்கோளுடன் அவர் அக் கட்டுரையினைத் தொடங்கியுள்ளார். மேலும் அதில் அவர், "தனிமனிதனுடைய வாழ்க்கையிலும் சரி, தேசிய வாழ்க்கையிலும் சரி, நகைச்சுவையானது முன்னேற்றத்துக்கு இன்றியமையாத அம்சங்களில் ஒன்றாகும்" (ப.119) என நகைச்சுவை பற்றிய தம் தனிப்பட்ட கருத்தினையும் தெரிவித்துள்ளார்.

பிறிதோர் இடத்திலும் 'கடவுள் மனிதனுக்கென்று பிரத்தியேகமாக அளித்திருக்கும் வரப்பிரசாதம்' என்று சிரிப்பையும், இச் சிரிப்பை உண்டாக்கவும் பெருக்கவும் வளர்க்கவும் பாடுபடுகின்ற எல்லோரையும் 'கடவுளுக்கு உகந்த திருப்பணியைச் செய்கிறவர்கள்' என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார் கல்கி [எஸ். சங்கரன் (தொகுத்தது), கல்கியின் நகைச்சுவை, ப96].

"பிறரை மகிழச் செய்கிறவர்கள் சொர்க்கத்துக்குப் போவார்கள் என்பது உண்மையானால் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்குச் சொர்க்கங்களுக்குள்ளே மிக மேலான சொர்க்கத்தைக் கொடுத்தே தீரவேண்டும்" (கல்கி, யார் இந்த மனிதர்கள்?, ப.127) என்றும், "நம்முடைய காலத்தில் தமிழர்களின் வாழ்க்கையைக் குதூகல மயமாகச் செய்துவரும் ஸ்ரீ என்.எஸ். கிருஷ்ணன்..." (ப.128) என்றும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் இணையில்லாத நடிப்பாற்றலையும் திகட்டாத நகைச்சுவைச் செல்வத்தையும் நெஞ்சாரப் போற்றிக் கல்கி எழுதியிருக்கும் வரிகளும் இங்கே நினைவுகூரத்தக்கவை ஆகும். கல்கி நகைச்சுவைக்குத் தந்த தனியிடத்தையும், தரமான நகைச்சுவையாளர்கள் மீது அவர் கொண்டிருந்த பெருமதிப்பினையும் ஒருங்கே உணர்த்தும் அற்புதமான வரிகள் இவை!

கல்கியின் நகைச்சுவை

கல்கி என்றதும் நம் நினைவுக்கு முதலில் வருவது அவரது நகைச்சுவை உணர்வே (Sense of Humour) ஆகும். பேச்சு, எழுத்து, வாழ்க்கை என்னும் மூன்றிலும் இயல்பான நகைச்சுவையில் ஊறித் திளைத்தவர் கல்கி. இதனை மெய்ப்பிக்கும் வகையில் எத்தனையோ சான்றுகளை நாம் அவரது பேச்சில் இருந்தும், எழுத்தில் இருந்தும், வாழ்க்கையில் இருந்தும் எடுத்துக்-காட்டலாம். முதலில், கல்கியின் பேச்சில் இடம்பெற்ற இயல்பான நகைச்சுவைக்கு ஒருசில உதாரணங்களைக் காண்போம்.

ஒரு முறை சென்னை மாநிலக் கல்லூரியில் பேச அழைக்கப்பட்டிருந்தார் கல்கி. கல்லூரி முதல்வர் அவரை அறிமுகம் செய்யும்போது, "கல்கி தமது நாவல்களுக்குக் கரு தேடி எங்கும் அலைய வேண்டாம். இங்கு வந்துவிட்டால் போதும். இந்தக் கல்லூரி வளாகத்திலேயே ஏகப்பட்ட கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் காணலாம்!" என்று கூறி, மாணவ மாணவியரை உற்சாகத்தில் ஆழ்த்தினார். அடுத்துப் பேச எழுந்த கல்கி தமது உரையைத் தொடங்கும் முன்னர் அவையோரைப் பார்த்து, "கதாநாயகர்களே! கதாநாயகிகளே!" என்று அழைக்கவும் எழுந்த கரவொலி கடற்கரை எங்கும் வியாபித்தது ('கல்கி' இதழ், 'ஆசிரியர் பக்கம்', 14.4.1991, ப.64). சமயோசிதம் எனப்படும் சாதுரியமான மனப்பாங்கு (Presence of Mind) ஒரு நகைச்சுவையாளருக்கு எவ்வளவு முக்கியமாகத் தேவைப்படும் என்பதை உணர்த்தும் அருமையான நிகழ்ச்சி இது!

பிறிதொரு முறை ஒரு கூட்டத்தில் கல்கியின் இருபுறத்திலும் 'திருப்புகழ்மணி' டி.எம்.கிருஷ்ணசாமி ஐயரும், ரசிகமணி டி.கே.சி.யும் அமர்ந்திருந்தார்கள். கல்கி பேசும்படி நேரிட்டது. அப்போது 'மணி' என்ற சொல்லை வைத்துக் கொண்டு அவர் ஓர் அருமையான நகைச்சுவை விருந்தை வழங்கினார். கல்கியே பின்னாளில் நினைவுகூர்ந்து மகிழும் அற்புதமான அந்த நகைச்சுவை இதோ:

"இந்தப் புறத்தில் திருப்புகழ் மணி; அந்தப் புறத்தில் ரசிகமணி. நானோ ஒரு பெண்மணி கூட இல்லையே? இவர்களுக்கு முன்னால் நான் என்ன பேசமுடியும்?" இங்ஙனம் கல்கி தம் பேச்சைத் தொடங்கியதும் அவையோர் சிரித்து மகிழ்ந்தனர் (கல்கி, யார் இந்த மனிதர்கள்?, ப.219). இது போல்

இயல்பான நிலையில் (Spontaneity) கல்கியிடமிருந்து வெளிப்பட்டுள்ள நகைச்சுவைகள் மிகப் பலவாகும்.

"தமது மேடைப் பேச்சுக்களில் கல்கி சாதுரியமான சொல்லாட்டங்கள், ஜோக்குகள், குட்டிக் கதைகள் மூலம் அலை அலையாய்ச் சிரிப்பொலியை எழுப்புவது வழக்கம். அவற்றில் சில அவர் சிட்டை செய்து ஆயத்தமாய் வைத்திருந்தவை; இன்னும் சில அந்தந்தச் சூழலில் திடீர்த் தோற்றமாய் வெடித்தவை. இந்த இரண்டாவது வகை பெரும்பாலும் பேச்சின் தொடக்கமாய் அமைந்தவை" (பொன்னின் புதல்வர், ப.619) என்னும் சுந்தாவின் கூற்று இங்கே மனங்கொளத்தக்கதாகும்.

மேடையில் பேசும்போது மட்டுமன்றி, தனிப்பட்ட முறையில் பிறருடன் பேசும்போதும் நகைச்சுவை ததும்பப் பேசுவது என்பது கல்கிக்குக் கைவந்த கலை. ஒரு முறை கல்கி சென்னை நகரின் குறுகலான - ஜன நெருக்கடி மிகுந்த - ஒரு தெருவில் 'பிராட்வே'யில் - நீண்ட நேரமாக நின்று கொண்டிருந்தார். அப்பொழுது பார்த்து ஒரு நடைபாதைவாசி அவரை நெருங்கி "ஐயா! நீங்கள் எதற்காக இங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டு அவரது எரிச்சலைப் பெருக்கினார். உடனே கல்கி அவருக்குத் தந்த சூடும் சுவையுமான பதில்: "நான் எதற்காக நின்று கொண்டிருக்கிறேனா? என்னை யாரும் இங்கே உட்காரச் சொல்லவில்லை; அதனால் நின்று கொண்டிருக்கிறேன்!" (பி.எஸ். மணி, கல்கி சகாப்தம், ப.47).

பிறிதொரு முறை கல்கி, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் வீட்டிற்குச் சென்றிருந்தார். "என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா? டீ கொண்டுவரச் சொல்லலட்டுமா?" என்று கிருஷ்ணன், கல்கியிடம் கேட்டார். கல்கி, சற்று யோசித்து விட்டு, "டீயே மதுரம்!" என்றார். என்.எஸ் கிருஷ்ணனின் மனைவியின் பெயர் டி.ஏ.மதுரம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே! [கா.பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, ப.13] நகைச்சுவை இமயமும் நகைச்சுவைச் சக்கரவர்த்தியும் சந்தித்தால் அங்கே அற்புதமான நகைச்சுவை இயல்பாகப் பிறக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டுமா என்ன?

இனி, கல்கியின் எழுத்தில் இடம் பெற்றிருக்கும் நகைச்சுவை குறித்து ஆராய முற்படுவோம். சிறுகதையோ,

நாவலோ, கட்டுரையோ எதை எழுதினாலும், அதில் நகைச்சுவையைக் கலக்காமல் கல்கியால் எழுத முடியாது. சிறுகதை, நாவல், கட்டுரை என்னும் முப்பெரும் கலை வடிவங்களிலும் கல்கியின் நகைச்சுவைத் திறன் பளிச்சிடும் ஒரு சில இடங்களைக் குறித்து நிரலே காண்போம்.

கல்கியின் சிறுகதைகளைக் குறித்து அறிஞர் பட்டத்திற்கு ஆராய்ந்துள்ள மீனாட்சி முருகரத்தனம், கல்கியின் கலைக்கூறுகளுள் முதன்மையானதும் பாராட்டத்தக்கதும் அவரது நகைச்சுவையே ஆகும் என்றும், நகைச்சுவையே அவரது எழுத்தின் உயிர்நாடியாக விளங்கியது என்றும், நகைச்சுவையின் பல வகைகளும் அவரிடம் காணப்பெற்றன என்றும், கதைப் பின்னலில் நகை, பத்திரப் படைப்பில் நகை, மொழிநடையில் நகை என்ற மூன்று பெரும் பிரிவுகளில் அவரது நகைச்சுவையை அடக்கலாம் என்றும் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார் (கல்கியின் சிறுகதைக் கலை, பக்.165-195).

பதச் சோறாக, 'கமலாவின் கல்யாணம்' என்னும் கல்கியின் சிறுகதை குறித்து இங்கே காணலாம். இக்கதையின் தலைப்பு, தொடக்கம், முடிவு, நிகழ்ச்சிப் பின்னல், பாத்திரப் படைப்பு, மொழிநடை ஆகிய அனைத்துக் கூறுகளிலும் நகைச்சுவை உணர்வு ததும்பி நிற்கின்றது. இக் கதையில் வரும் கோபால கிருஷ்ண ஐயர் ஒரு புகழ் பெற்ற வழக்கறிஞர். 'எப்போதுமே நகைச்சுவையுள்ளவர்' என்று பெயர் எடுத்துள்ள அவரது அறிமுகத்தை நகைச்சுவை உணர்வோடு கதையில் அமைக்கின்றார் கல்கி. "ஹோம் ரூல் கோபால-கிருஷ்ண ஐயர் என்று எல்லாரும் கேள்விப்பட்டிருக்கலாம்... டாக்டர் பெஸண்டு அம்மையின் காலத்தில் இவீர் 'ஹோம் ரூல்' கிளர்ச்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதனால்தான் 'ஹோம் ரூல் கோபாலகிருஷ்ண ஐயர்' என்று பெயர் வந்தது வீட்டில் அகத்துக்காரியின் ஆட்சி கொஞ்சம் அதிகமாதலால், இந்தப் பெயர் அவருக்கு நிலைத்துவிட்டது என்று சில பொறாமைக்காரர்கள் சொல்வதுமுண்டு" (கல்கி, சாரதையின் தந்திரம், பக்.33-34) என்பது கோபாலகிருஷ்ண ஐயரைப் பற்றிய கல்கியின் அறிமுகக் குறிப்பு. இதில் இழையோடும் மெல்லிய நகைச்சுவை நம்மை முறுவலிக்கச் செய்வதாகும்.

இக்கதையின் முடிவிலும் நகைச்சுவை சிறந்து விளங்குகின்றது. "இதை எழுதிய பிறகு, இந்தக் கதைக்கு நான் கொடுத்திருக்கும் தலைப்பைப் பார்த்தேன். இரண்டு

விதத்திலும் அது பொருத்தமாயிருப்பது தெரியவந்தது. பிள்ளையாண்டான் இப்போது 'கமலாவின் கல்யாண'மாகத்தான் விளங்குகிறான். அப்பாவுக்குப் பிள்ளைதானே!" (ப.65) என்பது இக்கதையின் முடிவுப் பகுதி ஆகும். 'கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டி, குறுகத் தறிப்பது' போலக் கதை முழுவதையும் அதன் இறுதி இரண்டு வரிகளிலே அடக்கிச் சொல்லியிருக்கும் கல்கியின் நகைச்சுவைத் திறம் நினைந்து நினைந்து நெஞ்சம் மகிழத்தக்கதாகும்.

'கமலாவின் கல்யாணம்' என்னும் இக்கதையின் தலைப்பும் இரு பொருள் பட அமைந்து கதையின் கருப்பொருளைப் புலப்படுத்தி நிற்கக் காண்கின்றோம். கல்யாணம், கமலா என்னும் பெயர் கொண்ட தன் மனைவிக்கு அடங்கி நடப்பவன் என்பதைக் 'கமலாவின் கல்யாணம்' என்னும் தொடராலேயே புலப்படுத்தி விடுகின்றார் கல்கி. மேலும் 'அப்பாவுக்குப் பிள்ளைதானே?' என்னும் இறுதித் தொடரும் கல்யாணம் மட்டும் அல்ல, கல்யாணத்தின் அப்பா 'ஹோம் ரூல்' கோபாலகிருஷ்ண ஐயரும் தம் மனைவிக்கு அடங்கி நடப்பவர்தான் என்பதை உணர்த்தி நிற்கின்றது. சுவையான சொல் விளையாட்டின் (Pun) வாயிலாகவும் கல்கியால் நகைச்சுவையைத் தோற்றுவிக்க முடியும் என்பதற்கு இப் பகுதி நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

கல்கியின் நகைச்சுவைத் திறத்திற்குக் கட்டியம் கூறும் பிறிதொரு சிறுகதை 'கைலாசமய்யர் காபரா'. இக்கதையின் தொடக்கத்தில் பயந்த சுபாவம் உடைய கைலாசமய்யரைக் கல்கி தமக்கே உரிய நகைச்சுவை நடையில் அழகுற அறிமுகப்படுத்தியுள்ளார் :

> "எத்தனையோ பயந்த சுபாவமுடையவர்களை நீங்கள் பார்த்திருக்கலாம். ஆனால், கைலாசமய்யரைப் பார்க்காத வரையில், சரியான பயந்த சுபாவத்தை நீங்கள் பார்த்ததாகச் சொல்ல முடியாது. பயப்படுகிற விஷயத்தில் அவரை மிஞ்சக் கூடியவர் யாருமில்லை. ஒரு சமயம், அவர் வீட்டு வாசலில் தேசியத் தொண்டர்கள், 'அச்சமில்லை, அச்சமில்லை' என்று பாடிக் கொண்டு போனார்கள். அந்தப் பயங்கரமான சத்தத்தைக் கேட்டுக் கைலாசமய்யர் பயந்து கட்டிலிருந்து கீழே விழுந்து காலை ஒடித்துக் கொண்டார்!"
>
> (கல்கி, வீணை பவானி, ப.83)

இங்ஙனம் கதைப்பின்னலில், பாத்திரப் படைப்பில், மொழிநடையில் நகைச்சுவையை நயமாகக் கையாண்டு கல்கி படைத்துள்ள சிறுகதைகள் பலவாகும்.

நாவல் வடிவத்தைப் பொறுத்த வரையில், சமூக நாவல், வரலாற்று நாவல் என்னும் இரு வகையான நாவல்களையும் படைத்துத் தந்து பெரும்புகழ் பெற்றவர் கல்கி. 'கள்வனின் காதலி', 'தியாக பூமி', 'அலை ஓசை' முதலான சமூக நாவல்களாயினும் சரி, 'பார்த்திபன் கனவு', 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' ஆகிய வரலாற்று நாவல்களாயினும் சரி, கல்கியின் எழுத்திலே சிறப்பாகக் காணப்பட்ட கூறு நகைச்சுவையே ஆகும். பல்லவர் வரலாற்றையும் சோழர் வரலாற்றையும் கருப்பொருளாகக் கொண்டு எழுதப் பெற்றாலும் கல்கியின் வரலாற்று நாவல்களிலே நகைச்சுவையின் ஆட்சி குறிப்பிடத்தக்க வகையிலே அமைந்திருக்கின்றது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அவரது வரலாற்று நாவல்களில் இடம்பெற்றுள்ள மாந்தர்கள் - அவர்கள் வரலாற்று மாந்தராயினும் சரி, கற்பனை மாந்தராயினும் சரி - நல்ல நகைச்சுவை உணர்வு படைத்தவர்களாக விளங்குகின்றனர்; கண்ணபிரான், குண்டோதரன், பரஞ்சோதி, ஆழ்வார்க்கடியான், வந்தியத்தேவன், மகேந்திரவர்மன் முதலான கதைமாந்தர் பலரும் அருமையான நகைச்சுவை விருந்தை அடிக்கடி படைத்துப் படிப்போரைப் பரவசத்தில் ஆழ்த்துகின்றனர். இக் கருத்திற்கு அரணாக ஒரு சில உதாரணங்களை ஈண்டுக் காண்போம்.

'பொன்னியின் செல்வன்' நாவலின் ஐந்தாம் பாகத்தில் ஓர் இடம். ஒரு வீர சைவர்க்கும் வீர வைஷ்ணவர் ஆழ்வார்க்கடியானுக்கும் இடையே சமயம் தொடர்பாக ஒரு வாக்குவாதம் - வாதப் போர் - நிகழ்கின்றது. இருவரும் அவரவர் சமயத்தை உயர்த்தியும் , அடுத்தவர் சமயத்தைத் தாழ்த்தியும் பின்வருமாறு விவாதம் செய்கின்றனர் :

> 'அப்பனே! உங்கள் ஆழ்வார்கள் பன்னிரண்டு-பேர்தான்; எங்கள் நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர்! அதை ஞாபகம் வைத்துக் கொள்!'
>
> 'ஓகோ! இப்படி வேறே ஒரு பெருமையா? பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர்தான்; துரியோதனாதியர் நூறு பேர் என்று பெருமையடித்துக் கொள்வீர் போலிருக்கிறதே!'

'அதிகப் பிரசங்கி! எங்கள் நாயன்மார்களைத் துரியோதனன் கூட்டத்தோடு ஒப்பிடுகிறாயா? உங்கள் ஆழ்வார்களிலே தான் பேயாழ்வார், பூதத்தாழ்வார் எல்லோரும் உண்டு.'

'உங்கள் சிவபெருமானுடைய கணங்களே பூத கணங்கள் தானே! அதை மறந்து விட்டீராங்காணும்?'

(கல்கி, பொன்னியின் செல்வன், ஐந்தாம் பாகம், பக்.345-346)

- இவ்வுரையாடற் பகுதியைப் படிப்பவர் சைவராய் இருந்தாலும் சரி, வைணவராய் இருந்தாலும் சரி, அவர் முகத்தில் மெல்லிய புன்முறுவல் பூத்திருக்கும் என்பது நெற்றித் திலகம். "அவருடைய (கல்கியினுடைய) எழுத்திலே உயர்தரமான நகைச்சுவையை நாம் காணலாம். அது பிறரைக் கேலி செய்வதாக இல்லை. அது தன்னாலே தாக்கப்-படுபவர்களும் படித்துச் சிரிக்கக் கூடியதாகவே அமைந்திருக்கிறது" (தமிழ் உரைநடை வரலாறு, பக்.155-156) என்னும் அறிஞர் வி. செல்வநாயகத்தின் கருத்து இங்கே நினைவுகூரத்தக்கதாகும்.

'சிவகாமியின் சபதம்' நாவலின் மூன்றாம் பாகத்தில் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசி, காஞ்சி ஒற்றன் குண்டோதரன் ஆகிய இருவர்க்கும் இடையே நிகழும் உரையாடலிலும் இயல்பான நகைச்சுவை உணர்வின் வெளிப்பாட்டைக் காண்கிறோம். படிப்பவரைச் சற்று நேரம் விழுந்து விழுந்து சிரிக்க வைக்கும் சுவையான அவ்வுரையாடற் பகுதி இதோ:

"'அடே, நீ யார்? என்ன வேலையாகப் புறப்பட்டாய்? உண்மையைச் சொல்!'

'ஐயா! நான் என் தாயாருடைய மகன். கொள்ளிடத்துக்கு அக்கரையில் திருவெண்காட்டுக்குப் போகலாமென்று கிளம்பினேன். திருவெண்காட்டு வைத்தியரிடமிருந்து மருந்து வாங்கிக் கொண்டு வருவதற்காகப் போகிறேன்.'

'எதற்காகடா மருந்து? உனக்கு என்ன கேடு வந்துவிட்டது?'

'எனக்காக இல்லை, ஐயா! அம்மாவுக்கு மருந்து. என் தாயார் அவல் இடிக்கும் போது உரலை விழுங்கி-விட்டாள், அதற்காக!'

'என்னடா உளறுகிறாய்? உன் அம்மா உரலை விழுங்கினாளா?'

'இல்லை, உரலை விழுங்கவில்லை, உலக்கையைத்தான் விழுங்கினாள்!'

'உரலை விழுங்கினாளா, உலக்கையை விழுங்கினாளா? நிஜத்தைச் சொல்!'

'இல்லை, இல்லை! என் அம்மாவை உரல் விழுங்கிவிட்டது!'

'அடே, என்னிடம் விளையாடுகிறாயா? உன்னை என்ன செய்வேன், தெரியுமா?

'ஐயா, மன்னிக்க வேண்டும். உங்களை எல்லாம் பார்த்தால் எனக்கு மிகவும் பயமாய் இருக்கிறது. அதனால் மனத்திலே ஒன்று இருக்க, நாக்கு எதையோ சொல்கிறது.'

'இப்போது பயம் இல்லாமல் நிதானமாக யோசித்து உள்ளதை உள்ளபடி சொல்லு!'

'என் தாயார் அவல் இடித்தபோது உலக்கை தவறிக் கையில் விழுந்துவிட்டது. அதனால் அம்மாவின் கையில் காயமாகிவிட்டது. காயத்துக்கு மருந்து வாங்குவதற்காகத் திருவெண்காட்டு நமச்சிவாய வைத்தியரிடம் போகிறேன்!'

'இவ்வளவு தானே, வேறு ஒன்றும் இல்லையே? சத்தியமாய்ச் சொல்!'

'ஆம், ஐயா! சத்தியமாய்ச் சொல்லுகிறேன். உலக்கைக்குத்தான் காயம்பட்டது!'

(கல்கி, சிவகாமியின் சபதம், பக். 514-516)

அதட்டி மிரட்டிக் கேள்விகள் கேட்டால் உளறலாகவும் குளறலாகவும் பதில்கள் வரும் என்பதைக் கொண்டு இங்கே சிரிப்பு அலைகளை எழுப்பியிருக்கிறார் கல்கி.

அடுத்து, கல்கியின் கட்டுரைகளில் நகைச்சுவை சிறந்து விளங்கும் ஒரு சில இடங்களைக் குறித்துக் காண்போம்.

கட்டுரைக் கலையின் மீது கல்கிக்கு இயல்பாகவே ஈடுபாடு உண்டு; அதிலும் 'நவசக்தி', 'விமோசனம்', 'ஆனந்த விகடன்', 'கல்கி' ஆகிய இதழ்களில் பல்வேறு பொறுப்புகளில் நீண்ட காலம் பணியாற்றும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டியதால்,

நூற்றுக்கணக்கான கட்டுரைகளை அவரால் எழுத முடிந்தது. கல்வி, மொழி, இசை, நாட்டியம், நாடகம், திரை, செய்தித்தாள், மதிப்புரை, பயணம், சமுதாயம், அரசியல், செம்பொருட்-செல்வர், தன் வரலாறு, அஞ்சலி என்றாற் போல் பல்வேறு பொருள்களைச் சார்ந்த 505 கட்டுரைகளைப் படைத்-திருப்பதாக அறிஞர் கலா கே. தாக்கர் தம் நூலின் பின்னிணைப்பில் பட்டியல் இட்டுள்ளார் (கல்கி - முன்ஷி வரலாற்று நாவல்கள் - ஓர் ஒப்பீடு, பின்னிணைப்பு-3, பக். 459-485).

கல்கியின் கட்டுரைகளிலும் தரமான நகைச்சுவைக்குப் பஞ்சம் இல்லை. சொல்லப் போனால், அவரை 'ஆனந்த விகடன்' ஆசிரியர் பொறுப்பில் அமர்த்தியதே 'ஏட்டிக்குப் போட்டி' என்ற ஒரு கட்டுரைதான்; 'கல்கி' என்ற புனைபெயரில் 'ஆனந்த விகடன்' இதழில் முதன் முதல் வெளிவந்த கட்டுரையும் அதுதான் (ஆகஸ்ட், 1928). அம் முதற்கட்டுரையிலேயே கல்கியின் நகைச்சுவை உணர்வு பளிச்சிட்டு நிற்கக் காண்கிறோம். அங்கதச் சுவை, ஆற்றொழுக்கான நடை, இயல்பான நகைச்சுவை, உலகப் போக்கிற்கு எதிரிடையான சிந்தனைத் திறம், சீர்திருத்த எண்ணம் ஆகிய அனைத்துக் கோணங்களிலும் சிறந்து விளங்கும் அக்கட்டுரையில் இருந்து ஒரு பகுதி வருமாறு:

> "நமது முன்னோர்கள் இருக்கும் திக்கு நோக்கி (எந்தத் திக்கு என்பதுதான் தெரியவில்லை) இரண்டு கரங்களையும் கூப்பித் தண்டனிடுகிறேன். ஆகா, அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைதான் என்ன? வருஷம் 365 நாளில், ஏறக்குறைய 300 நாள் நமக்கு விடுமுறையளித்-திருக்கிறார்கள். இக்காலத்தில் வாரத்திற்கு ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமா-யிருக்கிறது. ஆனால், நமது முன்னோர்கள் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள்! மாதங்களிலே மார்கழியும் புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக்கொண்டால் அமாவாசை, பாட்டிமுகம், நவமி, திதி இவை உதவா. பின்னர் பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள்; வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலக நாள்; சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகா - செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா? பின்னர் மரணயோகமும் கரிநாளும், மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால் அதில் ராகு காலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளைகள் கூடா, இவ்வளவு விபத்துக்களையும்

கடந்து ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப்போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மிவிட்டால் போதும்! அன்று விடுமுறை தான். ஆகா! இவ்வளவும் பூரணமாக அழுலிலிருந்த அந்தப் பழைய காலம்! நினைத்தால் நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியுகமல்லவா முற்றி வருகின்றது?"

(ஏட்டிக்குப் போட்டி, பக். 26-27)

"எழுத்தில் ஹாஸ்யமே வரக்கூடாது, படிப்பவர்கள் சிரித்துவிட்டால் பாவம், தமிழை வளர்ப்பது ஒன்றுதான் பத்திரிகையின் கடமை' என்று கரடு முரடாகப் பல கட்டுரைகள் வந்து கொண்டிருந்த காலம் அது. அதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது கல்கியின் 'ஏட்டிக்குப் போட்டி'. குழந்தைக்கும் புரியக்கூடியதாக இருந்தது அவர் எழுதிய நடை. படிக்கும்போதே சிரிப்பு வந்தது. அடிப்படைக் கருத்தும் ஆழமாக இருந்தது. 'ஆகா! இவ்வளவு நன்றாக எழுதுபவர் ஒருவர் இருக்கிறாரே!' என்று நான் ஆனந்தம் அடைந்தேன். கூட இருந்தவர்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். என் தாயாருக்குப் படித்துக் காட்டினேன். அவரும் மிகவும் அனுபவித்துச் சிரித்தார்" (மேற்கோள்: சுந்தா, பொன்னியின் புதல்வர், ப2) என எஸ்.எஸ்.வாசன் 'ஏட்டிக்குப் போட்டி' கட்டுரையைப் பற்றிக் கூறியுள்ள பாராட்டு உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை அக்கட்டுரையை ஒருமுறை மனம் கலந்து படிக்கும் எவரும் எளிதில் உணரலாம்.

இதே போல், 'மதிப்புரை' என்னும் தலைப்பில் கல்கி எழுதியுள்ள பிறிதொரு கட்டுரையும் இங்கே நினைவு-கூரத்தக்கதாகும். தமிழ்ப் பத்திரிகை உலகில் காணப்படும் நூல்களுக்கு மதிப்புரை எழுதும் வழக்கத்தினைக் கேலியும் கிண்டலும் செய்து - நகைச்சுவையும் நையாண்டியும் செய்து - கல்கி படைத்துள்ள அருமையான கட்டுரை அது. அக் கட்டுரையில் இருந்து ஒரு பகுதி இதோ:

"நாட்டில் எந்த மூலையில் அச்சுக்கூடத்தில் எந்தக காகிதம் அச்சிடப்பட்டாலும், அதில் ஒரு பிரதி மதிப்புரைக்காக என்னிடம் வந்துகொண்டிருந்தது. ஆனால், ஒரே ஒரு காகிதம் மட்டும் வருவதில்லை. அது சர்க்கார் அச்சடிக்கும் பணநோட்டு தான்.

சர்க்கார் எவ்வளவு பிற்போக்கானவர்கள் என்பது இதிலிருந்தே நன்கு விளங்குகிறதல்லவா? இந்த விளம்பர யுகத்தில் விளம்பரத்தின் பெருமையை அறியாதவர்கள்

சர்க்காரைத் தவிர வேறு யாருமில்லை. உதாரணமாக, முற்போக்குடைய சர்க்காராயிருந்தால் என்ன செய்யலாம் யாருங்கள்!

பத்து ரூபாய் நோட்டு 1

ஐந்து ரூபாய் நோட்டு 2

நூறு ரூபாய் நோட்டு 6

ஆயிரம் ரூபாய் நோட்டு12

இவற்றுக்குத் 'தயவுசெய்து மதிப்புரை வரைக' என்றெழுதி எனக்கனுப்பினார்களானால், எவ்வளவு நன்றாக இருக்கும்? இதுவரை எந்தப் பிரசுரத்துக்கும் எழுதாத வகையில், அதி அற்புதமாக மதிப்புரை எழுதமாட்டேனா?" (ஏட்டிக்குப் போட்டி, ப. 176).

- இங்ஙனம் கல்கியின் கட்டுரைகளில் தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுவது இயல்பான, உயர்தரமான நகைச்சுவையே ஆகும்.

முத்தாய்ப்பாக, கல்கியின் வாழ்வில் நகைச்சுவை பெற்றிருந்த இடத்தினைக் குறித்துக் காண்போம். கி.ராஜேந்திரன் குறிப்பிடுவது போல், "சொற்பொழிவுகளில் மட்டுமல்ல, தமது எழுத்திலே மட்டுமல்ல, வாழ்க்கையையே நகைச்சுவைக் கண்ணோட்டத்துடன் அனுபவித்து மகிழ்ந்தவர் கல்கி. சிரிக்காமலும் சிரிக்க வைக்காமலும் ஒருநாள் கூடக் கழிந்ததில்லை அவர் வாழ்விலே" '(ஸ்தாபனமாக விளங்கிய தனி மனிதர்', சுடர்: கல்கி மலர், 1967, தில்லித் தமிழ்ச் சங்கம், ப. 27). இதனினும் ஒருபடி மேலாக, நகைச்சுவை ஆசிரியரை ஒரு வேதாந்திக்கு நிகரானவராகக் கருதினார் கல்கி. இக்கருத்தினை அவர், "நகைச்சுவை ஆசிரியனை ஒரு வேதாந்திக்கு ஒப்பிடலாம். வேதாந்தி இன்பங்களையும். துன்பங்களையும் சமமாகப் பார்க்கிறான். அதே மாதிரி நகைச்சுவை ஆசிரியன் எல்லா நிகழ்ச்சிகளிலும் சிரித்து மகிழ்வதற்குள்ள விஷயங்களைக் காண்கிறான். நாடோடி அத்தகைய வேதாந்தியாக விளங்குகிறார்!" [சுப்ர.பாலன் (தொகுப்-பாசிரியர்), எழுத்துலகில் அமரதாரா, ப.5] என நாடோடியின் 'நாடகமே உலகம்' என்ற நூலுக்கு எழுதிய முகவுரையில் குறிப்பிடவும் செய்தார். இந்தக் கோணத்தில், கல்கியின் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்த்தால், கல்கியும் ஒரு வேதாந்தியாக விளங்குவது புலனாகும்; அவர் தம் வாழ்வின் இன்பங்களையும் துன்பங்களையும் சமமாகப் பார்ப்பதும் -

பாவிப்பதும் - தெரியவரும்; அதே போல, வாழ்வின் எல்லா நிகழ்ச்சிகளிலும் சிரித்து மகிழ்வதற்கான பொருள் புதைந்து கிடப்பதைக் கண்டுணரும் திறம் அவருக்கு இயல்பாகவே வாய்த்திருப்பதும் தெளிவாகும்.

திருமணத்தின் போது கல்கியின் வாழ்வின் ஒரு விசித்திரம் நிகழ்ந்தது. தமிழின் தலைசிறந்த எழுத்தாளரான அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாத - பள்ளிக்கூடத்திற்கே போகாத - கடிகாரத்தில் மணி பார்க்கவும் தெரியாத - கண் திறக்காத பூனைக்குட்டியின் நிலையில் இருந்த - ருக்மிணி அம்மையார் வாழ்க்கைத் துணைவியாக வாய்த்தார். தம் துணைவியாருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்ற உண்மை முதலில் கல்கிக்குத் தெரியாது. சென்னையில் தனிக்குடித்தனம் தொடங்கிய பின்னரே இந்த உண்மை அவருக்குத் தெரியவந்தது. அப்போது அவர் எப்படி நடந்து கொண்டார் தெரியுமா? கோபித்துக் கொள்ளவில்லை;: சலித்துக் கொள்ளவும் இல்லை. ருக்மிணி அம்மையாரே அதிசயிக்கும் வண்ணம் "அதனாலென்ன, இனிமேல் கற்றுக்கொண்டால் போச்சு!" என்று சொன்னாராம்! அதற்கு அப்புறம்தான் ருக்மிணி அம்மையார் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டாராம். ('என் கணவர் கல்கி', கல்கியின் துணைவியார் திருமதி ருக்மிணியின் பேட்டி, சாவி, 20.8.1998, பக். 4-6). அடிப்படையில் - ஆழ்மனத்தில் - ஒரு வேதாந்தியாக இருந்ததால்தான், சற்றும் எதிர்பாராத ஓர் அதிர்ச்சியைச் சந்திக்க நேர்ந்தபோதும் கல்கியால் அதனை இயல்பாக - எளிதாக - எதிர்கொள்ள முடிந்தது! காலப்போக்கில் அதனை வெற்றி கொள்ளவும் முடிந்தது!

ஒருமுறை கல்கி தம் புதல்வி ஆனந்தியுடன் ரயிலில் ஏறும் போது ரயில் புறப்பட்ட வேகத்தில் ஒரு செருப்பு காலில் இருந்து கழன்று விழுந்துவிட்டது. ரயில் பெட்டியில் ஏறியதும் கல்கி தம் காலில் மாட்டி இருந்த மற்றொரு செருப்பையும் ஜன்னலுக்கு வெளியே உடனே விட்டெறிந்தாராம். "என்ன அப்பா? ஒரு செருப்பு தானே விழுந்தது? மற்றொரு செருப்பையும் எறிந்து விட்டீர்களே?" என்று ஆனந்தி கேட்டபோது, கல்கி, "அம்மா! ஒரு செருப்பை மட்டும் வைத்துக்கொண்டு என்ன பயன்? இந்தச் செருப்பையும் விட்டெறிந்தால் அந்த ஜோடி யாருக்காவது பயன்படுமே" என்று முத்தாய்ப்பாகப் பதில் அளித்தாராம்! (பி.எஸ்.மணி,

கல்கி சகாப்தம், பக். 50-51). 'இடுக்கண் வருங்கால் நகுக!' என்ற வள்ளுவர் வாய்மொழியை வாயளவில் மட்டுமன்றி, வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பவராக விளங்கினார் கல்கி என்பதற்கு இந்த ஒரு நிகழ்ச்சியே போதுமான சான்றாகும்.

எழுத்தாளர் பகீரதன், 'கல்கி நினைவுகள்' என்ற தம் பெரு நூலில் பதிவு செய்திருக்கும் ஓர் அரிய நிகழ்ச்சியும் இவ்வகையில் மனங்கொளத்தக்கதாகும். படிப்பவர் நெஞ்சை உருக்கும் அந்நிகழ்ச்சியைப் பகீரதனின் சொற்களாலேயே இங்கே காண்போம்:

"நோயின் கொடுமை அவருடைய (கல்கியினுடைய) உடலை மிகவும் பாதித்துவிட்டது. டாக்டர்கள் அவர் உடலைப் பரிசோதனை செய்துவிட்டு ஒன்றும் புரியாமல் திகைக்கிறார்கள். கடைசியில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள். அங்கு பல பெரிய டாக்டர்கள் கவனமாகப் பரிசோதனை செய்கிறார்கள்.

பரிசோதனை அறையிலிருந்து தம் அறைக்கு வருகிறார் கல்கி. உறுதியான நடையுடன் நோயே இல்லாதவர் போல வருகிறார். என்னைப் பார்த்துச் சிரிக்கிறார். ஆமாம்; 'என் உடல்நலனை விசாரிப்பது போல் இருக்கிறது' அந்தச் சிரிப்பு.

மாலையில் அவரைப் பார்த்து விசாரிக்க மீண்டும் சென்றேன். அவருடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசியபின் 'டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?' என்று கேட்டேன்.

'உடலில் ஒன்றுமில்லை என்கிறார்கள்' என்றார்.

'ரொம்ப சந்தோஷம்'.

'சந்தோஷப்பட என்ன இருக்கிறது?'

'உடலில் ஒன்றுமில்லை என்று டாக்டர்கள் சொல்லிவிட்டார்களே?'

'அதுதானே இப்பொழுது பிரச்னையாக இருக்கிறது? என் உடலில் ஏதாவது கெடுதல் இருந்தால் அதைச் சரிசெய்து-விடலாம். சரிப்படுத்த முடியாத அளவுக்கு என் உடல் இப்பொழுது கெட்டுவிட்டது! அதனால்தான் டாக்டர்கள் இனிசெய்ய ஒன்றுமில்லை என்கிறார்கள்' என்று சிரித்துக் கொண்டே பரம அமைதியாகச் சொல்கிறார்."

(பகீரதன், கல்கி நினைவுகள், ப.589)

இங்ஙனம் ஒரு வேதாந்தியின் மனநிலையில் நின்று, நகைச்சுவைக் கண்ணோட்டத்துடன் தம் வாழ்வின் ஒவ்வோர் அனுபவத்தையும் எதிர்கொண்டார் கல்கி. இடுக்கண் வரும்போதும் நகும் திறம் இறுதி மூச்சு வரை அவரிடம் குடிகொண்டு இருந்தது.

'எங்கும் நகைச்சுவை! எதிலும் நகைச்சுவை!'

'எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' என்பது போல், கல்கியின் படைப்புக்களில் அங்கிங்கு எனாதபடி எங்கும் காணப்படுவது - எதிலும் காணப்படுவது - நீக்கமற நிறைந்து காணப்படுவது - தரமான, இயல்பான நகைச்சுவை உணர்வே எனலாம். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்னும் பழமொழிக்கு இணங்க, குட்டிக்கதை, விகடத் துணுக்கு, வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்பு (Anecdote), உலக நிகழ்ச்சி என்றாற்போல் எதையும் கையாண்டு திறமான நகைச்சுவையைத் தோற்றுவிப்பதில் வல்லவராக விளங்குகிறார் கல்கி. சான்றாக, 'கலியாணம்' என்னும் தலைப்பில் 'ஆனந்த விகடன்' இதழில் எழுதிய கட்டுரையில் கல்கி கையாண்டுள்ள ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியை இங்கே சுட்டலாம்:

> "நான் சிறு பையனாயிருந்த போது எங்கள் ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாணத்தில் வழக்கமாயுள்ளது போல் மேளம் தடபுடல் பட்டது. எங்கள் உபாத்தியாயர் 'அதோ மேளச் சத்தம் கேட்கிறதே, அது என்ன சொல்கிறது, யாருக்காவது தெரியுமா?' என்று கேட்டார். பிறகு அவரே சொன்னார், 'நன்றாய்க் கேளுங்கள்; அகப்பட்டுக் கொண்டான், அகப்பட்டுக் கொண்டான் என்று அது அலறுவது தெரியவில்லையா?' என்று.
>
> அதாவது, 'ஐயோ, பாவம்! ஒரு மனுஷன் அநியாயமாய்க் கலியாண வலையில் அகப்பட்டுக் கொண்டானே!' என்று அந்த மேளம் அலறுகிறதாம். இது ரொம்ப உண்மைதான். கலியாணத்தில் ஒருவன் தன் விடுதலையை இழந்துவிடுகிறான். பெரும் பொறுப்பு அவன் தலையில் அமர்கிறது" (கல்கி வளர்த்த தமிழ், 'கலியாணம்', ஆனந்த விகடன், 16.2.1936).

இன்று பட்டிமன்றங்களில் மேடைதோறும் தவறாமல் சொல்லப்பட்டு, சிரிப்பலைகளை எழுப்பி வரும் இந்த

நகைச்சுவைக்குக் கல்கியே மூலாதாரம் என்று அறியும்போது நம் நெஞ்சில் பெரும் வியப்பே மேலிடுகின்றது. இதுபோன்ற இன்றைய மேடை நகைச்சுவைகள் பலவற்றிற்குக் கல்கியே முன்னோடி என்பதை அறியும்போது 'வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே!' என்ற புறநானூற்றுப் பாடல் வரியே நம் நினைவில் அலைமோதுகின்றது!

ராஜாஜியின் மதிப்பீடு

எழுத்தாளர் கல்கியின் மறைவை ஒட்டி 'மாணிக்கத்தை இழந்தோம்' என்ற தலைப்பில் எழுதிய இரங்கல் கட்டுரையினை முடிக்கும்போது மூதறிஞர் ராஜாஜி முத்தாய்ப்பாகக் கையாண்டுள்ள வரிகள் இவை :

> "தமிழ்நாட்டில் ஹாஸ்யத்துக்குத் தண்ணீர் வார்த்து வளர்த்த ஒரு பேராசிரியர் மறைந்துவிட்டார். துன்புறுத்துவது ஹாஸ்யம் என்ற பொய்யை அகற்றி, உண்மை மகிழ்ச்சியுடன் கூடிய சிரிப்பைத் தமிழ்நாட்டில் பரப்பி வந்தார். எழுத்தாளர்களுக்கு இத்துறையில் வழிகாட்டியாயிருந்தவர் மறைந்துவிட்டார். சிரிப்பு எல்லாம் சிரிப்பு அல்ல. அறிவும் இரக்கமும் நிறைந்திருந்தது கல்கியின் சிரிப்பெழுத்தில். அது அவருடைய தனிச்செல்வமாகத் தமிழுலகம் கண்டது".
>
> (எழுத்துலகில் அமரதாரா, ப.164)

- கல்கியின் நகைச்சுவை பற்றிய சரியான மதிப்பீடாகவும், துல்லியமான கணிப்பாகவும் விளங்கும் இந்த வைர வரிகளுடன் இவ்வியல் நிறைவு பெறுவது சாலவும் பொருத்தமாக இருக்கும்.

7. சில நிகழ்ச்சிகள் ... சில நினைவுகள்...

"கல்கி வறுமையின்றி வாழ்ந்தவர்; வாழ்ந்து காட்டியவர். தமிழ் எழுத்தாளர்கள் என்றால் ஓர் நடமாடும் எலும்புக் கூடு என்ற எண்ணம் துடைத்தெறியப்பட வேண்டும் என்று நினைத்துப் பாடுபட்டவர்... வறுமைக் குரலைக் கேட்கும்போதெல்லாம் அந்த 'கல்கி பாங்க்' திறக்கும்!"

– நவீனன் *

1. குழந்தைப் பாடலில் கல்கி செய்த மாற்றம்

ஒரு முறை கல்கியின் புதல்வி ஆனந்தியின் பாட்டு வாத்தியார், "ஈனச் செயல்கள் புரிந்தேன், உன் இணையடி இணைய மறந்தேன் கண்ணா" என்று பாடல் சொல்லிக் கொடுத்தாராம். அதையே அவரும் தம் தந்தையாரிடம் பாடிக் காண்பித்தாராம். உடனே கல்கி, "சிவ சிவா, இது என்ன குழந்தைகள் ஈனச் செயல்கள் புரிந்ததாகப் பாடுவதா?" என்று கூறிவிட்டு, "ஈனச்செயல் புரிந்தறியேன், உன் இணையடி மறந்தறியேன்" என்று மாற்றிப் பாடிக் காண்பித்தாராம். "உன் ஆசிரியரிடமும் இதை நான் சொன்னேன் என்று பாடிக் காண்பி" என்றாராம் (தினமணி, தீபாவளி மலர், 1998, ப.139). குழந்தைகளின் மனங்களில் எந்த வகையிலும் தவறான எண்ணங்கள் புகக்கூடாது என்பதிலே கல்கி எவ்வளவு குறியாக இருந்தார் என்பதற்கு இந்த நிகழ்ச்சியை உதாரணமாகக் காட்டலாம்.

2. கல்கி ராஜாஜியிடம் பழகிய பாங்கு

இரண்டாவது முறையாகச் சென்னை மாகாணத்தின் தலைமைப் பொறுப்பினை ராஜாஜி ஏற்றிருந்த காலம். 1953-ஆம் ஆண்டில் கல்கியின் புதல்வர் ராஜேந்திரன் இண்டர்-மீடியட் வகுப்பில் தேறி மருத்துவக் கல்லூரியில் சேர ஆசைப்பட்டார். "ஸி.ஆர். அண்ணா (ராஜாஜி) ஒரு வார்த்தை சொன்னால் போதுமே! உடனே அட்மிஷன் கிடைத்து-விடுமே!" என்று அவர் தம் தந்தையாரிடம் கூறவும் செய்தார். உடனே கல்கி சிரித்துக் கொண்டே 'சீச்சீச்சீச்சீ!' என்றார். அந்தச் சிரிப்பிலே ராஜேந்திரனுடைய அறியாமையைக் கண்டு ஏளனமும், 'சீச்சீ!'யிலே அத்தகைய காரியத்தைத் தாம் செய்வது என்பதை எண்ணிக்கூடப் பார்க்கப் பிடிக்காத வெறுப்பும் தொனித்தன. ராஜாஜியின் பண்பையும், கல்கி அவரிடம் பழகிய

* கல்கியின் கனவு, ப.23.

முறையையும் புரிந்து கொள்ள இந்த ஒரு நிகழ்ச்சியே போதும், (கி. ராஜேந்திரன், 'ராஜ ரிஷியும் பேனா மன்னரும்', கல்கியின் 'நாட்டுக்கு ஒரு புதல்வர்', பக். v-vi).

3. மந்திரி பதவியை ஏற்க மறுத்த மாமனிதர்

சின்ன அண்ணாமலையின் 'சொன்னால் நம்ப மாட்டீர்கள்' (பக்.168-169) என்ற நூலில் பதிவாகி இருக்கும் ஓர் அரிய நிகழ்ச்சி:

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் எப்போதும் கல்கியிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். கல்கியும் ஓமந்தூராரிடம் பக்தி உடையவர். ஓமந்தூரார் கல்கியைப் பார்த்து, "தாங்கள் எனது மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்து சேவை செய்ய வேண்டும் என்பது என் விருப்பம்" என்று சொன்னார்.

உடனே சிறிது நேரம் மௌனம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்கும் வகையில் சின்ன அண்ணாமலை, "பத்திரிகை ஆசிரியராக இருந்துகொண்டு மந்திரியாக இருக்க முடியுமா?" என்று கேட்டார்.

"அது முடியாது" என்றார் ராஜாஜி

"அப்படியானால் கல்கி பத்திரிகை ஆசிரியர் பதவியை விட்டுவிட்டு மந்திரி பதவி ஏற்றால், ஆசிரியர் பதவியை விட மந்திரி பதவி உயர்ந்தது என்று தானே அர்த்தம்?" என்று கேட்டார் சின்ன அண்ணாமலை

உடனே கல்கி, உறுதியான குரலில், "மந்திரி பதவி என்பது ஐந்து ஆண்டுகள்தான். அதிலும் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால் பத்திரிகை ஆசிரியர் பதவி என் கடைசி மூச்சு வரை உள்ளது. நான் மந்திரி பதவியை விட, பத்திரிகை ஆசிரியர் பதவியைத் தான் உயர்வாகக் கருதுகிறேன்" என்றார்.

ரசிகமணி டி.கே.சி., "பேஷ், பேஷ், நன்றாகச் சொன்னீர்கள்" என்று பேச்சை முடித்தார்.

இங்ஙனம் வீடுதேடி வந்த மந்திரி பதவியை வேண்டாம் என்று சொன்னவர் கல்கி!

4. 'காமம் செப்பாது கண்டது மொழி'யும் கல்கி

'கர்நாடகம்' என்ற புனைபெயரில் கல்கி அவ்வப்போது எழுதிய கலை விமர்சனங்கள் காரசாரமானவையாக மட்டுமல்லாமல், பாராபட்சமற்றனவாகவும் விளங்கின. ஓர் உதாரணம் இதோ:

ஒரு சமயம் காங்கிரஸ்வாதியும் கதர் அபிமானியுமான ஒரு பெண்மணியின் திரைப்பட நடிப்பு சுகமில்லை என்று கல்கி எழுதினார். உடனே சிலர், "அடடா! அந்தப் பெண்மணி எப்போதும் கதர் அணிபவராயிற்றே, தேர்தல் கூட்டத்தில் வந்து கூடப் பாடுவாரே? அவரைப் பற்றி இப்படி எழுதலாமா?" என்று கேட்டார்கள். அதற்குக் கல்கி, "அந்தக் கதரபிமானமுள்ள பெண்மணி காங்கிரஸ் அபேட்சகராக எங்கேயாவது தேர்தலுக்கு நின்றால், 'அவருக்கு ஓட்டுக் கொடுங்கள்' என்று பிரச்சாரம் செய்வேன். ஆனால் ஒருவர் காங்கிரஸ்வாதி என்பதற்காக அவருடைய அபஸ்வரங்களை ஸுஸ்வரங்கள் என்றோ, மோசமான நடிப்பை நல்ல நடிப்பு என்றோ நான் ஒப்புக் கொள்ள முடியாது. அம்மாதிரி நிலைமை ஏற்பட்டு விட்டால் அப்புறம் டாக்டர் ராஜன் பாட்டுக் கச்சேரி செய்தால் நன்றாயிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீமுத்துரங்க முதலியார் கதாகாலட்சேபம் செய்தால் அதற்கும் பலே போட வேண்டும். ஸ்ரீமதி ருக்மிணி லக்ஷ்மிபதி பரத நாட்டியம் ஆடினால் கூடத் தலையை ஆட்ட வேண்டி வரும் இப்படியெல்லாம் வந்துவிட்டால் தமிழ்நாட்டில் கலைகள் உருப்பட்டாற் போலத்தான்!" என்றார்.

இது போல் தமக்குச் சரி என்று பட்டதை யாருக்கும் அஞ்சாமல் எடுத்துக்கூறும் நெஞ்சுரம் கல்கிக்கு மிகுதியும் இருந்தது. 'ஓரிரவு' நாடகத்தைப் பார்த்துவிட்டு அறிஞர் அண்ணாவை அவர் பெர்னாட்ஷா, இப்ஸன், கால்ஸ்வொர்த்தி என்றெல்லாம் பாராட்டிய எழுதிய போது, "ஏன் திடீரென்று தலையில் தூக்கி வைத்துக் கொள்கிறீர்கள்?" என்று அவரைச் சிலர் கேட்டனராம். அதற்குக் கல்கி, "அழகாக இருப்பதால் தூக்கி வைத்துக் கொள்கிறேன். அவலட்சணத்தையா வைத்துக் கொள்கிறேன்? கங்கை அழகாக இருப்பதால், சிவபிரான் தலையில் வைத்துக் கொண்டான்; குரூபியாய் இருந்திருந்தால் காலில் அல்லவோ வைத்திருப்பான்?" என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம் (எழுத்துலகில் அமரதாரா, ப.135). 'அழகைப் போற்றிய கல்கி' என்ற தலைப்பில் கல்கி மறைந்தபோது எழுதிய இரங்கல் கட்டுரையில் கவியரசு கண்ணதாசன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

5. 'கல்கி' என்ற புனைபெயரின் ரகசியம்

'பரம ரகசியம்' என்றும், 'சிதம்பர ரகசியம்' என்றும் சொல்வார்களே, அதற்கு நிகரானது ரா.கிருஷ்ணமூர்த்தி,

'கல்கி' என்ற புனைபெயரை வைத்துக் கொண்டதன் காரணமும். இது குறித்து எத்தனை எத்தனையோ ஊகங்கள், விளக்கங்கள் எழுந்தன; சொல்லாராய்ச்சிகளும் நடந்தன; இவற்றிற்கெல்லாம் தன்னிலை விளக்கம் தரும் பாங்கில், 'என் பெயர்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் கல்கி ஒரு முறை குறிப்பிட்டிருந்தது வருமாறு:

> "ஒரு சிலருக்குப் பெயர் போட்டுக் கொள்வதில், உண்மையாக அநுகூலம் உண்டு. உதாரணமாக திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், சக்கரவர்த்தி இராஜ-கோபாலாச்சாரியார் இவர்களைச் சொல்லலாம். இவர்கள் என்ன எழுதினாலும் படிப்பதற்குத் தனித்தனியே ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். ஒருவருடைய அபிமானிகள் மற்றவர்கள் பெயரைக் கண்டதும் தள்ளிவிட்டுப் போய்விடலாமாயினும் ஒவ்வொருவருக்கும் குறைந்தது 5000 பேராவது படிப்பதற்கு இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், என் போன்ற சாமானியர்களுக்கோவென்றால் என் 'குட்டை' நானே ஏன் உடைத்துவிட வேண்டும்? உண்மையில் புனைபெயர் வைத்துக் கொள்வதிலுள்ள அநுகூலம் இதுதான். பெயரைப் போட்டுக் கொண்டால் சாமானியனாகி விடுகிறேன். ஆனால் 'கல்கி' எவ்வளவு பெரிய மனிதராய்த்தான் இருக்கக்கூடாது? மகாவித்வானாயிருக்கலாம்; பண்டித சிரோமணியா-யிருக்கலாம்; ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கலாம்; மந்திரியாகக் கூட இருக்கலாம்; காங்கிரஸ் தலைவராயிருக்கலாம்; இன்னும் எவ்வளவோ பெரிய மனிதராயிருக்கலாம்; இவ்வளவு மகோன்னதமான பதவியை நான் ஏன் விட வேண்டும்?" (ஏட்டிக்குப் போட்டி, ப94).

6. சிரசாசனத்தில் கல்கிக்குத் தோன்றிய யோசனை!

'கல்கியும் ஆஸ்துமாவும் போல' என்று உவமை சொல்லும் அளவிற்குக் கல்கியின் வாழ்வில் ஆஸ்துமா நோய் பின்னிப் பிணைந்திருந்தது. இது குறித்துத் தமக்கே உரிய பாணியில் அவர் ஓர் இடத்தில், "சென்ற வருஷம் டிசம்பர் மாத இறுதியில் எனக்கு ஒரு பேரதிர்ஷ்டம் வந்தது. அதாவது ராஜாஜி, ராஜேந்திர பிரஸாத், லார்ட் பீவர் புரூக் முதலிய பிரமுகர்களுக்கே உரியதான 'ஆஸ்த்மா' நோய், இந்த

ஏழையைத் தேடிக் கொண்டு வந்தது" (மூன்று மாதம் கடுங்காவல்,ப.7) என்று எழுதியிருக்கிறார்.

கல்கி தமது நெடுநாளைய ஆஸ்துமா நோயைக் குணப்படுத்திக் கொள்வதற்காக யோகாசன நிபுணர் வி.என். குமாரசுவாமியிடம் 'யோகாசன சிகிச்சை' செய்து கொண்டார். முற்றிப்போன நிலை காரணமாக அவரது நோய் குணமாகவில்லை. ஆயினும் அதன் சிகிச்சைக்காக அவர் பயின்ற சிரசாசனம் அவருடைய கற்பனை ஆற்றல் பெருகுவதற்கு உதவியாய் இருந்தது.

ஒருநாள் கைக்கடிகாரத்தைப் பார்த்து மகன் ராஜேந்திரன் கணக்குப் பண்ணிக் கொண்டிருக்க, கல்கி சிரசாசனம் போட்டார். சாதாரணமாய்ப் பத்து நிமிடம் வரை அந்த ஆசனத்தில் நிற்கக் கூடியவர், அன்று இரண்டாவது நிமிடமே அதை முடித்துக் கொண்டார். "ஏன் இப்படி?" என்று கவலையுடன் மகன் கேட்டதற்கு, "நிற்க முடியாததால் அல்ல!" என்று கல்கி பதில் சொன்னார். "சேந்தன் அமுதனை ராஜாவாகப் பண்ணிவிடலாமே என்று யோசனை தோன்றியது, அதனால்தான்" என்றார். அந்த யோசனையின்படியே 'பொன்னியின் செல்வன்' கதையில் ஒரு திருப்பம் கொடுத்து எழுதுவதற்காக மேஜையை நோக்கி நடந்தார். இப்படியாகச் சேந்தன் அமுதனின் விதியும் மாறிற்று; அத்துடன் கதையின் கதியும் மாறிற்று (சுந்தா, பொன்னியின் புதல்வர், ப.811).

7. 'திறமையைப் பாராட்டுவார், ஊக்கப்படுத்துவார் கல்கி'

திறமை யாரிடம் இருந்தாலும் அதை மனமார வரவேற்றுப் பாராட்டுவார், ஊக்கப்படுத்துவார், வெளிப்படத் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்வார் கல்கி. இதற்கு ஓர் உதாரணம் இதோ:

'கல்கி' அலுவலகத்தில் அச்சுக் கோப்பவராகப் பணியாற்றியவர் வி. கோவிந்தன். அவர் ஒரு சிறுகதை எழுதி ஃபோர்மேனிடம் தர, அவர் அதை ஆசிரியர் கல்கியின் மேஜையின் மேல் வைத்துவிட்டு வந்துவிட்டார். படித்துப் பார்த்த கல்கி, "யார் எழுதியது இதை? பிரமாதமாக இருக்கிறதே!" என்று பாராட்ட, அச்சுக் கோக்கும் விந்தனை அவர் முன்னே அழைத்து வந்தார் ஃபோர்மேன். வி. கோவிந்தனை 'விந்தன்' ஆக்கி, மேலும் மேலும் ஊக்கப்படுத்தி,

ஓர் உதவி ஆசிரியராகவும் சேர்த்துக் கொண்டார் கல்கி (பி.எஸ்.மணி, 'கல்கி', அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், 13.9.1998, ப. 59). எழுத்தாளர் விந்தன் பிற்காலத்தில் இதனை நினைவுகூர்ந்து, "என்னை மனிதன் ஆக்கிய மனிதன் கல்கி" (நவீனன், கல்கியின் கனவு, ப.33) என்று கல்கியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது இங்கே மனங்கொள்ளத்தக்கதாகும். மேலும், நகைச்சுவை எழுத்தில் கைதேர்ந்த மகாதேவனுக்குத் 'தேவன்' என்ற புனைபெயரைச் சூட்டியவரும் கல்கியே ஆவார்.

8. 'எனக்கு நாடகம் எழுத வராது!'

ஒருமுறை அவ்வை தி.க. சண்முகம் 'கல்கி' அலுவலகம் சென்று ஆசிரியர் கல்கியைப் பார்த்தார்; 'சுபத்திரையின் சகோதரன்' என்ற சிறுகதையை நாடகமாக்கித் தரும்படியாக அவரிடம் வேண்டினார். அதற்குக் கல்கி சிரித்துக் கொண்டே சொன்ன மறுமொழி வருமாறு :

> "மிஸ்டர் ஷண்முகம், கிருஷ்ணமூர்த்தி என்ன சகலகலா வல்லவன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு நாடகம் எழுத வராது, உங்களுக்கு பிடித்தமான நாடக எழுத்தாளர் யாரையாவது எழுதச் சொல்லுங்கள். அந்த எழுத்துப் பிரதியை எனக்கு அனுப்பி வையுங்கள். நான் சரிபார்த்துக் கொடுத்துவிடுகிறேன்..."

- அவ்வை தி.க. சண்முகம் 'எனது நாடக வாழ்க்கை' என்ற தம் நூலில் இந் நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து எழுதிவிட்டு, கல்கியைப் பற்றி இப்படிக் கருத்துரைக்கிறார் :

> "எந்த எழுத்தாளர் இப்படித் தம் திறமையைக் குறைத்துக்கொண்டு சொல்வார்? மாமேதை கல்கிக்குத்தான் அந்தத் துணிவு இருந்தது. இப்படித் தைரியமாகத் தம்மைப் பற்றி ஒப்புக் கொள்ளவும் ஒரு தனிப்பண்பு வேண்டுமல்லவா?" (ப.488).

இங்ஙனம் நாடகத்துறையில் தம் திறமையின்மையைத் தைரியமாகவும் வெளிப்படையாகவும் ஒப்புக்கொண்ட கல்கி தம் வாழ்நாளில் முதன்முதலாகப் 'பாங்கர் விநாயகராவ்' என்ற பெயரில் 'விமோசனம்' இதழில் ஒரு நாடகம் எழுதினார் என்பதும், தொடர்ந்து மிகச் சில நாடகங்களை அவர் 'ஆனந்த

விகட'னிலும் 'கல்கி'யிலும் படைத்தார் என்பதும், இருப்பினும் நாடகத் துறையில் அவர் வெற்றி பெறவில்லை, தனி முத்திரை பதிக்கவில்லை என்பதும் இங்கே மனங்கொள்ளத்தக்க செய்திகள் ஆகும்.

9. 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?'

'தேனீ' என்று தமக்குப் புனைபெயர் வைத்துக் கொண்டிருப்பதற்கு ஏற்ப, கல்கி உழைப்பின் மீதே மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தார். சோம்பல் என்பது அவரது அகராதியில் கிடையாது. 'கடமையைச் செய்ய வேண்டும்; சாவதாய் இருந்தாலும் கடமையைச் செய்துவிட்டுச் சாக வேண்டும்' - இதுவே என்றும், எந்நிலையிலும் அவரது தாரக மந்திரம்; 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்பதுவே இறுதி மூச்சு வரையில் அவர் பின்பற்றிய வாழ்க்கை நெறி.

கல்கி மறைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தம். உடல் நிலை கவலைக்கு இடமாக இருந்த நிலையில், ஒருநாள் அவரைப் பார்க்க வந்த நண்பர் ஒருவர் ஜாதகம் பார்க்கும்படி அவரிடம் சொன்னாராம். அப்போது கல்கி அவருக்குச் சொன்ன மறுமொழி பொன்னெழுத்துக்களால் பொறிக்-கத்தக்கது :

> "தம்பி! இந்த ஜாதகம் பார்க்கிற பைத்தியம் மட்டும் எனக்குக் கட்டோடு பிடிக்காது. ஏன் தெரியுமோ? காலில் நகம் முளைத்த நாளிலிருந்து நாம் எத்தனையோ கஷ்டப்பட்டு, எத்தனையோ இடத்தில் அடிபட்டு, மிதிபட்டு, குட்டுக்கள் வாங்கி முன்னுக்கும் வருகிறோம். என் வரையில் நான் ஒவ்வொரு படி முன்னேறியதும் என்னுடைய சொந்த உழைப்பினால்தான். ஆனால் ஜோசியரிடம் போய்க் கேட்டால் என்ன சொல்லுவார் தெரியுமோ? என்னுடைய முன்னேற்றத்துக்குக் காரணம் என்னுடைய திறமை, என்னுடைய உழைப்பு என்று ஒப்புக் கொள்வாரா? மாட்டார். ஏதோ ஒரு செவ்வாய், சுக்கிரன், ஒரு சூரியன்தான் காரணம் என்று சொல்லுவார். இதை எப்படிக் கேட்டுக் கொண்டு சகிப்பது? ஒப்புக் கொள்வது என்பதோ முடியவே முடியாத காரியம்!" [சுப்ர. பாலன் (தொகுத்தவர்) எழுத்துலகில் அமரதாரா, ப.28].

கல்கியின் இந்தத் தனிப்பட்ட கருத்து, அவரது 'பொன்னியின் செல்வன்' நாவலின் மூன்றாம் பாகத்தில்

வந்தியத் தேவனுக்கும் குடந்தை சோதிடருக்கும் இடையே நிகழும் உரையாடலில் எப்படிச் சுவையாக வெளிப்-பட்டிருக்கிறது பாருங்கள் :

"'ஆமாம், ஆமாம், உம்முடைய சோதிடம் பலிக்கத்தான் செய்தது.'

'அப்படிச் சொல்லு. எந்த விதத்தில் பலித்தது, அப்பனே?'

'நீர் எனக்குச் சொன்னது அப்படியே பலித்தது. நீ போகிற காரியம் நடந்தால் நடக்கும்; நடக்காவிட்டால் நடக்காது' என்றீர். அந்தப்படியே நடந்தது. 'நடந்தது' என்று நான் சொல்வது கூடப் பிசகு. என்னைக் கண்டவுடனே ஓட்டம் பிடித்து ஓடிற்று" (பக்.243-244)

இதுபோல் மகாகவி பாரதியின் நெறி நின்று, 'சோதிடந்தனை இகழ்'ந்தும் அங்கதச் சுவையுடன் சாடியும் கல்கி தம் படைப்புக்களில் எழுதியிருக்கும் இடங்கள் பலவாகும்

10. 'வாசகர்களை ஏமாற விடலாமா?'

பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் கல்கிக்கு இருந்த மிகுந்த பொறுப்புணர்ச்சியையும், எழுத்தில் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், சாகின்ற கடைசி வாரம் வரையில் அவர் 'கல்கி' இதழுக்கு எழுதிக் கொண்டிருந்ததையும் குறித்துக் 'கல்கி' அச்சகத்தில் நீண்ட காலம் 'ஃபோர்மே'னாகப் பணிபுரிந்த டி.எம். ராஜாபாதர் மனநெகிழ்ச்சியோடு நினைவுகூர்ந்து கூறியிருப்பது வருமாறு :

"ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் வந்தது. கல்கி அவர்கள் தளர்ந்த குரலில் பேசினார்கள் 'ஏன் தொடர்கதை கையெழுத்துப் பிரதியை வாங்கிப் போக யாரும் வரவில்லை?' என்று அந்த நிலையிலும் சற்றுக் கோபமாகக் கேட்டார். நான் உடனே, 'இல்லை சார், திரு. சதாசிவம் அவர்கள் திருப்பதிக்குச் சென்றிருக்கிறார். தங்கள் உடல்நிலையில் சிரமப்படுத்த வேண்டாமென்றுதான்..' என்று இழுத்தேன். அவர், 'உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வா' என்று கூறி டெலிபோனை வைத்தார். நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று அவர் அறையில் நுழைந்ததும், 'இந்தா, இதை உடனே எடுத்துப் போய் கம்போஸ் செய்து பாரத்தில் சேர்த்து விடு...' என்றார். நான் உடனே, 'இந்த உடல்நிலையிலும் நீங்கள் எழுத

வேண்டுமா?' என்றேன். கண் கலங்கிய படியே அவர், 'வாசகர்கள் கதையைப் படிக்க எவ்வளவு ஆர்வமாக இருப்பார்கள்? அவர்களை ஏமாறவிடலாமா? அதனால் தவறாமல் எழுதவேண்டியதுதான் முறை' என்றார். அவர் இறக்கும் போது கூட அந்த வாரம் எழுதிவிட்டுத் தான் மறைந்தார்" [கா.பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, பக்.26-27].

கல்கி எந்த அளவுக்கு வாசகர்களை மதித்தாரோ, வாசகர்களின் மீது மரியாதை கொண்டிருந்தாரோ, வாசகர்களும் அந்த அளவிற்குக் கல்கியின் எழுத்துக்களை மதித்தனர்; இதயம் ஒன்றிய ஈடுபாட்டுடன் அவரது படைப்புக்களைப் படித்தனர். 'பொன்னியின் செல்வன்' தொடர்கதையாகக் 'கல்கி' இதழில் முதன்முறையாக வெளிவந்து கொண்டிருந்தபோது வாரா வாரம் அதை ஆர்வத்துடன் படித்துவந்த ஒரு பாட்டி இப்படிப் புலம்பினாராம்: " ஐயோ, நான் செத்துப் போவதற்குள் இந்தப் பொன்னியின் செல்வன் முடிந்துவிட வேண்டுமே!" ('கல்கி', 20.9.1998, ப.6) இப்படிப் புலம்பியவர் வேறு யாரும் அல்லர்; எழுத்தாளர் சிவசங்கரியின் வயதான பாட்டிதான்!

'சிவகாமியின் சபதம்' நாவல் 'கல்கி'யில் தொடர்-கதையாக வெளிவந்து கொண்டிருந்த போது நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சியும் கல்கியின் எழுத்துக்களுக்கு அக்காலத்தில் வாசகர்கள் மத்தியிலே இருந்த காந்த சக்தியைப் புலப்படுத்துவதாகும். மன்னார்குடியில் வாழ்ந்து வந்த 'கல்கிச் செட்டியார்' என்பவர் காலமானதை ஒரு நாளேடு தவறுதலாகவோ அல்லது வேண்டும் என்றோ 'மன்னார்-குடியில் கல்கி காலமானார்!' என்று போட்டுவிட்டது. அதைப் படித்துவிட்டு ஒரு வாசகர் 'கல்கி'க்கே இப்படிக் கடிதம் எழுதினாராம்;

> "கல்கியே! செத்ததுதான் செத்தீரே, சிவகாமியின் சபதத்தை எழுதி முடித்துவிட்டாவது செத்துப் போயிருக்கக்கூடாதா?" (நவீனன், கல்கியின் கனவு, பக்.22-23).

- இங்ஙனம் இளையவர் - முதியவர், படித்தவர் - படிக்காதவர், ஆடவர் - மகளிர், கிராமத்தார் - நகரத்தார் என்ற எவ்வித வேறுபாடும் இன்றி எல்லோரையும் ஒன்றுபோல் வசப்படுத்தி வைத்திருந்தது கல்கியின் தமிழ்!

8. கல்கி என்ற ஆளுமை

"மதிப்புக்கு அடங்காத சொத்து ஒன்றை நம் எல்லோருக்கும் வழங்கி இருக்கிறார் அவர் (கல்கி) - அதுதான் அவர் படைத்ததான இலக்கியச் செல்வம். குறைவிலா இச்செல்வத்தில் அவர் நிறைவாக வாழ்கிறார்."

– சுந்தா *

தஞ்சை மாவடத்தில் புத்தமங்கலம் என்ற சிறிய கிராமத்தில் எவ்விதப் பின்னணியும் இல்லாத ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த ரா.கிருஷ்ணமூர்த்தி, பிற்காலத்தில் தமிழ் கூறு நல்லுலகமே வியந்து போற்றும் ஓர் எழுத்தாளராக உயர்ந்தார்; இயற்பெயரே கல்கி தானோ என எல்லோரும் மயங்கும் வண்ணம் அப் பெயரிலேயே தமக்கெனத் தமிழ்ப் புனைகதை உலகில் ஒருதனியிடத்தினை ஏற்படுத்திக் கொண்டார். இதற்குப் பெரிதும் காரணமாக அமைந்தது அவரது ஆளுமை ஆகும். இந்த ஆளுமைப் பண்பு அவரிடம் மெல்ல அரும்பி, போதாக வளர்ந்து, மலர்ந்து மணம் வீசுவதற்கு அடித்தளமாக இருந்தவர்கள் பலர் ஆவர். கல்கி ஆளுமை என்ற எட்டடுக்கு மாளிகை எழுவதற்கு இளமைப் பருவத்தில் கால்கோள் இட்டவர் அய்யாசாமி அய்யர். பள்ளி நாட்களில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனும் மகாகவி பாரதியும் மகாத்மா காந்தியும் அவரது ஆளுமையைச் செதுக்கினர்; கல்விக்கூடத்தைத் துறந்து வெளியேறுவதற்கும் காரணமாக அமைந்தனர்.

டி.எஸ்.எஸ். ராஜனின் அறிமுகக் கடிதம், கல்கி திரு.வி.க.வின் 'நவசக்தி' பத்திரிகைப் பணியில் நுழைவதற்கு வழி வகுத்தது; சில ஆண்டுகளில் படைப்பிலக்கிய ஆர்வம் அவரை 'நவசக்தி'யில் இருந்து விலகுமாறு செய்தது. கல்கி என்ற பத்திரிகை ஆசிரியரின் உருவாக்கத்தில் திரு.வி.க. ஆற்றிய பங்கு சிறப்பானதாகும். பரலி சு. நெல்லையப்பரின் அறிமுகம், கல்கி 'ஆனந்த விகட'னில் அடியெடுத்து வைப்பதற்கு உறுதுணை புரிந்தது. 'தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை, சங்கரா யார்கொலோ சதுரர்?' என்ற மணிவாசகரின் வாக்கிற்கு ஏற்ப, 'கல்கி'யும் 'விகட'னும் ஒருவரை ஒருவர் போட்டி போட்டு வளர்த்துக் கொண்டனர்.

* பொன்னியின் புதல்வர், ப.867

இடைப்பட்ட காலத்தில் ராஜாஜி என்ற காந்த சக்தி கல்கியின் ஆளுமையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது; சிறையில் கிடைத்த சதாசிவத்தின் நட்பும் தன் பங்கிற்குக் கல்கியின் ஆளுமையைப் பாதித்தது. இருபத்து நான்கு மணிநேரமும் கல்கியின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த நாட்டுப்பற்று 'தனிநபர் சத்தியாக்கிரகப் பங்கேற்பு' என்ற வடிவில் வெளிப்பட்டு 'ஒரு நல்ல காலைப் பொழு'தில் 'ஆனந்த விகட'னில் இருந்து கல்கி விலகுவதற்குக் காரணமாக அமைந்தது.

'பெரிதே உலகம் பேணுநர் பலரே' என்ற சங்கச் சான்றோரின் வாக்கு கல்கியின் வாழ்க்கையில் உண்மை ஆயிற்று டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், தமிழ் முனிவர் திரு.வி.க., மகாகவி பாரதி, மகாத்மா காந்தி, மகான் ராஜாஜி ஆகியோர் மெல்ல மெல்லவும் - படிப்படியேயும் - உருவும் உணர்வும் ஊட்டி ஆளுமையில் வளர்த்திருந்த நெஞ்சுரமும் நேர்மைத் திறமும் வாழ்வின் நெருக்கடியான காலகட்டத்தில் கல்கிக்குக் கைகொடுத்தது. ஆருயிர் நண்பர் சதாசிவத்தின் 'உணர்ச்சி ஒத்த நட்பு'ம் துணைநிற்க, 'கல்கி' என்ற பெயரிலேயே சொந்தப் பத்திரிகையைத் தொடங்கினார் கல்கி. கல்கி என்ற மனிதர் - எழுத்தாளர் - பத்திரிகையாளர் - புகழேணியின் உச்சிக்குச் செல்வதற்குத் தனிப்பெருங்காரணமாய் அமைந்தது 'கல்கி' பத்திரிகை. இக்கால கட்டத்தில் அவர், பாண்டியன் அறிவுடைநம்பியின் சொற்களிலே சொல்வதென்றால், 'படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும், உடைப்பெருஞ் செல்வ'ராக (புறநானூறு, 188) விளங்கினார். பெயரும் புகழும் செல்வமும் செல்வாக்கும் களிநடம் புரிய இமாலய உச்சியில் ஏற்றமிகு வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த போதே, கல்கியின் மூச்சுத் தொடருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் பெற்றது.

கல்கி என்ற ஆளுமையின் நனிசுருங்கிய வரலாறு இது. இதனைக் கூர்ந்து பார்த்தால் மூன்று உண்மைகள் தெற்றெனப் புலனாகும். அவை வருமாறு :

1. கல்கியின் வாழ்க்கை முழுவதும் ஒரு நுழைவும் (Entry) விலகலும் (Exit) அடுத்தடுத்து - மாறி மாறி நிகழ்ந்திருக்கின்றன. அவர் ஒன்றில் - ஒரு பணியில் அல்லது பத்திரிகையில் - நுழைவதற்கு ஒரு பெரியவர் காரணமாக இருந்திருக்கின்றார்; அவர்

அப்பணியில் அல்லது பத்திரிகையில் இருந்து விலகுவதற்கு அவரது தனித்தன்மை (Individuality), தனித்திறன் (Individual Talent) அடிப்படையாக அமைந்திருக்கின்றது. இதன் விளைவாக, ஒரு புதிய விடியலை நோக்கி அவரது எழுத்து மற்றும் வாழ்க்கைப் பயணம் பீடு நடை போடத் தொடங்கி இருக்கின்றது. எனவே கல்கியின் வாழ்க்கை வரலாற்றை -ஆளுமைப் பரிணாமத்தை - மூன்றே மூன்று சொற்களில் பின்வருமாறு அடக்கிக் கூறலாம் : 'நுழைவு - விலகல் - விடியல்!'

2. இன்றைய கணினி மொழியில் சொல்ல வேண்டும் என்றால், கல்கியின் வாழ்க்கை ஓர் இணையம் (Internet) போன்றது. இதில் நாட்டுப் பணியும் பத்திரிகைப் பணியும் படைப்புப் பணியும் பொதுப் பணியும் என்றென்றும் பின்னிப் பிணைந்தே இருந்து வந்திருக்கின்றன; ஒன்றுடன் ஒன்று . சார்பாகவும் துணையாகவுமே விளங்கி இருக்கின்றன. சான்றாகச் சொல்ல வேண்டும் என்றால், கல்கி 'ஆனந்த விகட'னில் நுழைவதற்குக் காரணம் அவரது படைப்புப் பணி ('ஏட்டிக்குப் போட்டி'); 'ஆனந்த விகட'னை விட்டு விலகுவதற்குக் காரணம் அவரது நாட்டுப் பணி (தனிநபர் சத்தியாக்கிரகப் பங்கேற்பு). இன்னும் விளக்கமாகக் கூற வேண்டும் என்றால், கல்கி மாமனிதர்களுக்கு மணிமண்டபம் எழுப்புதல், மாபெரும் படைப்பாளர்களுக்கு நிதியுதவி திரட்டுதல் போன்ற பொதுப் பணிகளைத் திறம்படச் செய்து, 'செழ்வினை முடித்த செம்மல் உள்ள'த்துடன் விளங்குவதற்குக் காரணம் அவரது பத்திரிகைப் பணி; செல்வாக்கு. இதே போல், கல்கியின் படைப்புப் பணி, பத்திரிகைப் பணி, பொதுப்பணி ஆகிய மூன்று பணிகளிலுமே அல்லது மூன்று பணிகளுக்குமே அடிநாதமாக விளங்கியது அவரது நாட்டுப்பணிதான்; நாட்டுப்பற்றுதான்; ராஜாஜிடம் பணியாற்றுவதற்காகத் திருச்செங்கோடு ஆசிரமத்திற்குச் செல்லும்போது, "நாட்டுப் பணியிலும் இலக்கியப் பணியிலும் நீங்கள் சிறப்பீர்கள்" என்று தமிழ் முனிவர் திரு.வி.க கூறிய நல்வாழ்த்து, கல்கியின் வாழ்க்கையைப் பொறுத்த வரையில் உண்மை ஆயிற்று!

3. கல்கி தம் வாழ்வில் வெற்றியை - புகழை - ஒரே நாளில் - ஒரே இரவில் பெற்றுவிடவில்லை. அவரது

வாழ்வில் சோதனைகள் - துன்பங்கள் - தோல்விகள் - தொல்லைகள் - நெருக்கடிகள் குறுக்கிடாமல் இல்லை; சொல்லப் போனால், அவரது துணைவியார் ருக்மிணி அம்மையாரைப் போல், ஆஸ்த்துமாவும் ஜலதோஷமும் அவர் கூடவே இருந்தன. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு - தாண்டிச் சென்று - அவர் வாழ்விலும் எழுத்திலும் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தது அவரது உள்ளத்தில் எப்போதும் எரிந்து கொண்டே இருந்த நெருப்புப் பொறியே (Fire) ஆகும்.

"சாவதற்கு முன் என் சக்தி முழுவதையும் உபயோகித்து விட விரும்புகிறேன். வாழ்க்கையை ஒரு சிறு மெழுகுவர்த்தியாக நான் கருதவில்லை. அதை ஓர் அற்புத ஜோதியாக மதிக்கிறேன். அதை எதிர்காலச் சந்ததியாருக்குக் கொடுப்பதற்கு முன், எவ்வளவு பிரகாசமாக எரிய வைக்க முடியுமோ அவ்வளவு பிரகாசமாக எரிய வைக்க விரும்புகிறேன்!" (மாந்தருக்குள் ஒரு தெய்வம், 'அமரர் கல்கி', ப.vii).

- பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் இம் மணிவார்த்தையைக் கல்கி தம் வாழ்க்கையின் இறுதி மூச்சு வரை அப்படியே பின்பற்றினார்! தமிழன்னைக்கு மணியான அணிகலன்களைச் சூட்டி மகிழ்ந்த அந்தத் தவப்புதல்வர் மணிவிழாக் காணாமலே மறைந்தது என்பது கொடுமையிலும் கொடுமை ஆகும்!

இன்று கல்கி இல்லாமற் போகலாம். ஆனால், அவர் தம் ஆளுமை, எழுத்து, ஏடு ஆகிய மூன்றின் மூலமும் தோற்றுவித்த உணர்வின் அதிர்வு - தாக்கம் - தமிழ் மண்ணில் - தமிழக மக்களின் மனங்களில் - என்றென்றும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். நிறைவாகச் சொல்ல வேண்டும் என்றால், தமிழ்ப் புனைகதை உலகில் வரலாற்று நாவல்களுக்கு ஒரு சிறப்பையும் சீர்மையையும் தேடித் தந்தவர் - தமிழ்ப் பத்திரிகைகளையும் பல்லாயிரக்கணக்கில் விற்பனை செய்துகாட்ட முடியும் என்ற சாதனையை நிகழ்த்தியவர் - பத்திரிகை உலகில் தொடர்கதைக்கு ஒரு நல்ல வரவேற்பையும் நிலையான இடத்தையும் உருவாக்கிக் கொடுத்தவர் - தம் எழுத்திலும் பேச்சிலும் வாழ்விலும் ததும்பி நின்ற இயல்பான, தரமான நகைச்சுவை உணர்வால் 'எல்லோரும் இன்புற்றிருக்க' வழிவகுத்தவர் - சுடுசொற்களால் தம்மை வைதாரையும் வாழ வைக்கும் பெருந்தன்மையைப் பெற்றிருந்தவர் - நாட்டு

நலனுக்காக மூன்று முறை சிறை சென்றவர் - மனிதருள் மாணிக்கமாய் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து மறைந்த மாமனிதர்களுக்கு மணி மண்டபங்கள் நிறுவுவதிலும் நிதி திரட்டுவதிலும் முனைப்புடன் ஈடுபட்டவர் - தேசப்பிதா காந்தியடிகளின் தன் - வரலாற்று நூலைச் 'சத்திய சோதனை' என்ற அழகிய பெயரில் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர் - பயண இலக்கியம் படைப்பதிலும் தனிமுத்திரை பதித்தவர் - ஆற்றலும் திறமையும் இருந்தும் முன்னேற முடியாமல் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து அவர்கள் வாழ்க்கையில் உயருவதற்கு அடித்தளம் இட்டுத் தந்தவர் - நடுநிலை உணர்வோடும் நக்கீரப் பார்வையோடும் யாரையும் விமர்சனம் செய்யும் அஞ்சா நெஞ்சம் பெற்றிருந்தவர் - 'காற்றினிலே வரும் கீதம்' என்ற 'மதுர மோகன கீத'த்தைத் திரை உலகிற்குத் தந்தவர் - தமிழிசை இயக்க வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் - டி.எஸ்.எஸ். ராஜன், திரு.வி.க., ராஜாஜி, டி.கே.சி., சதாசிவம் என்னும் 'ஐம்பெரும் மனிதர்க'ளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர் - 'புதிய கருத்துக்களை வெளியிட்டு, வாசகர்களின் மனத்தைப் புதிய திசையில் திருப்பி, புதிய யுகத்தைப் படைக்க வேண்டும்' என்ற ஒரே எண்ணத்துடன் தமிழ் இலக்கிய உலகில் முப்பதாண்டுக் காலம் நடை பயின்றவர் என்ற காரணங்களுக்காகக் 'கல்கி' என்ற மூன்றெழுத்து தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும்!.

பின்னிணைப்பு - 1

கல்கி வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

1899 செப்டம்பர் 9 : தஞ்சை மாவட்டப் புத்தமங்கலத்தில் பிறப்பு

பெற்றோர் : தந்தையார் - இராமசுவாமி அய்யர்; தாயார் - தையல்நாயகி

1917 திருச்சி சென்று பள்ளிப் படிப்பைத் தொடரல்

1921 ஜனவரி : பள்ளியை விடுத்துத் தேசிய இயக்கத்தில் ஈடுபடல்

செப்டம்பர் : காந்தி தரிசனம் - பக்தி ஓங்கி வளர்தல்

1922 முதல் சிறைவாசம் - ஓர் ஆண்டு; முதல் படைப்பு முயற்சி உருவாக்கம் - சதாசிவம் அறிமுகமும் தோழமையும் ஏற்படல்

1923 ராஜாஜி தொடர்பு - வாழ்நாள் முழுவதும் நீடித்தல்

அக்டோபர் : திரு.வி.க.வின் 'நவசக்தி'யில் உதவி ஆசிரியர் பொறுப்பில் சேர்தல்

1924 மார்ச் : திருமணம் - துணைவியார் பெயர் : ருக்மிணி

1927 நூல் வெளியீடு - 'சாரதையின் தந்திரம்' (சிறுகதைத் தொகுப்பு), 'சத்திய சோதனை' (காந்தியடிகளின் தன்வரலாறு : மொழிபெயர்ப்பு) ஆகியன வெளிவரல்

1928 'நவசக்தி'யில் இருந்து விலகல்

ஜூலை : 'ஆனந்த விகடன்' ஆசிரியர் எஸ்.எஸ். வாசன் அறிமுகம்

ஆகஸ்டு : 'கல்கி' என்ற புனைபெயரில் 'ஆனந்த விகட'னில் 'ஏட்டிக்குப் போட்டி' என்னும் முதல் கட்டுரை வெளிவரல் - திருச்செங்கோடு ஆசிரமத்தில் சேர்தல்

1929 ராஜாஜிக்குத் துணையாக 'விமோசனம்' பத்திரிகையில் பணியாற்றல்

1930 இரண்டாவது சிறைவாசம் - ஆறு மாதம்

1931 'ஆனந்த விகடன்' துணையாசிரியர் பதவி ஏற்றல்

1932 ரசிகமணி டி.கே.சி.யுடன் நட்பு - பொன்னியும் பொருனையும் கலத்தல்

1933 ஏப்ரல் 8 : மகள் ஆனந்தி பிறத்தல்

1935 ஆகஸ்டு 20 : மகன் ராஜேந்திரன் பிறத்தல்

1937 புகழ் தந்த முதல் சமூக நாவல் 'கள்வனின் காதலி' தொடர்கதையாக 'ஆனந்த விகட'னில் வெளிவரல்

1938 மே : முதல் இலங்கைப் பயணம்

1939 முதல் திரைக்கதை 'தியாக பூமி'

1941 ஜனவரி : 'ஆனந்த விகட'னில் இருந்து விலகல்

மூன்றாவது சிறைவாசம் - மூன்று மாதம்

ஆகஸ்டு 1 : சதாசிவத்தின் துணையுடன் 'கல்கி' என்ற பெயரில் சொந்தப் பத்திரிகை தொடங்கல்

தமிழிசை இயக்கம் ஈடுபாடு தீவிரம் அடைதல்

1941 '42 ராஜாஜிக்காகப் பேனாப் போர் தொடுத்தல்

1944 ஜனவரி : சிகரப் படைப்பான 'சிவகாமியின் சபதம்' 'கல்கி'யில் தொடர்கதையாக வெளிவரல்

1944-' 46 ராஜாஜிக்காக மீண்டும் பேனாப் போர் நடத்தல்

1945 கல்கியின் வசனம், பாடல்களுடன் 'மீரா' திரைப்படம் வெளிவரல்

1947 கல்கியின் பெருமுயற்சியின் பலனாக எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் எழுதல்

1948 மார்ச் : 'அலை ஓசை' தொடர்கதை 'கல்கி'யில் தொடங்கல் (தமது தலைசிறந்த படைப்பாகக் கல்கி கருதியது இதனையே)

1949 மகாத்மா காந்திக்குச் சென்னையில் நினைவுச் சின்னம் நிறுவத் திட்டமிட்டுப் பெருநிதி திரட்டல்

1950 இமாலய வரலாற்றுப் படைப்பான 'பொன்னியின் செல்வன்' 'கல்கி'யில் தொடங்கல்

1950 - 51 இரண்டாவது, மூன்றாவது இலங்கைப் பயணங்கள்

1951 தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைமை ஏற்றல்

1953 செப்டம்பர் : தமிழ் முனிவர் திரு.வி.க.வுக்கு அஞ்சலி - அன்னாரின் நினைவைப் போற்ற முயற்சி மேற்கொள்ளல்

அக்டோபர் : காந்தி மண்டப மங்களத் தொடங்க விழாவில் பங்கேற்றல்

1954 பிப்ரவரி : திரு.வி.க. மண்டபக் கால்கோள் விழாவில் கலந்து கொள்ளல்

டிசம்பர் 5 : மறைவு

பின்னிணைப்பு - 2

கல்கியின் நூல்கள் (அகர வரிசையில்)

I. சிறுகதை

1. அபலையின் கண்ணீர். சென்னை : பாரதி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு 1962.
2. அமர வாழ்வு. சென்னை : வானதி பதிப்பகம், எட்டாம் பதிப்பு 1997.
3. ஒற்றை ரோஜா. சென்னை : வானதி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு 1997.
4. கணையாழியின் கனவு. சென்னை : ஐயம் கம்பெனியார், இரண்டாம் பதிப்பு 1974.
5. திருவழுந்தூர் சிவக்கொழுந்து. சென்னை : வானதி பதிப்பகம், இண்டாம் பதிப்பு 1994.
7. பாங்கர் விநாயக ராவ். சென்னை : வானதி பதிப்பகம், முதல் பதிப்பு 1996.
8. புன்னை வனத்துப் புலி. சென்னை : பாரதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1960.
9. மயில்விழி மான். சென்னை : வானதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1997.
10. மயிலைக் காளை. சென்னை : வானதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1989.
11. மாடத்தேவன் சுனை. சென்னை : வானதி பதிப்பகம், ஆறாம் பதிப்பு 1993.
12. வீணை பவானி, சென்னை : வானதி பதிப்பகம், எட்டாம் பதிப்பு 1994.
13. ஜமீன்தார் மகன். சென்னை : வானதி பதிப்பகம், ஏழாம் பதிப்பு 1988.

II. நாவல்

1. அரும்பு அம்புகள். சென்னை : அலமு நிலையம், முதற்பதிப்பு 1998.

2. அலை ஓசை. சென்னை: வானதி பதிப்பகம், எட்டாம் பதிப்பு 1998.

3. கள்வனின் காதலி. சென்னை : வானதி பதிப்பகம், நான்காம் பதிப்பு 1998.

4. சிவகாமியின் சபதம். சென்னை : மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

5. சோலைமலை இளவரசி. சென்னை : வானதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1994.

6. தியாக பூமி. சென்னை : வானதி பதிப்பகம், நான்காம் பதிப்பு 1997.

7. தேவகியின் கணவன். சென்னை : பாரதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1955.

8. மகுடபதி. சென்னை : வானதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1989

9. பார்த்திபன் கனவு. சென்னை : வானதி பதிப்பகம், ஏழாம் பதிப்பு 1997.

10. பொய்மான் கரடு. சென்னை : வானதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1997.

11. பொன்னியின் செல்வன் (5 பாகங்கள்). சென்னை : மணிவாசகர் பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

12. மோகினித் தீவு. சென்னை : வானதி பதிப்பகம், ஒன்பதாம் பதிப்பு 1997.

III. கட்டுரை

1. இசை விருந்து. சென்னை : பாரதி பதிப்பகம், முதற் பதிப்பு 1957.

2. ஏட்டிக்குப் போட்டி. சென்னை : வானதி பதிப்பகம், பத்தாம் பதிப்பு 1997.

3. ஓ! மாம்பழமே! சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1995.

4. கண்கொள்ளாக் காட்சிகள். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

5. கண்ணீரால் காத்த பயிர். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1999.

6. கலைச் செல்வம். சென்னை : பாரதி பதிப்பகம், முதற்பதிப்பு 1957

7. குமரியும் குன்றமும். சென்னை : பாரதி பதிப்பகம், முதற்பதிப்பு 1956.

8. சங்கீத யோகம். சென்னை : தமிழ்ப் பண்ணை, முதற்பதிப்பு 1947.

9. திருமகளும் கலைமகளும். சென்னை : பாரதி பதிப்பகம், முதற்பதிப்பு 1956.

10. பாரதி பிறந்தார். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

11. மகாத்மாவும் மகாகவியும். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1995.

12. மூன்று மாதம் கடுங்காவல். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1999.

IV. நடைச் சித்திரம்

1. யார் இந்த மனிதர்கள்? சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

V. வாழ்க்கை வரலாறு

1. நாட்டுக்கு ஒரு புதல்வர். சென்னை : பாரதி பதிப்பகம், முதற்பதிப்பு 1953.

2. மாந்தருக்குள் ஒரு தெய்வம் (இரு பாகங்கள்). சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1991.

VI. பயண இலக்கியம்

1. இலங்கையில் ஒரு வாரம். சென்னை : பாரதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1963.

2. இலங்கைப் பிரயாணம். சென்னை : பாரதி பதிப்பகம், 1954

3. தாகூர் தரிசனம். சென்னை : பாரதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1956

4. தெய்வ தரிசனம். சென்னை : பாரதி பதிப்பகம், முதற்பதிப்பு 1957.

5. நம் தந்தையர் செய்த விந்தைகள். சென்னை : வானதி பதிப்பகம், முதற்பதிப்பு 1998.

6. ஸ்வப்ன லோகம். சென்னை : வானதி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு 1989.

VII. மொழிபெயர்ப்பு

1. சத்திய சோதனை (இரு பாகங்கள்). நாகப்பட்டினம் : இமயப் பதிப்பகம், முதற்பதிப்பு 1999.

2. நமது தாய்நாடு. நாகப்பட்டினம் : இமயப் பதிப்பகம், முதற்பதிப்பு 1999.

3. யுவ பாரதம் அல்லது இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு. நாகப்பட்டினம் : இமயப் பதிப்பகம், முதற்பதிப்பு 1999.

பின்னிணைப்பு - 3

கல்கியின் புனைபெயர்கள்

தாம் எழுத எடுத்துக் கொள்ளும் பொருளுக்கு ஏற்புடைய வகையில் புனைபெயரைச் சூட்டிக் கொள்ளும் போக்கு கல்கியிடம் காணப்பட்டது. அவர் அவ்வப்போது தமக்குச் சூட்டிக் கொண்ட புனைபெயர்களின் பட்டியல் இதோ:

அகஸ்தியர்	ஒரு தமிழன்
ஒரு தறிகாரர்	ஒரு பிராம்மண இளைஞன்
கர்நாடகம்	கல்கி
சென்னைவாசி	கிராமவாசி
குகன்	தமிழ்த் தேனீ
தமிழ்த்தும்பி	தும்பி
தமிழ்மகன்	தேனீ
துதிக்கையான்	பிரகஸ்பதி
பரிசோதகர்	பெற்றோன்
பூரண சுதந்திரம்	யமன்
முகமூடி	லாங்கூலன் (வாலன்)
ரா.கி.	விகடன்
வழிப்போக்கன்	விவசாயி
விசிறி	

துணைநூற்பட்டியல்

I. தமிழ் நூல்கள்

1. அசோகமித்திரன் & தாசன், என்.ஆர். தமிழ்ச் சிறுகதைகளில் மூன்று பார்வைகள். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1984.

2. அரியரத்தினம், இராஜ. கல்கி பிறந்தார். சென்னை : பாரதி பதிப்பகம், 1955.

3. அருணாசலம், சபா. தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம். தேவகோட்டை : காளத்தி நூலகம், இரண்டாம் பதிப்பு 1983.

4. இரத்தினம், கா.பொ. (பதிப்பாசிரியர்). எழுத்தாளர் கல்கி. சென்னை : பழனியப்பா பிரதர்ஸ், 1966.

5. இராசகோபாலன், தி. வரலாற்று நாவல்களில் வரலாற்றுச் செய்திகள். சென்னை : பாரி நிலையம், 1993.

6. இராமலிங்கம், மா. (எழில்முதல்வன்). இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1973.

7. ..... புனைகதை வளம். சென்னை : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1973.

8. ..... விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1977.

9. இராஜசேகரன், இரா. (பதிப்பாசிரியர்). தமிழ் நாவல் 50 பார்வை. பூம்புகார் : பத்தினிக் கோட்டப் பதிப்பகம், 1978.

10. கலா கே. தாக்கர். கல்கி - முனிஷி வரலாற்று நாவல்கள் ஓர் ஒப்பீடு. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1988.

11. ..... (தொகுப்பாசிரியர்). கல்கி அமுதம். சென்னை: குரோம்பேட்டை, 1994.

12. கேசவன், கோ. தமிழ்ச் சிறுகதைகளில் உருவம். சிவகங்கை: அன்னம் (பி)லிட், 1988.

13. சங்கரன், எஸ். (தொகுத்தது). கல்கியின் நகைச்சுவை. சென்னை : பாரதி பதிப்பகம், மூன்றாம் பதிப்பு 1955.

14. சங்கரன், எஸ். கல்கியின் வர்ணனைகள். சென்னை : பாரதி பதிப்பகம், 1956.

15. சிதம்பரநாதன் செட்டியார், அ. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் சென்னை : பிலோமினி பதிப்பகம், 1977.

16. சிவத்தம்பி, கா. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை : பாரி நிலையம், 1967.

17. சின்ன அண்ணாமலை. சொன்னால் நம்பமாட்டீர்கள். சென்னை : வானதி பதிப்பகம், 1987.

18. சீனிச்சாமி, து.(பதிப்பாசிரியர்). கல்கியின் கதை உலகம். தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1999.

19. சுகி. சுப்பிரமணியன். ஆயிரங்கால் மண்டபம். திருச்சி : புதுப்புனல் பதிப்பகம், 1962.

20. சுந்தரராஜன், பெ.கோ. (சிட்டி) & சிவபாதசுந்தரம், சோ. தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும். சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1977.

21. ..... தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும். சென்னை : கிரியா, 1989.

22. சுந்தா. பொன்னியின் புதல்வர் (கல்கியின் வாழ்க்கை வரலாறு). சென்னை : வானதி பதிப்பகம், 1976.

23. சுப்ர. பாலன் (தொகுத்தவர்). எழுத்துலகில் அமர தாரா. சென்னை : வானதி பதிப்பகம், 1998.

24. சுப்ரமணியம், க.நா. படித்திருக்கிறீர்களா? (முதல் தொகுதி). சென்னை : அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், 1957.

25. சுப்ரமணியம் அய்யர், ஏ.வி. தற்காலத் தமிழ் இலக்கியம். சென்னை : மக்கள் வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 1985.

26. செந்தில்நாதன், ச. தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு. சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1967.

27. செல்லப்பா, சி.சு. தமிழ் சிறுகதை பிறக்கிறது. சென்னை : எழுத்து பிரசுரம், 1974.

28. செல்வநாயகம், வி. தமிழ் உரைநடை வரலாறு. பேராதனை: இலங்கைப் பல்கலைக் கழகம், 1957.

29. சோமலெ. பல்சுவைக் கட்டுரைகள். சென்னை : இன்ப நிலையம், 1961.

30. தண்டாயுதம், இரா. தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1972.

31. ..... தற்காலத் தமிழ் இலக்கியம். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1973.

32. ..... பாரதி முதல் சுஜாதா வரையில். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1985.

33. _____ நாவல் வளம். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1975.

34. திரவியம், கா. தேசியம் வளர்த்த தமிழ். சென்னை : பூம்புகார் பிரசுரம், இரண்டாம் பதிப்பு, 1979.

35. நவீனன். கல்கியின் கனவு. சென்னை : வானதி பதிப்பகம், 1955.

36. பகீரதன். கல்கி நினைவுகள். சென்னை : திருவரசு புத்தக நிலையம், 1998.

37. பூவண்ணன். கல்கியின் வரலாற்று நாவல்கள். சென்னை : வானதி பதிப்பகம், 1988.

38. மணி, பி.எஸ். கல்கி சகாப்தம். சென்னை : மகாகவி பதிப்பகம், 1992.

39. மோகன், இரா. (பதிப்பாசிரியர்). நாவல் வளர்ச்சி. சென்னை : மணிவாசகர் பதிப்பகம், 1989.

40. ..... கல்கி நூறு. சென்னை : மணிவாசகர் பதிப்பகம், 1998.

41. ....., கல்கி கதைகள் (இரு தொகுதிகள்). சென்னை : மணிவாசகர் பதிப்பகம், 1999.

42. ..... கல்கி கட்டுரைகள் (மூன்று தொகுதிகள்). சென்னை : மணிவாசகர் பதிப்பகம், 1999.

43. மீனாட்சி முருகரத்தனம். கல்கியின் சிறுகதைக் கலை. மதுரை : சர்வோதய இலக்கியப் பண்ணை, 1976.

44. ரங்கராஜன், தி.ஸ்ரீ. (தொகுப்பாசிரியர்). கல்கி களஞ்சியம். சென்னை : வானதி பதிப்பகம், 1999.

45 ராஜாஜி. ராஜாஜி கட்டுரைகள். சென்னை : வானதி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, 1971.

46. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு. புதுதில்லி: சாகித்திய அக்காதெமி, 1972.

47. வல்லிக் கண்ணன். பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை. சிதம்பரம் : மணிவாசகர் நூலகம், 1981.

48. வானதி திருநாவுக்கரசு. நினைக்க நினைக்க... சென்னை : வானதி பதிப்பகம், 1987.

49. விசுவநாதன், ஈ.ச. கட்டுரை மலர். சென்னை : பாரி நிலையம், 1971.

50. வீராசாமி, தா.வே. கல்கி - அகிலன் படைப்புக் கலை. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1977.

51. ..... தமிழில் சமூக நாவல்கள். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1978.

52. ..... தமிழ் நாவல் வகைகள். சென்னை : தமிழ்ப் பதிப்பகம், 1979.

53. ..... தமிழ் நாவல் இயல். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம், 1986.

54. வேத சகாயகுமார், எம் தமிழ்ச் சிறுகதை வரலாறு (முதற் பகுதி). திருவனந்தபுரம் : 1979.

II. ஆங்கில நூல்

1. Sunda (M.R.M. Sundaram). Kalki a Life Sketch. Madras : Vanathi Pathippakam, 1993.

III. மலர்கள்

1. அமரர் கல்கி நூற்றாண்டு விழா மலர், கல்கி, 1999.

2. அமரர் கல்கி நூற்றாண்டுச் சிறப்பிதழ், செம்மலர், செப்டம்பர் 1998.

3. அமரர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு விழா மலர், திருச்சிராப்பள்ளி, 1999.

4. கல்கி கதம்பம், பரதன் வெளியீடு, 1976.

5. 'கல்கி வளர்த்த தமிழ்', ஆனந்த விகடன், 1955 (ஆண்டு முழுவதும்).

6. சுடர், கல்கி மலர், தில்லித் தமிழ்ச் சங்கம், 1967.

IV. கட்டுரைகள்

1. பாரதி, கே., 'பெண் உரிமை போற்றிய கல்கி', தினமணி, 5.12.1998, ப.2.

2. விக்கிரமன், அமரர் கல்கி நூற்றாண்டு விழாக் கட்டுரைகள், அமுதசுரபி, செப்டம்பர் 1998-1999.

3. Prema Nandakumar, 'Champion of Women's Freedom', The Hindu, 5.9.1999.

'கல்கி' என்ற புனைபெயர் கொண்ட ரா. கிருஷ்ணமூர்த்தி (1899–1954) ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, தமது கடுமையான உழைப்பின் மூலம் படிப்படியாக முன்னேறியவர்; தமிழ் நடையில் ஒரு நகைச்சுவையையும், வரலாற்று நிகழ்ச்சிகளின் மீது சமையல் கட்டுக்குக்கூட ஓர் ஆவலையும் தூண்டிவிட்ட எழுத்தாளர்; தமிழ்த் தென்றல் திரு.வி.க.விடம் பாடம் பயின்று, மூதறிஞர் ராஜாஜியிடம் பண்பட்டு, 'ஆனந்த விகட'னில் அனுபவம் பெற்று, பிறகு 'கல்கி'யின் வாயிலாகப் பத்திரிகை உலகில் தனிமுத்திரை பதித்தவர்; நாட்டு விடுதலைப் போரில் முனைப்புடன் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றவர்; தமக்குச் சரியென்று தோன்றியதை அஞ்சா நெஞ்சுடன் எடுத்துரைக்கத் தயங்காதவர்; அதே நேரத்தில் வைதாரையும் வாழ வைக்கும் பெருந்தன்மையும் பெற்றிருந்தவர்; காந்தம் போல் படிப்பவர் அனைவரையும் கவர்ந்திழுக்கும் எழுத்தாற்றலுக்குச் சொந்தக்காரர். கல்கி என்ற ஆளுமையின் பல்வேறு பரிமாணங்களையும் பரிணாமங்களையும் எளிய முறையில் அறிமுகம் செய்யும் நோக்கில் எழுதப்பட்டுள்ளது இந்நூல்.

முனைவர் இரா. மோகன், மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியற் புலத்தைச் சார்ந்த ஒப்பிலக்கியத் துறையின் தலைவர்; அறிஞர் மு.வ., புனைகதைத் திறன், கு.ப. ராஜகோபாலன், காந்தியக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல், திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம், பண்டிதமணியின் நடைநயம், வ.சுப. மாணிக்கம், இலக்கியச் சால்பு, நாவல் வளர்ச்சி, கலைஞர் தமிழ், இன்பமே எந்நாளும் முதலான 48 நூல்களின் ஆசிரியர்; தம் எழுத்துக்கும் பேச்சுக்கும் பற்பல பரிசுகளும், விருதுகளும் பெற்றவர். ஆசிரிய அனுபவத்தில் வெள்ளி விழாக் கண்டவர்; நாடறிந்த பட்டிமன்ற நடுவர்; தமிழாசிரியர் சங்கத்தின் அழைப்பினை ஏற்றுச் சிங்கப்பூர் சென்று வந்தவர். இவர் இந்நூலில் கல்கி என்ற ஆளுமையின் பல்வேறு கோணங்களை அழகுறப் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

Kalki (Tamil)
ISBN 81-260-0996-9

Rs.25

இருபத்திரண்டு இந்திய மொழிகளில் நூல்கள் வெளியிடும்
சாகித்திய அக்காதெமி உலகிலேயே மிகப்பெரிய வெளியீட்டகம்.